தொகுதி - XV யூலை - 2015 இதழ் - 2

# சிந்தனை

ஆசிரியர்
பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

தொகுதி - XV யூலை - 2015 இதழ் - 2

# சிந்தனை

ஆசிரியர்

பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா

கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

**CINTANAI** The Journal of the Faculty of Arts, University of Jaffna is published in March, July and November every year.

CINTANAI is a refereed Journal, Its referees come form University scholars and the National scholarly community.

**Editor** Professor Selliah Krishnarajah

**Associate Editor** Dr. K.Kajavinthan

**Managing Editor** Dr. S. Santhirasegaram

**Editorial Committee Members**

Dr. K. Shriganeshan
Dr. K. Arunthavarajah
Dr. (Mrs) J. Rasanayagam
Dr. S. Darshanan
Mr. R. Rajeshkannan
Mrs. S. Arulanantham
Mrs. S. Prabaharan

**Annual Scbscription** 1500/- SLR / 15 US $

**Published by** The Faculty of Arts, University of Jaffna, Jaffna, Sri Lanka.

**Printed by** Harikanan Printers, K.K.S. Road, Jaffna.

**ISSN** 2478-1061

- **சிந்தனை** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஆய்விதழாகும். இவ் இதழ்ஆண்டுக்கு மும்முறை மார்ச், ஜுலை, நவம்பர் மாதங்களில் வெளியிடப்படுகின்றது. பிரசுரிக்கப்படும் கட்டுரைகள்: பொருளியல், புவியியல், அரசியல், வரலாறு, தொல்லியல், சமூகவியல், கல்வியியல், மானிடவியல், மெய்யியல், மொழியியல், தமிழ், வடமொழி, இந்துநாகரீகம், கிறிஸ்தவ நாகரிகம், நுண்கலைகள் முதலிய துறைகளில் உள்ள பொருட் கூறுகள் பற்றியனவாக அமையும்.

- **சிந்தனை**யில் வெளியாகும் கட்டுரைகளின் தகுதி, தகுந்த பல்கலைக்கழக ஆய்வாளர்களால் நிர்ணயிக்கப்படுகின்றது.

- **சிந்தனை**யில் ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட விரும்புவோர் கட்டுரையின் இரு பிரதிகளைக் கணனிப்பதிப்பாக ஆசிரியருக்கு அனுப்புதல் வேண்டும். அத்தோடு இலத்திரனியல் பிரதி ஒன்றும் newcintanai2014@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். அடிக்குறிப்புக்கள், உசாத்துணை விபரங்கள் ஆகியன கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.

- **உசாத்துணை** விபரங்கள் பின்வரும் ஒழுங்குமுறையில் தரப்படுதல் வேண்டும். கட்டுரை எனில்: ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள், அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, கட்டுரைத் தலைப்பு, சஞ்சிகையின் பெயர், தொகுதி இலக்கம், கட்டுரை இடம்பெற்றுள்ள பக்கங்கள். நூல் எனில் : ஆசிரியர் பெயர், முதலெழுத்துக்கள், அடைப்புக்குறியினுள் வெளியிடப்பட்ட ஆண்டு, நூலின் தலைப்பு, விபரம், வெளியிடப்பட்ட இடம், வெளியீட்டோர் விபரம்.

- **கட்டுரை** அனுப்புவோர் தங்கள் பெயர், பட்டங்கள், பதவிகள், அலுவலக முகவரி, மின்னஞ்சல் ஆகிய விபரங்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் தனித்தாளில் குறித்து அனுப்புதல் வேண்டும். கட்டுரையின் தலைப்பினையும் ஆங்கிலத்தில் குறிப்பிடுக. அனுப்பப்படும் கட்டுரைகள் ஆய்வு வளர்ச்சிக்கு வழங்கும் பங்களிப்பினைச் சுருக்கமாகத் தமிழிலும், ஆங்கிலத்திலும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

- சந்தா கொடுப்பனவுகள் சிந்தனையின் நிர்வாக ஆசிரியருக்கு அனுப்பப்படல்வேண்டும். இலங்கையில் காசுக்கட்டளை, தபாற்கட்டளை, காசோலை மூலமும், பிறநாடுகளிலிருந்து வங்கிக் கட்டளைகள் மூலமும் அனுப்பப்பட வேண்டும். மாற்றிதழாக சிந்தனையினைப் பெற விரும்புவோர் நிர்வாக ஆசிரியருடன் தொடர்பு கொள்க.

**CINTANAI, REFREED JOURNAL, FACULTY OF ARTS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA, 2015**

PROCEDURE FOR PUBLICATION OF RESEARCH ARTICLES IN CINTANAI (IN TAMIL)

This particular Research Journal will be released thrice in a year, March, July and November.

Procedure profile

1. The tilte of article should be very short and express the main theme vividly.
2. The article with title should proceed with the research summary and the main technical terms.
3. The research article should not be exceeded more than 15 pages A4 size by using BAAMINI fond and TIMES NEW ROMAN.
4. The concepts or ideas which borrowed from other sources should be incorporated with FOOT NOTES system with bibliographical notes.
5. The finding and conclusion OR suggestion of the article should be vividly inscribed at the end of the article.
6. The method adopted and materials used in the research discussion are should be spelled out at the set out of the article.
7. Photos, graphs and tables are will be accepted for publication but with in limited levels.
8. All permanent staffs of the Faculty board should support to purchase the volumes.
9. The members of the faculty could send more than one research article but the screening committee`s decision is ultimate for publication. The acceptance for publication will be noticed.
10. Authors should write his / her name, affiliation, address, e-mail, contract telephone numbers in below the title.

# The submission of Research Articles:

1. It is expected to receive the research articles in both, soft and two hard copies and those unsuitable for publications will be returned to the respective authors.
2. The research articles for publication in Cintanai should be written in Tamil Language but in case of Citations and Foot notes it could be used English terms too.
3. The continuation of one article under the same caption to other volumes is prohibited.

# கட்டுரை ஆசிரியர்கள்


**1. ஆ. நித்திலவர்ணன்**

விரிவுரையாளர்
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
email anithlavarnan@gmail.com

**2. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
cumaran2004@yahoo.com

**3. ஸ்ரீ. அன்புச்செல்வி**

சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவ அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
gsritharan09@gmail.com

**4. கலாநிதி (திருமதி) ஜெ. இராசநாயகம்**

சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
luxmy2001@gmail.com

**5. கலாநிதி த. கிருஷ்ணமோகன்**

முதுநிலை விரிவுரையாளர்
அரசியல் விஞ்ஞானம்
சமூக விஞ்ஞானங்கள் துறை
கலைகலாசாரபீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
tkmatura29@gmail.com

**6. பொ. சந்திரசேகரம்**

விரிவுரையாளர்
இந்துநாகரிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
chandrasegaram3@gmail.com

**7. கலாநிதி கே.ரீ.கணேசலிங்கம்**

சிரேஷ்ட விரிவுரையாளர்,
அரசறிவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
saarusharon@gmail.com

**8. இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்**

சிரேஷ்ட விரிவுரையாளர்
சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
shaathveegashruthy@gmail.com

**9. கலாநிதி ஏ. எஸ். சூசை**

இணைப் பேராசிரியர், புவியியல் துறை
ஜே. இஸ்கொல்டன்
அமஸ்றடாம் பல்கலைக்கழகம்
எம்.பாவின்க், அமஸ்றடாம் பல்கலைக்கழகம்
assoyasa@gmail.com

**10. பேராசிரியர் கலாநிதி என்.சண்முகலிங்கம்**

சமூகவியல் சிரேஷ்ட பேராசிரியர்
சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
thunaiventhar@gmail.com

# சிந்தனை

சிந்தனை ஆய்விதழ் : கலைப்பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## பொருளடக்கம்


1) இலங்கையில் தமிழ் கற்றல் – கற்பித்தல்; தற்கால நடைமுறைகளும் சவால்களும் 07 – 14
– ஆ. நித்திலவர்ணன்

2) உலக இலக்கியம் பற்றிய எண்ணக்கருவும் தமிழ் இலக்கியச் சூழலும்
மாற்றத்தினை வேண்டி நிற்கும் தமிழாய்வுச் சூழல் குறித்ததோர் ஆய்வு நோக்கு 15 – 23
– ஈ. குமரன்

3) நீரிழிவு நோயில் யாழ்ப்பாணத்து மருத்துவ மூலிகைகள் செயற்படும் திறன் பற்றிய ஓர் ஆய்வு 24 – 27
– ஸ்ரீ. அன்புச்செல்வி, மருத்துவர் க. ஸ்ரீதரன்

4) கல்வி உலகின் மாற்றத்தில் முக்கிய பங்குதாரர்களாகிய ஆசிரிய ஆய்வாளர்கள்:
புதிய சிந்தனைப் போக்குகளும் செயற்பாடுகளும். 28 – 37
– ஜெயலக்சுமி இராசநாயகம்

5) இனப்படுகொலைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்புக்கூறலும் :
ஒரு நுணுக்கப்பட்ட பகுப்பாய்வு 38 – 48
– த. கிருஷ்ணமோகன்

6) சம்பந்தசரணாலயரின் தத்துவவிளக்கமும் ஸ்ரீ காசிவாசிசெந்திநாதையரின் உரைச் சிறப்புக்களும் 49 – 61
– பொ. சந்திரசேகரம்

7) சர்வதேச அரசியலில் புதிய கோட்பாட்டின் எழுச்சி : ஒரு நோக்கு 62 – 70
– கே. ரி. கணேசலிங்கம்

8) காலனிய யாழ்ப்பாணத்தில் சுதேச உயர் குழாமினர் :
மரபும் உருமாற்றமும் பற்றிய ஒரு வரலாற்றுச் சமூகவியல் பார்வை 71 – 77
– இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்

9) இக்கட்டான நிலையில் மீன்பிடித்தல் பாக்குக்குடா பிரதேசத்தில் எல்லைதாண்டும் அத்துமீறல்
– ஓர் ஆய்வு 78 – 99
– ஏ. எஸ். சூசை ; ஜே. இஸ்கொல்டன் ; எம். பாவின்க்

10) நூல் மதிப்புரை : முனைவர் பக்தவத்சலபாரதியின் இலக்கிய மானிடவியல் :
தமிழ்ச் சமூகத்தின் செல்நெறிகளின் மீதான பண்பாட்டியல் பார்வை. 100 – 103
– சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்

# இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல்; தற்கால நடைமுறைகளும் சவால்களும்

ஆ. நித்திலவர்ணன்

**ஆய்வுச்சுருக்கம்**

*இலங்கையில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட சிறுபான்மை இனங்களின் தனித்துவத்தைப் பேணிக்கொள்வதற்கும் கலாச்சாரப் பாதுகாப்பிற்கும், தமிழ்மொழி அழியாது பாதுகாக்கப்படவேண்டும். இருந்தபோதிலும் உலகமயமாக்கல் மற்றும் மேற்கத்தேய ஆதிக்கம் என்பவற்றினாலும், இலங்கையில் வரலாற்று ரீதியாக சிறுபான்மையினர் மொழி ரீதியான பாகுபாடுகளிற்குட்பட்டு வருவதனாலும், தமிழ்மொழி பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்நோக்கி வருகின்றது. இவ்வாய்வானது தற்காலத்தில், இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் நடைமுறைகள், பொதுப்பரீட்சைகளில் தமிழ்ப்பாடத்தில் தேசியரீதியான அடைவுகள், தமிழ் கற்றல் - கற்பித்தலில் எதிர்நோக்கப்படும் சவால்கள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் என்பவை தொடர்பாக ஆராய்கின்றது.*

**திறவுச்சொற்கள்** : இலங்கை, தமிழ்மொழி, கற்றல் - கற்பித்தல், நடைமுறைகள், சவால்கள்

## 1.0 ஆய்வுப்பின்னணி

*இலங்கையில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இலங்கைத்தமிழர்கள், இந்தியத்தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். இவ்வினங்களின் தனித்துவத்தைப் பேணிக் கொள்வதற்கும் கலாசாரப் பாதுகாப்பிற்கும், தாய்மொழியான தமிழ்மொழியின் பாதுகாப்பு முக்கியமானதாகும். இருந்தபோதிலும் உலகமயமாக்கல் மற்றும் மேற்கத்தேய ஆதிக்கம் என்பவற்றினாலும், இலங்கையில் வரலாற்று ரீதியாக சிறுபான்மையினர் மொழிரீதியான பாகுபாடுகளிற்குட்பட்டுவருவதனாலும், தமிழ்மொழி அழிவடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.*

*மேலும் இனமுரண்பாடு மற்றும் உள்நாட்டு யுத்தம் காரணமாக கணிசமானளவு தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களின் இரண்டாம் தலைமுறையினர் தமிழ்மொழியை எழுத வாசிக்க இடர்படுகின்றனர். அவர்களுக்கான தமிழ் கற்பிக்கும் வழிமுறைகளைக்கண்டறியும் பொறுப்பும் அவர்களின் தாயகம் என்ற வகையில் இலங்கைக்குண்டு. இப்பின்னணியில் இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மீள் பார்வைக்குட்படுத்தி, மேம்படுத்தவேண்டிய தேவை அவசியமாகவுள்ளது. செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதிய சுற்றறிக்கையின்படி அரசமொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு உருவாக்கப்பட்டது. இந்த அமைச்சின் கீழுள்ள "அரசகரும மொழிகள் ஆணைக்குழு" மொழிரீதியான பிரச்சினைகளைத்தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தற்போது மும்மொழிக்கொள்கை அமுலில் உள்ளபோதும், பல்வேறு மொழிரீதியான பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன.[2]*

- *மாற்றுக்கொள்கைகளுக்கானநிலையத்தினால் மூன்றுவருடமாக மேற்கொள்ளப்பட்ட மொழியுரிமை ஆய்வில், 1788 முறைப்பாடுகள் ஜனாதிபதி செயலகம், மொழி அமைச்சு, மொழித்திணைக்களம் மற்றும் மொழி ஆணைக்குழு போன்ற அரசநிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.*
- *மும்மொழிகளும் பிரயோகிக்கப்பட வேண்டிய புகையிரதநிலையம், பேருந்து நிலையம் போன்ற பொதுவான இடங்களில் தனியொரு மொழியைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் பிரச்சினைகளைக்கூட அரசாங்கத்தினால் தீர்க்கமுடியவில்லை.*
- *சுற்றுநிருபங்கள், கடிதங்கள் என அரசசேவை நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் ஆவணங்களில் சில, தனியொரு மொழி*

யில் (சிங்கள மொழியில்) மாத்திரம் அனுப் பப்படுகின்றன.

## 5.0 தற்காலத்தில், இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் நடைமுறைகள்

இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் புராதன காலந்தொட்டு நடைபெற்று வருகின்றது. ஆதிகாலத்தில் குருகுலமுறைமூலம் தமிழ் கற்றல் - கற்பித்தல் இடம் பெற்றது. தற்காலத்தில் முறைசார்கல்வி நிறுவனங்களான முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் இவற்றுக்குப் புறம்பாக சமூகநிறுவனங்களினாலும் இப்பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் தரம் - 1 தொடக்கம் தரம் - 11 வரையிலான வகுப்புகளுக்கு தமிழ் கட்டாய பாடமாகவுள்ளது. கல்விப்பொதுத்தராதர சாதாரணதர வகுப்புக்களில் (தரம் - 10 மற்றும் தரம் - 11) 'தமிழ் இலக்கிய நயம்' என்ற பாடமும், 'இரண்டாம் மொழி-தமிழ்' என்ற பாடமும் தெரிவுப்பாடங்களாக உள்ளன.

க.பொ.த சாதாரணதரத்தில் தமிழ்ப்பாடத்தில் திறமைச்சித்தி பெற்றுக்கொள்ளல், க.பொ.த உயர்தரம் பயில்வதற்கான அடிப்படைத் தகைமையாகவும் நடுத்தர மற்றும் உயர் அரச தொழில்களுக்கான அடிப்படைக்கல்வித் தகைமையாகவும் வேண்டப்படுகின்றது. கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் கலைப்பிரிவில் தமிழ் ஒரு பாடமாக உள்ளது.

யாழ்ப்பாணம், பேராதனை, கிழக்கு மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகங்களில் தமிழ்ப்பாடத்தை சிறப்புப்பாடமாகக் கொண்ட பட்டக்கற்கைநெறி உள்ளது. மேலும் தமிழில் முதுமாணி, முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிப்பட்டங்களையும் இலங்கையிலுள்ள மேற்படி பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன.

### 5.1 பாடசாலைகளில் தமிழ் மொழி கற்பித்தல் நோக்கங்கள்

மனிதனின்சிந்தனைவிருத்திக்கும்அறிகைப் புலவிரிகைக்கும் மொழி இன்றியமையாததாகும். மனிதனுடைய ஆளுமைவிருத்தியின் அடிப்படை அம்சமாகத்திகழ்வது மொழிக்காட்சியாகும். இவற்றின் அடிப்படையிலேயே பாடசாலைக் கல்வியில் மொழி கற்பித்தல் என்பது முதன்மை பெறுகின்றது. மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றை விருத்தி செய்வதே மொழிகற்றல் - கற்பித்தலின் அடிப்படை நோக்கமாகும்.

இலங்கையில் கல்விப்பொதுத்தராதர சாதாரணதர வகுப்புக்களில் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தை கற்பிப்பதன் நோக்கங்களாக பின்வருவன உள்ளன[4].

- தமிழ் மொழியைத் தொடர்பாடற்கருவியாக காலத்துக்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார விழுமியங்களை அறிந்து அவற்றைப்பேணும் மனப்பாங்கை வெளிப்படுத்தல்.
- கலைகள், அறிவியல், தொழில்நுட்பத்துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- மொழியினூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக்கொள்ளுதல்.
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியை சாதனமாகக் கொள்ளல்.

அழகியல் பாடங்களான சங்கீதம், நடனம், சித்திரம், நாடகம், சிங்கள இலக்கியநயம் மற்றும் ஆங்கில இலக்கியநயம் என்பவற்றுடன் தெரிவுப்பாடமாக 'தமிழ் இலக்கியநயம்' என்ற பாடமும் உள்ளது. 2015 ஆம் ஆண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய 'தமிழ் இலக்கியநயம்' பாடநூலின் நோக்கம் "நீண்ட இலக்கிய வரலாற்றுப்பாரம்பரியத்தை கொண்டுள்ள தமிழ் இலக்கியப்பரப்பில் இடம்பெறும் செய்யுள்கள், பாடல்கள், நவீன கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள், நாடகம் முதலான வடிவங்களை அறிமுகம் செய்தல்" என குறிப்பிடப்பட்டுள்ளது[5].

### 5.2 இடைநிலைக்கல்வியின் புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பு

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சிமையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத் தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை மாணவர்களிடம் விருத்தி செய்யும் நோக்கத்தின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக் கமைய, இதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த 'உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை' இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது. மேலும் தேர்ச் சிமையக்கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015 ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்ப்படுத் தப்பட்டுள்ளது.

### 5.3 இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்த லினை வளப்படுத்துவதற்காக முன்னெடுக் கப்படும் நல்ல அம்சங்கள் (Good Practices)

இலங்கையில் பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் அவற்றிற்கு புறம்பாக செயற் படும் பல நிறுவனங்களாலும் தமிழ் கற்றல் - கற்பித்தல் தொடர்பான நல்ல அம்சங்கள் பல முன்னெடுக்கப்படுகின்றன.

- கல்வியமைச்சினால் அகில இலங்கை ரீதியாக, பாடசாலை மாணவர்களிடையே தமிழ் மொழித்திறன் திறனாய்வுவிருத்திப்போட்டிகள் நடாத்தப்படுகின்றன.
- கொழும்பு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் கல்முனை ஆகிய நகரங்களில் இயங்கும் தமிழ்ச்சங்கங்களினால் தமிழ் வளர்ச்சிக்கான காத்திரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அகில இலங்கை கம்பன் கழகத்தால் பல ஆண்டுகளாக தமிழ் வளர்க்கப்படுகின்றது.
- பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைகளினா லும், தமிழ் மாணவ மன்றங்களினாலும், பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களின் தமிழ் விருத்திக்காக பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுகின்றன.
- 'பண்டிதர்' மற்றும் 'பாலபண்டிதர்' வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. அறநெறிப்பாடசாலைகளில் சமயபாடத்துடன் தமிழ்ப்பாடமும் போதிக்கப்படுகின்றது.
- சைவபரிபாலனசபையினால் பாடசாலை மாணவர்களுக்கு 'தமிழ்' பாடச்சோதனை நடாத்தப்பட்டு தங்கப்பதக்கம் மற்றும் சான்றி தழ்கள் வழங்கப்படுகின்றது.
- பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தமிழ் அறிஞர்களின் சிலைகள் அமைத்து, அவர்களின் விழாக்கள் கொண்டாடப்படுகின்றது.

### 6.0 பொதுப்பரீட்சைகளில் மாணவர்களின் தமிழ்ப்பாட அடைவுகள்

6.1 கல்விப்பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் 'தமிழ்மொழியும் இலக்கியமும்' பாடத்தில் தேசியரீதியிலான அடைவுகள்.

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றியோர் | சித்தியடைந்தோர் சதவீதம் |
|---|---|---|
| *2010* | *80,027* | *78.66%* |
| *2011* | *214,134* | *84.72%* |
| *2012* | *79,833* | *74.99%* |
| *2013* | *57,434* | *79. 82%* |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்)

கடந்த நான்காண்டுகளில், கல்விப்பொதுத் தராதரசாதாரணதரப் பரீட்சையில் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில் சராசரியாக 20 சதவீதத் தினர் சித்தியெய்தத் தவறுகின்றனர்.

6.2 கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் "தமிழ் இலக்கியநயம்" என்ற தெரிவுப்பாடத்தில் தேசியரீதியிலான அடைவுகள்.

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றியோர் | சித்தியடைந்தோர் சதவீதம் |
|---|---|---|
| 2008 | 18,350 | 65.26 % |
| 2009 | 18,375 | 72.27 % |
| 2010 | 19,581 | 66.01 % |
| 2011 | 21,699 | 63.68 % |

(மூலம்: இலங்கைப்பரீட்சைத்திணைக்களம்)

தெரிவுப்பாடமாகிய 'தமிழ் இலக்கிய நயம்' பாடத்தில் 33 சதவீதத்தினர் ஆனோர் சித்தியடைவதில்லை.

6.3 கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் தேசியரீதியிலான அடைவுகள்.

| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றியோர் | சித்தியடைந்தோர் சதவீதம் | சித்தியடையாதோர் சதவீதம் |
|---|---|---|---|
| 2005 | 14,349 | 83.01 % | 16.99 % |
| 2006 | 14,826 | 87.59 % | 12.41 % |
| 2007 | 14,209 | 82.88 % | 17.12 % |
| 2008 | 16,919 | 89.86 % | 10.14 % |
| 2009 | 16,706 | 81.47 % | 18.53 % |
| 2010 | 19,576 | 76.72 % | 23.28 % |

(மூலம்: இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப்பரீட்சையில் சராசரியாக 16 சதவீதத்தினர் ஆனோர் தேசியரீதியில் 'தமிழ்' பாடத்தில் சித்தியெய்தத்தவறுகின்றனர்.

6.4 கல்விப் பொதுத்தராதர சாதரணதரப்பரீட்சையில் "இரண்டாம் மொழி - தமிழ்" மற்றும் "இரண்டாம் மொழி - சிங்களம்" ஆகிய பாடங்களில் தேசிய ரீதியிலான அடைவுகள்.

| ஆண்டு | இரண்டாம் மொழி - தமிழ் | | இரண்டாம் மொழி - சிங்களம் | |
|---|---|---|---|---|
| ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றியோர் | சித்தியடைந்தோர் சதவீதம் | பரீட்சைக்குத் தோற்றியோர் | சித்தியடைந்தோர் சதவீதம் |
| 2008 | 1,579 | 67.64 % | 8,560 | 65.20 % |
| 2009 | 1,892 | 72.41 % | 7,453 | 68.12 % |
| 2010 | 1,928 | 77.85 % | 6,764 | 62.67 % |
| 2011 | 2,392 | 77.09 % | 6,456 | 66.47 % |

மூலம் : இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்)

- இரண்டாம் மொழியாக தமிழைப்பயின்று க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்று பவர்களின் எண்ணிக்கையைவிட இரண்டாம் மொழியாகசிங்களத்தைப் பயின்றுபரீட்சைக்கு தோற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.
- 'இரண்டாம் மொழி - தமிழ்' பாடத்தின் சராசரி சித்திவீதம் (73.74 சதவீதம்) 'இரண்டாம் மொழி - சிங்களம்' பாடத்தின் சராசரி சித்தி வீதத்தினைவிட (65.62 சதவீதம்) அதிகமாகும்.

**7.0 இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தலில் எதிர்கொள்ளும் சவால்கள்**

இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தலில் கல்விக்கொள்கைகள், கலைத்திட்டம், மதிப்பீடு, கற்பித்தல் முறையியல், மற்றும் ஆசிரியர் பயிற்சி சார்பான சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

- சில ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலை களில்முறையாகப்பயிற்றப்படாத ஆசிரியர்கள் தமிழ் பாடத்தை கற்பித்தல். (ஏனைய பாட ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், ஆசிரிய உதவியாளர்கள்)
- கணிசமான எண்ணிக்கையான தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நவீன தமிழ் கற்றல் -, கற் பித்தல் முறைகள் பற்றிய பயிற்சிகளின்மை மற்றும் தற்காலத்திற்கேற்ற ஆசிரியர் கல்வி கலைத்திட்டம், மற்றும் நவீன பயிற்சி முறைகள் என்பன ஆசிரியர் கல்வி நிறுவனங்களால் பின்பற்றப்படுவதில்லை.
- இலங்கையில் இடைநிலைப்பாடசாலை களிலே தாய்மொழிமூலம் கல்வியூட்டும் கொள்கை பல ஆண்டுகளாக கடைப்பிடிக் கப்பட்டுவருகின்றபோதிலும் தாய்மொழி யைக் கற்பிக்கும் முறையிலே ஆக்கபூர்வமான மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு புகுத்தப் படாமை பெருங்குறைபாடாக இருந்து வந்துள்ளது.
- இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டக் காலப்பகுதியில் நிவாரணக்கிராமங்களில் இருந்த 85,000 மாணவர்களில்யுனிசெவ்மேற்கொண்ட ஆய்வில் 70,000 மாணவர்கள் 1.5 தொடக்கம் 3 வருடங்கள் வரையில் தமது கற்றல் செயற்பாடுகளை முற்றாக இழந்திருக்கின்றார்கள். பிற் காலப்பகுதியில் அவர்களுக்கான துரித கற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டபோதும் அவர்கள் அடிப்படை மொழித்திறன் அறிவு குறைந்தவர்களாக காணப்படுகின்றனர்[8].
- ஆரம்ப மற்றும் இடைநிலைக்கல்வியில் 'தமிழ்' பாடக்கலைத்திட்ட வடிவமைப்பு மற்றும் பாடநூலாக்கம் ஆகியவற்றில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இலங்கையின் அனைத்துப் பிரதேசத்தையும் பிரதிபலிக்கும் வகையில் பாட உள்ளடக்கம் மற்றும் பாடநூல் எழுத் தாளர்கள் தெரிவுசெய்யப்படுவதில்லை. "2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஆறாந்தரத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'தமிழ் மொழியும் இலக்கியமும்" புதிய பாடநூலில் பல தவறுகள் காணப்படுகின்றன."
- இலங்கைப்பல்கலைக்கழகங்களில் தமிழ் பாடத்தை சிறப்புப்பாடமாக தெரிவு செய்து கற்கும் மாணவர் எண்ணிக்கை தற் காலத்தில் குறைவடைந்து செல்கின்றது. தொழில்வாய்ப்பை அடிப்படையாகக்கொண்டு மாணவர்கள் சமூகவிஞ்ஞான பாடங்களை தெரிவுசெய்து கற்குமளவிற்கு மானிடவியல் மற்றும் மொழியியல் பாடங்களை தெரிவு செய்வதில்லை. இது நீண்ட நாளைய நோக்கில் தமிழ் கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை ஏற்படுத்தும்.
- இலங்கையில் மொழிப்பிரச்சினைகளை தீர்க்கவென அமைச்சு ஒன்று இருந்தும்கூட மொழிரீதியான பிரச்சினைகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வந்துள்ளன. சட்டங்கள் பல இருப்பினும்கூட அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமை, அதிகாரம் போன்றன தீர்வுக்கான வழியைக்குழப்பின.
- 2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியில் தமிழ்மொழி புறக்கணிக் கப்பட்டது. எதிர்பார்க்கப்படும் வினாக்களின் தொகுப்புதமிழ்மொழிப்பதிப்பில்இடம்பெற்றி ருக்கவில்லை.

## 8.0 இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் மேம்பாட்டுக்கான சிபார்சுகள்

இலங்கையில் தமிழ்ப்பாடம் கற்றல் - கற்பித்தலில் உள்ள சவால்களை வெற்றிகொள்ளத்தக்க வகையிலான பின்வரும் முன்னெடுப்புக்களை, காலமாற்றத்திற்கேற்ப மேற்கொள்ள வேண்டும்.

1. தமிழ்மொழி கற்றலுக்கான நிறுவனம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்நிறுவனம் நாட்டின் சகல தமிழ் மொழியில் கற்பிக்கும் பாடசாலைகளிலும் ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்கல், பாடவிதானம் தயாரித்தல், அதற்கான நூல்கள், கற்பித்தல் முறை, தமிழ்மொழிமூலம் கற்றல் - கற்பித்தல் சம்மந்தமான நூல்களை வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கும்.
2. இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சலாந்து, டென்மார்க், போன்ற நாடுகளிலும் பெருமளவு ஈழத்தமிழர்கள் வாழ்கின்றார்கள். இவ்வாறு புலம்பெயர்ந்து வாழுகின்ற ஈழத்தமிழ் உறவுகளின் இரண்டாம் தலைமுறைப்பிள்ளைகள் பலர் தமிழ் மொழியை எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் தாயகத்தினர் என்றவகையில் அவர்களுக்கான தமிழ் கற்றல் - கற்பித்தலுக்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்[12].
3. பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்[13].
   - மரபுவழி இலக்கணக் கருத்துக்களோடு நவீன மொழியியல் கருத்துக்களையும் இணைத்து மொழியை கற்பிக்கப்பட வேண்டும்.
   - தமது ஆக்கவியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறை தேவையின்படி இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு, புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ள வேண்டும்.
   - ஆசிரியர்வழிகாட்டியில் தேர்ச்சிமட்டங்களுக்குத் தரப்பட்டுள்ள பாடமுன்னாயத்தங்களைப் பயன்படுத்தி, அதனடிப்படையில் ஏனைய விடய உள்ளடக்கங்களுக்கு பாட முன்னாயுத்தங்களைத் தயார் செய்து வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும்.
   - தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தினைச் சிறப்பானமுறையில் கற்பிப்பதற்கு பாடத் தலைப்புக்குப் பொருத்தமான தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
   - மாணவர்களுடைய திறன்களை விருத்தி செய்யக்கூடிய கற்பித்தல் சாதனங்களை அவர்களது நிலைக்கேற்ப தயாரித்து, 'தமிழ் மொழியும் இலக்கியமும்' எனும் பாடத்தினைச் செம்மையாகக் கற்பிப்பதனூடாக, மாறிவரும் உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்க வேண்டும்.

## 9.0 முடிவுரை

இலங்கையில் வாழும் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட இலங்கைத் தமிழர்கள் ம்றறும் முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மை இனத்தவர்களின் இனத்துவ அடையாளத்தினைப்பேணிக்கொள்வதற்கும் பண்பாட்டுப் பாதுகாப்பிற்கும் தமிழ்மொழி அழியாது பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மீள்பார்வைக்குட்படுத்தி, மேம்படுத்த வேண்டிய தேவை அவசியமாகவுள்ளது. அனைத்து மட்டத்திலும் தமிழ்மொழி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளினை, காலமாற்றத்திற்கேற்றவாறு வினைத்திறனுடன் முன்னெடுக்க வேண்டும். இதற்கு உலகளாவிய ஒத்துழைப்பும் அவசியமாகும். தமிழ்மொழி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்ளத்தக்க வகையிலான முன்னெடுப்புக்களை, மேற்கொள்வதனூடாக செம்மொழியான தமிழ் மொழியை அழிவிலிருந்து பாதுகாக்கமுடியும்.

## அடிக்குறிப்புக்கள்

1. யாழ். தினக்குரல், 21 டிசம்பர் 2014, ப-3
2. மேலது, ப-3
3. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, 'தமிழ்', தரம் -13, ப- V
4. க.பொ.த சாதாரணதரத்தின் தமிழ் பாடத்திற்குரிய தேசிய மதிப்பீட்டு அறிக்கை - 2012, ப -1
5. 'தமிழ் இலக்கியநயம்' பாடநூல், தரம் - 10, 11, ப - ix
6. ஆசிரியர் வழிகாட்டி, "தமிழ் மொழியும் இலக்கியமும்", தரம் 6, ப - i
7. தமிழ்மொழி கற்பித்தல் முறைகள், இலங்கை தேசிய கல்வி நிறுவகம், ப - 5
8. Gurukularajah, T (2014), "Vulnerability in Northern Education", Discussion on 'Democratizing the North: A Dialogue on Governance, Development and Vulnerability' presentation transcript, Jaffna, 10-01-2014
9. யாழ் தினக்குரல், 04, டிசம்பர் 2014, ப - 18 & 05, டிசம்பர் 2014, ப - 13
10. ஞாயிறு தினக்குரல், 04 - 08 - 2014
11. வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு - 2014, ப-xxv
12. நித்திலவர்ணன், ஆ; 2014 வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும், அவற்றை எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும், யா/கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகரான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலம் நினைவுப் பேருரை, 27-09-2014, ப-11.
13. ஆசிரியர் வழிகாட்டி, தரம் -10, தமிழ் மொழியும் இலக்கியமும், ப-6

## உசாத்துணைகள்


1. ஜெயசூரியன், ஏ(2014), " எட்டாக்கனியாக உள்ளது மொழி உரிமை", யாழ் தினக்குரல், 21-12-2014, ஏசியன் மீடியா பப்ளிக்கேசன் (பிரைவேட்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
2. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, 'தமிழ்' தரம்13, தமிழ்மொழித்துறை, மொழிகள், மானுடவியல், சமூகவிஞ்ஞான பீடம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.
3. மதிப்பீட்டு அறிக்கை, க.பொ.த சாதாரணதரப்பரீட்சை- 2012, ஆய்வு அபிவிருத்திக்கிளை, தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பரீட்சைத் திணைக்களம், இலங்கை.
4. 'தமிழ் இலக்கிய நயம்' பாடநூல், தரம் - 10 மற்றும் 11, கல்வி வெளியீட்டுத்திணைக்களம், கொழும்பு, 2014.
5. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, 'தமிழ் மொழியும் இலக்கியமும்', தரம்-6 தமிழ்மொழித்துறை, மொழிகள், மானுடவியல், சமூகவிஞ்ஞான பீடம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

6. National Symposium on Reviewing of the performance of School Candidates, G.C.E (O/L) Examination 2011, Research & Development Branch, National Evaluation & Testing Service, Department of Examination, Sri Lanka.

7. Statistical Hand Book 2005 -2007, Research & Development Branch, National Evaluation & Testing Service, Department of Examination, Sri Lanka.

8. தமிழ்மொழி கற்பித்தல் முறைகள், பகுதி -1, பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி, ஆசிரிய கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

9. Gurukularajah, T(2014), "Vulnerability in Northern Education', Discussion on 'Democratizing the North: A Dialogue on Governance, Development and Vulnerability', presentation transcript, Jaffna, 10-01-2014.

10. கோணேசபிள்ளை, கோ(2014), " ஆறாந்தர தமிழ் மொழியும் இலக்கியமும் புதிய பாடநூலில் காணப்படும் தவறுகள்", யாழ். தினக்குரல், 04,05-12-2014, ஏசியன் மீடியா பப்ளிக்கேசன் (பிரைவேட்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

11. '2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைவழிகாட்டியில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது". செய்தி, " ஞாயிறு தினக்குரல்", 04-08-2014, ஏசியன் மீடியா பப்ளிக்கேசன் (பிரைவேட்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

12. வடக்கின் கல்விமுறைமை மீளாய்வு- 2014, வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு, வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு நெறிப்படுத்தும் குழு, வடக்கு மாகாணம், கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம்.

13. நித்திலவர்ணன், ஆ(2014), வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும், அவற்றை எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும், யா/கரவெட்டி விக்கினேஸ்வராக்கல்லூரியின் ஸ்தாபகரான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலம் நினைவுப்பேருரை, 27-09-2014.

14. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, 'தமிழ் மொழியும் இலக்கியமும்', தரம்-6, தமிழ்மொழித்துறை, மொழிகள், மானுடவியல், சமூகவிஞ்ஞான பீடம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

# உலக இலக்கியம் பற்றிய எண்ணக்கருவும் தமிழ் இலக்கியச் சூழலும்

## மாற்றத்தினை வேண்டி நிற்கும் தமிழாய்வுச் சூழல் குறித்ததோர் ஆய்வு நோக்கு

ஈ.குமரன்

**ஆய்வுச்சுருக்கம்**

*சமகாலத்தில் தமிழ் இலக்கியப் படைப்புலகும் ஆய்வுலகும் உலக இலக்கியக் கருத்தாக்கங்களுடன் தம்மைத் தொடர்புபடுத்திக் கொண்டுள்ளன. இது அறிவியல் வளர்ச்சி, மனித சிந்தனை அகற்சி, மனிதப் பரம்பல் முதலானவற்றின் உடன் விளைவாகும். தவிர்க்க முடியாத இவ்வளர்ச்சி நிலை இலக்கியங்களின் உற்பத்தி மற்றும் ஆய்வுகள் தொடர்பாக கணிசமான பாதிப்பினை ஏற்படுத்தியிருப்பதனை உணரலாம். இப் பாதிப்பு என்பது ஒரு புறத்தில் நன்மையானதாக அமையும் அதேவேளை மறுபுறத்தில் தமிழ் இலக்கியங்களின் தனித்துவம், அடையாளம் குறித்த பாதகமான கருத்து நிலைகளின் வளர்ச்சிக்கு உரங்கொடுப்பதாகவும் அமைந்து விடலாம் எனக் கருதப்படுகின்றது. எனவே உலக இலக்கியக் கருத்தாக்கங்களுடன் தமிழ் இலக்கியங்களைப் பொருத்திப் பார்ப்பதில் கூடுதல் அவதானமும், அக்கறையும், முன்னெச்சரிக்கையும் தேவைப்படுகின்றன. இதனால் கீழைத்தேய மொழிகள் மற்றும் கலை, இலக்கியம், பண்பாடு குறித்து அக்கறை செலுத்தும் கீழைத்தேசவியல் (Oriantalism), பின்காலனித்துவம் (Post - Colonialsm) எனும் கோட்பாடுகள் மற்றும் 'தேசிய இலக்கியம்', பற்றிய எண்ணக் கருத்துக்களின் வழி உலக இலக்கியக் கருத்தாக்கங்களைத் தமிழ் இலக்கியச் சூழலுக்குள் பொருத்திப் பார்ப்பது பயனுடையதாக அமையும். இதனால் தமிழ் இலக்கியப் படைப்புக்களும் அவை குறித்த ஆய்வுகளும் மேலும் ஆழமும் விரிவும் பெறும் எனலாம்.*

**திறவுச்சொற்கள்** : உலக இலக்கியம், ஐரோப்பியமையப்பார்வை, கீழைத்தேசவியல், தேசிய இலக்கியம்.

### அறிமுகம்

தமிழ்மொழி நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தினைக் கொண்டிருப்பதைப் போலவே இலக்கிய ஆய்வுபற்றிய நீண்ட வரலாற்றையும் கொண்டிருக்கிறது. இலக்கியத்தின் பொருள், வடிவம், தத்துவச் சார்பு, சமூகநல நாட்டம், பின்னணி குறித்த ஆய்வுகள் பல ஆண்டுகளாக நிகழ்த்தப்பட்டு வந்திருப்பதனைக் காணலாம். இலக்கியம் பற்றிய கொள்கைகளும் புரிதல்களும் எல்லாக் காலங்களிலும் ஒரே மாதிரியாக இருந்ததில்லை. காலந்தோறும் இலக்கியக் கொள்கைகள் தொடர்பாகவும் இலக்கிய ஆய்வு மற்றும் முறையியல் தொடர்பாகவும் மாற்றங்களும் வளர்ச்சிகளும் ஏற்பட்டு வந்தேயுள்ளன. அரசியல், சமூக, பொருளாதாரப் பின்னணிகள் மட்டுமன்றி பிறமொழிச் செல்வாக்கு, பண்பாட்டுக் கலப்பு, வாசகரின் ஏற்புணர்வு என்பனவும் இலக்கியக் கொள்கைகள், கோட்பாடுகள் தொடர்பாகக் கணிசமான செல்வாக்கினைச் செலுத்தி வந்திருப்பதனைக் காணமுடியும். காலந்தோறும் மாற்றமடைந்து வந்த இலக்கியக் கொள்கைகளும் கோட்பாடுகளும் இலக்கியங்களின் திசைவழியினைத் தீர்மானிப்பதோடு தமிழ் இலக்கிய வளர்ச்சி தேக்க நிலையடையாது தொடர்வதற்கும் வித்திட்டு வந்ததை மறுப்பதற்கில்லை.

### ஆய்வின் நோக்கு

இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் போக்குக் குறித்து அக்கறைப்படுவோர் சமகாலத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் புறந்தள்ளிவிட்டு இலக்கிய ஆக்க முயற்சிகளிலோ அல்லது ஆய்வுகளிலோ ஈடுபடமுடியாது. முன்னைய காலகட்டங்களை விட அறிவியல் வளர்ச்சி, சிந்தனை அகற்சி, தத்துவ ரீதியான பார்வை விசாலம் என்பன தற்காலத்தில் அதிகமாக உள்ளன. அதற்கேற்ற வகையில்

இலக்கியம் பற்றிய கருத்து நிலைகளில் ஆழமும் விரிவும் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக உலக இலக்கியச் செல்வாக்கு தமிழ் இலக்கியங்களில் ஏற்படுத்தி வரும் பாதிப்புக் குறித்தும் அதன் பின்னணியில் தமிழ் இலக்கியம் அடையும் வளர்ச்சிகள் மற்றும் எதிர்நோக்கும் சவால்கள் குறித்தும் இக் கட்டுரை ஆய்வுசெய்ய முனைகின்றது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு விவரண முறையியலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ் இலக்கிய ஆய்வின் சமகாலப் போக்குகள் குறித்தும் அதில் உலக இலக்கியப் பார்வைகளும் கோட்பாடுகளும் ஏற்படுத்தி வரும் பாதிப்புக் குறித்தும் தகவல்கள் நூல்கள், சஞ்சிகைகள் வாயிலாகவும் கட்டுரையாசிரியரின் அவதானிப்பின் மூலமாகவும் திரட்டப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஒப்பிலக்கிய மற்றும் கீழைத்தேசவியல், பின்காலனித்துவம் முதலான திறனாய்வுக் கோட்பாடுகள் வழி தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் தேசிய இலக்கியம், உலக இலக்கியம், பிரபஞ்ச இலக்கியம் என்னும் எண்ணக்கருக்களின் வழி அவை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

**உலக இலக்கியமும் தமிழ்ச் சூழலும்**

ஆரம்பத்தில் தமிழ் இலக்கியம் பற்றிய புரிதல், ஆய்வு, விமர்சனம் என்பன வரையறுக்கப்பட்ட எல்லைக்குள்ளேயே மேற்கொள்ளப்பட்டன.

i. உலகில் தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே செல்வாக்குப் பெற்று வழங்கி வந்தமை.
ii. தமிழ் இலக்கியங்களின் களம் விரிவுபடுத்தப்படாமலிருந்தமை. அதாவது தமிழ்ச்சூழலுடன் தொடர்புபட்ட விடயங்கள், முரண்பாடுகள், சிக்கல்கள், பிரச்சினைகள் என்பவற்றுக்கு மட்டும் தமிழ் இலக்கியங்கள் முதன்மை கொடுக்க விழைந்தமை.
iii. பிரசுரவசதியின் மட்டுப்பாடு
iv. வரையறுக்கப்பட்ட தொடர்பாடல் வசதி.
v. தமிழிலிருந்து பிறமொழிகளுக்கு இலக்கியங்களை மொழிபெயர்க்கும் வேகம் மிக மந்தமாக இருந்தமை.

முதலான காரணங்களால் இலக்கிய ஆய்வுகளிலும் மட்டுப்பாடுகள் நிலவியதை மறுப்பதற்கில்லை. தமிழ் இலக்கியங்களைத் தமிழ் இலக்கியச் சூழலுக்குள் மட்டும் ஆய்வு செய்தாற் போதுமானது என்ற எண்ணமே ஆய்வாளர்கள் மத்தியில் பரவலாக இருந்து வந்துள்ளது. இதற்குப் புறம்பாகப் பிறமொழி இலக்கியச் சூழலுடன் நன்கு பிரிச்சயமானவர்கள் தமிழ் இலக்கியங்களை வேற்றுமொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வுகளை முன்னெடுத்த போது அவை 'ஒப்பியலாய்வு'களாக அடையாளம் காணப்பட்டன[1]. ஒப்பியலாய்வினை இலக்கிய ஆய்வுடன் இணைத்து நோக்கும் பண்பு இல்லாமலேயிருந்தது. ஒப்பியலாய்வினைத் தனியொருவகை இலக்கிய ஆய்வுகளாகவும் அதில் ஈடுபடுபவர்களைத் தனித்திறன் வாய்ந்த ஆய்வாளர்களாகவும் கருதும் போக்கே தமிழ்ச் சூழலில் பல ஆண்டுகளாக நிலவி வந்ததைக் காணலாம். சுருக்கமாகக் குறிப்பிடின் தமிழ் இலக்கியங்களை உலக இலக்கியங்களின் ஒரு பகுதியாகப் பார்க்கும் பார்வையை தமிழ் சூழலில் காண்பதே அரிதாக இருந்தது.

**உலக இலக்கியம் பற்றிய கருத்துநிலை வளர்ச்சிக்கான காரணிகள்**

இந்நிலை இருபத்தோராம் நூற்றாண்டில் நீங்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. இது சமுதாய மற்றும் அறிவியல் வளர்ச்சியினதும் மனிதப் பரம்பலினதும் இணைந்த ஒரு மாற்ற நிலை என்பதைப் புரிந்து கொள்ளுதல் அவசியமானதாகும்.

1. தமிழர்கள் உலகின் பல பகுதிகளிலும் பரந்து பட்டு வாழ்தல்.
2. அறிவியல் வளர்ச்சி
   i. தொடர்பாடல்துறையில் ஏற்பட்ட வளர்ச்சி.
   ii. இணையத்தின் செல்வாக்கு.
   iii. போக்குவரத்து வசதிகளின் அதிகரிப்பு.
   iv. பிரசுர வசதிகள் ஏற்படுத்தப்பட்டமை
3. மொழிபெயர்ப்புக்களின் அதிகரிப்பு
4. உலகமயமாக்கல் செல்வாக்கு.
5. மனித சிந்தனையில் ஏற்பட்ட மாற்றங்களும் விரிவுகளும்

முதலானவை தமிழ் இலக்கியங்கள் எல்லை கடக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினை ஏற்படுத்தின. உலக இலக்கியப் போக்குகள், வளர்ச்சிகள் முதலானவற்றினை அறிந்து கொள்ளாமல் தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்வதென்பது ஒற்றைத் தன்மை வாய்ந்த ஆய்வாகவே அமையும் என்ற உண்மை புலனாகத் தொடங்கியது. புலம் பெயர் இலக்கியங்கள் குறித்ததாக தமிழ்ச் சூழலில் நிகழ்ந்த ஆய்வுகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

புலம்பெயர் இலக்கியங்களை ஈழத்து அல்லது தமிழ் இலக்கியங்களின் பிரதிகளாகக் காண்பதோ அல்லது தமிழ்ச் சூழலில் நிலவிவரும் இலக்கியம் பற்றிய கருத்து நிலைகளின் பின்னணியில் அவற்றினைப் புரிந்து கொள்ள முயல்வதோ தவறானது. ஆரம்ப காலங்களில் வெளிவந்த - தொண்ணூறுகளுக்கு முந்தைய புலம்பெயர்படைப்புகள் இதற்குப் புற நடையானவை. ஆனால் அண்மைக்காலமாக வெளிவந்து கொண்டிருக்கும் புலம்பெயர் படைப்புகள் ஈழம் பற்றியதான கதைக் கரு வினைக் கொண்டிருக்கின்றன என்பதற்காக அவ் விலக்கியங்களை ஈழத்திலக்கியப் போக்குடன் ஒப்பிட்டு மதிப்பிட முடியாது. புலம்பெயர் எழுத்தாளர்கள் வாழும் பிரதேச இலக்கியச்சூழல், அவர்கள் அறிந்து கொண்ட இலக்கியங்கள், அதில் கையாளப்பட்டுள்ள உத்திகள், திறன்கள் முதலானவை அவர்களது படைப்புக்களில் பதிவு செய்யப்பட்டிருப்பதனை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். ஆகையால் புலம்பெயர்படைப்புக்களை உலக இலக்கியத்தின் ஒரு பகுதியாகவே பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தமிழர்களின் பரந்துபட்ட வாழிடச் சூழல் எல்லைகடந்த இலக்கியச்சாத்தியப்பாடுகளுக்கு வித்திட்டுள்ளதை மறுத்தலியலாது.

அறிவியல் வளர்ச்சி உலகினை இன்று சுருக்கி விட்டது. உலக மயமாக்கம், பூலோகக் கிராமம் (Global Village) என்பன பற்றி நிறையவே பேசப்பட்டு வருகின்றன. தொடர்பாடல், இணையம், போக்கு வரத்து என்பன ஏற்படுத்தியிருக்கும் வாய்ப்புக் களும் வசதிகளும் சமூகம், பொருளாதாரம், அரசியல் எனும் அனைத்துத் துறைகளிலும் கணிசமாக உணரப்பட்டு வருவதை ஏற்றுக் கொண்டேயாதல் வேண்டும். குறிப்பாக, இணையம் இலக்கியத்துறைகளில் இன்று செல்வாக்குப் பெற்றதொன்றாகவே இருக்கின்றது.

i. இலக்கிய உருவாக்கம்

ii. இலக்கியப் பரம்பல்

iii. இலக்கியம் பற்றிய கருத்துநிலையின் விரிவாக்கம்

முதலானவற்றிற்கு இது பெரிதும் கைகொடுக் கின்றது. இணைய இதழ்கள் பல இப்போது வெளிவந்து கொண்டேயிருக்கின்றன. முகப்புப் புத்தகங்கள், எழுத்தாளர்களின் பிரத்தியேகமான இணையப் பக்கங்கள் முதலானவற்றிற்கூடாகவும் இலக்கியங்களும் இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளும் வெளிவந்தவண்ணமே உள்ளன. இலக்கியங்கள் பல மின்பதிவு (Scan) செய்யப்பட்டு இணையத்தில் தரவேற்றம் செய்யப்பட்டும் உள்ளன. இணையத்தினூடாக நூல்களை விற்கவும் வாங்கவும் கூட வசதியுள்ளது. மேலும் தேவைப்படின் மின்பதிப்புப் புத்தகங்களை (e-books) தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும். இணைய உலாவல்கள் (browsing), இணைய உசாவல்கள் (e-discussion), இணையக் கருத்துக்களம் (e-conference) என்பன இலக்கியம் குறித்ததான ஆரோக்கியமான வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன. குறிப்பாகச் சொல்வதானால் இலக்கியத்திற்கான களமும் இலக்கியப் பரவலுக்கான வாய்ப்பும் இதனூடாக அதிகரித்திருக்கின்றது. தமிழ் இலக்கியம் தமிழ் நிலத்துக்கும் மட்டும் சொந்தமானதல்ல அது உலக இலக்கியத்தின் ஒருபகுதி என்பதை இணையமும் அதனுடன் இணைந்த வசதிகளும் ஏற்படுத்தித் தந்துள்ளன.

இலக்கியத்தின் பரம்பலையும் செல்வாக்கை யும்துரிதப்படுத்திய விடயங்களில் மொழிபெயர்ப் புக்களுக்கும் முக்கிய இடமுண்டு. வடமொழி, ஆங்கில மொழி அல்லது ஆங்கில மொழி வழி அறிமுகமான இலக்கியங்கள் மட்டுமே மொழி பெயர்க்கப்படும் நிலை ஆரம்பத்தில் தமிழில் காணப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னதாக வடமொழி நூல்களே

தமிழுக்குப் பெரிதும் மொழிபெயர்க்கப்பட்டன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதலாக ஆங்கில நூல்களும் ஆங்கில மொழிவழி அறிமுகமான பிற மேனாட்டு மொழி நூல்களும் மொழி பெயர்க்கப்பட்டு வந்ததை அறியலாம். ஆனால் இன்று மொழி பெயர்ப்பின் எல்லை விரிவடைந்துள்ளது. ஆங்கிலமொழிவழியாகஅன்றி நேரடியாகவே மேனாட்டு மற்றும் கிழக்காசிய மொழி இலக்கியங்களை மொழிபெயர்க்கும் திறன் கொண்டவர்கள் தமிழ்ச் சூழலில் இருக்கின்றனர். குறிப்பாகப் புலம்பெயர் சூழலில் வாழும் படைப்பாளிகள் பலர் மொழிபெயர்ப்புக்குக் கணிசமான பங்களிப்பினை ஆற்றியுள்ளமையைக் குறிப்பிட்டாதல் வேண்டும். இவற்றால் தமிழ்ப் படைப்பாளிகள் உலக இலக்கியப் பரப்பினைத் தரிசிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் தமிழ்ப் படைப்புக்கள் தமிழிலிருந்து உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் வருகின்றன. தமிழ்ப் படைப்புக்கள் உலக அங்கீகாரத்தினைப் பெறுவதற்கான முதன் முயற்சியாக இவற்றைக் கருதமுடியும். தமிழ் மொழிபெயர்ப்பு மென்பொருள் உருவாக்கம் பூரணமாக நிறைவடையவில்லையெனினும் எதிர் காலத்தில் அதில் ஏற்படும் முன்னேற்றங்கள் உலக அரங்கில் தமிழ் இலக்கியங்களுக்கு அறிமுகத்தி னையும்பிரசித்தத்தினையும்பெற்றுத்தரும்என்பதில் ஐயமில்லை. இவற்றால் தவிர்க்க முடியாமல் உலக இலக்கிய எல்லைக்குள் தமிழ் இலக்கியப் படைப்பாளிகளும் நகர்ந்து கொண்டிருப்பதை உணரமுடிகின்றது. இவ்விடத்தில் உலக இலக்கியம் பற்றிய எண்ணக்கருவின் அடிப்படைகளைப் புரிந்து கொள்வது அவசியமானதாகும்.

**கோட்பாட்டு ரீதியாக உலக இலக்கியம்:**

'உலக இலக்கியம்' என்னும்தொடர் பல ஆண்டுகளாக இலக்கியச் சூழலுள் பேசப்பட்டு வந்த போதிலும் அதனை ஒரு கருத்தியல் வடிவம் பெறச் செய்தவர் ஜேர்மன் சிந்தனாவாதியான 'கதே' (Johann Wolfgang von Goethe) என்பவராவர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அவரால் முன்வைக்கப்பட்ட இக் கருத்தியல் இன்றும் செல்வாக்குப் பெற்றதொன்றாகவே இருந்து வருவதை மறுத்தலியலாது. குறிப்பாக அமெரிக்கப் படைப்பாளிகள் இக் கருத்தியலில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களாக உள்ளனர். ஆயினும் உலக இலக்கியம் பற்றிய கருத்து நிலைகள் காலந்தோறும் மாற்றங்களுக்கு உள்ளாகி வந்துள் ளதை அவதானிக்க முடியும். அன்றுதொட்டு இன்று வரை செல்வாக்குப் பெற்றுள்ள உலக இலக்கியம் பற்றிய கருத்து நிலைகளைப் பின்வரும் மூன்று பிரிவுகளுள் அடக்கலாம்.

i. உலக இலக்கியத் தரத்துக்கு ஒப்பானவை என விதந்துரைக்கத் தக்க இலக்கியப்படைப்புக்கள்.
ii. தேசிய எல்லைகளைக் கடந்த இலக்கியங்கள்.
iii. உலக இலக்கியம் பற்றிய கோட்பாடுகள், சிந்தனைகள், கருத்துநிலைகள் என்பவற்றைத் தவிர்க்க முடியாத நிலையில் உள்வாங்கும் இலக்கியங்கள்.

என்பனவே அவையாகும். உலக இலக்கியத் தரத்துக்கு ஒப்பானவை எனக் கருதத்தக்க இலக்கியப்படைப்புக்களை உலக இலக்கியங்களாகக் கருதும் மனநிலை மிகப் பழமையானது. உலக இலக்கியம் (World Literature)என்னும் சொற்றொடர் ஆரம்பத்தில் இக்கருத்து நிலை வெளிப்பாட்டுக்காகவே உருவாக் கப்பட்டிருப்பதனைக் காணலாம். அகராதிகள் தரும் விளக்கங்கள் பெரும்பாலும் இக் கருத்துநிலையை முதன்மைப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. ஆனால் 'கதே' இதில் நின்றும் வேறுபட்ட கருத்தியல் கொண்டவராக விளங்கினர். அவர் தேசிய எல்லைகளைக் கடந்த இலக்கியங்களே உலக இலக்கியங்கள் எனக் கொண்டார். காலம், இனம், பண்பாட்டுச் சூழல், நாட்டு எல்லைகள் முதலானவற்றைக்கடந்த நிலையில் படைக்கப்படும் இலக்கியங்களை அவர் உலக இலக்கியங்கள் என்னும் சொற்றொடரால் குறித்தார்.

"இலக்கியம் - குறிப்பாகக் கவிதை என்பது ஒரு தேசத்துக்குரியதல்ல அது உலக மக்கள் அனைவருக்கும் உரியது. ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற வேண்டியது. அதனுடைய விகசிப்பு எல்லா இடங்களிலும் இனங்காணப்படத்தக்கதாக அமைய வேண்டும். அதனாலே தான் உலகத் தரமான

இலக்கியங்களை விரும்புகின்றேன். அவை பற்றிப் பேசவும் விழைகின்றேன். தேசிய இலக்கியம் என்பது இன்று பொருளற்றதாக மாறிவிட்டது. இது உலக இலக்கிய காலம். அனைவரும் உலக இலக்கியம் பற்றிய தேடலிலும் ஆக்க முயற்சிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள முயல்வார்களாக"[2]. எனும் கதேயின் கூற்று உலக இலக்கியம் பற்றிய அவரது கருத்துநிலையினை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. அவரது கருத்தியல் இலக்கியப் படைப்பாக்கம் மற்றும் ஆய்வுத் துறைகளில் கணிசமான பாதிப்பினை ஏற்படுத்தியதை மறுப்பதற்கில்லை.

ஆனால் அமெரிக்கப் படைப்பாளிகளும் மேற்கைரோப்பிய அறிஞர்கள் சிலரும் உலக இலக்கியம் என்றும் சொற்றொடரினை உலகமயமாக்கத்தின் பின்னணியில் விளங்கிக் கொள்ள முற்படுகின்றனர். உலகம் அறிவியல் வசதிகளின் பின்புலத்தில் சுருங்கி வரும் நிலையில் இலக்கியப் படைப்பாக்கமும் இலக்கியம் பற்றிய மதிப்பீடும் அதற்கேற்ற தன்மைகளைப் பெற்றிருக்க வேண்டும் என அவர்கள் வாதிடுகின்றனர். இலக்கியம் பற்றிய சிந்தனைகள், கருத்து நிலைகள், உத்திகள் மிக இலகுவாகவும் வேகமாகவும் பிரதேச எல்லைகளைக் கடந்து பரவிவரும் சூழலில் உலக இலக்கியம் குறித்துப் பேசுவதும் அது பற்றிச் சிந்திப்பதும் பொருத்தமாக அமையும் என்பது அவர்களது கருத்தாகும். மேலும் அவர்களது கருத்து நிலைகளின் பின்னணியில் கால, இன, பண்பாட்டு அடையாளங்களைக் கடந்த நிலையில் இலக்கியங்களைப் படைப்பதும் அவை பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுவதும் இன்றைய நிலையில் தவிர்க்க முடியாததாகின்றது. குறிப்பாகச் சொல்வதனால் உலக இலக்கியப் போக்குப் பற்றிய பரந்த நோக்கு என்பது இல்லாதவரை வினைத்திறன் மிக்க இலக்கியப் பயிற்சி என்பதும் விமர்சனம் என்பதும் சாத்தியமற்றதாகி விடுகின்றன.

ஒப்பியல் இலக்கியத்தின் இலட்சியம் என்பது உலக இலக்கியங் குறித்த தேடலாகவே அமைய வேண்டும் என ஃபிரான்கோ மோர்த்தி மற்றும் டம்ரோச் (Franco Moretti & Damrosch) எனும் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்[3] சூசன் பாஸ்நெட் (Susan Bassnett) ஒப்பிலக்கியம் பற்றிய ஆய்வுகள் மொழிபெயர்ப்புகளுக்கு ஊக்கம் தருவதனூடாக உலக இலக்கியம் பற்றிய சிந்தனைகளுக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்கின்றார்[4]. உலகமயமாக்கத்தின் பின்னணியில் உலக இலக்கியத்தினை விளங்கிக் கொள்வதை எதிர்க்கும் Wai Chee Dimock, Gayatiri Chakravorty Spivak முதலான சிந்தனாவாதிகள் பிரபஞ்ச இலக்கியம் (Planetary Literature) எனும் கோட்பாட்டினை வளர்க்க முற்பட்டனர்[5]. உலக இலக்கியம் அல்லது பிரபஞ்ச இலக்கியம் இரண்டுமே எல்லை கடந்த இலக்கிய ஆக்கங்களைப் பற்றியே பேசுகின்றன என்பதைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ் நவீன இலக்கியங்கள் பல இன்று உலக இலக்கியச் சூழலுக்குக் கடன் பட்டவையாகவே அமைந்திருப்பதனை உணர முடிகின்றது. இலக்கியம் பற்றிய கருத்துநிலை, படைப்பாளிகளின் தத்துவ நிலைப்பாடு, இலக்கிய உத்திகள் தொடர்பான புரிதல் என்பவற்றில் இத்தாக்கத்தினை வெகுவாக அவதானிக்கலாம். குறிப்பாகப் புலம்பெயர் எழுத்துக்கள் பலவும் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் படைப்புக்கள் பலவும் அமெரிக்க மற்றும் மேலைத்தேய இலக்கியப் பாதிப்புக்குட்பட்டிருப்பதனை சுட்டிக்காட்டியாதல் வேண்டும்.

**உலக இலக்கியக் கருத்தாக்கமும் தமிழ் படைப்பிலக்கியச் சூழலும்**

தமிழ் இலக்கியப் படைப்பாக்கம் மற்றும் ஆய்வுகளில் உலக இலக்கியத் தாக்கம் என்பது இரட்டை நிலைப்பட்ட விளைவுகளை உண்டாக்கவல்லது என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியமானதாகும். ஒரு புறத்தில் தமிழ் இலக்கியம் உலகஇலக்கியப் பெரும் பரப்பில் தன்னை இணைத்துக் கொள்ளுகின்ற வாய்ப்பையும் வசதியையும் பெற்றுக் கொள்ளுகின்றது. இதன் மூலமாக:

i. இலக்கியக்கருத்துநிலைகள்பலம்பெறுகின்றன.

ii. புதியதும் சுவைஞர்களின் ஏற்புணர்வுக்கு உகந்ததுமானஇலக்கிய உத்திகள் அடையாளங் காணப்படுகின்றன.

iii. படைப்பாளிகளின் தத்துவப் பின்புலங்களும் அவற்றின் அடிப்படையில் அவர்களது சமூக நோக்கும் கூர்மையடைகின்றன.

iv. இலக்கியக் களங்கள் அகற்சியும் விரிவும் பெறுகின்றன.

v. தமிழ் இலக்கியங்களுக்கான அடையாளங்கள் வலுவடைகின்றன.

தமிழ்ச்சூழலில் ஆ. முத்துலிங்கத்தின் படைப்புக்கள் இத்தகைய உலக இலக்கியத் தொடர்பின் பின்னணியில் நிகழ்ந்த அகற்சிக்கும் விரிவுக்கும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாக அமையவல்லன. இதனால் இலக்கியம் என்பது பொது 'மனிதத் தளம்' நோக்கியதாக வளரத் தொடங்குகின்றது. தமிழ் இலக்கியப் படைப்புக்கள் பற்றியதான ஆய்வும் ரசனையும் விரிந்த தளத்தில் முன்வைக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின்றன. இலக்கியச் செல்வாக்குகளும் (influence), பாதிப்புகளும் (impact) தமிழ் இலக்கியங்களில் அதிகளவில் நிகழ சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இவற்றினை உலக இலக்கியத் தாக்கத்தின் பொதுவான நன்மைகளாகக் குறிப்பிடலாம்.

ஆனால், மறுபுறத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி தொடர்பான பாரதூரமான பாதிப்புக்கள்ளையும் உலக இலக்கியத் தாக்கம் ஏற்படுத்த வல்லதாக அமைவதையும் சுட்டிக் காட்டியாதல் வேண்டும். நன்மைகளை விட அதற்கு எதிரிடையான விளைவு களிலிருந்து தமிழ் இலக்கிய ஆக்க முயற்சிகளை, ஆய்வுகளைமீட்டெடுப்பதே சவால் நிறைந்ததொன்றாக விளங்குகின்றது.

i. இலக்கியப் படைப்புக்களின் தனித்துவங்கள் கேள்விக்குட்படுத்தப்படல்.

ii. இலக்கியத்தில் தேசியப் பண்புகள் முற்றாக நிராகரிக்கப்படல்.

iii. பண்பாட்டு அடையாளங்கள் சிதைக்கப்படல்

iv. உலக இலக்கியக் கொள்கையுடன் ஒத்துப்போகாத இலக்கியங்கள் விளிம்பு நிலைப்படுத்தப்படல்.

v. உலகமயமாதல் சிந்தனைகளும் அதன் பாதகமான விளைவுகளும் இலக்கியங்களினூடாக விதைக்கப்படல்

vi. ஐரோப்பிய மையப்பார்வை (Eurocentrism) உலக இலக்கியக் கொள்கைகளுக்கூடாக கீழைத்தேசஇலக்கியங்களில் நுழைக்கப்படல்.

என்பனவற்றினை மிக முக்கியமான, எதிரிடை விளைவுகளாகச் சுட்டிக்காட்ட முடியும் பாதக விளைவுகள் உடனடியாகத் தமிழ் உள்ளிட்ட கீழைத்தேய மொழிச் சூழலில் உணரப்படா திருப்பினும் எதிர்காலத்தில் இவற்றின் விழைவுகள் இலக்கியங்களின் தனித்துவம், சிறப்பு, பெருமை போன்றவற்றினைக் கேள்விக்குள்ளாக்கும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக உலக மயமாக்க சிந்தனைகளும் ஐரோப்பிய மையப் பார்வையும் கீழைத்தேச மொழி இலக்கியங்கள் தொடர்பான ஆய்வுகளில் செல்வாக்குப் பெறுகின்ற போது அம்மொழி இலக்கியங்கள் தொடர்பான தவறுதலான கற்பிதங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. தமிழ் இலக்கியங்களின் தரம் தொடர்பான தவறுதலான முடிவுகளுக்கு அவை இட்டும் செல்லலாம். ஐரோப்பிய மையப் பார்வை கொண்டிருக்கும் அதிகார பலமும் செல்வாக்கும் கீழைத்தேச இலக்கியங்களில் அது எதையும் சாதிக்கும் தன்மை கொண்டது என்பதை பின்காலனித்துவவாதிகள் சுட்டிக்காட்டி வந்துள்ளனர்[6]. காலனித்துவ ஆட்சிக்காலம் முதலாக ஆரம்பித்த கீழைத்தேசங் குறித்த ஐரோப்பிய வாதிகளின் தவறுதலான புரிதல்கள் நவகாலனித்துவ சூழலிலும் தொடர்வதாகக் குறை கூறப்பட்டு வருகின்றது. மேலும் காலனித்துவ காலம் முதல் ஐரோப்பிய கோட்பாடுகள், கொள்கைகள், சிந்தனைகள் என்பவற்றில் கீழைத்தேசத்தவர்களுக்கு இருந்து வரும் ஈர்ப்பும் கவர்ச்சியும் ஐரோப்பிய மையப்பார்வை இலக்கியங்களில் நிலைப்பதற்கான

வாய்ப்பினை மேலும் பலப்படுத்தியுள்ளன.

## தமிழ் இலக்கியங்கள் பற்றியதான ஆரோக்கி யமான பார்வையைக் கட்டியெழுப்புதல்

இத்தகைய பாதகமான விளைவுகளிலிருந்து தமிழ் இலக்கியங்கள் மற்றும் இலக்கிய ஆய்வுகளை மீட்டெடுப்பது எவ்வாறானது என்பது பற்றி நோக்குவது அவசியமாகின்றது. குறிப்பிட்ட சில ஆபிரிக்க மற்றும் ஆசிய மொழிகளில் நிகழ்ந்துவரும் ஆய்வு மற்றும் எழுது முயற்சிகள் இந்தவகையில் ஆதர்சமானவையாக அமைந்துள்ளன. உலக இலக்கிய எல்லைக்குள் பிரவேசிக்கும் வேளையில் ஒவ்வொரு மொழி இலக்கியங்களும் தமது தனித்துவம் சிறப்பு என்பவற்றையும் கட்டிக்காக்க வேண்டிய கடப்பாடு ஏற்பட்டுள்ளது. ஏனெனில் கீழைத்தேச மொழிகள் பல தொன்மையும் தொடர்ச்சியும் கொண்ட இலக்கியப் பாரம் பரியத்தினைக் கொண்டு விளங்குவது நோக்கத் தக்கதாகும். அவற்றின் தொல் சீர்மையும் சிறப்பும் பேணப்படும் வகையில் எதிர்கால இலக்கியப் படைப்புக்களுக்கான திட்டமிடல்களும் ஆய்வு களும் அமைவது அவசியமானதாகின்றது. இதற்கான அடித்தளங்களை ஏற்படுத்தும் வகையி லான கோட்பாடுகளும் கொள்கைகளும் இலக்கியச் சூழலில் இன்று செல்வாக்குப் பெற்றிருப்பதனைக் காணமுடியும்.

i. கீழைத்தேசக் கலை இலக்கியங்களை முதன் மைப்படுத்தும் வகையிலும் அவற்றின் தனித்துவங்கள், சிறப்புக்கள், முன்மாதிரி முதலானவற்றினைப் பறைசாற்றும் விதத்தில் முன்வைக்கப்பட்ட கீழைத்தேசவியல் (Orientalism) கொள்கைகள்.
ii. கீழைத்தேசவியலினை மிக முக்கிமான கோட்பாடாக உள்வாங்கி வளர்ச்சி பெற்றபின் காலனித்துவக் கோட்பாடுகள் (Post-colonism)
iii. தேசிய இலக்கியம் (National Literature) பற்றியதான நவீன கோட்பாடுகள்.

என்பன தமிழ் உள்ளிட்ட கீழைத்தேச இலக்கி யங்களில் கனதியான பாதிப்பினை ஏற்படுத்தி வருவதனைக் குறிப்பிட்டுச் சொல்லுதல் வேண்டும். தவிர்க்க முடியாது உலகஇலக்கியக்கருத்தாக்கத்துள் நுழைந்து கொண்டிருக்கும் கீழைத்தேச இலக்கி யங்களின்தனித்தன்மைகளையும் பெருமைகளையும் கட்டிக்காக்கும் கடப்பாடு இவற்றுக்குண்டு.

### கீழைத்தேசவியல்

கீழைத்தேசவியல் பற்றிய கருத்துக்கள் 1978இல் வெளிவந்த எட்வார்ட் சைத் (Edear Said) அவர்களது 'Oirantalism' என்னும் நூலைத் தொடர்ந்து பலமடைந்தன. அத்துடன் பிற்காலங்களில் பின்காலனித்துவக் கோட் பாடுகள் வலுப்பெறுவதற்கான உறுதியான அடித்தளத்தினையும் பெற்றுத்தந்தன. மத்திய கிழக்கு, ஆசிய மற்றும் ஆபிரிக்க இலக்கியங்களைக் கீழைத்தேச இலக்கியங்களாக இனங்காணும் எட்வார்ட் சைத், அவற்றின் தனித்துவம் சிறப்பு என்பன இலைமறைகாயாக இருப்பதனைச் சுட்டிக்காட்டுகின்றார்[7]. நீண்டகாலமாக காலனிய ஆதிக்கத்தின் கீழிருந்தமை, சுதந்திரம் பெற்ற பின்னரும் தொடரும் நவகாலனித்துவச் செல்வாக்கு, பொருளாதாரத் தேக்கநிலை, உள்நாட்டுப் பூசல்கள் முதலான பல காரணங்கள் கீழைத்தேச மொழிகள் தமது தராதரத்தினை உணராமல் இருப்பதற்குத் தடைக்கற்களாக இருக்கின்றன. இதனால் கீழைத்தேய இலக்கியங்கள் உலக இலக்கியப் பரப்பில் தாழ்வாகவே மதிக்கப்படுவதனை அவ தானிக்கலாம். அவற்றுக்குரிய உண்மையான அந் தஸ்த்தும் மதிப்பும் இதனால் கிடைக்காமலேயே போய்விடுகின்றன. இதனால் கீழைத்தேய இலக் கியங்களை மேலைத்தேய இலக்கியங்களின் பிர திகளாகப் பார்க்கின்ற நோக்கும் இலக்கியச் சூழலில் திணிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. இவற்றை இல்லாமல் செய்ய வேண்டுமெனில்,

i. கீழைத்தேய மொழிகளை மையப்படுத்தி இலக்கிய மற்றும் ஒப்பிலக்கியப் பார்வைகளை வளர்த்தெடுத்தல்.
ii. கீழைத்தேச மொழிகளுக்கிடையிலான ஆய் வுக்களங்களையும் ஒப்பாய்வுக் களங்களையும் வளர்த்தல்.
ii. கீழைத்தேய மொழிகளுக்கிடையில் இலக்கிய மொழிபெயர்ப்புக்களை ஊக்கப்படுத்தல்.

முதலான வழிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் என கீழைத்தேயவாதிகள் குறிப்பிடு கின்றனர். தமிழ் இலக்கியச் சூழலில் இத்தகைய அணுகுமுறைகள் பயன்தரவல்லனவாக அமையும்

எனக் கருதலாம்.

**ஐரோப்பிய மையப் பார்வையிலிருந்து மீட்டெடுத்தல்**

பின்காலனித்துவக் கோட்பாடு 1980 களின் பிற்பகுதியில் மிக முக்கியமானதொரு விமர்சனக் கோட்பாடாக வலுப்பெற்றது. ஐரோப்பிய மையக் கருத்தியல்களுக்கு எதிரான கருத்துக்களை முன்வைப்பதும் கீழைத்தேய நலன்களைக் கருத்திற் கொண்ட சிந்தனைகளை மற்றும் ஆய்வுப்பார்வைகளை வளர்த்தெடுப்பதும் பின் காலனித்துவத்தின் முக்கியமான நோக்குகளாகும்[8].

கீழைத்தேச கலாசாரம், மொழி, இலக்கியம் என்பவற்றைப் பாராமுகப்படுத்துவதும் அவற்றினை மேலைத்தேயக் கண்கொண்டு நோக்குவதும், ஐரோப்பியக் கலை, கலாசார அம்சங்களுக்குக் கீழ்ப்பட்டவையாக அவற்றினை நோக்குவதும் பல ஆண்டுகளாக நிலவிவரும் போக்கு எனலாம்[9]. கீழைத்தேச கலாசாரம் மற்றும் கலை, இலக்கியங்களைப் பராமுகப்படுத்துதல், அவற்றின் தகுதியினைக் குறைத்து மதிப்பிடல், அவற்றின் பழமை பற்றிய தவறான கணிப்பீடுகளை முன்வைத்தல் போன்றன இருபதாம் நூற்றாண்டில் மிக அதிகளவில் நிலவிவந்ததை அவதானிக்க முடியும். இச்சூழலில் தான் பின்காலனித்துவம் தமிழ்ச் சூழலில் படிப்படியாகக் கால்பதிக்கத் தொடங்கியது.

இதுவரை காலமும் ஆய்வுலகில் செல்வாக்குச் செலுத்திய ஐரோப்பியமையப் பார்வையை அகற்றி கீழைத்தேச மொழிகளைக் கவனத்திற்கொண்ட ஆய்வினைமுன்னெடுத்தல்என்பதுவினைத்திறனான தமிழிலக்கிய மற்றும் ஒப்பிலக்கிய ஆய்வுகளின் வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமையும் என நம்பப்படுகின்றது. ஐரோப்பியமையப்பார்வையால் ஏற்பட்ட பிரதிகூலங்களிலிருந்து தமிழ் இலக்கியப் படைப்புக்களையும் ஆய்வுகளையும் விடுவிப்பதற்குரிய மிகச் சிறந்த வழியாக இது அமையும் எனலாம். ஐரோப்பிய மையப்பார்வையிலிருந்து ஒப்பிலக்கிய ஆய்வுகளை விடுவிப்பதற்குப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகின்றது.

i. இதுவரை காலமும் நிகழ்ந்த தமிழாய்வுகளை விமர்சனத்துக்குட்படுத்துதல்
ii. ஐரோப்பிய திறனாய்வுக் கோட்பாடுகளில் முற்றாகத் தங்கியிருப்பதனை நீக்குதல்
iii. கீழைத்தேசம் தனக்கெனத் தனித்துவமான திறனாய்வுக் கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்ளுதல்.

என்பன பயன்தரவல்லனவாக அமையத்தக்கன. புதிய நோக்கிலான சில ஆய்வுகள் கீழைத்தேச இலக்கியங்கள் பற்றிய வியக்கத்தக்க தகவல்களை முன்வைத்துள்ளதைக் காணலாம். உதாரணமாக விக்கிரமாதித்தன் கதைகளை ஆராய்ந்த Zimmer அக்கதைகள் இந்திய உப கண்டத்திலிருந்து மேற்கைரோப்பியாவுக்குள் பரவியதைக் காட்ட முயன்றுள்ளார். பஞ்ச தந்திரக் கதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முயன்ற ரைடர் (Ryder) அவர்கள் அக்கதைகள் பாரசீகத்தினூடாகப் பரவி ஐரோப்பாவில் செல்வாக்குப் பெற்றதைச் சுட்டிக்காட்டியுள்ளார்[10]. ஒப்பியலாய்வுக் கோட்பாடுகளான அடிக்கருத்து மற்றும் செல்வாக்குக் கோட்பாடுகள் இன்று மேலும் புதிய தகவல்களை வெளிக்கொணர்ந்த வண்ணமுள்ளன.

**தேசியப் பண்புகளைக் கருத்தில் கொள்ளல்:**

இலக்கிய ஆய்வுகளின் தேசியப் பண்புகளைக் கருத்திற் கொள்வதும் மிக முக்கியமானதொரு விடயமாகும். கீழைத்தேச மொழிகளுள் பல, பழமையும் நீண்ட வரலாறும் உறுதியான பண்பாட்டுப் பகைப்புலமுங் கொண்டவை. எனவே அம்மொழி இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் அவற்றின் தனித்துவத்தினைச் சிதைக்காத வகையில் அமைதல் வேண்டும். இலக்கியங்களிடையேயான ஒற்றுமைகளையும் விஞ்சி அவற்றில் காணப்படும் தனித்துவங்கள் குறிப்பிட்ட இலக்கியத்துக்கு மதிப்பினையும் பெருமையினையும் அடையாளத்தையும் பெற்றுத் தருகின்றன. இத் தனித்துவங்களை அடையாளப்படுத்துவனவாகவும் அவற்றினூடாக அவ்விலக்கியங்கள் தோன்றிய பண்பாட்டினைப் பற்றிக் கருத்துரைப்பதாகவும் இலக்கிய ஆய்வுகள் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது இலக்கியப் பிரதிகளைப் பண்பாட்டின் உற்பத்திகளாகக் காண வேண்டியதன் அவசியம்

இங்கு வலியுறுத்தப்படுகின்றது[11]. இலக்கிய உற்பத்தியிலும் ஆய்விலும் தேசியப் பண்புகள் முக்கியப்படுத்தப்படுவதால் நிலையான நன்மைகள் பல ஏற்படும் என நம்பப்படுகின்றது.

i. கீழைத்தேய மொழிகளின் தனித்துவமும் பெருமையும் கட்டிக்காக்கப்படுகின்றன.

ii. மொழிகளிடையே பரஸ்பர மதிப்புணர்வு வளருகின்றது.

iii. மொழிகளிடையேயான கொள்ளல் கொடுத்தல் அதாவது பரஸ்பர பரிமாற்றங்கள் அதிகரிக்கின்றன.

iv. மொழிகளிடையேயான உறவுகள் மேலும் இறுக்கமடைகின்றன.

v. மொழிகளிடையேயான ஆய்வுகள் மேலும் கூர்மையும் விரிவும் அடைகின்றன.

என்பவற்றைப் பிரதானமான நன்மைகளாக இங்கு சுட்டிக்காட்ட முடியும். இன்று தமிழில் பின்நவீனத்துவக் கோட்பாடுகளை உள்வாங்கி எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் புனைகதைப் படைப்புக்கள் 'மண்ணின் சாரத்தினை விளங்கிக் கொண்டு' எழுதப்பட வேண்டும் எனக் கூறப்படுவதற்கு இதுதான் காரணமாக அமைகின்றது.

**முடிவுரை**

ஒட்டுமொத்தமாக நோக்குகின்றபோது அறிவியல் வளர்ச்சி, சமூகமாற்றம், மனிதப்பரம்பல், மனித சிந்தனை வளர்ச்சி என்பன சமகால தமிழ் இலக்கிய படைப்பாக்கம் மற்றும் ஆய்வுகளில் கணிசமான பாதிப்பினை ஏற்படுத்தி வருகின்றமை புலனாகின்றது. தமிழ் இலக்கியம் தமிழ்ச் சூழலுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு நின்றுவிடாது இன்று உலக இலக்கியப் பரப்பினுள்ளும் இணைந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. இது சமூக வளர்ச்சியின் தவிர்க்க முடியாததொரு விளைவாகும். உலக இலக்கியத் தொடர்பு என்பது நன்மையான பயன்களைத் தருவதோடு மறுதலையாக, தமிழ் இலக்கியத்தின் தனித்துவம், அடையாளம் என்பவற்றிற்கு குந்தகம் ஏற்படுத்தவும் கூடும் என அஞ்சப்படுகின்றது. ஆனால் மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் உலக இலக்கியத் தொடர்பினை தமிழ்ச் சூழலுள் உள்வாங்கும் போது தமிழ் இலக்கிய ஆய்வுகள் மேலும் கூர்மையடைய வாய்ப்புள்ளன. தமிழ் போன்ற கீழைத்தேச மொழிகள் மற்றும் அவற்றின் கலை, பண்பாட்டு வடிவங்கள் குறித்து அக்கறைப்படும் கீழைத்தேசவியல், பின்காலனித்துவம் முதலான கோட்பாடுகளின் வழியும் தேசிய இலக்கியம் பற்றிய எண்ணக்கரு வழியும் உலக இலக்கியக் கருத்தாக்கத்தினை எதிர்கொள்ளும் போது தமிழ் இலக்கியப் படைப்புக்களும் ஆய்வுகளும் மேலும் ஆழமும் விரிவும் அடையும் என்பதில் ஐயமில்லை.

**அடிக்குறிப்புகள்:**

1. சச்சிதானந்தன் . வை, ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம், ஆக்ஸ்போட் யூனிவேஸிட்டி பிரஸ், சென்னை, 1985, பக். 5-7
2. J.W.Von Goethe, Conversations with Eckermann, North Point Press, U.S.A, 1994, p.132
3. http://www.diva-portal.org/smash/get/diva2:732806/FULLTEXTO2
4. Susna Bassnett, Comparative Literature - A Critical Introduction, Black Well, London, 1998, pp. 138 -142.
5. http://www.diva-portal.org/smash/get/diva2:732806/FULLTEXTO2
6. http://en.wikipedia.org/wiki/Eurocentrism
7. Edward Said, Orientalism, Vintage Books, U.S.A, 1978, pp.56-57
8. Elleke Boehmer, Colonial and Postcolonial Literature: Migrant Methphors, Oxford University Press, New Delhi, 2008, p.2
9. Ibid. p.3
10. The Panchatantra, (Tran) Ryder. W,University Chikako Press, U.S.A, 1925, pp.3-12
11. ஆனந்தக்குமார், பா., இந்திய ஒப்பிலக்கியம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2003, பக். 18-22

# நீரிழிவு நோயில் யாழ்ப்பாணத்து மருத்துவ மூலிகைகள் செயற்படும் திறன் பற்றிய ஓர் ஆய்வு

ஸ்ரீ அன்புச்செல்வி, மருத்துவர் க. ஸ்ரீதரன்

**ஆய்வுச்சுருக்கம்**

*யாழ்ப்பாணத்தில் உணவுக் கட்டுப்பாட்டுடன் உள்ள நீரிழிவு நோயாளிகள் 50பேர் தேர்ந்து எடுக்கப்பட்டு அவர்கள் சுயமாக உபயோகிக்கும் மூலிகைகளா சிறுகுறிஞ்சா, கொவ்வை, கருவேப்பிலை, ஆவாரை, நாவல் ஆகிய மூலிகைகளை உபயோகிப்பவர்களில் குருதிக் குளுக்கோசின் அளவு அறியப்பட்டு, நான்கு வாரங்களுக்கு தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது சிறுகுறிஞ்சா உபயோகிப்பவர்களில் குருதிக்குளுக்கோசு 244(+/-47,09)-120(+/-40.59), ஆகவும் கொவ்வை 229(+/-61.55)-135(+/-34.35), கருவேப்பிலை 260(+/-60.17)-145(+/-30.01), ஆவாரை 186.67+/-7.28-106.47+/-3.52, நாவல் 176.67+/-7.28-116.67+/-7.28 என ஆரம்ப நிலையில் இருந்து 4 வாரத்தின் பின் குறைந்து காணப்பட்டது. இத்தரவுகளிலிருந்து இம் மூலிகைகள் நீரிழிவு நோயில் சிறப்பாகச் செயலாற்றுகின்றன எனக் கண்டறியப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள் :** சிறுகுறிஞ்சா, ஆவாரை, கருவேப்பிலை, கொவ்வை, நாவல்.

**அறிமுகம்**

நீரிழிவு நோயானது இன்று மருத்துவ உலகிற்குப் பெரியதொரு சவாலாக அமைந்துள்ளது. இந் நோயினால் சிறியவர்கள் முதல் முதியவர்கள் வரை பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றனர். இந் நோய் தோன்றுவதற்கு முக்கிய காரணமாக அமைவது தற்போதைய தொழில்நுட்பத்தின் விளைவு என்றால் மிகையாகாது. அதிகரித்த வேலைப்பளு, மனவுளைச்சல், இயந்திரங்களின் பாவனையால் மனித உடலுழைப்பு குன்றிப்போதல், உடற்பயிற்சியின்மை, உணவுப் பயன்பாட்டின் மாறுபாடு, மக்களிடையே விழிப்புணர்வு இன்மை எனப் பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம்.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தின் தரவுப்படி யாழ்ப்பாணத்தில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கையைச் சரியாகக் கணக்கிட்டுக் கூறமுடியாதுள்ளது. இதில் யாழ்-போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுபவர்கள், சுற்றயல் வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெறுபவர்கள், தனியார் வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெறுபவர்கள், சுயமாகத் தமக்குத் தாமே வைத்தியம் செய்பவர்கள் எனப் பல்வேறு வகையில் நீரிழிவு நோயாளர்கள் இருப்பதால் தனியான கணிப்பீட்டைக் குறிப்பிட முடியாது போகிறது. இருந்தும் 2006ஆம் ஆண்டுப் புள்ளி விபரத் தகவலின்படி யாழ்ப்பாணத்தில் 6949 நீரிழிவு நோயாளிகளை யாழ்-நீரிழிவு நிலையம் இனங்கண்டுள்ளது. யாழ்-போதனா வைத்திய நிலையத்தில் 2006ஆம் ஆண்டு 128 நோயாளிகளுக்கு கால்கள் கழற்றப்பட்டும்; 104 நோயாளிகளுக்கு லேசர் சிகிச்சை மூலம் கண் பாதிப்புக்கள் குணப்படுத்தப்பட்டுள்ளன. 63 நோயாளிகள் சிறுநீரகப் பாதிப்புகளுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். தற்போது 2015 இல் நிலமை எவ்வாறு இருக்கும் என்பதில் நாம் சிந்திக்கும் நிலை உருவாக வேண்டும்.


பொதுவாக நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு வைத்திய சம்பந்தப்பட்டோர் மட்டுமல்லாமல் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மக்களிடையே

விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் ஆரம்ப நிலையில் கண்டுபிடிக்கலாம். பின்னர் அவர்களுக்கு முறையான பராமரிப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நோயாளியின் உடல் நலத்தைப் பேணுவதோடு நீரிழிவினால் ஏற்படும் விகற்பங்களைத் தடுக்க முடியும். நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த உணவு, மருத்துவ முறைகளுடன், சீரான உடற்பயிற்சி, போதிய ஓய்வு என்பன மிக முக்கியமானவையாகும். நீரிழிவு நோயில் யாழ்ப்பாணத்து மருத்துவ மூலிகைகள் எவ்வாறு செயலாற்றுகின்றன என்பதை ஆராய்வதே இங்கு ஆய்வாளர்களின் இலக்காகும்.

யாழ்ப்பாணப் பூமியானது வறண்ட உவர்தன்மையுள்ள கிணற்று நீரை அதிகம் கொண்ட பிரதேசமாகும். இங்கு வாழும் மூலிகைகள் யாழ்ப்பாண தட்ப-வெப்ப நிலைகளுக்கேற்ப இயற்கையாக வளருகின்றனவாகும். இம் மூலி கைகளில் காணப்படும் வேதியற் பொருட்கள் செறிவானதும், மருத்துவ குணத்தில் சிறந்ததுமாகும். இதனால்தான் வேறு பிரதேசங்களை விட யாழ்ப்பாண மூ லிகைகள் சிறப்பானவையாகக் காணப்படுகின்றன. இதற்கு ஏற்றாற் போல் யாழ்ப்பாணத்தில் மூ லிகைகள் வைத்திய முறைக்குப் பெரும் வரவேற்பு காணப்படுகிறது. இக் காரணத்தினால் பல்வேறு நோய்களுக்குரிய பல்வேறு மூலிகைகள் கைவைத்திய முறைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இருமல் சளி போன்றவற்றுக்கு இக்கிரி, துளசி, தூதுவளை, ஆடாதோடை, கண்டங்கத்திரி போன்ற வையும், வாதநோய்க்கு வாதமடக்கி, ஆமணக்கு, நொச்சி என்பனவும் பயன்பட்டது போல் நீரிழிவு நோய்க்கு சிறுகுறிஞ்சா, நாவல், ஆவாரை, கொவ்வை, கறிவேப்பிலை, வேம்பு, அறுகம்புல், பலாவிலை, துளசி, பாகற்காய் போன்ற மூலிகைகளை மக்கள் பயன்படுத்தி வந்தமை ஆய்வாளர்களினால் அறியப் பட்டது. யாழ்ப்பாணத்து மூலிகைகள் மனித உடலில் செயற்படும் விதம் பற்றி ஆய்வுகள் இதுவரையில் மேற்கொள்ளப்படாமல் இருந்ததும், அதனை மருத்துவ விஞ்ஞானரீதியில் நிரூபிப்பதற்காக இன்று மக்களால் கூடுதலாகப் பயன்படுத்தும் இந்த ஐந்து மூலிகைகளும் இங்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.



சிறுகுறிஞ்சா
படம் : 1



ஆவாரை
படம் : 2



படம் : 3
கறிவேப்பிலை



படம் : 4 கொவ்வை



படம் : 5
நாவல்

**ஆய்வின் குறிக்கோள்**

யாழ்ப்பாணத்தில் காணப்படும் மூலிகைகளில் சில நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதில் வகிக்கும் மருத்துவ செயற்றிறனை மட்டும் ஆராய்தல்.

## ஆய்வு முறையியல்: உள்வாங்கப்படும் நோயாளர்கள்

- உணவுகள் கட்டுப்பாடுடன் மூலிகை மருந்துகள் உபயோகிப்போர்

- மேலைத்தேய மருந்துகளைக் கடந்த 3 மாதங்களாக உபயோகிக்காதோர்

**வெளியேற்றப்படும் நோயாளிகள்**

- விகற்பங்களுடன் மேலைத்தேய மருந்துகள் உபயோகிப்போர்
- மேலைத்தேய மருந்துகள், மூலிகைகள் கலந்து உபயோகிப்போர்
- உணவு பத்திய முறைகளை கடைப்பிடிக்காதோர்.

**ஆய்வு தொடங்கப்பட்ட காலம் : தை மாதம் 2014 - சித்திரை மாதம் 2014**

ஆய்வுக்குரிய பிரதேசம் யாழ்ப்பாணமாகும். இங்கு காணப்படும் மூலிகைகளில் சிறுகுறிஞ்சா, நாவல், கொவ்வை, கறிவேப்பிலை, ஆவாரை ஆகிய ஐந்து பொதுவாகப் பயன்படுத்தும் மூலிககள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றை உபயோகிக்கும் நோயாளர்களின் குருதிப் பரிசோதனை செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது ஆய்வாளரால் நோயாளர்கள் சுயமாகத் தாங்களே தங்களுக்குரிய மூலிகளை பயன்படுத்துபவர்களை இனங்கண்டு அவர்களின் சம்மதம் பெறப்பட்டு, அவர்கள் மீதான ஆய்வை மேற்கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு குழுவிலும் 10 நோயாளிகள் என மொத்தமாக 50 நோயாளிகள் ஆய்விலே தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ச்சியாக உபயோகிப்பதாலும், இவர்களில் எந்தவித தீய குணங்களைக் காட்டாததாலும் ஆய்விலே இடைவிலகல், தீயவிளைவுகள் என்பன அவதானிக்கப்படவில்லை. ஆய்விலே குழு - 1 இல் சிறுகுறிஞ்சா உபயோகிக்கின்ற நோயாளிகள், குழு - 2 இல் கொவ்வை உபயோகிக்கின்ற நோயாளிகளையும், குழு - 3 இல் கறிவேப்பிலை உபயோகிக்கின்ற நோயாளிகளையும், குழு - 4 இல் ஆவாரை உபயோகிக்கின்ற நோயாளி களையும், குழு - 5 இல் நாவல் உபயோகிக்கின்ற நோயாளிகளுமாக ஐந்து குழுக்கள் பிரிக்கப்பட்டு அவர்கள் எடுக்கின்றளவு மூலிகைகள் பயன்படுத் தப்பட்டன. ஆரம்பத்தில் பெற்ற குருதிப் பரி சோதனையும், பின் கிழமை - 1, கிழமை - 2, கிழமை -3 ஆகிய மூன்று தடவைகள் பெற்ற குருதிப்பரிசோதனைகளின் பெறுபேறுகளும் எடுக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வின் பலாபலன்கள்**

*அட்டவணை 1 : மூன்று வார சிகிச்சையில் குருதிக்குளுக்கோசின் அளவு*

| Gorups | Initial PPBS (mg/dl) | 1st Week PPBS (mg/dl) | 2nd Week PPBS (mg/dl) | 3nd Week PPBS (mg/dl) |
|---|---|---|---|---|
| Group - 1 (Gymnema Sylvestre சிறு குறிஞ்சா) | *244 (+/-47,09)* | *224 (+/-47.49)* | *158 (+/-32.46)* | *120 (+/-40.59)* |
| Group - 2 (Coccinia indica கொவ்வை) | *229 (+/-61.55)* | *183 (+/-51.57)* | *160 (+/-40.72)* | *135 (+/-34.35)* |
| Group - 3 (Murraya Koenegii கறிவேப்பிலை) | *260 (+/-60.17)* | *211(+/-60.32)* | *170 (+/-47.56)* | *145 (+/-30.01)* |
| Group - 4 (Cassia auriculata ஆவாரை hot infusion) | *186.67+/-7.28* | *166.67+/-7.28* | *126.67+/-7.28* | *106.47+/-3.52* |
| Group - 5 (Engenia Jambolana நாவல்) | *176.67+/-7.28* | *152.42+/-4.32* | *136.47+/-3.52* | *116.67+/-7.28* |

ஆய்விலே சிறுகுறிஞ்சா, கொவ்வை, கறிவேப்பிலை ஆவாரை, நாவல் போன்ற மூலிகைகளின் பயன்பாட்டில் குருதிக் குளுக்கோசின் அளவு குறைந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

**விவாதித்தல்**

பொதுவாக சிறுகுறிஞ்சா மூலிகையே மக்கள் மனதில் பிரபல்யமானதாக அறியப்பட்டுள்ளது. இம் மூலிகையின் ஆய்வுகள் செய்யப்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. சிறுகுறிஞ்சா, நீரிழிவுநோயாளிகளின் சதையியின் இலங்ககான் சிறுதீவுக்கலங்களின் தொழிற்பாட்டை சீர் செய்து இன்சுலினைச் சுரக்கச் செய்வதாக ஆய்விலே கண்டறியப்பட்டுள்ளது[1]. ஆரம்ப கட்ட நீரிழிவு நோயாளிகளில் பயன்படுத்துவதால் இலங்ககான் சிறுதீவுக்கூட்ட இழையங்களைச் சீர் செய்வது இலகுவானதாகும். மற்றும் குருதியில் உள்ள கொலஸ்ரோல் அளவுகளை சீர் செய்வதிலும், சிறுநீரில் வெளியேறும் சிறிய அல்புமின்கள் வெளியேறுவதைத் தடுப்பதிலும் சிறப்பாக தொழிலாற்றுவதாக ஆய்வு மூலம் அறியப்பட்டுள்ளது.

நாவல் பொதுவாக வாழையடி வாழையாக பாட்டி வைத்திய முறையில் கைமுறை மருந்தாக நாவல் கோப்பி யாழ்ப்பாணத்து மக்களிடையே பாவனையில் இருந்து வந்தது ஆய்வாளர்களினால் அறியப்பட்டுள்ளது. தற்போது இம் முறை வழக்கொழிந்து போனாலும் நீரிழிவு நோயாளியின் குருதிக்குளுக்கோசின் அளவைக் குறைப்பதும், இரத்தத்திலுள்ள கொலஸ்ரோல் அளவு என்பவற்றை குறைப்பதும் ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது[2]. பொதுவாக கறிவேப்பிலை, கொவ்வை என்பன சம்பலாகச் சாப்பிடுவது யாழ்ப்பாண மக்களிடையே வழக்கமான விடயமாகும். ஆவாரை, நாவல் என்பன வெந்நீருறல் பானமாக பயன்படுத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. கறிவேப்பிலை குருதியிலுள்ள குளுக்கோசின் அளவை குறைப்பது ஆய்விலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது[4].

தற்போது யாழ்ப்பாண மக்கள் நீரிழிவு நோயில் மேற்கண்ட மூலிகைகளை உணவு முறைகளாகவும், மேலைத்தேய மருந்துகளுடன் உபயோகித்து வருகின்றார்கள். அவ்வாறு உபயோகித்து வருபவர்கள் சரியான உணவுக் கட்டுப்பாட்டுடன் ஆரோக்கியமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. தனியே மூலிகைகளையோ அல்லது தனியே மேலைத்தேய மருந்துகளையோ பயன்படுத்துவதை விட ஒன்றிணைந்த மருந்துப் பாவனை சிறப்பாக செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதில் மூலிகைகள் சிறப்பாக செயற்படுகின்றன. எனினும் அவற்றின் செயற்பாடு தாமதமாகவே உள்ளது. இருந்தும் எந்தவித பக்கவிளைவுகளையும் இம்மூலிகை மருத்துவ சிகிச்சை முறையில் அறியப்படவில்லை.

## Foot Notes


1. AL.A-Romaiyan, Asareanne, H.;Maity, C.R.;Chatterijee, S.K.;Koley, N.;Biswas, T.;Chatterj, A.K.; Huang, G.C.;Amiel, S.A.;Persaud, S.J.;Jones, **P.M.A nove Gymnema sylvestre extract stimulates insulin secretionfrom uman islets in vivo and in vitro**. Phytother. Res., v.24, p.1370 - 1376, 2010.
2. Nasir A, Prabhu KM, Murthy PS, Dev G.**Hypoglycemic and hypolipidemic effects of ethanolic extract of Seeds of Eugenia jambolana in alloxan induced diabetic rabbits**. J Ethnopharmacol 2003; 85: 201 - 206.
3. Gupta SS, Variya MC. **Experimental Studies on pituitary on Diabetes. IV. Effect of Gymnema sylvestre and Coccinia india indica against the Hyperglycaemic response of somatotropin and corticotrophin hormones**. Indian J Med Res. 1964 Feb;52:200-207
4. Khan Beena A, Abraham Annie, Leelamma S., **Hypoglycemic Action Of Murraya koenigii And Brassica juncea: Mechanim Of Action**, Indian J. Biochem. Biophys., 1995;32(2): 106-108.
5. William Felicia, Lakshminarayan S, Chegu Hariprasad, Effect Of Some Indian Vegetab.

# கல்வி உலகின் மாற்றத்தில் முக்கிய பங்குதாரர்களாகிய ஆசிரிய ஆய்வாளர்கள்: புதிய சிந்தனைப் போக்குகளும் செயற்பாடுகளும்.

ஜெயலக்சுமி இராசநாயகம்

**ஆய்வுச் சுருக்கம்**

எதிர்கால உலகின் மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் ஏற்றவகையில் முகம் கொடுப்பதற்கும் வெற்றிகொள்வதற்கும் மாணவர்களைத் தயார்ப்படுத்த வேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். இதனால் ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாடுகளை நன்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். கற்றலில் மாணவர்கள் இடர்படும் இடங்களை நன்கு அறிந்து அதற்கான காரணங்களைக் கண்டறிதல் பிரச்சினைகளை இனம்காண்பதில் முக்கியமானதாகும். வகுப்பறையொன்றிலே நாளாந்தம் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் தான் ஆசிரியர்களின் வெற்றி தங்கியுள்ளது. இதனால் கல்விசார்ந்த பிரச்சினைகள் ஆய்வுகள் மூலமாகவே இனம் காணப்பட்டு அதற்கான பரிகார நடவடிக்கைகள் முன்வைக்கப்பட வேண்டும். இன்று பாடசாலைகளில் அவற்றின் நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை, மாணவர் இடைவிலகல் அதிகரிப்பு, ஒழுக்க சீர்கேடுகள் - மாணவர்களது உள அழுத்தங்கள் என்பன காரணமாக பரீட்சைப் பெறுபேறுகள் பாதிப்படைதல், அடைவு மட்டம் குறைவடைதல் என்ற வகையில் பல பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. இவைமாத்திரமன்றி இன்று ஆசிரியர்களில் பெரும்பாலானோர் பல துறைகளிலும் பட்டங்கள் பெற்று வெளியேறியுள்ளனர். ஆனால் பட்டம் பெறுவதற்கு மேற்கொள்ளப்படும் ஆய்வு தவிர்ந்த வேறெந்த ஆய்வு முயற்சிகளிலும் இவர்கள் ஈடுபடுவது குறைவாக உள்ளது. இதனால் மாணவர்களின் அடைவு மட்டத்திலும் வீழ்ச்சி ஏற்படுகிறது. எனவே இப்பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கு ஆய்வு முயற்சிகள் அவசியமாகின்றன. பிரச்சினைகள் இனம் காணப்பட்டு பரிகாரம் செய்யப்படும் போது தான் சிறந்த தரமான வினைத்திறன் மிக்க கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஆசிரியர்களால் மேற்கொள்ள முடியும். இந்நோக்கத்தினைக் குறிப்பிட்ட பிரச்சினைகளுடன் இணைத்து தெளிவுபடுத்தும்பொருட்டு இவ் ஆய்வானது அளவை நிலை ஆய்வாக மேற்கொள்ளப்படுவது பொருத்தமானதாகும் எனக்கருதி, அதிபர்கள் ஆசிரியர்கள் போன்றோர்களின் கருத்துக்களுக்கு இங்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்** : ஆசிரியர் ஆள்வாளர், புத்தாக்க சிந்தனை, பங்குதாரர்கள், வினைத்திறன், உள அழுத்தம்

## அறிமுகம்.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி என்பது அந்நாட்டின் கல்விக் கொள்கைகளோடும், கல்வியைப் பெறுகின்ற மக்களின் வளர்ச்சி நிலைகளோடும் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. இதனால் சமூகத்திற்குப் பாடசாலை மிக அவசியமாகக் கருதப்பட்டமையால் பாடசாலைகளின் பணி மிகவும் விரிவடைந்தது. கல்வியின் மூலம் அறிவார்ந்த சமுதாயம் ஒன்று உருவாக வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தை நிறைவு படுத்துவதற்காகப் பாடசாலைகள் தோற்றம் பெற்றன. இதனால் ஒவ்வொரு சமூகத்தின் வளர்ச்சிக்கும் பாடசாலைகளின் அவசியத்தை உணர்ந்த அரசு தமது பிள்ளைகளுக்காகக் கல்வியை வழங்கும் பொறுப்பை ஏற்றுள்ளது. இந் நிலையில் அரசு பாடசாலைகளை அமைத்தல், பராமரித்தல், விரிவுபடுத்தல், பூரணப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. சமூகத்தின் பல விதமான தேவைகளையும், எதிர்பார்ப்புக்களையும் பாடசாலைகள் மேற்கொண்டு வருவதனால் பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையே தொடர்பு நீண்ட காலமாக இருந்து வருகின்றது. பாடசாலைகள் பிள்ளைகளுக்கான கல்விச் செயற்பாட்டைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதனூடாக அறிவுசார்ந்த ஒரு சமூக உருவாக்கத்திற்கு உதவுகின்ற முதன்மையான

ஒரு பணியினை ஆற்றி வருகின்றன எனலாம். இதனால் பாடசாலைகளின் பணிகள் யாவும் வினைத் திறனாகவும், விளைதிறனாகவும் அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே பாடசாலைகளின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆசிரியர்கள் பாடசாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள், சமூகம்-பாடசாலை தொடர்பான விடயங்கள் போன்றவைகள் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாயுள்ளனர். இத்தகைய ஆய்வுகள் பாடசாலை தொடர்பான பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றை எதிர்காலத்தில் வளப்படுத்த உதவுகின்றன.

அண்மைக் காலத்தில் வெளிவந்த பல ஆய்வுகள், அறிக்கைகள் போன்றன ஆசிரியர் கல்வி தொடர்பான பலவீனங்களையும் பிரச்சினைகளையும் சுட்டிக் காட்டியுள்ளன. சமகாலக் கல்விச் சீர்திருத்தங்கள் கல்வி முறைமையின் வினைத்திறனைக் கல்விசார் ஆளணியை வாண்மைப்படுத்துவதன் மூலமே மேம்படுத்த முடியும் என அழுத்தமாகக் கூறுகின்றன. இதனால் இன்று ஆசிரியர்கள் கற்பித்தலோடு மட்டும் நின்றுவிடாது வகுப்பறையில் அவர்கள் ஆசிரிய ஆய்வாளர்களாக (teacher researcher) மாற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊழியச் சந்தையின் மாற்றமடைந்து வரும் தேவையினை ஈடுசெய்யக்கூடிய வாய்ப்பு கல்வித் துறையின் முக்கியத்துவத்தினை அங்கீகரிக்கின்ற விதத்தில் அரசினால் பல்வேறு மாற்றங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. இவ்வகையில் அரசினால் கொண்டு வரப்பட்ட ஒரு திட்டம் தான் ஆசிரியர் ஓர் ஆராய்ச்சியாளர் என்னும் கோட்பாடாகும். UNICEF இன் 2009 இல் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையானது ஆசிரிய ஆய்வாளர் தொடர்பான கோட்பாட்டை நடைமுறைப்படுத்தியது. ஆகவே ஆசிரியர்கள் தமது தொழில் தொடர்பான ஆற்றுகைகளை மீள் சிந்தனை செய்வது தமது மாணவர்களுக்குப் பொருத்தமான கற்றல் - கற்பித்தல் உத்திகளை இனம்காண உதவுகின்றது. அத்துடன் தமக்கேயுரிய வாண்மையில் தோன்றுகின்ற பிரச்சினைகளை இனம் கண்டு பொருத்தமான மாற்றங்களை ஏற்படுத்துவதன் ஊடாக தரமான கற்றறிந்த மாணவர்களை உருவாக்க முடிகின்றது. தமது தொழிலில் திருப்தி ஏற்படும் அதே வேளை வேலையையும் மகிழ்ச்சியுடன் செய்வதற்கு ஏற்ற வகையில் அவர்களது ஆற்றல்கள் விருத்தி செய்யப்படுகின்றது. (பாடசாலை மட்ட ஆசிரிய அபிவிருத்தி கைநூல் 2013)

**ஆய்வின் நோக்கம்:-**

- கல்வி உலகின் மாற்றத்தில் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஆசிரிய ஆய்வாளர்களாகச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை உணர்தல்.
- இத்தகைய ஆய்வு முயற்சியில் ஆசிரியர்கள் ஆய்வாளர்களாகச் செயற்படுவதன் மூலம் பாடசாலைகளின் பலம், பலவீனங்களை அறிதல்.
- பாடசாலைகளில் பிரச்சினைகள் இருக்கும் பட்சத்தில் அவற்றை எவ்வாறு கையாள்வது தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ளுதல்.
- புதிய ஆய்வாளர்களை அடையாளப் படுத்தல்.
- ஆசிரிய மாணவ உறவின் முக்கியத்துவத்தை விளக்குதல்.
- ஆய்விற்கு உட்படாத துறைகளை இனம் காணல்.
- ஆசிரியர் தனித்துப் போதிப்பவர் என்ற நிலையில் இருந்து வசதியை ஏற்படுத்துபவர் என்ற நிலைக்கு மாற்றம் அடைதல்.

**ஆசிரிய ஆய்வாளர் என்பவர் யார்?**

ஆரம்ப காலங்களிலே ஆசிரியர் என்பவர் அறிவாளியாக அதிகம் கற்ற ஒருவராகக் காணப்பட்டமையால் அவர் ஏனையோருக்கு முன் மாதிரியாக விளங்கினார். இவ்வாறு சமூக மதிப்பை பெற்ற ஆசிரியர்களது சமூகவகிபாகம் சமூக மாற்றங்களுடன் கூடவே மாற்றமடையத் தொடங்கியது. நவீன சமூகத்திலே தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் காரணமாக ஆசிரியர்களது கௌரவம் கணிப்பு சமூகம் தொடர்பான அவர்களது பொறுப்புக்கள் செயற்பாடுகள் போன்றன யாவும் மாற்றமடையத் தொடங்கின.

சமூக மாற்றத்தின் விளைவாக அவர்களின் கற்பித்தல்முறைகளும்மாற்றமடையத்தொடங்கின. ஆசிரியர்களும் ஒரேநேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வகிபாகங்களை வகிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். இந்நிலையில் அவர்கள் வகுப்பறையில் கற்பிப்பவர்களாக மட்டுமல்லாமல் ஆராய்ச்சியாளர்களாகவும் செயற்பட வேண்டிய தேவை இன்று உள்ளது. இன்றைய உலகின் மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் ஏற்ற வகையில் முகம் கொடுப்பதற்கும் அவைகளை வெற்றி கொள்வதற்கும் மாணவர்களைத் தயார்படுத்த வேண்டியது அவசியமாகும். மாணவர்களின் இயல்பான வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் காரணிகளை இனம் காணுதல் முதலில் அவசியமானதாகும். ஆனாலும் எதுவிதமான ஆதாரங்களும் இல்லாமல் சில முடிவுகளுக்கும் ஆசிரியர்கள் வருவது நம்பகத் தன்மையாக இருக்காது. ஆகவே மாணவர்களின் கற்றல் தொடர்பாக சில வகுப்பறை மட்ட ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும். வகுப்பறை மட்டத்தில் செய்கின்ற ஆய்வுகளின் விரிந்த பரப்பு பாடசாலை மட்ட ஆய்வுகளாக வளர்ந்து செல்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பாக வடமாகாணத்தைப் பொறுத்த வரையில் பாடசாலைகளில் பல பிரச்சினைகள் இனம் காணப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு அடையாளப்படுத்தப்படுகின்றன.

- ஆசிரியர் சார்பானவை
- மாணவர் சார்பானவை
- வளங்கள் சார்பானவை
- சமூகம் சார்பானவை

இத்தகைய பிரச்சினைகளை எல்லாம் ஆய்விற்கு உட்படுத்தி உண்மைநிலையை அடையாளப்படுத்தி இயலுமானவரை பிரச்சினைகளைக் குறைக்கும் அல்லது ஆலோசனைகள் வழங்கும் செயற்பாடுகளை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும். இவ்வகையில் பார்க்கும் போது இலங்கைப் பாடசாலைகள் குறிப்பாக ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது வடமாகாண பாடசாலைகளில் தான் மிகவும் வசதி குறைந்த பாடசாலைகள் பலவற்றை கொண்டுள்ளதை கீழே உள்ள அட்டவணை காட்டி நிற்கின்றது. 47.8 வீதமான பாடசாலைகள் மிகவும் வசதி குறைந்தவைகள் ஆகும். வசதி குறைந்தவைகள் என்னும் போது அது ஆசிரியர், மாணவர், சமூகம், வளங்கள் என்னும் அடிப்படையிலான பிரச்சினைகளை உள்ளடக்கி இருக்கும். எனவே இப்பிரச்சினைகளை மேலோட்டமாக ஆராய்ந்து அதன் அடிப்படையில் ஒரு முடிவுக்கு வருவது தவறானதாகும். இதனை ஆய்வு செய்தல் அவசியமாகும்.

| மாகாணம் | மிகவும் வசதியானவை very congenial | வசதியானவை congenial | வசதியற்றவை Non Congenial | வசதி குறைந்தவை Uncongenial | மிகவும் வசதி குறைந்தவை Very uncongenial |
|---|---|---|---|---|---|
| மேல்மாகாணம் | 24.4 | 41.5 | 27.7 | 5.9 | 0.5 |
| மத்திய மாகாணம் | 10.5 | 18.6 | 30.3 | 30.3 | 10.2 |
| தென்மாகாணம் | 11.7 | 31.0 | 34.0 | 18.1 | 5.1 |
| வடமாகாணம் | 4.31 | 18.6 | 15.8 | 13.4 | 47.8 |
| கீழ் மாகாணம் | 5. | 19.3 | 17.4 | 21.0 | 36.9 |
| வடமேல் மாகாணம் | 11.5 | 21.7 | 30.1 | 23.5 | 13.2 |
| வட மத்திய மாகாணம் | 7.2 | 17.0 | 15.9 | 31.8 | 28.1 |
| ஊவா மாகாணம் | 6.7 | 23.2 | 32.5 | 26.7 | 10.8 |
| சப்ரகமுவ மாகாணம் | 15.9 | 25.2 | 31.1 | 23.7 | 4.2 |
| இலங்கை | 11.6 | 24.6 | 26.8 | 21.3 | 15.6 |

மூலம் : பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி வழிகாட்டல் கைநூல், 2013, கல்வி அமைச்சு

ஆகவே இத்தகைய பிரச்சினைகளை இனங் கண்டு அவை தொடர்பான ஆய்வுகளை மேற் கொள்ள ஆசிரியர்கள் முன்வர வேண்டும். இந்நிலையில் ஆசிரியர்கள் ஆய்வாளர்களாக மாற்றம் அடைகின்றார்கள். ஆசிரியர் ஆய்வு தொடர்பான பல கருத்துக்கள் பல அறிஞர் களால் முன் வைக்கப்பட்டது. ஆசிரியர் ஆய்வு என்பது வகுப்பறைகளிலும் பயிற்சி விருத்தியை நோக்காகக் கொண்டு ஆசிரியர்களால் மேற் கொள்ளப்படுவதாகும் என்று Hoplcins (1987) எடுத்துக் கூறியுள்ளார்.

ஆசிரியர்களின் வாண்மைத்துவப் பொறுப் பானது மாணவர்களினது முழுமையான உள்ளார்ந்த திறன்களைச் சகல வழிகளிலும் சாத்தியமான அபிவிருத்திக்கு உதவுவதே ஆசிரிய ஆய்வு என்று Crowl (1993) விளக்கியுள்ளார்.

ஆய்வுச் செயல் கூட்டிணைவுப் பிரச்சினைக் குரிய நிலை போன்றவற்றினை இணைத்துச் செயற்படும் எண்ணக்கரு ஆசிரிய ஆய்வு என்பது Cochran Smith (1993) என்பவருடைய கருத்தாகும்.

பயனுள்ள ஆசிரியர் ஆய்வு ஆசிரியர்களுக்கு சக்தியை அளித்து அவர்கள் தனித்தும் சேர்ந்தும் மாற்றங்களை மேம்படுத்தும் ஆற்றலுக்கான உறுதியை வழங்குகின்றது. அத்துடன் புதிய அறிவாற்றலையும் நுட்பமான திறன்களையும் விருத்தி செய்வதுடன் வகுப்பு நிலையில் ஆசிரியர் களுக்குப் புதிய பங்களிப்புக்களையும் உருவாக் குகின்றது.

இவைகளை அடிப்படையாக வைத்து நோக்கும் போது ஆசிரியர்கள் வகுப்பறையில் பல்வேறு பிரச்சினைகளுக்கான ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றார்கள். செயற்றிட்டங்களை முன்னெடுத்தமை, ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டமை, பட்டபின் கல்வி டிப்ளோமா, முதுகல்விமாணி, முதுதத்துவமாணி முனைவர் பட்ட ஆய்வு போன்ற பட்டப் படிப்புக்களுக்கான ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டமை போன்ற செயல் களில் ஆசிரியர்கள் ஈடுபட்டிருந்தார்கள். ஆகவே ஆசிரியர்கள் ஆய்வாளர்களாக செயற்பட்ட நிலை யைக் காணமுடிகின்றது.

**இலங்கையில் ஆய்வுக் கலாசாரத்தின் வளர்ச்சி:-**

இலங்கையைப் பொறுத்த வரையில் ஆய்வு கள் இன்று பெருமளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1967 இல் பாடசாலை பிரயோ கத்தை மேம்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட செயல் நிலை ஆய்வுச் செயற்றிட்டம் இலங்கைக் கல்வித்துறையின் முதலாவது செயல் நிலை ஆய்வு முயற்சியாகும். அன்று தொடக்கம் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றினை முதன்மையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட செயல்நிலை ஆய்வுகளின் போது முக்கியமாக அமைந்த விடயங்கள் ஆசிரியர்கள், அதிபர்கள், ஆலோசகர்கள் போன்றோர்களின் வாண்மை விருத்தியும் அதனூடாக பாடசாலை முறைமையின் தர மேம்பாடுமாகும். இதனைத் தொடர்ந்து இத்தகைய ஆய்வு தொடர்பான முயற்சிகளுக்கும் பெரிதளவு வரவேற்பு இல்லையெனினும் அதன் பின்னர் 1985 இல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய கல்வி நிறுவகம் ஆய்வு தொடர்பான முயற்சிகளில் ஆசிரியர்களை ஈடுபடுத்தியது. தேசிய கல்வி நிறுவகம் பல்வேறு கல்வி சார்ந்த நோக்கங்கள் பலவற்றைக் கொண்டு செயற்பட்டு வந்தது. இங்கு ஆசிரியர்களுக்கான வாண்மைத்துவப் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டன. கல்வி தொடர்பான நடவடிக்கைகள், பாட உள்ளடக்கங்கள், கலைத்திட்ட அபிவிருத்திகள், கற்பித்தல் முறைமையியல்கள் போன்ற கல்வி தொடர்பான விடயங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இவ்வா றான கல்வியின் அம்சங்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளுதல் தேசிய கல்வி நிறுவகத்தின் முக்கியமான நோக்கங்கள் ஆகும். ஆசிரியர்களுடைய ஆய்வு தொடர்பான செயற் பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் இந்நிறுவகம் இரண்டு விதமான ஊக்குவிப்புக்களை வழங்கி வருகின்றது.

01. கொள்கைகளை ஆக்கும் விதமாக மேற் கொள்ளும் ஆய்வுகளுக்கான சன்மானம்.
02. கொள்கைகளை அமுலாக்கும் பகுதியினரான ஆசிரியர்கள் பாடசாலையை மையமாகக் கொண்டு மேற்கொண்டு வருகின்ற ஆய்வு களுக்கான சன்மானம். (பாடசாலை மட்ட கைநூல் 2013)

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆசிரிய ஆய்வுகளுக்கான செயற்றிட்டம் 1967இல் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கள் தொடர்பான ஆய்வுகள் ஆசிரிய ஆய்வாளர்கள் சிலரினால் மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் 1996, 1997, 1998 இல் தமிழ், சிங்கள மொழிகளில் 14 ஆசிரியர்கள் பாடசாலையை மையமாகக் கொண்டு ஆய்வு, முயற்சிகளில் ஈடுபட்டனர். இதே போன்று மாணவர்களின் நடத்தை சார்ந்த ஆய்வுகளும் சிங்கள மொழி ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனைத் தொடர்ந்து விஞ்ஞான வகுப்பறைகளில் சில தலைப்புக்களின் கீழ் ஆய்வுகள் செய்யப் பட்டன.

இவ்வகையில் பாடசாலை மாணவர்கள் தொடர்பாக பல ஆய்வுகள் 1980 காலப்பகுதிகளில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் 1998 இல் தான் தமிழ்மொழி பாடசாலைகளில் ஆய்வு நடவடிக்கைகள் பல ஆரம்பிக்கப்பட்டன. திரு.க.சண்முகநேசன் என்பவர் டெரிகிளயர் தமிழ் வித்தியாலய ஆசிரியர் ஆவார். அவர் இவ் ஆய்வு முயற்சியில் பங்குபற்றியிருந்தார். இக்காலப்பகுதியில் தேசிய கல்வி நிறுவகம் இவரை ஒரு ஆசிரிய ஆய்வாளராக தெரிவு செய்தது. குறிப்பாக வடக்கு கிழக்கு பிரதேங் களில் உள்ள பாடசாலைகளில் இவ்வாய்வு முயற்சிகளில் ஆசிரியர்கள் ஈடுபட்டமை மிகக் குறைவாகவே இருந்தது. நாட்டின் போர்ச்சூழல் ஒரு காரணமாகவும் அமைந்துள்ளமை குறிப் பிடப்பட்டதாகும். (மீனாட்சி சுந்தரம் 2010)

கல்வியியல் ஆய்வுகளுக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தலில் தேசிய கல்வி நிறுவகத்தோடு UNICEFன் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பிட்ட சில செயற்றிட்டங்கள் ஊடாக தரம் 1 இல் மாணவர்களை பாடசாலையில் சேர்ப்பித்தலும் மாணவர்களின் இடைவிலகலைக் குறைத்தலும் இவ்வாய்வின் நோக்கமாக இருந்தது. இதன் மூலம் பாடசாலைகள் மீள் திருத்தப்பட்டதோடு பாடசாலைகளின் உட்கட்டமைப்பில் மாற்றங் களைக் கொண்டு வரக்கூடியதாகவும் இருந்தது. பின்னரான காலப்பகுதிகள் அதாவது 2004இல் GTZ ன் உதவியுடன் ஆய்வுத்திட்டங்கள் முன்னெடுக்கும் நோக்குடன் பாடசாலை மட்டச்செயல் நிலை ஆய்வு என்ற கைநூல் ஒன்று வெளியிடப்பட்டது. (சின்னத்தம்பி, 2004)

ஆய்வுத்திட்டத்தை பல வழிகளில் முன் னேற்றும் நடவடிக்கைகளில் ஒன்றாக மீண்டும் 2009 இல் பாடசாலைகளில் குறிப்பாக வகுப்பறைகளில் ஆசிரியர்கள் ஆய்வாளர்களாகச் செயற்படுதல் என்ற முதன்மையான நோக்கம் முன்வைக்கப்பட்டுள்ளது. தரமான கற்பித்தலுக்கு செயல்நிலை ஆய்வு என்ற பயிற்சிக்கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது. இதில் கற்றல் கற்பித்தலைத் திறமையாக முன்னெடுத்துச் செல்லுதலில் உள்ள தடைகள் இனம் காணப் பட்டன. இத்தகைய ஆய்வுகளின் மூலம் பல முக்கியமான நோக்கங்களை அடைய முடியும் என்பது எதிர்பார்க்கப்பட்டது.

01. வகுப்பறையில் கல்விக்கான சூழலை ஏற்படுத்தல்.
02. இயலாமையுடைய மாணவர்கள் இனம் காணப்படுவதோடு அவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள் வைப்பது தொடர்பான செயற்பாடுகளை முன்வைத்தல்.
03. மாணவர்களிடத்தில் நல்ல மனப்பாங்குகளை உருவாக்குதல்.
04. பாடசாலை நிர்வாகத்தின் செயற்பாடுகளை மேம்படுத்தல்.
05. மாணவர்களின் அடைவுமட்டத்தை உயர்த்து தல்.
06. பெற்றோர் சந்திப்பை அடிக்கடி ஏற்படுத்துதல்.
07. ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற் படுத்துதல்.
08. குடும்பப் பொருளாதார நிலைகள் கல்வி யில் ஏற்படுத்தும் தாக்கங்களை அறிந்து கொள்ளுதல். (தரமான கற்பித்தலுக்கு செயல்நிலை ஆய்வு, 2010)

எனவே வகுப்பறை ஆய்வாளர்கள் கல்விச் செயற்பாடுகளின் பல பிரச்சினைகளை இனங் கண்டு அது தொடர்பான பல கருத்துக்களை முன் வைத்துள்ளனர். எனவே பொருத்தமான கற்றல், கற்பித்தல் அணுகுமுறைகளை கடைப்பிடிப்பதற்கு வகுப்பறையின் ஆய்வு அவசியமாகும். இத்தகைய ஆய்வுகள் மாணவர்கள் கல்வியில்

எங்கு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றார்கள் என்பதையும் அவர்களுக்கான விசேட கற்பித்தல் தொடர்பான பல விடயங்களையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளன.

ஆய்வுகள் மூலம் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள மாணவர்களுக்கு எத்தகைய கற்பித்தல் முறைகள் தேவை என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றது. அத்துடன் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான பல்வேறு கற்பித்தல் முறைகள் இருந்த போதிலும் விளையாட்டு முறையிலான கற்பித்தல் சிறந்தது என்று அறியப்பட்டுள்ளது. இக்கற்பித்தல் முறைகள் தான் சிறந்த வெற்றியைத் தரும். மெல்லக்கற்கும் மாணவர்கள், விசேட தேவையுடைய மாணவர்கள் இனம் காணப்பட்டு அவர்களுக்குரிய கற்பித்தல் முறையை முன்னெடுத்துச் செல்லல் இலகுவானதாகும். இச் செயற்பாடானது தன்னால் முடியாது என்ற எண்ணத்தை அகற்றி புது வாழ்க்கை வாழ மாணவர்கள் முன்வருவார்கள். தொழில் இடத்தில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை யதார்த்தமாக ஆராய்ந்து எதுவித முரண்பாடுகளும் இல்லாமல் தாமே தீர்மானங்களை நெறிப்படுத்தித் திருத்தியமைத்து மதிப்பீடு செய்யும் எல்லா விடயங்களும் உண்மையில் ஆசிரியர்களின் ஆய்வு முயற்சியைத்தான் குறித்து நிற்கின்றது.

இந்த ஆய்வு முயற்சிகளின் வரிசையில் 1920ல் ஜோன்டுயியும் (John Dewey) கேட்லுவின் (Kurt Lewin) என்பவரும் குறிப்பிட்டு கூறக்கூடியவர்கள். இந்த செயல் நிலை ஆய்வானது குறிக்கப்பட்ட ஒரு பரப்பினை உடையதால் அதன் முடிவுகளை பொதுமைப்படுத்த முடியாது. ஆனாலும் அவுஸ்திரேலியா ஜேர்மன் போன்ற நாடுகளில் செயல்நிலை ஆய்வுகள் வெற்றிகரமானதாகச் செயற்பட்டு வந்தன. பல தொழில் நிறுவனங்களும் தமது தொழிற்றுறையின் முன்னேற்றத்துக்கு இந்த ஆய்வுச்செயன்முறையைப் பயன்படுத்தி வெற்றி கண்டார்கள். கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பாக சிறந்த முடிவுகளை எடுப்பதற்கு செயல்நிலை ஆய்வின் பயன் அதிகமானது. இலங்கையில் இத்தகைய ஆய்வுகளது முக்கியத்துவம் அண்மைக்காலமாகவே உணரப்பட்டு பல முன்னெடுப்புக்கள் கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இம் முயற்சி போதுமானதாக இல்லை. இன்று கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், திறந்த பல்கலைக்கழகங்கள் தேசிய கல்வி நிறுவகங்கள் போன்றவற்றில் ஆசிரிய கல்வி நிகழ்ச்சி திட்டங்களில் ஒரு முக்கிய பிரிவாக ஆய்வுச் செயற்பாடுகள் இடம்பெற்று வருவது சிறப்பானதாகும்.

### ஆசிரிய ஆய்வுகளின் முக்கியத்துவம்

ஆசிரியர்கள் தமது வகுப்பறைகளிலேயே குறிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான ஆய்வு முயற்சிகளில் ஈடுபடலாம். மேலைத்தேயங்களில் வகுப்பறை ஆய்வுகள் ஆசிரியர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில் இத்தகைய ஆய்வுகளுக்கான ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவது குறைவாக உள்ளமையால் இங்கு ஆசிரியர்கள் தமது பயிற்சிக் காலத்தில் இத்தகைய ஆய்வு முயற்சிகளை முன்னெடுப்பதும் குறைவானதாகும். சில ஆய்வு முயற்சிகள் ஆசிரியர்களது போதிய முயற்சியின்மை காரணமாக இடையில் நின்று விடுவதுமுண்டு. எனவே ஆசிரியர்கள் ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அவற்றின் நோக்கம், முக்கியத்துவம், தேவை, காலச்செலவு, பணச்செலவு போன்றவைகளைக் கருத்திற்கொண்டு செயற்படும் போது சில வீண்விரயங்களை தடுக்க முடிகின்றது. எனவே ஆய்வொன்றைச் சரியான முறையில் வடிவமைக்கும் போது அதன் மூலம் சில முக்கியமான பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எட்ட முடிகின்றது.

01. மாணவர்கள் கற்றலில் இடர்படும் இடங்களை அறிந்து கொள்ளல்.
02. மாணவர்களினால் தேர்ச்சி மட்டத்தை எட்டக் கூடிய நிலைமைகளை உருவாக்குதல்.
03. மாணவர்களின் கற்றலுக்குத் தடை யாகவுள்ள காரணிகள் தொடர்பாக அறிந்து கொள்ளல்.
04. மாணவர்களின் தனியாள் வேறுபாட்டினை இனம்கண்டு கொள்ளல்.
05. மாணவர்களின் கற்றலில் ஊக்குவிப்புக்களை ஏற்படுத்தல்.
06. மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளில் எத்தகைய மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதை விளங்கிக் கொள்ளல்.

07. பிள்ளைகளின் கற்றல் தொடர்பாகக் குடும்பக் காரணிகளின் பங்களிப்பை விளங்கிக் கொள்ளல்.

08. பாடசாலை நிர்வாகத்தின் பணிகளை இலகுவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளல்.

09. ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகள் நுட்பங்கள் தொடர்பான விடயங்களை விளங்கிக் கொள்ளல்.

10. எதனையும் ஆய்வு செய்வதன் மூலமாகத் துல்லியமான முடிவுகளைப் பெறலாம் என்பதை உணர்ந்து கொள்ளல்.

11. ஆசிரியர் மாணவர் இடைவினையுறவை அதிகரிக்கச் செய்தல். (முருகன் 2007)

இவ்வகையில் இத்தகைய பயன்கள் ஏற்படுகின்ற நிலையில் தான் ஆய்வின் நோக்கம் நிறைவடையக் கூடியதாக இருக்கும்.

**ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஆசிரியர்கள் கவனிக்க வேண்டியவை.**

ஆய்வொன்றினை முன்னெடுக்கும்போது பல விடயங்களை ஆசிரியர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். ஆய்வுக்கான செயல் திட்டங்களை வகுத்துக் கொள்வதோடு அதனை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டும். ஆய்வு என்பது மெய்மையினைக் கண்டறியும் முயற்சி எனப்படும். இதனால் ஆய்வின் மூலம் பிரச்சினைகளை இனம்கண்டு அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய தகவல்களைப் பெற்றுக் கொண்டு ஆசிரிய ஆய்வாளர் செயற்பட வேண்டும். ஆய்வின் மூலம் தீர்க்க முடியாத பிரச்சினைகள் இருந்தால் அந்த ஆய்வை மிகவும் நுட்பத்துடனும் அவதானத்துடனும் மேற்கொள்ள வேண் டும்.

எனவே சில வினாக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கான விளக்கங்களைப் பெற முயற்சிக்கும் போது ஆசிரிய ஆய்வாளர்கள் தொடர்பாகவும் ஆய்வு தொடர்பாகவும் சில விடயங்களை அறிய முடிகின்றது.

01. ஆசிரியர்கள் ஆய்வு தொடர்பாக என்னென்ன நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்

02. வகுப்பறைகளில் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்க்க எத்தகைய அணுகு முறைகளைப் பின்பற்றுகின்றார்கள்.

03. ஆசிரிய ஆய்வாளர்கள் தொடர்பாக உயரதிகாரிகள் எத்தகைய மனப்பாங்கினைக் கொண்டுள்ளனர்.

04. இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்ளும் போது ஏற்படும் பிரச்சினைகள் எவை?

05. ஆசிரியர்கள் வகுப்பறை ஆய்வுகளில் ஈடுபடுவதற்கு பின்னிற்பதற்கான காரணங்கள் யாவை?

06. பாடசாலைகளில் ஆய்வு நடவடிக்கைகளை எவ்வாறு வினைத்திறனுடையதாக மாற்றலாம். (நாகராஜன், 2000)

இத்தகைய வினாக்களுக்கெல்லாம் விடை காண முயற்சிக்கும் போது அதற்கான தீர்வுகளை முன்வைக்கும் செயற்பாட்டில் ஆய்வு முயற்சிகள் வெளிப்படுகின்றன என்பது உறுதியாகும்.

வகுப்பறை ஆய்வு என்பது செயல் நடைமுறை சார்ந்ததும் சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டதுமான ஒரு ஆய்வு ஆகும். ஆசிரியர்கள் ஆய்வினை மேற்கொள்ளும் போது தம்முடைய கற்பித்தல் முறையிலுள்ள குறை நிறைகளை விளங்கிக் கொள்வதோடு மாணவர்களும் கற்றலில் இடர்படும் இடங்களை அறிந்து கொள்வார்கள். ஆய்வுகளின் மூலம் கல்வியுலகின் பிரச்சினைகள் வெளிக்கொணரப்படுவதோடு அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும் ஆராயப்படுகின்றன. கல்வி நடைமுறைகளில் கற்றல் கற்றலில் ஏற்படும் பிரச்சினைகள், புதிய கருத்துக்களையும் சோதித்தல் போன்ற பல விடயங்களையும் அறிந்து கொள்வதில் ஆய்வுச் செயன்முறை பெரும்பங்காற்றுகிறது. இதனால் பல்வேறு விடயங்களையும் அறிந்து கொள்வதில் ஆசிரியர்களுக்கு ஆய்வு முயற்சிகள் பெருமளவில் துணை புரிகின்றன.

**ஆய்வுச் செயல் ஒன்றின் படிமுறைகள்**

01. ஆரம்ப நிலைகள் இனம் காணப்படல்.

02. ஆய்வுக்கான சந்தர்ப்பம் தொடர்பாகக் கலந்துரையாடல்.

03. ஆய்வுப் பிரச்சினைகளை வரையறை செய்தல்.

04. பொருத்தமான நுட்பமுறைகளைப் பயன்படுத்திப் பல்வேறு மூலங்களில் இருந்து மேலதிக தகவல்களைச் சேகரித்தல்.

05. தரவுகளைத் தொகுத்தல்.
06. நடவடிக்கைகளை அமுல்படுத்தும் திட்டத்தை உருவாக்கல்.
07. அவதானிப்புக்களை தொகுத்து வைத்தல்.
08. எதிர்கால ஆலோசனை வழங்குதல்.
09. எதிர்கால செயல்களை திட்டமிடுதல்.
10. செயல்களை அமுல்படுத்தல்.
11. விளைவுகளை மதிப்பிடல்.
12. செயன்முறைகளை முன்னெடுத்துச் செல்லல். (Chaurasia, 1987)

இவ்வகையான படிமுறை ஒழுங்கில் ஆய்வாளர்கள் செயற்பட வேண்டும். பாடசாலைகளில் ஆய்வை மேற்கொள்ளக் கூடிய வகையில் உள்ள துறைகளை முதலில் இனங்காண வேண்டும். அத்துறைகளாவன,

01. மாணவர்களின் கல்விசார் அடைவு மட்டம்
02. மாணவர்களின் விழுமியம் சரர்ந்த விடயங்கள்
03. கல்வியில் பெற்றோர் ஆசிரியர்களின் பங்களிப்புகள்.
04. மாணவர்கள் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஈடுபடும் தன்மை
05. கலைத்திட்டம் தொடர்பான விடயங்கள்
06. பாடசாலை முகாமை அம்சங்கள்
07. வகுப்பறை ஒழுங்கு
08. கற்பித்தலில் பயன்படுத்தப்படும் உத்திகள்.
09. மதிப்பீடு தொடர்பான விடயங்கள்.
10. எதிர்கால கல்வியின் மாற்றங்கள்.
11. கற்பித்தல் முறைகள்.
12. மாணவர்களின் உளநலம் சார்ந்த விடயங்கள்.

போன்ற பல்வேறு தலைப்புகளில் ஆசிரியர்கள் தமது ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்ல முடிகின்றது. இத்தகைய ஆய்வு முயற்சிகளில் தகவல்களைச் சேகரித்தல் என்பது மிக முக்கியமாகும். இத்தகவல்களை சேகரிப்பதற்குப் பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

- நேர்காணல்கள்
- உற்றுநோக்குதல்
- அவதானிப்பு
- வினாக்கொத்து
- ஆவணங்கள் நூல்கள்

போன்ற பல கருவிகளைப் பயன்படுத்த முடிகின்றது. அவதானித்தல் உற்றுநோக்கலில் (Observation) எவ்வாறு இவை அவதானிக்கவும் உற்றுநோக்கவும்பட வேண்டும் என்பதை சில வினாக்களின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

01. அவதானிக்கப்பட, உற்றுநோக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவை?
02. எவ்வாறு அவதானிக்கப்பட வேண்டும்?
03. எப்போது அவதானிக்கப்பட வேண்டும்?
04. எங்கே அவதானிக்கப்பட வேண்டும்?
05. யார் அவதானிப்பது?
06. ஏன் அவதானிக்க வேண்டும்?

இவைகளை அடிப்படையாகக் கொண்டு அவதானிக்கப்பட வேண்டும். இதேபோன்று நேர்காணலும் (Interview) திட்டமிட்ட முறையில் வினாக்கள் கேட்கப்படுவதுடன் கிடைக்கப்பெறும் தகவல்கள் உடனுக்குடன் பதிவு செய்யப்பட வேண்டும்.

எனவே இத்தகைய ஆய்வு முயற்சிகளூடாகப் புதிய சிந்தனைகளுடன் செயற்படும் இந்த ஆசிரிய ஆய்வாளர்கள் பூரணத்துவமான ஒரு ஆசிரியராக மாற வேண்டும். எனவே ஒரு பூரணத்துவமான ஆசிரியர் என்பவர்.

01. பாடத்துறையில் விசேட ஆற்றல்கள் பெற்றிருப்பதோடு அவற்றை புதுப்பித்து சமூகம், சூழல் என்பவற்றுக்கேற்ப ஒழுங்கு படுத்தி வழங்குவார்.
02. பாடத்துறையுள் ஆழமான அறிவு கொண்டிருப்பார்.
03. நவீன தகவல்களை மாணவர்களுக்கு விளக்குவார்.
04. கல்விச் சுற்றுலா, கருத்தரங்குகள், வெளிவாரி செயற்பாடுகள் என்பவற்றில் பங்குபெறச் செய்வார்.
05. மாணவர்களின் கேள்விகளுக்கு அழகாக விடையளிப்பார்.
06. பொருத்தமான உபகரணங்களைக் கையாளும் திறன் பெறுவார்.
07. ஏனைய கல்வி அமைப்புக்களுடன் தொடர்பைப் பேணும் திறனைப் பெறுவார்.
08. தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருப்பார்.
09. மாணவர் கருத்துக்களுக்குச் செவிமடுப்பார்.
10. மாணவர் முழு நலனில் அக்கறை கொள்வார்.

11. புதிய கருத்துக்களுக்கு சாதகமாக துலங்குவார்.
12. சமநிலை தளம்பாதிருப்பார்.
13. உயர்மட்ட நேர்மை கொண்டிருப்பார்.
14. ஏனையோரை விளங்கிக் கொள்ளவும் மரியாதை செலுத்தவும் தெரிந்திருப்பார்.
15. மாணவர்களுடன் சேர்ந்து கற்பவராக செயற்படுவார்.

இவ்வகையில் இன்று இலங்கையின் ஆய்வுக் கலாசாரத்தின் வளர்ச்சி பல ஆசிரிய ஆய்வாளர்களை உருவாக்கியுள்ளது. ஆசிரியர்கள் வகுப்பறை, பாடசாலை போன்ற இடங்களிலும் பல சந்தர்ப்பங்களிலும் ஆய்வாளர்களாகச் செயற்பட்டனர். இதனால் புதிய நூற்றாண்டின் மாற்றங்களுக்கேற்ப இன்று ஆசிரிய ஆய்வாளர்கள் ஆய்வு தொடர்பாக அதிக அக்கறை காட்டுபவர்களாக விளங்குதல் வேண்டும் என்ற தேவை இருந்த போதிலும் அவர்கள் முழுமையாக ஆய்வு முயற்சிகளில் ஈடுபடுவதில் பல தடைகளை எதிர்கொள்கின்றார்கள்.

**ஆய்வின் மூலம் இனம் காணப்பட்ட விடயங்கள்**

- ஆசிரியர்களுக்கு ஆய்வு தொடர்பான போதிய விழிப்புணர்வு இல்லை.
- ஆய்வு செய்வதற்கான போதியளவு ஊக்குவிப்புக்கள் பாடசாலைகளில் வழங்கப்படுவதில்லை.
- ஆய்வை முன்னெடுத்துச் செல்வதற்கான போதியளவு நிதி வசதிகள் கிடைப்பதில்லை.
- ஆசிரியர்கள் பல்வேறான சமூகப் பொறுப்புக்களை ஏற்பதனால் நேரமும் போதியளவு கிடைப்பதில்லை.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களைக் கையாள்வதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள்.
- வகுப்புக்களில் ஆசிரியர்களது கண்காணிப்புக்கு உட்படுத்தப்படாத அளவில் மாணவர் தொகை அதிகரித்து இருத்தல்.
- அவர்களிடம் போதியளவு தலைமைத்துவப் பண்புகள் காணப்படாமை.
- ஆய்வு முறைகளை நன்கு விளங்கிக் கொள்ளாமை.

இவ்வாறான பல பிரச்சினைகள் உடையவர்களாகப் பல ஆசிரியர்கள் சேவையில் உள்ளமையினால் எல்லோராலும் ஆய்வு முயற்சிகளை முன்னெடுக்க முடியாமல் போய் விடுகின்றது.

**ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகள்**

- ஆய்வுச் செயன்முறையின் தேவைகளை ஆசிரியர்களுக்கு உணர்த்துதல்.
- ஆய்வுச் செயன்முறைகளுக்கான குழு ஒன்றைப் பாடசாலை மட்டத்தில் ஏற்படுத்தல்.
- ஆசிரிய ஆய்வாளர்களுக்கான ஊக்குவிப்பை வழங்குதல்.
- ஆசிரிய சமூக இடைவினையுறவை மேம்படுத்தல்.
- ஆசிரியர்களின் அளவுக்கதிகமான பாடச் சுமைகளைக் குறைத்து விடுதல்.
- ஆய்வு தொடர்பான கலந்துரையாடல்களுக்கு ஒழுங்கு செய்தல்.
- ஆசிரியர்களைப் பாராட்டுதல்
- ஆசிரியர்களுக்கான பொறுப்புக்கள் பகிரப்படுதல்.
- இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் ஆசிரியர்கள் அதிக அக்கறை உடையவர்களாக இருத்தல்.

இவ்வாறானநடவடிக்கைகளைமேற்கொள்ளும் பட்சத்தில் ஆசிரியர்களது ஆய்வு முயற்சிகள் திருப்திகரமாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

**உசாத்துணை நூல்கள்**


01. பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி கைநூல், 2013 கல்வி அமைச்சு.
02. மீனாட்சி சுந்தரம். அ., (2010) கல்விப் புதுமைகள் மற்றும் மேலாண்மை, காவ்யமாலா பப்பிளிஷர்ஸ், தமிழ்நாடு.
03. சின்னத்தம்பி.மா., (2004), ஆசிரிய முகாமைத்துவம், விஷடம் பப்ளிகேசன்ஸ், கொக்குவில்
04. முருகன்.அ., (2007) கற்பித்தல் மற்றும் கற்றலின் அத்தியாவசியங்கள், நேரு கல்வியியற் கல்லூரி, புதுச்சேரி,
05. நாகராஜன்.கி., (2000) கல்வியியல் புதுமைகள், சென்னை
06. Chaurasia.G., (1987), challenges and Innovations in Education, Sterling Publications Pvt. Limited, New Delhi.
07. Peter.J., (1984), Teachers and Teaching in the Education, Croom Helm, London.
08. Luxmydevi, (1999), Educational Development and Planning, Anm, 01 Publications Pvt, Ltd. New Delhi.
09. Shulman.J., H., (1992), Case Methods in Teacher Education, New York.
10. Fullan.M., (2001), The New meaning of Educational Change, 3rd Edition, NewYork

# இனப்படுகொலைகளும் ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்புக்கூறலும் : ஒரு நுணுக்கப் பகுப்பாய்வு

த.கிருஷ்ணமோகன்

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதப்படுகொலை, இனப்படுகொலை மூலம் பல இலட்சம் மக்கள் தமது வாழ்க்கையினை இழந்துள்ளார்கள். பல இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். ருவேண்டாவில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் மிகவும் பாரியளவில் மீறப்பட்டமையினை தடுக்க முடியாது ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்தபோது அது முழு உலகிற்குமான தோல்வியாகியது. சிரியா மற்றும் இலங்கையில் வன்னி மக்களுக்கு ஏற்பட்ட துன்பம் இதற்கு மேலும் சாட்சியாகவுள்ளது. மோதலுக்கு சிக்கியுள்ள மக்களைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் சபை செயற்பாட்டுத்திட்டம் ஒன்றை உருவாக்கியது. இச்செயற்பாட்டுத்திட்ட அறிகையில் "மோதல் என்பது ஒரு சோதனை. இது அங்கத்துவ நாடுகளுக்குரிய சோதனையல்ல, பதிலாக ஐக்கிய நாடுகள் சபை தனது பொறுப்பினைநிறைவு செய்வதற்கும், தனது முழுமையான வலுவினைப் பயன்படுத்தி திறமையினை நிலைநிறுத்துவதற்கும் மக்களுக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான சோதனையாகும்." எனத் தெரிவித்துள்ளது மனிதப்படுகொலைகள் மற்றும் இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை தரமுயர்த்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை அனேக சிபார்சுகளை பல வருடங்களாக முன்மொழிந்து வருகின்றது. ஆனால் அண்மைக்காலத்தில் ருவேண்டா இனப்படுகொலை இலங்கையின் இனப்படுகொலை, சிரியா மனிதப்படுகொலை போன்றவற்றை தடுப்பதில் ஐக்கிய நாடுகள் தோல்வி அடைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து ருவென்டா, இலங்கை, சிரியா, செர்பனிக்கா போன்ற நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக விசாரணை நடாத்தப்பட்டதுடன் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பு ரீதியாக தோல்வியடைந்துள்ளதாக விசாரணை அறிக்கைகள் கூறுகின்றன. பாடங்கள் பலவற்றைக் கற்றும், முறைப்படுத்தப்பட்ட நிறுவனமாக ஐக்கிய நாடுகள் சபை தன்னை இதுவரை மீளமைத்துக் கொள்ளவில்லை என்ற மையப் பொருள் இங்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்** : ஐக்கியநாடுகள் சபை, பாதுகாப்புச்சபை, இனப்படுகொலை, மனிதப்படுகொலை, பாதுகாப்பிற்குப்பொறுப்பு, யுத்தக்குற்றங்கள்.

**அறிமுகம்**

யூத இனத்தைச் சேர்ந்த சட்டத்தரணியாகிய ராபேல் லெம்கின் (Raphacl Lemkin) ஜேர்மனியில் இரண்டாம் உலக யுத்தத்தின் போது நாசிசப்படைகள் மேற்கொண்ட யூத இனமக்கள் மீதான படுகொலைகளை விபரிக்க ஜினோசைட் (Genocide) (இனப்படு கொலை) என்ற புதிய பதத்தினை ப்பயன்படுத்தியிருந்தார். இவர் Genocide என்ற பதத்தினை புராதன கிரேக்க சொற்பதமாகிய ஜினோ (Geno = Race - இனம்) என்ற பதத்தினையும் புராதன இலத்தீன் சொற்பதமாகிய. சைட் (Cide Killing - bfhiy) என்ற பதத்தினையும் இணைத்து Genocide என்ற ஆங்கிலப்பதத்தினை உருவாக்கியிருந்தார். இருபதாம் நூற்றாண்டில் ஏறக்குறைய 174 மில்லியன் மக்கள் (ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்) இனப்படுகொலை அல்லது மனிதப்படுகொலைகளால் மரணித்துள்ளார்கள். ஹிட்லர் காலத்தில் ஜேர்மனியில் 21 மில்லியன் மக்களும், சோவியத் ரஸ்சியாவில் லெனின் மற்றும் ஸ்ராலின் பதவிக்காலத்தில் 62 மில்லியன் மக்களும், மாவோ சேதுங்காலத்தில் 35 மில்லியன் மக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். பல இலட்சம் மக்கள் சித்திரவதைக்கும் பாலியல் வன்முறைக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளதுடன், தமது இருப்பிடங்களிலிருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டுள்ளார்கள். ஐக்கிய நாடுகள் சபை இனப்படுகொலையினைத் தடுப்பதற்கு முனைப்பான பல செயற்பாடுகளைச் செய்து

வந்தாலும் இனப்படுகொலையும் மக்கள் படுகொலையும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு இருப்பதற்குப் பல சம்பவங்களை உதாரணமாககாட்டமுடியும். இந்நிலையில் மனிதப் படுகொலைகள் மற்றும் இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கான செயற்பாடுகளை தரமுயர்த்து வதற்கு ஐக்கிய நாடுகள் முயற்சித்துள்ளதா? ருவென்டா, இலங்கை இனப்படுகொலை, சிரியா மனிதப்படு கொலை போன்றவற்றைத் தடுப்பதில் ஐக்கிய நாடுகள் சபை ஏன் தோல்வி அடைந்தது? இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக உள்ளக விசாரணை எதனை வலியுறுத்தியுள்ளது? பாடங்கள் பலவற்றைக் கற்றும் முறைப்படுத்தப்பட்ட நிறுவனமாகஐக்கியநாடுகள்சபைதன்னைஇதுவரை மீளமைத்துக் கொள்ளாமைக்கு காரணங்கள் என்ன? போன்ற வினாக்களுக்கு இக்கட்டுரை விடையளித்துள்ளது. இதற்காகத் தேவையான தரவுகள் அனைத்தும் இணையத்தளங்களூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**இனப்படுகொலைகளைத் தடுக்கும் சட்டங்கள்**

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 1946ஆம் ஆண்டு இனப்படுகொலை தொடர்பாக புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. இத் தீர்மானத்தின் அடிப்படையில் சர்வதேசச் சட்டத்தின் விதிகளுக்குள் இனப்படுகொலை ஒரு யுத்தக் குற்றமாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. ஆனால் யுத்தக்குற்றம் என்றால் என்ன? என்பதற்கான சட்டபூர்வமான வரைவிலக்கணத்தை இத் தீர்மானம் அப்போது உருவாக்கவில்லை 1948ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை இனப்படுகொலையினைத் "தடுத்தலும் தண்டனையும்" (Prevention and Punish- mant) என்றதொரு புதிய தீர்மானத்தினை நிறை வேற்றியது. (United Nations General Assembly, 1948) இத்தீர்மானத்தின் அடிப்படையில் இனப்படுகொலை என்பதற்கான வரைவிலக்கணம் முதல் தடவையாக உருவாக்கப்பட்டது. இது நிகழ்ந்து ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்குப் பின்னர் இனப்படுகொலைகளுக்கு எதிரான சட்டத்தினைப் பாதுகாப்பதற்கான பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இனப்படுகொலை மற்றும் மக்கள் படுகொலை என்ற பதம் இரண்டு அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

1. உள்நாட்டில் அரசியல், பொருளாதாரக் காரணங்களினால் திட்டமிடப்பட்டு நடைபெறும் மக்கள் படுகொலை மற்றும் இனப்படுகொலை
2. ஏதாவதொருகாரணத்தினால்உதவியற்றிருக்கும் ஆயுதப்பலமற்றிருக்கும் மக்கள் மீது அல்லது இனத்தின் மீது சர்வதேச அரசாங்கம் மேற் கொள்ளும் படுகொலை

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு, யுத்தக் குற்றங்கள் இனப்படு கொலை போன்றவற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்புத் தொடர்பாக 2005 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபை தீர்மானங்களின் பந்திகள் 138 மற்றும் 139 ஆகிய இரண்டும் எடுத்துக் கூறுகின்றன (United Nations General Assembly2005) இப்பந்திகள் இரண்டும் 2006 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 1674ஆம் இலக்கத் தீர்மானத்தின் மூலம் "ஆயுத மோதல்களின் போது பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு, பாதுகாப்புச் சபைக்கு உள்ளது" எனத் திருத்தப் பட்டது. (Security Council Resolution 1674, 2006) இதன் பின்னர் இனப்படுகொலை என்பதற்கான வரைவிலக்கணத்தை 2008ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை "பாலியல் வன்முறை, பாலியல்ரீதியானஏனைய வன்முறைகள்என்பனவும் யுத்தக்குற்றங்களாகவும், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்களாகவும் கருதப்படும் என 1820ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. (Security Council Resolution 1820,2008) "1990ஆம் ஆண்டு பனிப்போர் முடிவிற்கு வந்து உலகம் யுத்தசூழலிலிருந்து விடுபட்ட பின்னர் ஐக்கிய நாடுகள் சபைக்குள் புதிய நல்ல மாற்றங்கள் நிகழும் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருந்ததுடன் கடந்த பல வருடங்களாக பாரிய சித்தாந்த வேறுபாடுகளால் உருவாக்கிய இணைபிரியாத பாரிய அழிவிற்கான விரோதம், நம்பிக்கையீனம் என்பவற்றால் வழிநடாத்தப்பட்ட நிலை இப்போது தகர்ந்துள்ளது" என ஐக்கிய நாடுகள் சபையின்

பொதுச்செயலாளர் பூட்ரஸ் -பூட்ரஸ் - காலி (Boutras Boutras - Ghali) “சமாதானத்தையடைதல், சமாதானத்தை உருவாக்குதல் மற்றும் சமாதான பாதுகாப்பு தந்திரோபாயத்திற்கான நிகழ்ச்சி (An Agenda for Peace Preventive diplomacy. Peace making and peace Keeping) என்னும் அறிக்கையில் (Report of the secretary General, 1992) கூறியுள்ளார்.

**மக்கள் படுகொலைகளைத் தடுக்கும் பொறிமுறை**

2012ஆம் ஆண்டு சித்திரை மாதம் படுகொலைகளைத் தடுக்கும் சபை என்ற பெயரில் புதிய சபையொன்று ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவினால் உருவாக்கப்பட்டது. (James P. Finkel 2014) இச்சபை இனப்படுகொலை மற்றும் மக்கள் படுகொலைகளைத் தடுப்பதற்கு மிக முக்கியத்துவம் கொடுத்து செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. ஆயினும் அறுபத்தியொன்பது வருடங்களுக்கு (1945 - 2014) முன்னர் நிகழ்ந்த யூதர்கள் படுகொலை இருபது வருடங்களுக்கு (1994 - 2014) முன்னர் நிகழ்ந்த ரூவென்டா இனப்படுகொலை என்பவைகளுக்குப் பின்னரும், இனப்படுகொலை மற்றும் மக்கள் படுகொலைகளைத் தடுக்கும் ஐக்கிய அமெரிக்காவின் கொள்கைகளில் குறைபாடுகள். காணப்பட்டன என்பதை சிரியா, சூடான், இலங்கை போன்ற நாடுகளில் நடைபெற்ற மக்கள் மற்றும் இனப்படுகொலைகள் எடுத்துக்காட்டின. மக்கள்படுகொலை மற்றும் இனப்படுகொலைகளைச் செய்யும் குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டுத் தண்டிக்கப் படுவதன் மூலமே எதிர்காலத்தில் இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கும், சமாதானத்தை உருவாக்குவதற்கும் இதன் மூலம் நீதியான உலகசமுதாயத்தினை உருவாக்குவதற்குமான சூழல் உருவாக முடியும். யுத்தக் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கும், விசாரணை செய்வதற்கும் சர்வதேச சமூகம் தயாராவதற்கு இன்னமும் எவ்வளவு காலம் செல்லும் என்பதை அல்லது இன்னமும் எத்தனை தடைகளைத் தாண்டிச் சர்வதேச சமூகம் முன்னேற வேண்டும் என்பதை சரியாக கணிப்பிட வேண்டிய தேவை உருவாகியுள்ளது. ஏனெனில் மக்கள் படுகொலைகள் மீண்டும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஆயினும் அண்மைக்காலங்களில் மக்கள் படுகொலைகள், இனப்படுகொலைகளைச் செய்கின்ற குற்றவாளிகளை நீதியின் முன்நிறுத்தி பொறுப்புக்கூறவைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிராந்திய தீர்ப்புமன்றம், உண்மைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுக்கள் போன்ற பொறிமுறைகள் சர்வதேச சமூகம் உருவாக்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. 2002ஆம் ஆண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டதுடன் இந் நீதிமன்றம் யுத்தக்குற்றம், மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம் இனப்படுகொலை போன்றவற்றினை விசாரிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டது (International Criminal Court, 2002). சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கங்கோ, சூடான், லிபியா, கென்யா, உகண்டா, போன்ற நாடுகளில் நடைபெற்ற யுத்தக்குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் மீது விசாரணைகளை மேற்கொண்டு வந்துள்ளது. இவ்வகையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான சின்னமாகக் கருதப்படுகிறது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பாதிக்கப்பட்ட மக்கள் சர்வதேச நீதியைப் பெற்றுக் கொள்வதற்காக உருவாக்கப்படுவதற்கு முன்னர் சர்வதேச நீதிமன்றம், தீர்ப்புமன்றம் என்பன உருவாக்கப்பட்டு குறிப்பிட்ட நாடு ஒன்றினுள் சர்வதேச மனிதாபிமானச்சட்டம் மிகவும் கொடூரமாக மீறப்பட்டமை அல்லது இனப்படுகொலை செய்வதாகக் குற்றச் சாட்டிற்குள்ளாக்கப்பட்டவர்கள் மீது விசாரணை நடாத்த முயற்சித்தது. இதற்கமைய கம்போடியா, யுகோஸ்லேவேக்கியா, ருவென்டா போன்ற நாடுகளில் நடைபெற்ற மனிதப்படுகொலைகளை விசாரணை செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபை பல நீதிமன்றங்களையும் தீர்ப்புமன்றங்களையும் உருவாக்கி விசாரணை செய்துள்ளமை கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். லைபீரியா, குவாட்டமாலா, ஆர்ஜன்ரீனா, எல்சல்வடோர், தென்ஆபிரிக்கா உட்பட முப்பது நாடுகளில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் தேசிய நல்லிணக்கத்திற்கு பங்களிப்புச் செய்ய முடிந்ததுடன் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்பத்தினருக்கு உதவியும் செய்ய

முடிந்துள்ளது. மனிதப்படு கொலைகள் தொடர்பான உண்மைகளைத் தேடுவதற்குத் தேவையான தகவல்களை வழங்குவதற்கான தகவல் வங்கியாகவும் இது செயற்படுகின்றது.

**பாதுகாப்பிற்குப் பொறுப்பு**

1990கள் வரை உலக சமாதானத்தினை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபை அடைந்த தோல்விக்குப் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளராக கோபி அனான் பதவியேற்றார். ஐக்கிய அமெரிக்காவின் பூகோள மோதல்களில் தலையீடு செய்யும் அணுகுமுறையுடன் (Interventionist approach to global conflicts) மிகவும் நெருக்கமாக இருந்து கோபி அனான் பணியாற்றினார். கோபி அனான் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் "பாதுகாப்பிற்குப் பொறுப்பு" (Responsibility to Protect - R2P) என்னும் கோட்பாடு உருவாக்கப்பட்டது. (R2P - A Short History, 2015) இக் கோட்பாட்டின் தீவிரத்தன்மை 2005ஆம் ஆண்டு குறைவடைந்ததாயினும் இதன் பின்னர் ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் அறுபதாவது வருடாந்த பொதுச் கூட்டத்தில் அங்கத்துவ நாடுகள் மற்றும் சர்வதேச சமூகம் என்பன கூட்டாக இணைந்து உலக மக்களின் "பாதுகாப்பிற்குப் பொறுப்பு" என்ற கொள்கையினை ஏற்றுக்கொண்டன.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு, யுத்தக்குற்றங்கள், இனப்படுகொலை போன்றவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு ஒவ்வொரு அரசிற்கும் உள்ளது. இவ்வகையில் "நாங்கள் இந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொள்கின்றோம். இதன் படி நாங்கள் செயற்படுவோம்'' (Jum Garrigues 2007) என இக் கொள்கையினை ஏற்றுக்கொண்ட நாடுகள் உறுதியெடுத்துள்ளன. அதேநேரம் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள், இனச்சுத்திகரிப்பு, யுத்தக்குற்றங்கள், இனப்படுகொலை போன்றவற்றிலிருந்து தனது மக்களைப் பாதுகாக்கின்ற (பொறுப்பு ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கு ஊடாக சர்வதேச சமூகத்திற்கும் உள்ளது. மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் , இனச்சுத்தி கரிப்பு, யுத்தக்குற்றங்கள் இனப்படுகொலை போன்றவற்றிலிருந்து தனது மக்களைப் பாதுகாக்கின்ற) பொறுப்பிலிருந்து ஒரு அரசு தோல்வியடைந்தால் குறிப்பிட்ட நேரத்தில் நிகழும் முடிவான படுகொலையிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் அத்தியாயம் vii ஏற்ப பாதுகாப்புச் சபைக்கு ஊடாக சர்வதேச சமூகம் கூட்டாகச் செயற்பட முடியும்.

பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற கொள்கையினடிப்படையில் சர்வதேச சமூகம் பின்வரும் மூன்று விடயங்களுக்குப் பொறுப்பானதாகும். (The Responsibitlity in Protect, 2001)

1. தடுத்து நிறுத்தும் பொறுப்பு
2. எதிர்வினைப் பொறுப்பு
3. இழந்த நம்பிக்கையினை மீண்டும் பெறுவதற்குப் பொறுப்பு

பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற கொள்கையின் படி மக்கள் படுகொலையினைத் தடுப்பதற்குச் சர்வதேச சமூகம் முதன்மையான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மனிதப்படுகொலை அல்லது இனப்படுகொலை நிகழ்வதற்கு முன்னர் தடுப்பது அல்லது மோதல் மற்றும் தகராறினைத் தடுப்பதற்கான உத்தரவாதத்தினை வழங்குவதற்கு நேரத்தையும், வளத்தையும் ஒதுக்க வேண்டியதும், சர்வதேச சமூகத்தின் அதற்கான எதிர்வினைச் செயற்பாட்டினைச் செய்யும் பொறுப்புள்ளது. மக்கள் படு கொலைகள் எழுச்சியடையும் போது சர்வதேச சமூகம் அதனைத் தடுப்பதற்கு சாத்தியமான தலையீட்டினையும் நிர்ப்பந்தத்தினையும் செய்ய வேண்டும். பாதுகாப்பிற்கு பொறுப்பு என்ற கொள்கை சிலநேரங்களில் இராணுவத் தலையீடு அவசியமானது என்பதை அங்கீகரிக் கின்றது. (The Responsibility to protect, 2001) ஆனால் தற்பாதுகாப்புத் தேவையுள்ளது எனக் கருதப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே இராணுவ தலையீடு செய்ய முடியும். இராணுவத் தலையீடு நிகழ்ந்தால் தலையீட்டிற்குப் பின்னரான நல்லிணக்கம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கு சர்வதேச சமூகம் பொறுப்பானதாகும். (The Responsibility to protect, 2001). [ஆனால் தற்பாதுகாப்புத் தேவையுள்ளது என கருதப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே இராணுவத் தலையீடு நிகழ்ந்தால், தலையீட்டிற்குப் பின்னரான நல் லிணக்கம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்கு சர்வதேச சமூகம் பொறுப்பானதாகும் (The Responsibility to protect 2001)]

**செயற்பாட்டுத் தோல்வி**

இருபத்தியோராம் நூற்றாண்டில் முதலாவது இனப்படுகொலை 2003 ஆம் ஆண்டு சூடான் நாட்டின் மேற்குப்பகுதியில் உள்ள டர்பார் (Darfur) பிரதேசத்தில் ஆரம்பமாகியது. கொபி அனான் காலத்தில் டர்பார் மோதல் உட்பட ஆபிரிக்காவில் நடைபெற்ற பல மோதல்கள் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்காவின் தலையீடு, கொசோவோ மோதல், 2011ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஐக்கிய அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்களின் மீது அல்கொய் தா இயக்கம் நடாத்திய தாக்குதல் போன்ற நிகழ்வுகளால் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் நிலைநிறுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபை பல சவால்களை எதிர்கொண்டது.

ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளராக இருந்த அனுபவத்தினடிப்படையில் கோபி அனான் "தலையீடு: யுத்தம் மற்றும் சமாதானத்தில் ஒரு வாழ்க்கை" (Interventions: A Life in War and Peace) என்னும் தலைப்பில் எழுதிய சுயசரிதையில் "பனிப்போரின் பின்னர் உலக சமாதானத்தினை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபைக்கு இருந்த பிரச்சினைகள் மற்றும் தோல்விகளுக்கும் சில விடைகளைக் கூறலாம்" (Jonathan Powell, 2012) எனக் கூறுகின்றார். ஆயினும் இதனை ஜோனாதன் பவல் (Jonathan powell) 'கொபி அனானின் சுயசரிதை தேவையற்ற சுயநியாயத்தைத் தருகிறது. மோதலைத் தவிர்ப்பதற்காக பிற நாடுகளில் தலையிடுவதில் மட்டும் சார்ந்திருக்க முடியாது என்ற யதார்த்தத்தைக் கொபி அனான் மிகவும் காலம் தாழ்த்திப் புரிந்து கொண்டிருக்கக் கூடும்" (Jonanthan Powell, 2012) எனக் கேலி செய்கின்றார்.

இதன்பின்னர் 'குறைந்த வாக்குறுதி கூடிய சேவை' என்ற தூரநோக்கினை முன்நிறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளராக பான் - கீ - முன் கடமையாற்றத் தொடங்கினார். ஆனால் பாதுகாப்பிற்கான பொறுப்பினை பொதுச்செயலாளராக இல்லாமல் சாதாரண தொழிலதிபர் போன்று செயற்படுவதாகவும் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு கீழ்ப்படிந்து செயற்படுவதற்காக "ஆரவாரம் எதுவுமில்லாது செயற்படுதல்" என்ற தந்திரோபாயத்தைக் கையாளுகின்றார் எனவும் விமர்சிக்கப்பட்டார். ஆயினும், இவ் விமர்சனங்களைப் பொறுப்பெடுத்துக் கொண்டு யுத்தங்களின் போது பொதுமக்கள் படுகொலை தொடர்பான குற்றங்களைத் தடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்குள் நிறுவன ரீதியான மாற்றங்களைச் செய்து, பாதுகாப்பிற்கான பொறுப்பினை நிறைவேற்ற விசேட ஆலோசகர் ஒருவரை நியமித்திருந்தார். ஆயினும் 2009ஆம் ஆண்டு இவர் கையளித்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற தத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான- உறுதியான கருத்துத் தெளிவினை உருவாக்க பான் - கீ - முன் தவறிவிட்டார் என்ற குற்றச்சாட்டும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளது. ஜேர்மனியில் (1945) நிகழ்ந்த மக்கள் படுகொலைகளைத் தொடர்ந்து ஐக்கிய அமெரிக்கா உட்பட உலகத் தலைவர்கள் "மீண்டும் நிகழாது" என்ற பிரகடனத்தை வெளியிட்டார்கள். ஆனால் இதன் பின்னர் கம்போடியா பொஸ்னிய, ருவென்டா மற்றும் சூடான் (டர்பார் - இனப்படுகொலை இலங்கை போன்ற நாடுகளில் பல இலட்சம் மக்கள் தமது உயிரையும், குடும்பத்தையும் இழந்துள்ளனர். தாய் நாட்டை விட்டு துரத்தப்பட்டுள்ளனர். (Genocide in Darfur) இதன் பின்னர் மக்கள் படுகொலை மற்றும் இனப்படுகொலைகளைத் தடுப்பதற்கும், அதனைத் தடுப்பதற்குரிய உத்தரவாதத்தினையும், ஐக்கிய அமெரிக்கா தருவதாக 2012ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்திருந்தார். (IC 'Refd' 2012) ஆயினும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்ட இவ் அறிவிப்பு அதன் பின்னர் நிகழ்ந்த மனிதப்படுகொலைகளைத் தடுப்பதில் தோல்வி கண்டுவிட்டது.

**இலங்கையின் பாதுகாப்பு**

இலங்கையில் இனமோதல் இலங்கைக்கேயுரிய தனித்துவத்தினைக் கொண்டதாகும். யுத்தம் நிகழும் போது சில எண்ணிக்கையிலான பொது மக்கள் மரணிப்பது தவிர்க்க முடியாதது. எனவே ஏனைய நாடுகள் இவ்விவகாரத்தில் தலையீடு செய்வது அவசியமற்றது என மேற்குத் தேச வல்லரசுகள் கருதியிருக்கக்கூடும். ஆயினும் வன்னியில் நிகழ்ந்த

யுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை முழுமையாக அழிப்பதற்குப் பாதுகாப்புச்சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளின் சம்மதத்துடன் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட இறுதிவரைக்குமான யுத்தமாகவும் கருதமுடியும். நோர்வேயின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தின் மூலம் கிடைத்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ மற்றும் அரசியல் பலத்தினை அழித்து விட வேண்டும் என்ற முடிவினைப் பல வாதப்பிரதிவாதத்திற்கும் மத்தியில் ஏகோபித்த முடிவாக மேற்கு தேச நாடுகள் எடுத்திருக்க வாய்ப்புள்ளது. ஆயினும் இலங்கை இராணுவம் தேவையானளவு விகிதாசாரத்திலேயே தனது படைகளை வன்னி யுத்த முனையில் நிறுத்தி வைக்கும் என்றும் இதனால் சகித்துக்கொள்ளக் கூடியளவிற்கே பொதுமக்கள் இழப்பு ஏற்படும் என்றும் சர்வதேச சமூகம் எதிர்பார்த்திருக்கலாம். ஆயினும் இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது பொதுமக்கள்பாதுகாப்பு, சமாதானம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவில்லை. பதிலாக பாதுகாப்புச் சபையிலுள்ள ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளின் கைப்பொம்மையாகவே ஐக்கிய நாடுகள் பொதுச்சபை செயற்பட்டது. (IC 'Rtol'2012)

ஆயினும் சார்ல்ஸ் பெட்றி உள்ளக அறிக்கை தொடர்பாகப் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெளியிட்ட இரகசியங்களில் சில ஐக்கிய நாடுகள் சபை அங்கத்தவர்களும் பொதுச் செயலாளரும் உறுதியான சில செயற்பாடுகளைச் செய்திருந்ததாகக் கூறியுள்ளது. இதனடிப்படையில் பார்க்கின்ற போது பான்கீ-மூனின் தலைமைத்துவம் வன்னியில் நடந்த மனிதாபிமான தகராறுகளை எதிர்கொள்வதில் பாரிய சவால்களை எதிர்கொண்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. 2009ஆம் ஆண்டு வன்னியில் நடைபெற்ற யுத்தத்தின் இறுதிக்காலப்பகுதியில் நிகழ்ந்த மனிதப் படுகொலைகளை ஐக்கிய நாடுகள் சபை தடுக்க முடியாமல் போனமை தொடர்பாகப் பரிசீலனை செய்வதற்கு பொதுச் செயலாளர் பான் -கீ - மூனினால் நியமிக்கப்பட்ட சார்ல்ஸ் பெட்றி வழங்கிய செவ்வியில் "பனிப்போரின் பின்னர் உலகசமாதானத்தினை உருவாக்குதல், சமாதானத்தைப் பேணுதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்குள்ள சட்டபூர்வ நிலை தொடர்பாக வித்தியாசமானதொரு காட்சி நிலையினையும் வருந்தத்தக்க நிலையினையும் தான் வெளிப்படுத்தியுள்ளேன் (Graund views, 2012) எனத் தெரிவித்துள்ளமை எல்லோரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

சார்ல்ஸ் பெட்றி தனது அறிக்கையின் இறுதிப் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபை பொறுப்புக் கூறவேண்டிய பின்வரும் விடயங்களை வெளிப் படுத்தியுள்ளார். (Internal Review, 2012)

1. யுத்தப் பிரதேசத்தில் அகப்பட்டுக்கொண்ட பொதுமக்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் கொடுத்த குறைவான புள்ளி விபரங்களின் நம்பகத்தன்மையினை உரிய முறையில் ஐக்கிய நாடுகள் சபை மதிப்பீடு செய்யத் தவறி விட்டது.
2. யுத்தப்பிரதேசத்திற்குள் சிக்கிக்கொண்ட பொது மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதைத் தடுக்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட தடைகளைத் தகர்க்க ஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது.
3. தாக்குதல்களின் போது மக்கள் கொல்லப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பெடுக்க வேண்டும் என்ற அறிவுறுத்தலை வழங்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபைத் தலைமைச் செயலகம் விருப்பமற்றிருந்தது.
4. இவ்விடயங்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடனான ஐக்கிய நாடுகள் சபையின் தொடர்பாடல் உறுதியற்றும் திருப்தியற்றும் காணப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை தனது "பாதுகாக்கும் பொறுப்பு" என்ற கொள்கையில் தோல்வியடைந்துள்ளது.

ஐக்கியநாடுகள் சபையின் அங்கத்தவர்களுக்கும் வல்லரசுகளுக்கும் இடையில் இது தொடர்பாக இருந்த உறவினை பெட்றி பின்வருமாறு விபரிக்கின்றார். "இலங்கையின் உள்நாட்டு யுத்தம் தொடர்பாகப் பொறுப்புக் கூறும் சூழலில்

அங்கத்துவ நாடுகள் அறிந்திருக்க வேண்டிய விடயங்களைத் தவிர்த்துவிட்டு, அங்கத்துவ நாடுகள் மகிழ்ச்சியுடன் அறிந்துகொள்ள விருப்பம் கொண்டிருந்த விடயங்களின் செல்வாக்கிற்குட்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் தொனி, நோக்கம், விடயம் என்பன வெளிப்பட்டன (Internal Review, 2012) எனக் கூறுவதன் மூலம் வன்னி யுத்தமுனையில் அகப்பட்டுக் கொண்ட பொதுமக்களின் பாதுகாப்பு. பொதுமக்களின் உரிமைகள், சமாதானம் என்பவற்றில் கவனம் செலுத்த வேண்டிய அங்கத்துவ நாடுகள் அதில் கவனம் செலுத்தாமல் தமிழீழ விடுதலைப்புலிகள் பூரணமாக அழிக்கப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியை கேட்பதற்கே ஆவலாக இருந்துள்ளன (Internal Review, 2012) என்பதை பெட்றி மறைமுகமாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

அதேநேரம் இலங்கையில் மிகவும் கொடூரமான மனிதப்படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இது தொடர்பாக விவாதிப்பதற்கும் தடுப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபை தனது பொதுச்சபையினைஅல்லது பாதுகாப்புச்சபையினை அல்லது மனித உரிமைகள் பேரவையினை உடனடியாகக் கூட்டவில்லை, என பெட்றி குற்றம் சாட்டியுள்ளார் (Internal Review, 2012) உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து பலவருடங்களின் பின்னர் பெட்றி அறிக்கை இலங்கையில் நடைபெற்ற சம்பவத்திற்கு போதியளவு பொறுப்புக்கூறுவதற்குஐக்கிய நாடுகள் சபை தவறிவிட்டது, இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் மீண்டும் நடைபெறாதிருக்க வேண்டும். அவ்வாறான சூழல் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்பட்டு மனிதப்பாதுகாப்பினை ஐக்கிய நாடுகள் சபை மிகவும் உயர்ந்தளவில் வழங்குவதற்கான பொறுப்பினை ஏற்கவேண்டும் (internal Review, 2012) எனக் கேட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் ஆவணங்களில் உள்ள "மனித உரிமைகள்" மற்றும் "பாதுகாப்பிற்குப் பொறுப்பு" போன்ற சுலோகங்கள் வல்லரசுகள் தமது நலன்களுக்காகப் பயன்படுத்தும் சுலோகங்களேயாகும். பெட்றி தனது அறிக்கையின் இறுதிப்பகுதியில் மனித உரிமை மீறல்களைத் தடுத்தல், யுத்தக் குற்றங்களைத் தடுத்தல் போன்ற வற்றிற்கு ஐக்கிய நாடுகள் சபை உத்தரவாதத்தினை வழங்க வேண்டும் எனப் பொதுவாகக் கோருவதற்குப் பதிலாக யுத்தகாலத்தில் ஐக்கிய நாடுகள் சபை மிகவும் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும் (Internal Review 2012) என ஆலோசனை கூறியுள்ளார்.

உள்ளக அறிக்கை தொடர்பாக பான் - கீ - மூன் கருத்துக் கூறும் போது "தவறுகளிலிருந்த பாடம்" கற்போம், எமது பொறுப்பை பலப்படுத்துவோம், எதிர்காலத்திற்காகப் பயனுள்ள வகையிலும் அர்த்தத்துடனும் செயற்படுவோம். எமக்கிருந்த தடைகளை வெல்லுவதற்கு எல்லா வகையான மனித நேயத்துடனும் செயற்படுவது எமது கடமையாகும். பொதுமக்கள் பாதுகாக்கப்படுவதை உத்தரவாதப்படுத்துவது முக்கியமானது என்பதை இருபது மாதத்திற்கு மேலாக ஜனாதிபதி பசார் அல்அசாட்டிற்கு (Bashar al Assad) எதிராக சிரியாவில் நிகழும் உள்நாட்டுப் போர் ஞாபகப்படுத்துகின்றது. இப்போரில் ஏறக்குறைய இருபதாயிரம் பொதுமக்கள் இதுவரை கொல்லப்பட்டுள்ளனர். எதிர்காலதனது செயற்பாட்டிற்கு ஆலோசனை கூறுவதற்கும் நிபுணர்கள் குழுவின் சிபார்சுகளைக் கருத்தில் கொள்வதற்கும் சிரேஷ்ட மட்டத்திலான குழுவொன்றை தான் உருவாக்கப் போவதாக கூறியுள்ளார். (Reuters, 2012) உள்ளக அறிக்கை பான் - கீ -மூனையோ அல்லது கொழும்பிலும் மற்றும் நியூயோர்க்கிலும் பணியாற்றிய நடுத்தர அதிகாரிகளையோ குற்றம் சாட்டவில்லை இவர்கள் மிகவும் சாதுரியமாக இவ்விடயங்களில் அகப்பட்டுக் கொள்ளாமல் தப்பித்து விட்டனர். உண்மையில் ஐக்கிய அமெரிக்காவினாலும் அதன் நட்பு நாடுகளாலும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற பெயரில் நடாத்தப்படும் யுத்தங்களுக்கு ஆதரவாக இருப்பதே ஐக்கிய நாடுகள் சபையின் இலக்காக உள்ளது.

வன்னியில் நிகழ்ந்த மனிதப்படுகொலைகளைத் தடுக்க முடியாமல் போனமை ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு ரீதியான தோல்வி (systemic failure) என உள்ளக அறிக்கை கூறுகின்றது (UN News Centre, 2012). இவ்வாறு உள்ள அறிக்கை கூறுவது ஒன்றும் ஆச்சரியமானதொன்றல்ல இதேபோன்றதொரு அவதானமே 1994 ஆம் ஆண்டுருவேண்டா இனப்படுகொலை தொடர்பாக

ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடு பற்றிய சுதந்திர விசாரணை என்னும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் "ருவெண்டாவில் நிகழ்ந்த இனப்படுகொலைகளை தடுக்கவும் நிறுத்தவும் முடியாமல் போனமையின் மூலம் ஐக்கிய நாடுகள் சபை அமைப்பு ரீதியாக முழுமையாகத் தோல்வியடைந்துள்ளது" (Independant inquiry into the action of the United Nations during the 1997 genocide or rwanda, 1999) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை சமாதான செயற்பாடுக் குழு அறிக்கை இதேமாதிரியானதொரு அறிக்கையினை வெளியிட்டிருந்தது. இதில் "பாதுகாப்புச்சபைக்கு எது தெரிய வேண்டும் எதனை பாதுகாப்புச் சபை கருத்தில் கொள்ள வேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் சபை தலைமைச் செயலகம் தெரிவிக்க வேண்டும்" (Report of the Panel on United Nations Peace of Operations, 2000) எனக் கேட்டுள்ளது. எனவே இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிநாட்களில் நிகழ்ந்த இனப்படுகொலைகள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துகின்ற அங்கத்துவ நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை பொறுப்பான பதிலைக் கூறுவதாக இருந்தால், அங்கத்துவ நாடுகள் எதனைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்? அங்கத்துவ நாடுகள் எதனை மனதில் நிலைநிறுத்தி இவ்விடயங்களை செவிமடுக்க வேண்டும்? போன்ற வினாக்களின் செல்வாக்கிற்கு உட்பட்டே பதில் கூறவேண்டியிருந்தது.

மிகவும்பரிட்சயமானவழிமுறையாகிய அறிக்கை தயாரித்தல். அதன்மூலமாகப் பாடங்களைக் கற்றுக் கொள்ளுதல் என்பதனூடாக ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் அடைந்த தோல்விக்கு நியாயம் கூறுகின்றது. இவ்வகையில் மிகவும் பரிட்சியமான வகையில், வழக்கமான தொனியில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் தான் அடைந்த தோல்விக்கான நியாயங்களை உள்ளக அறிக்கை மூலம் முன்வைத்துள்ளது. கடந்தகாலத் தோல்விகள் போன்றே விசாரணைகள் மூலம் உண்மைகளைக் கண்டு பிடித்தல் மீண்டும் நடைபெற்றுள்ளது. எனவே உள்ளக அறிக்கை என்ற பெயரில் பழையவிடயங்களைப் புதிய பொதியிலிட்டுத் தந்துள்ளார்கள் எனக் கூறலாம். மேலும் யுத்தக் குற்றம். மனிதாபிமானத் திற்கு எதிரான குற்றங்கள் போன்றவற்றை தடுக்காமல் விட்டதன் மூலம் இலங்கையில் பொதுமக்களின் பாதுகாப்பிற்கு பொறுப்பு என்ற கடமையிலிருந்து ஐக்கிய நாடுகள் சபை விலகிவிட்டது. சர்வதேசளவில் பொதுமக்கள் பாதுகாப்பிற்கு எதிரான குற்றங்கள் தடுக்கப்படுதல் வேண்டும். இதற்குப் பொருத்தமான வகையில் சர்வதேச சமூகம் தனது அரசியல் அபிலாசைகளை உருவாக்கிப் பலப்படுத்த வேண்டும் அப்போதுதான் உலக சமாதானத்தை ஏற்படுத்த முடியும்.

**இன்றைய தேவை**

உலகில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைவதற்கு மனித வளப் பற்றாக்குறையும், நீண்டகாலமாக நீடித்து வரும் நிதிப்பற்றாக்குறையுமே காரணம் எனக் கூறுவதில் எவ்வித உண்மையும் இருக்கமுடியாது. பதிலாக குறிப்பிட்ட மோதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை வகிக்க வேண்டிய வகிபாகம் தொடர்பாகத் தீர்மானிக்கும் உண்மையான அதிகார மையம் பாதுகாப்புச் சபையிலும் அதில் அங்கத்துவம் வகிக்கும் நிரந்தர ஐந்து நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள ரத்து அதிகாரத்திலும் (Veto Power) தான் நிலை கொண்டுள்ளது. பாதுகாப்புச் சபைக்கு குறிப்பிட்ட மோதல் தொடர்பாக இருக்கும் அரசியல் நலனே குறிப்பிட்ட மோதலைத் தொடர விடுவதா அல்லது முடிவுக்குக் கொண்டு வருவதா என்பதைத் தீர்மாமனிக்கின்றது. பாதுகாப்புச் சபையினால் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கு அதிகாரபூர்வமாக வழங்கப்பட்ட எல்லைக்குள் இருந்து கொண்டே பொதுச் செயலாளரும் அவருடன் இருக்கும் உத்தி யோகத்தர்களும் பணி யாற்றுகின்றார்கள்.

பாதுகாப்புச் சபையும் அதற்கு இருக்கும் தீர்மானிக்கும் அதிகாரமும் ஒத்திசைவில்லாததும். தேர்ந்தெடுக்கப்பட்டதுமான பாதையூடாக பூகோள மோதல்களை ஐக்கிய நாடுகள் சபை முகாமை செய்வதற்குத் தூண்டுகின்றது. இந்நிலையில் மனித உரிமைகளைப் பாதுகாத்தல், உலக சமாதானம் என்ற இலக்கு நோக்கி ஐக்கிய நாடுகள் சபையும், ஏனைய சர்வதேச நிறுவனங்களும் முன்நோக்கி நகர வேண்டும் என எதிர்பார்ப்பது அர்த்தமற்றதாகும். ஐக்கிய நாடுகள் சபையும், பாதுகாப்புச் சபையும்

மறுசீரமைக்கப்படாத வரையில் ஐந்து நிரந்தர அங்கத்துவ நாடுகளினது நலன்கள் மற்றும் சர்வதேச அரசியல் யதார்த்தம் என்ற வட்டத்திற்குள் ஐக்கிய நாடுகள் சபையின் தோல்வி தொடர்ந்து நீடித்தே செல்லும். இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அல்லது டர்பார் போன்ற மனதாபிமான தகராறுகளைச் சரியாகக் கையாளும் என எதிர் பார்க்க முடியாது. "பாதுகாப்பிற்குப் பொறுப்பு" என்ற எண்ணக்கரு இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்காலப் பகுதியில் சம்பிரதாயத்திற்கு அவ்வப்போது கூறப்பட்டாலும், அதனால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. பொதுமக்கள் பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற எண்ணக்கரு தொடர்பாக அங்கத்துவ நாடுகளிடமும் பொதுச் செயலாளரிடமும் வேறுபட்ட கருத்தும், அறிவுமே இருந்துள்ளது. இதனால் பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்பதன் பெறுமதியினை உணர்ந்து அதனை வலியுறுத்திக் கூறுகின்ற ஆற்றல் இவர்களிடம் இல்லாமல் போய்விட்டது. எனவே பாதுகாப்பிற்குப் பொறுப்பு என்ற எண்ணக்கரு ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளை பலப்படுத்துவதற்குப் பதிலாக மேலும் பலவீனப்படுத்தியுள்ளது.

பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகளி லிருந்து சர்வதேச மனிதாபிமானச்சட்டம். மனித உரிமை கள் சட்டம் போன்றவற்றைப் பயன்படுத்திப் பொறுப்புடன் பொதுமக்களைப் பாதுகாப்பது என்பது ஐக்கிய நாடுகள் சபையின் தகராற்று முகாமைத்துவக் கட்டமைப்பில் காணப்படும் ஒத்திசைவற்ற செயற்பாட்டால் தோல்வியடைந்து வருகின்றது. ஆயுத மோதல்கள் நிகழும் இடங்களிற்கு அரசியல் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தொடர்பான அறிவுள்ள உத்தியோகத்தர்கள் தேவையானளவிற்கு அனுப்பப்படுவதில்லை எனப் பொதுவாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. அதேநேரம் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டிற்கு அங்கத்துவ நாடுகளிடமிருந்து போதியளவு அரசியல் ஆதரவு கிடைப்பதில்லை. அதனை உருவாக்குவதற்கு பொதுச்செயலாளர் அலுவலகம் எடுக்கும் முயற்சியும் திருப்தியானதாக இல்லை எனவும் கூறப் படுகின்றது. சர்வதேச மனிதாபிமானச்சட்டம், மற்றும் மனித உரிமைகள் சட்டம் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கு அங்கத்துவ நாடுகள் காட்டும் அக்கறை குறைவடைந்து விட்டதனால் இவைகள் பயனற்றவைகளாக மாறிவிட்டன. ஐக்கிய நாடுகள் சபை தலைமைச் செயலகத்திற்கும் பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கும் இடையில் சர்வதேச மனிதாபிமானச்சட்டம் மற்றும் மனித உரிமைகள் சட்டம் போன்றவற்றைக் கண்காணிப்பது மற்றும் பாதுகாப்பது தொடர்பாகப் பொருத்தமான இணைப்பு இல்லை எனவும் கூறப்படுகிறது.

பாதுகாப்புச் சபையினால் ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகத்தர்கள் தவறாக வழிநடாத் தப்படுகின்றனர். உலகில் கொடுமையான மனிதப் படுகொலைகள் நிகழும் போது ஐக்கிய நாடுகள் சபை எவ்வாறு செயலாற்ற வேண்டும் என்பது தொடர்பாகப் பாதுகாப்பு சபையே தீர்மானிக்கின்றது. சராசரி மனித உணர்வுகள் பாதுகாப்பு சபையினால் கருத்தில் கொள்ளப்படுவதில்லை. பதிலாகப் பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளின் உச்ச நலனே கருத்தில் கொள்ளப்படுகின்றது. இதனால் ஐக்கிய நாடுக்கள் சபை திரும்பத் திரும்ப தோல்வியடைகின்றது. இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஏற் பட்ட தோல்வி ஐக்கிய நாடுகள் சபையின் இரத்தம் தோய்ந்த வரலாற்றில் ஏற்பட்ட முதல் தோல்வியுமல்ல, இறுதித் தோல்வியுமல்ல. புதிய உலக ஒழுங்கிற்கு ஏற்றவகையில் ஐக்கிய நாடுகள் சபை மறு சீரமைக்கப்படவில்லை. குறிப்பாக பாதுகாப்புச்சபை இதுவரை மறுசீரமைக்கப்பட வில்லை. இதனால் ஐக்கிய நாடுகள் சபை கொடுமையான மனிதப் படுகொலைகள் நிகழும் போது அதனைத் தடுக்க முடியாமல் தடுமாறு கின்றது.

இனப்படுகொலைக் குற்றவாளிகள், மக்கள் படுகொலைக் குற்றவாளிகள் அரசாங்கத்தின் ஆதரவில்லாமல் வெற்றிகரமாக இவற்றினை செய்ய முடியாது. இக்குற்றவாளிகள் இதற்கான பணத்தினை சேமித்துக் கொள்வதற்காக நிதி வலைப் பின்னல்களை உருவாக்கியுள்ளார்கள். மக்கள் படுகொலைகளுக்கு பயன்படுத்தும் நிதியினை வழங்கும் அரசாங்கங்கள், நிறு வனங்கள் இதற்காக வெட்கப்பட வேண்டும்.

மக்கள் படுகொலைகளுக்குப் பயன்படும் நிதிகளுக்கான வங்கிக் கணக்குகளின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கும் உலக நாடுகள் முன்வரவேண்டும். இனச்சுத்திகரிப்பு போன்ற மனிதப்படுகொலைகளிலிருந்து தனது நாட்டு மக்களைப் பாதுக்காக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வோரு நாட்டிற்கும் உள்ளது. சட்டத்திறமையின்மையால் மனிதப்படு கொலைகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதில் அரசுகள் தோல்வியடையுமானால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பு சர்வதேசசமூகத்திற்குரியதாகும். இக்கொள்கையானது ஐக்கிய நாடுகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர், பாதுகாப்பிற்கு பொறுப்பு என்ற கொள்கையாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே கொடுங்கோன்மையான ஆட்சியிலிருந்து சிறுவர்கள், பெண்கள் உட்பட பல இலட்சம் மக்களைப் பாதுகாக்க வேண்டி பொறுப்பு மிக்க தலைவர்களை தெரிவு செய்ய வேண்டிய கட்டாயதேவை உருவாகியுள்ளது. ஏனெனில் எல்லோரும் ஒன்றுபட்டு மக்கள் படுகொலைகளைத் தடுத்து, இனப்படு கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மக்கள் படுகொலைகளைத் தடுத்தல் என்பது முதல்நிலை அரசியல் விருப்பமாக மாறவேண்டும். மக்கள் படுகொலைகள், இனப்படுகொலைகள் போன்றவற்றைத் தடுப்பதற்கான சரியான தெரிவினை செய்யக்கூடிய தலைவர்களை உருவாக்குவது தொடர்பான கலந்துரையாடலும், செயற்பாடுகளும் அவசியமாக்கப்படுதல் வேண்டும்.

**உசாத்துணை**


1. Anapayan, 2012, Ground views. **0n Critiquing of UN Failures: Missing the Wood for the Trees.** Available at http://groundviews.org/2012/11/15/ on critiquing of un Failures missing the Wood for the trees.

2. **An Agenda for Peace Preventive diplomacy, peace - making and peace keeping,** Report of the secretary - General, pursuant to the statement adopted by summit Meeting of the security Council on 31 January 1992.Available at. http/www.unrol org/files/A 47 277pdf

3. **Convention on the Prevention and Punishment of the Crime of Genocide,** Adopted by Resolution 260 (III) A of the United Nations General Assembly on 9 December 1948. Available at http/ www.hrweb.org/legal/genocide.html

4. Gareth Evans and Mohamad sahnoun.2001, **The Responsibility to protect,** Report of the international Commission on Intervention and state Sovereignty. International Development Research Centre, Canada, Available at http//responsibility to protect org/ ICISS%20Report pdi

5. Darfur Genocide. 2003 - present. **World Without Genocide - 2013,** Available at http/world Without genocide. org/ wp  content / uploads/ 2010/01/Darfur  - Genocide. World Without Genocide.Pdf

6. **Genocide in Darfur?** The United Human Rights Council,Available at http//www.unitehumanrights.org/genocide/genocide in - sudan - htm

7. General Assemble Security Council 21 August 2000, Report of the panel on United Nations peace Operations, A/55/305 S/2000/809, Available at http/www.un.org/en/ga/search/view doc.asp?symbol = A/55/305

8. James P.Finkel Atrocity Prevention at the Crussroads : Assessing the President's Atrocity Prevention Board after Two Years centre for the Prevention of Genocide Series of Occasional Papers, No 2/ septemper 2014, Available at. http/www.ushmm.org/in/pdfs/20140904- linked - atrocity - prevention - report . Pdf

9. Jonathan Powell 2012 Kofi Annan has nothing to apologise for New statementAvailable at http/ www. newstatament com/ politics/ 2012/10/10/kofi - annan has - nothing apologise

10. Juan Garrigues, 2007 The responsibility to protect from an ethical principal to an effective poliey, FRIDE'S peace/ security and Human Right Programme .Availableat http/ www.responsibility toprotect arg/files/responsibilidad proteger.pdf

11. Report of the Secretary - General's Internal Review panel on United Nations Action in Srilanka. November. 2012. Available at http/ www. on. org/ News /dh/ infocus/ srilanka/ the internal Review Panel report on srilanka.pdf

12. Report ot the Independant inquiry into the actions of the Untited Natrions during the 1994 genocide in Rwanda, Decamber 15, 1999, Available at http/www.seurity council report org/atf/sl%/7B5BCF9B - 6D27 - IE9C 8CD3 CE6E4FF961F9% 7D/Poc% 20S199991257pdf

13. Reuters, 2012 U.N.failed gravely in srilanka - internal review pancl. Available at http/uk.reuters.com/ article/ 2012/11/15/lk - srilanka un idUKBRI 8ADJ920121115

14. Rome Statute of the International Criminal Court, Text of the Rome Statute Circulated as document A,CONF.183,9 of 17 July 1998 and corrected by process - verbaux of 10 November 1998, 12 july 1999, 30 November 1999, 8 may 2000, 17 January 2001 and 16 January 2002 The Statue entered into force on 1 July 2002 Available at http/www.jee.nr,rdonlyres,ea9ac117 - 5752 - 1184 - he94 - oa655eb 16,0,rome statue english pdf

15. R2P - A Short History, UNRIC provides information on UN activities to the countries of the region, United Nations Regional Information Centre for Western Europe. Available at http/www.unrie.org/ en/ga/search/view/doc?sympolS/RES/1674 (2006)

16. Security Council Resolution 1674 (2006) Adopted by the Security Council at its 5430th meeting, on 28 April 2006, Available at http/www.on.org/en/ga/searsh/view.doc asp?sympol- S/RES/1674(2006)

17. Security Council Resolution 1820 (2008)Adopted by the Security Council at its 5916th meeting on 19 June 2008, Available at http/www.Security/ Council/ Reort. org, atf/cf%7B65BFCl CE9B-6D27 - iE9C - 8CDJ- CF6E4FF96EF9% 7D/CAC% 20S20RES% 201820.pdf

18. Shocking report details the UNS failure protect the people of srilanka. November 16 2012. The International Coalition for the Responsibility to protect (ICR to p) , Available at http//icrtoblog. org/2012/11/16/ shocking report details the uns failure - to - protect - the - Ãole/of/srilanka/

19. UNNEWS Centre . 2012. Following report on activities in Srilanka War. Ban determined to strengthen UN responses to crises, Available at http/www.un .org/apps/news/story.asp?NewsHD - 43496# VMSP 6UIVH

20. United Nations General Assembly, 24 october 2005, 2005 World Summit Outcome, Sixtiethsession Agenda items 46 and 120ï Available at http/ www. un/ en/genocide/sdviser/pdf/World%20Summit%20 Qutercome%201)Ocume nt.Pdf Page = 30

21. U.S Óesident Obama launclies Atrocity Prevention Board 25 April 2012ï The international Coalition for the Responsibility to protect (ICRtop). Available at http//www.responsibility toprotect org/index/ php/compoment/ content/ article/ 352cs topics/ 4137 - us President - obama - launches - alrocity - prevention - board

# சம்பந்தசரணாலயரின் தத்துவவிளக்கமும் ஸ்ரீ காசிவாசிசெந்திநாதையரின் உரைச் சிறப்புக்களும்

பொ. சந்திரசேகரம்

**ஆய்வுச்சுருக்கம்**

*சம்பந்தரின் தாய்மாமன் சம்பந்தசரணாலயரால் எழுதப்பட்ட தத்துவ விளக்கமானது சைவசித்தாந்த விளக்கவிருத்திக்கு இன்றியமையாத நூலாக உள்ளது. இதற்கு யாழ்ப்பாணம் குப்பிளானைச் சேர்ந்த ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் மிக விரிவான உரை எழுதியுள்ளார். இவ்வகையில் இந்நூலும் அதனது உரையும் வடமொழி, தமிழ் மொழி மூலமான சைவசித்தாந்த விளக்கத்தைப் பெறுவதற்கு அவசியமானதாக உள்ளது என்பதுடன் சைவசித்தாந்தப் பேராசிரியர் எனத்தக்க மதுரைச் சிவப்பிரகாசர் உட்பட்ட பல அறிஞர்கள் இந்நூலினை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர். இந்நூலின் ஆசிரியர் பற்றியும், அவரது காலம் பற்றியும் மாறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டுள்ளமையால், இந்நூல் கூறும் பொருள் மரபு பற்றி ஆராய்வதன் ஊடாக நூலாசிரியர் மற்றும் அவரது காலம் பற்றி ஒரு தெளிவான முடிவை அறிவதற்கு ஏதுவாக இருக்கும் என்பது மட்டுமன்றி உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் தரும் கருத்துக்கள் சைவசித்தாந்த மாணவர்களுக்கு சித்தாந்த நுண்பொருள்கள் பற்றி அறிவதற்கு பெரிதும் உதவியாக அமையும் எனக் கருதலாம். இவ்வகையில் தத்துவவிளக்கத்தினையும் அதனது உரையினையும் அடிப்படையாகக் கொண்டு நூலாசிரியர், அவரது காலம், அது கூறும் பொருள் மரபு பற்றிய முக்கிய அம்சங்களையும் விளக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது.*

**திறவுச்சொற்கள் :** தத்துவம், சம்பந்தசரணாலயர், சீர்காழி, சிவாகமம்

**அறிமுகம்**

சைவசித்தாந்த சாஸ்திர வரலாற்றில் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் தலைமையானது என்ற வகையில் சிவஞான போதம் உட்பட்ட பதினான்கு சாஸ்திரங்களையும், மெய்கண்ட சாஸ்திரம் என வழங்குவதோடு, சைவசித்தாந்தத்தின் தோற்றம் பற்றி ஆராயும் சித்தாந்த அறிஞர்கள் மெய்கண்டாரின் சிவ ஞானபோதம் தோன்றுவதற்கு முற்பட்ட காலத்தை சைவசித்தாந்தத்தின் தோற்ற காலம் எனக்கொண்டே விளக்கியுள்ளனர். இதற்குக் காரணம், சைவசித்தாந்த சாஸ்திர வரலாற்றில் முதன் முதலில் சிவஞானபோதமே அளவையியலை அடிப்படையாகக்கொண்டு தர்க்க ரீதியில் சைவ சித்தாந்தத்திற்கு முழுமையான வடிவம் கொடுக்க முற்பட்ட நூல் என்பதுடன், இந்திய மெய்யியலில் சூத்திர இலக்கியங்களை மூலமாகக்கொண்டு வளர்ந்த அறுவகைத் தரிசன மரபுக்குச் சமமாக மெய்கண்டார் சிவஞானபோத சூத்திரத்தை இயற்றி சைவசித்தாந்தத்தை இந்திய மெய்யியல் முழுமைக்குமுரிய விவாதப்பொருளாக்கினார் என்பதாகும். இத்தகைய பின்னணியில் சிவஞான போதத்திற்கு முற்பட்ட ஆகம சாஸ்திரத்தை மூல மாகக்கொண்ட சைவசித்தாந்த மரபு அகில இந்தியா எங்கும் செழிப்பாக இருந்துள்ளமையை தத்துவ விளக்கம், ஞானாமிர்தம் போன்ற தமிழ் நூல்களும், மிருகேந்திரம், மதங்கம், சுவாயம்புவம், பௌஷ்கரம் போன்ற சிவாகமங்களும், சிவாகமங்களின் சார்புநூல்களான தத்துவப்பிரகாசிகை, தத்துவ சங்கிரகம் முதலான அஷ்டப்பிரகரண நூல்களும் சான்றாக விளங்குகின்றன. இந்நூல்கள் சைவசித்தாந் தத்திற்கு மாறான கொள்கைகளை அளவையியல் ரீதியிலும் தர்க்க ரீதியிலும் மறுப்பதில் ஓரளவு வெற்றி பெற்றன. குறிப்பாகப் பௌத்தம், சமணம், உலகாயதம் போன்ற வேதமறுப்புச் சிந்தனை களையும் ஏகான்மவாதம், சாங்கியம் போன்ற வேதச்சிந்தனைகளையும் பூர்வபட்சம் - சித்தாந்தம் என்ற வாத அடிப்படையில் மிகக்கடுமையாக மறுத்திருத்தல் காணலாம். இத்தகைய பின்னணியில் சிவாகமக்கருத்தை மூலமாகக்கொண்டு பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மையை விளக்கும் தமிழ்ச் சாஸ்திர நூல்களில் ஒன்றாக விளங்கும் தத்துவவிளக்கம் என்ற நூல் மெய்கண்ட சாஸ்திரங்களுக்கு முற்பட்ட சைவசித்தாந்த

மரபின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. மேலும் இந்நூலிற்கு யாழ்ப்பாணம் குப்பிளானைச்சேர்ந்தவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் முதன்மை மாணவர்களில் ஒருவருமாகிய ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் மணிப்பிரவாளநடையில் உரை வரைந்துள்ளார். இவ்வுரையானது வடமொழி நூல்களில் இருந்து அதிகமான ஆதாரங்களைத் தருவதுடன் தமிழ் நூல்களையும் மேற்கோளாகத் தருகின்றது.

**ஆய்வு மூலங்களும், ஆய்வு முறையியலும்**

இவ்வாய்வின் முதல்நிலைத்தரவாக சம்பந்த சரணாலயரின் தத்துவவிளக்கமும், ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் இயற்றிய உரையும் பயன்படுகின்றன. இரண்டாம் நிலைத்தரவாக போஜதேவர் எழுதிய "தத்துவப்பிரகாசிகையும்", மு. அருணாசலம் எழுதிய "தமிழிலக்கியவரலாறு - பதினான்காம் நூற்றாண்டும்" பயன்படுத்தப்படுகின்றன. மேலும் இங்கு சம்பந்தசரணலாயர் பற்றி ஆராயும் வரலாற்று ஆய்வு முறையியலும், தத்துவங்கள் பற்றி விளக்கும் விவரண ஆய்வு முறையியலும், தத்துவவிளக்கத்தை ஏனைய சாஸ்திரநூல்களுடன் ஒப்பிட்டு ஆராயும் ஒப்பியலாய்வு முறையும் பயன்படுத்தப்படுகின்றன.

**ஆய்வுப்பிரச்சினை**

இவ்வாய்வில் பல ஆய்வுப்பிரச்சினைகள் உள்ளன. அவற்றுள் ஒன்று தத்துவவிளக்கத்தின் ஆசிரியராக இருவர் கூறப்படுகின்றனர். ஒருவர் கண்ணுடைய வள்ளல். மற்றையவர் சம்பந்த சரணலயர். சம்பந்தசரணாலயர் என்று கூறுபவர் களிலும் அவர் சம்பந்தரின் மாமன் என்று ஒரு சாராரும் சம்பந்தமுனிவனின் மாணவன் என்று மற்றொரு சாராரும் கூறுவர். அவ்வாறே நூல் இயற்றப்பட்ட காலமும் இற்றைக்கு நான்காயிரம் வருடங்களிற்கு முன்னர், கி.பி 7 ஆம் நூற்றாண்டு, கி.பி14 ஆம் நூற்றாண்டு என்ற கருத்துள்ளது. மேலும் தத்துவவிளக்கத்தினைத்தழுவியே வடமொழியில் போஜதேவர் தத்துவப்பிரகாசிகை எழுதினார் என்று ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் கூறியுள்ளார். இவ்வகையான ஆய்வுப்பிரச்சினைகளின் பின்னணி யில் தத்துவவிளக்கம் திருஞானசம்பந்தரின் மாமன் சம்பந்தசரணாலயரால் இயற்றப்பட்டு, முப் பொருள் உண்மையை எடுத்துரைப்பது என்பதை ஆய்வின் கருதுகோளாக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**நூலாசிரியரும் காலமும்**

தத்துவவிளக்க நூலின் ஆசிரியர் சம்பந்த சரணலாயர் என்பதை இந்நூலின் உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர், தமது முன்னுரையில் (உபோற்காதத்தில்) குறித்துள்ளார். மேலும், இந்நூலில் இடம்பெறும் சம்பந்தசரணாலயர் துதியாக வரும் "எம்பந்த பாசமறக் காழிவந்த என் துணைவ" எனத் தொடங்கும் பாடலில் "சம்பந்தசரணாலயர் தன் பாதம்" என வருவதால் சீர்காழியில் அவதரித்த ஸ்ரீ திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய தமிழ்வேதமாகிய தேவாரத்தை எழுதும் பேறுபெற்றவரும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் மாமனாருமாகிய சம்பந்தசரணலாயரே இத் தத்துவவிளக்க நூலின் ஆசிரியர் என்பது புலப்படுத்தப்படுகின்றது. சேக்கிழார் இவரை "அருமுறை சொல் திருப்பதிகம் எழுதும் அன்பர்" (பெரியபுராணம், 2811) எனக்குறித்துள்ளமை காணலாம். மேலும் போதிமங்கை என்ற இடத்தில் புத்தநந்தியின் தலை இடிவிழுந்து அறுமாறு செய்தவரும், அங்குள்ள புத்தசமயத்தவர்களோடு வாதிட்டு சைவசமயமே உண்மைச்சமயம் என நிறுவியவரும் இச்சம்பந்தசரணாலயரே என்பதைச் சேக்கிழார் பெரியபுராணத்தில் "தலையும் மெய்யும் அற்றுவிழ அத்திரவாக்கு அதனால் அன்பர் அறுத்ததுவும்" (பெரியபுராணம், 2813) என்கின்றார்.

மேலும் தமிழிலக்கிய வரலாறு எழுதிய மு.அருணாசலம் சீர்காழி சிற்றம்பல நாடிகளின் மாணாக்கரான சம்பந்த முனிவரிடத்தில் இருந்த பல சீடருள் சம்பந்தசரணாலயர் முக்கிய மாணாக்கர் என்றும், அவரே தத்துவவிளக்கத்தை இயற்றியவர் என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் கி.பி 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரின் தாய்மாமன் சம்பந்தசரணாலயர் வேறு எனவும் அறுதியிட்டு உரைக்கின்றார். எனினும் திருஞான சம்பந்தர் பற்றி தனது பதிகங்களில் புகழ்ந்துரைக்கும் கண்ணுடைய வள்ளல் இந்நூலை எழுதினார் என்பதை மறுத்துரைக்கின்றார். எவ்வாறாயினும் 15 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த

களந்தை ஞானப்பிரகாசபண்டாரம் என்பவர் செய்த சந்தான அகவல் என்ற ஓர் அகவற்பாவில் தத்துவவிளக்கத்தின் 49 ஆவது பாடலான "இல்லாதன பிறந்துள்ளன" என்னும் பாட்டினை எடுத்துக்காட்டி நல்ல சம்பந்தசரணாலயன் உரைத்தனன் என அருளினார்.[2] எனவே சம்பந்த சரணாலயர் தத்துவவிளக்கத்தை எழுதினார் என்பதில் அறிஞர்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. மு.அருணாசலம் சம்பந்தமுனிவனின் மாணவன் சம்பந்தசரணாலயர் தத்துவவிளக்கத்தை அருளினார் என்பதற்குத் தருகின்ற சான்றுகளில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கூறப்படும் சம்பந்தசரணாலயரிடம் கல்விபயின்ற மாணவன் ஒருவர் தான் தத்துவப்பிரகாசப் பதிப்பில் உள்ள சம்பந்தசரணாலயர் துதியாக அமைந்த பாடலை அருளிச் செய்தார்.[3] எனவே கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்த சரணாலயரே தத்துவவிளக்கத்தை அருளினார் என்பர். எனினும் இப்பாடலில் திருநெறி விளக்க முடையார் கி.பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தசரணாலயர் பற்றியோ, அவரின் குருவாகிய சம்பந்த முனிவர் பற்றியோ, அவரின் குருவாகிய சிற்றம்பலநாடி பற்றியோ எதுவும் கூறவில்லை என்பதுடன் திருஞானசம்பந்தரின் மாமனார் சம்பந்தசரணாலயரே தத்துவவிளக்கத்தை அருளினார் என்பதை தெளிவாக குறித்துள்ளார். மேலும், தத்துவவிளக்கப் பாடல்களில் வரும் அகச்சான்றுகளும் நூலாசிரியருக்கும் திரு ஞானசம்பந்தருக்குமான தொடர்பைப் பிரதி பலிப்பதனால் திருஞானசம்பந்தரின் மாமனாராகிய சம்பந்தசரணாலயரே தத்துவவிளக்கம் அருளினார் என்பது தெளிவான முடிவாகின்றது.

அடுத்து, சம்பந்தசரணாலயர் பற்றி அறியப் படுகின்ற முக்கிய செய்திகள்.

01. திருஞானசம்பந்தரின் மாமனாரே திருஞான சம்பந்தர் பாடும் தேவாரங்களை எழுதுபவர்.
02. திருஞானசம்பந்தர் அருளிய "புத்தர் சமண் கழுக்கையர்" எனத் தொடங்கிவரும் அஸ்திர வாக்கை புத்தநந்தி என்பவன் மேல்விடுத்து அவன் சிரத்தை அறுத்தவர்.
03. போதிமங்கையில் சாரிபுத்தன் தலைமையில் வந்த புத்தர்களோடு தர்க்கவாதம் செய்து அவர்களுக்குச் சைவசமயத்தினதும், தத்துவக் கொள்கையாகிய சைவசித்தாந்தத்தினதும் உண்மையை நிலைநாட்டி, அச்சமயமும் அதனது தத்துவக் கொள்கையுமே முத்திக்கு சரியான வழி என நிலைநாட்டி, அவர்களை எல்லாம் சைவசமயிகளாக ஆக்கியவர்.
04. வடமொழி, தமிழ் ஆகிய இருமொழிகளிலும் சிவாகமங்களின் ஞானபாதத்தில் மிகுந்த புலமைமுடையவர்.
05. வேதத்தினதும், சிவாகமங்களின் ஞானபாதத் தினதும் சாரமாகத் "தத்துவவிளக்கம்" என்ற தமிழ் சாஸ்திர நூலை அருளிச்செய்தவர்.
06. திருஞானசம்பந்தரோடு ஆச்சாபுரம் எனப்படும் "திருநல்லூர்ப் பெருமணத்திற்" தோன்றிய சோதியில் கலந்தருளியவர் என்பனவாகும்.

இலக்கிய ஆதாரங்களின் அடிப்படையில் சம்பந்தசரணாலயர் துதியாக அமையும் பாடல் அமைந்துள்ள திருநெறிவிளக்கம் என்னும் நூலின் காலமானது, கி.பி1400-1425 என்று திட்டவட்டமாக அறியப்படுவதனால், தத்துவவிளக்கம் கி.பி 14ஆம் நூற்றாண்டு அல்லது அதற்கு முற்பட்ட நூல் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.[4] மேலும், இந்தத் தத்துவவிளக்க நூலாசிரியராகிய சம்பந்தசரணாலயரின் காலம் ஏறக்குறைய 4000 ஆம் வருடத்திற்கு முற்பட்டது என்பது ஸ்ரீ காசிவாசி செந்திநாதையரின் கருத்தாகும். இவர் தம் கருத்திற்கு ஆதாரமாக ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை எழுதிய அபிதானகோசத்தில் கூறப்படும் கால ஆராய்ச்சி பற்றிய விடயங்களைத் தருகின்றார். ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை சம்பந்தர், அப்பர் என்போரது தேவாரங்களை அகச்சான்றாகவும், மேலும் சில புறச்சான்றுகள் உட்பட ஐந்து முக்கிய காரணங்களை வைத்து சம்பந்தர் காலம் ஏறத்தாழ நாலாயிரம் வருடங்களிற்கு முற்பட்டது என்பதை நிறுவ முற்படுகின்றார். எனினும் அவர் தரும் காரணங்கள் சம்பந்தர் காலம் பற்றி வரலாற்று ஆசிரியர்கள் தரும் காலவாராய்ச்சியோடு எவ்விதத்திலும் பொருந்தி வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன், கந்துசேனன், கனகசேனன் முதலியோர் சம்பந்தர் காலத்தில் விளங்கிய சமணாசாரியார்கள் என்பது அவருடைய தேவாரத்தாற் பெறப்படும்.

அவர்களின் பெயர்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்களுக்கு உட்பட்ட சமண சரித்திரங்களிலே கேட்கப்பட்டமையின் அவ்வாசாரியர்கள் முற்பட்டவர்களேயாதல் வேண்டும். ஆகவே சம்பந்தரும் முற்பட்டவரேயாதல் வேண்டும் என்கின்றார்.[5] மேலும் இரண்டாயிரத்து எண்ணூறு வருடங்களுக்கு முன்னே விளங்கிய சங்கராச்சாரியார் தாம் செய்த சௌந்தரியலஹரியிலே சம்பந்தரை எடுத்துத் துதித்தலால் சம்பந்தர் அவருக்கு முன்னுள்ளவர் என்பது பிரத்தியட்சம் எனக்குறிப் பிடுகின்றார்.[6] எனினும் தென்னிந்திய வரலாறு எழுதிய கே.என் நீலகண்டசாஸ்திரிகள் போன்றோர் சங்கரரது காலம் கி.பி எட்டாம் நூற்றாண்டு என்றும், சம்பந்தரது காலம் ஏழாம் நூற்றாண்டு என்றுமே எழுதியிருக்கின்றனர். எவ்வாறாயினும் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை தரும் வேறு சில சான்றுகளும் ஆராயத்தக்கனவாயினும், நவீன ஆய்வியல் செல்நெறி, கல்வெட்டுச்சான்று போன்ற ஆதாரங்களும் வழங்குகின்ற முக்கியத்துவத்தின் அடிப்படையில் சம்பந்தரின் சமகாலத்தவரும், சம்பந்தர் சோதியுட் கலந்தபோது அவருடன் சோதியுட் கலந்தவருமாகிய சம்பந்தசரணாலயர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கருத முடியும். அடுத்து தத்துவவிளக்கம் சம்பந்தர் காலத்தைச் சார்ந்த மிகப்பழைய நூல் என்பதற்கு ஆதாரம் பிற்காலச் சித்தாந்த சாஸ்திர நூல்களில் விநாயகர் வணக்கம் இடம்பெற்றது போல, இந்நூலில் இடம்பெறவில்லை என்பதாகும். பிரமபுரீசர் வணக்கமாக அமையும் இந்நூலின் முதலாவது செய்யுள் "கொச்சை மன்னவன் தாள் இத்தத்துவிளக்கம் பகர்வான் பணிந்து ஏத்துமே" எனக்கூறப்பட்டுள்ளது.

**நூலமைப்பு**

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை எடுத்துக்கூறும் தத்துவவிளக்கம், வடமொழியில் உள்ள 51 அட்சரங்கள் போல, சம்பந்தசரணாலயர் துதி நீங்கலாக 51 கட்டளைக் கலித்துறை கொண்ட சிறுநூல் முதலில் சம்பந்தசரணாலயர் துதியும் அதன்பின் முறையே பிரமபுரீசர் வணக்கம், சிவனடியார் பெருமை, இந்நூல் முதல்நூலாகிய சிவாகமங்களில் இருந்து வழிநூலாகச் செய்யப் பட்டது என்பதும், ஞானாசிரியர் துதி என்பனவும் இடம்பெறுகின்றன. அதன் பின்னர் பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருளின் இலக்கணம் எடுத்துக்கூறப்படுகின்றன. இம்முப்பொருள் இலக்கணத்தை விளக்கும் பகுதியை உரையா சிரியர் பதிவியல், பசுவியல், பாசவியல் என மூன்று இயல்களாக பிரித்து விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வியல்களுள் பதிலக்ஷணம், சத்திலக்ஷணம், காரணத்திரயம், சிவனும் சக்தியும் பந்தத்திற்கும் வீட்டிற்கும் காரணம், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மை, பஞ்சகிருத்தியம் முதலாக முத்திவரை நாற்பத்தொன்பது வரையான பொருட்கூறுகள் விளக்கப்படுகின்றன.

காழி எனப்படும் சீர்காழிக்கு பன்னிரண்டு பெயர்கள் உள்ளன. பன்னிரண்டு கடல்கோளால் தாக்கப் பெற்றும் அழியாது இருக்கப்பெற்றது என்பர். சீர்காழிக்குரிய இப்பன்னிரண்டு பெயர் களையும் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தமது தேவாரத்தில் சிறப்பாக பன்னிரண்டு பாடல்களை உள்ளடக்கிய பதிகத்தாலும் மற்றுமுள்ள பதிகங்களாலும் சிறப்பித்துள்ள அதேநேரம், சேக்கிழார் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் வரலாற்றைக் கூறும்போது சீர்காழிக்குரிய பன்னிரண்டு பெயர் களையும் எடுத்துக்காட்டியுள்ளார். அவை பிரமனூர், வேணுபுரம், புகலி, வெங்குருகு, தோணி புரம், பூந்தராய், சிரபுரம், புறவயம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்பவாகும்.

திருஞானசம்பந்தர் பன்னிரண்டு பேர்களை உள்ளடக்கியதாக சீர்காழியைப்பாடும்போது தான்பாடும் பதிக வரன்முறைக்கு அப்பால் பன்னிரண்டு பாடல்களை உள்ளடக்கிப்பாடுவதுடன், ஒவ்வொரு பாடலிலும் பன்னிரண்டு பெயர்களில் ஒவ்வொரு பெயரை முதலில் தொடங்கி பின்னர் ஒழுங்குமுறையில் ஒவ்வொன்றாகப் பாடுவது குறிப்பிடத்தக்கது. மேலும் ஒரு பெயரை ஒரு பாடலிலும் அமைத்துப் பாடியுள்ளார். பிரமனூர் வேணுபுரம் புகலி வெங்குருகுப் பெருநீர்த் தோணி, புரமன்னு பூந்தராய் பொன்னஞ்சிரபுரமும் புறவயஞ் சண்பை, அரன்மன்னு தண்காழி கொச்சையம் உள்ளிட்டங்கு ஆதியாய, பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலம் நாம் பரவுமூரே. (சம்பந்தர் தேவாரம், 2:70:1)

இவ்வாறு பன்னிரண்டு பாடல்கள் அமையும் இக்கருத்தினை உள்வாங்கிச் சேக்கிழாரும் "பிரமபுரம் வேணுபுரம் புகலி பெரு வெங்குரு நீர்ப், பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன், வருபுறவஞ் சண்பை நகர் வளர்காழி கொச்சைவயம், பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்" (பெரியபுராணம், 1917) என்கின்றார். சீர்காழிக்குள்ள பன்னிரண்டு பெயர்களில் தத்துவவிளக்க ஆசிரியர் காழியை ஆறுதரமும், வெங்குருகு, சொச்சை என்பவற்றை இரண்டுதரமும் சிரபுரம், கழுமலம், பிரமபுரம் என்பவற்றை ஒருதரமும் எல்லாமாக ஆறு பெயர்களைத் தமது பாடல்களில் குறித்துள்ளார். உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் இரண்டு புராணக்கதைகளை எடுத்துக்காட்டி, சீர்காழிப்பதியின் சிறப்பை எடுத்துக்காட்டியதுடன் கழுமலம், கொச்சை என்ற பெயர்வந்த காரணத்தையும் விளக்கியுள்ளார். இதில் சிவபெருமான் உரோமசமுனிவருக்கு நயனதீக்கை செய்து சிவஞானோபதேசம் வாயிலாக அவரது ஆணவ மல மறைப்பை நீக்கி பரமுத்தியை வழங்கி நிர்மலமாக்கியமையால் நிர்மலபதி என்ற காரணப் பெயர் ஏற்பட்டது. நிர்மலபதி என்பதுதான் கழுமலநகர் என வழங்கப்பெறுகின்றது.[7], அடுத்து, பரராசமுனிவர் யமுனாநதியில் ஓடம்செலுத்தும் மற்சகந்தியில் மயங்கி வியாசரைப்பெற்றபின், இது மயக்கத்தினால் நிகழ்ந்தது என்பதை அறிந்து பூலோககைலாசமாகிய சீர்காழியிலே சிவலிங்கதாரணம் செய்ததனால் ஏற்பட்ட சிவன் அருளால் அவரது அஞ்ஞானமாகிய கொச்சையம் போக, சிவனிடம் கொச்சை என்ற பெயர் இத்தலத்திற்கு ஏற்பட வேண்டும் என்று வேண்டிப் பெற்றுக்கொண்டார்.[8]"

தத்துவவிளக்க நூலாசிரியர் சம்பந்தசரணாலயர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அவதரித்த சீர்காழியிலே தோன்றினார் எனக்கொள்ளத்தக்க வகையில் சம்பந்தரை ஆட்கொண்ட சீர்காழியில் எழுந்தருளியிருக்கின்ற பிரமபுரீஸ்வரர் உடனுறை திருநிலைநாயகியே சிவசத்தியாகக்கொண்டு பதிதத்துவத்தை விளக்கியுள்ளமை காணத்தக்கது. குறிப்பாக பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மையை விளக்கும் போது "எய்தும் பொருள் ஒருமூன்று பதி பசு பாசம் என்றே, மெய் தந்த ஆகமம் கூறும் அவற்றினுள் வெங்குருகுவாழ், மைதங்கு கண்டன் பதி பசு என்பது அணுக்கள் மற்றுக் கைதந்த பாசங்களானவை ஆணவம் மாயையுங் கன்மமுமே (தத்துவவிளக்கம் 10) இதில் வெங்குருகு எனப்படும் சீர்காழிப்பகுதியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைப் பதியாகக் குறிப்பிட்டு ஏனைய பசு, பாசங்கள் காட்டப்பட்டுள்ளன.

இது போன்று சிவசத்தியின் அம்சமாக உள்ளதும், ஆணவம் முதலிய பாசங்களைத் தொழிற்படுத்துவதாகிய திரோதானசத்தியைக் (ஆதிசத்தியைக்) குறிப்பிடும்போது "ஒடுங்கிய பாசத்தொகை ஒரு மூன்றும் உறுந்தொழிலில், துடங்கிய போதில் துணைமயில் தோணி புரத்து உறையும், விடங்கெழு கண்டர்தம் சத்தியின் ஏவலின் மற்றதுவும், படர்ந்தெழுபாசம் பாசம் என்றார் அவை ஊக்கஞ் செய்பான்மையரே. (தத்துவவிளக்கம் 23) என்றார். இதன் வழி சர்வசங்காரகாலம் எனப்படும் முற்றழிப்புக் காலத்தில் ஆன்மாவோடு ஒடுங்கிச் செயலற்று நின்ற மூவகைப் பாசமும் தத்தம் தொழிலைத் தொடங்கியபோது தோணிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய சிவசத்தியினது, ஆன்மாக்களை பற்றிய அந்த மும்மலங்களுக்கு அநுகூலமாய் நின்று அவற்றை ஏவுதலினால் உபாசாரமாக அதனை முதிர்ந்து எழும் திரோதாயி மலம் என்றும் கூறுவர் என்றார்.

இங்கு உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் சிவபக்த விலாசம், சிவதருமோத்திரம், நிச்சுவாசகாரிகை, தேவிகாலோத்தரம், தைத்திரியோபநிடதம் முதலான வடமொழி மற்றும் சிவஞானசித்தியார், திருக்குறள், காளகஸ்திப் புராணம், திருமந்திரம் முதலான தமிழ்மொழி நூல்களை மேற்கோளாகத் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தத்துவ விளக்கமும் தத்துவப்பிரகாசமும்**

சம்பந்தசரணாலயர் இயற்றிய தத்துவவிளக்கம் என்ற இந்நூலைத் தழுவி தமிழிலும் வல்லவனும் இராட்டிரகூட மன்னனுமாகிய போஜன் தத்துவப் பிரகாசம் அல்லது தத்துவப்பிரகாசிகை என்ற நூல் செய்தான் என்பர். இத்தத்துவப்பிரகாசம் சிவாமங்களின் சார்புநூல்களில் ஒன்றாக உள்ள அஷ்டப்பிரகரண நூல்களில் முதலாவதாக

வைக்கப்பட்டுள்ளது. தத்துவவிளக்கத்தின் 51 செய்யுள்களையும் விரித்து தத்துவப்பிரகாசிகை 76 சுலோகங்களால் விளக்குகின்றது. இந் நூலும் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைக் குறிப்பிட்டாலும் தத்துவம் என்ற சொல்லால் போஜமன்னன் சட தத்துவங் களையே குறித்துக்காட்டினார். மேலும் தத்துவ விளக்கத்தின் உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் தத்துவவிளக்கச் செய்யுளைத் தழுவி எழுதப்பட்ட தத்துவப்பிரகாச சுலோகங் களைச் செய்யுள் தோறும் வரையப்பட்ட உரையின் இறுதிப்பகுதியில் சேர்த்துள்ளார். இவ்வகையில் தத்துவவிளக்கத்தின் முப்பத்தைந்து செய்யுள்களுக்கான தத்துவப்பிரகாசிகையின் முப்பத்தைந்து சுலோகங்கள் எடுத்துக் காட்டி யுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் தத்துவ விளக்கத்தைத் தழுவி தத்துவப்பிரகாசிகை எழுதப்பட்டது என்பதை போஜமன்னன் எந்த ஒரு சுலோகத்திலும் எடுத்துக்காட்டவில்லை என்பதுடன் சிவாகமத்தைத்தழுவி நூல் செய்த மையை எடுத்துக்காட்டுகின்றார். "யாதொரு போஜ தேவருடைய மனத்தில் எல்லாத் தத்துவசமூகமும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் பிரசாசித்ததோ அத்தகைய போஜதேவர் சிவாகமங்களின் சாரமான ஒப்பற்ற தத்துவப்பிரகாசம் என்னும் நூலைச் செய்தனர் எனக்கூறப்பட்டுள்ளது[9].

**தத்துவவிளக்கத்தினதும் உரையினதும் சிறப்பம்சங்கள்**

தத்துவவிளக்க நூலுக்குரிய சிறப்புப்பாயிரம் சிவஞானபோதம் போன்ற நூலுக்கு உள்ளது போலத் தனிச்செய்யுளால் அமையவில்லை. எனவே உரையாசிரியர் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் சிறப்புப்பாயிரம் என்ற பகுதியில், அப்பாயிரத்தில் உள்ளடங்கவேண்டிய விடயங்கள் தத்துவவிளக்கச் செய்யுள்களில் வருவதை எடுத்துக் காட்டியுள்ளார். சிறப்புப்பாயிரத்தில் இடம்பெற வேண்டிய செய்திகள் யாவை என்பது இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளது. ஆக்கியோன் பெயரே வழியே எல்லை, நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே, கேட்போர் பயனோடாய் எண்பொருளும், வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பே,"[10] என்ற வகையில் தத்துவவிளக்கத்தின் சம்பந்தசரணாலயர் துதியாக இடம்பெறும் "எம்பந்த" எனத்தொடங்கும் செய்யுளில் ஆக்கியோனாகிய சம்பந்தசரணாலயர் பெயர் "சம்பந்த சரணாலயன் தன்பாதஞ் சந்ததமும் நைந்துருகிச் சிந்தை செய்வாம்" எனவும், நூற்பெயர் "தத்துவவிளக்கம் நவின்ற நாவன்" எனவும் கூறப்பட்டது. தத்துவவிளக்கத்தின் மூன்றாவது பாடலிலே வரும் "சீரார் கயிலைத் திருவாய்மலர்ந்த சிவாகமம் கற்று ஆராய்வது வடசொல் பயின்றார்க்கு எளிதாம் அம்மொழியைச் சாராதவரும் தத்துவஞானம் தலைப்படுதற்கு ஓரார் தமிழ்ச்செய்யுளால்" என்னும் திருச்செய்யுளினால் சிவாகமங்களை முதல் நூலாகக்கொண்டு இந்நூல் வழிநூலாகச் செய்யப்பட்டது என்பதால் வழியும், இந்நூல் செய்யப்பட்ட காரணம் வடமொழிதெரியாதவர்கள் பதி, பசு, பாசம் என் கின்ற முப்பொருள் உண்மையை உணர்தலாகிய மெய்யுணர்தல் என்னும் தத்துவஞானம் அடைவ தற்கும், "தமிழ்ச் செய்யுளால்' எனக் கூறுவதனால் தமிழ் வழங்கும் நிலமே இதனுடைய எல்லை என்பதும், சரியை, கிரியை, யோகம் எனவரும் மூன்று பாதங்களிலும் மேம்பட்ட ஞானபாதத்தை கூறும் தத்துவவிளக்கம் அந்நூல்களில் மேம்பட்டது ஆகையினால் அந்நூல்களைக் கற்றபின்னரே இந்நூலைக் கற்கவேண்டும் என்பதனால் யாப்பும், "எய்தும் பொருள்" எனத் தொடங்கும் பத்தாம் செய்யுளில் பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருள் இலக்கணங்களையே இந்நூல் கூறுகின்றது என்பதனால் நுதலிய பொருளும், இருவினையொப்பு மலபரிபாகம் உற்றவரே இந்நூல் கேட்டற்குரியர் என்பதால் கேட்போரும், "பவமேயநெறி" எனத் தொடங்கும் இறுதிச்செய்யுளில் "சிவமேவுவர்" என்று கூறுகின்றமையால் நூலினது பயனும், இவர் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் காலத் தவராதலின் காலமும், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். திருநாவுக்கரசு நாயனார், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் முதலிய அறிஞர் சபையில் ஏறினமையாற் களனுமாகிய பதினொன்றும் இந்நூலுக்குச் சிறப்புப்பாயிராமாக அமைகின்றன.

வடமொழியிலுள்ள மூலாகமங்கள் இருபத் தெட்டில் உள்ள சரியை முதலிய நான்கு பாதங் களில் ஞானபாதமே சித்தாந்தம் எனப்படும். சிவஞானசித்தியார் இதனை "சிவாகமம் சித்தாந்த மாகும்" எனக் குறிப்பிடுகின்றது. இச்சித்தாந்தம் எனப்படும் ஞானபாதப்பொருள் ஒன்றாயினும்,

கேட்போரின் பக்குவத்திற்கேற்ப தூலாருந்ததி முறையில் கூறப்பட்டுள்ளதால், இருபத்தெட்டு ஆகமங்களுள் ஒவ்வோர் ஆகமத்தை தமக்குப் பொருளாக எடுத்து ஐக்கியவாத சைவம், பாடாணவாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம். சங்கிராந்தவாத சைவம், ஈசுர அவிகாரவாத சைவம் என்னும் அகச்சமயங்கள் முதலியவைகளுக்கு பொருள் கொள்ளுமாறு செய்து, சைவசித்தாந்தத்திற்கு உண்மைப்பொருள் அல்லது நேர்ப்பொருள் கொள்வதற்கு முடியாத வாறு மயங்கவைப்பதாக இருப்பதனால் தமிழ் மொழியில் எழுந்த இத் தத்துவவிளக்கம், அவ் இருபத்தெட்டு ஆகமங்களின் சாரமாய் உள்ள பதி, பசு, பாசங்களின் இலக்கணங்களை மிகத்தெளிவாக, மயக்கமின்றி உணர்த்தி சிவானுபவமுடைய ஞானாசிரியன் மூலம் சிவதீட்சை முதலிய சைவ சம்ஸ்காரங்களைப்பெற்றுத் தன்னை ஓதல், ஓது வித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என்னும் ஐவகை ஞானபூசையின் வாயிலாகத் தொடர்ந்து பக்குவர்களாகிய சீடர்களை ஆணவ மலத்தில் நின்று நீக்கி சிவாநுபோக நிலையிற் செலுத்தவல்லதாகும்.[11] தத்துவவிளக்கம் போலவே சிவஞானபோதமும் ஞானபாதத்தின் பொருளில் ஏற்பட்ட மயக்கத்தினைப் போக்குவதற்கு, ஸ்ரீ கண்ட உருத்திரால் நந்தியம்பெருமானுக்கு உபதேசிக்கப்பட்டு குருசீட முறையில் இறுதியாக மெய்கண்டாருக்கு உபதேசிக்கப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

சம்பந்தசரணாலயர் துதியாக வரும் முதலாவது பாடலில் சம்பந்தசரணாலயரின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அவர் அருளிய தத்துவவிளக்கம் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை என்ற வகையில் பரஞானமாகிய சிவஞானத்தைப்பெறுவதற்கு உபகாராமாக இருத்தலின் அந்நூலை அருளிச்செய்த சம்பந்தசரணாலயர் (சிவ)ஞான நன்முனிவர் எனப்பட்டார். மேலும் உரையாசிரியர் ஸ்ரீ காசி வாசி செந்திநாதையர் சிவதருமோத்தர ஆகமத்தை சான்று காட்டி சிவஞானநூலை அருளிச் செய்தார் அடையும் பயனை விளக்குகின்றார்.

"சிவஞானபுஸ்தகத்தைக் கொடுப்பவன் அச்சிவஞான புஸ்தகத்தில் எவ்வளவு எழுத்துக் களுண்டோ, அத்துணை ஆயிரம் கற்பம் மகா சிவபுரத்தின்கண்ணே வசிப்பான்; தனக்கு முன்னும் பின்னுமுள்ள பத்தும்பத்துமாகிய இருபது குலத்தினரையும் மகாசிவலோகத்திருத்தி தானும் அதனை அடைகின்றான்" என்று சிவதருமோத்தராகமம் கூறியவாறு, சிவ ஞானத் தமிழ்வேதத்தை எழுதவல்ல பற்பலர் பதினாறாயிரம் திருக்கூட்டத்துள்ளே உள்ளவராக இருக்கவும், அதிதீவிர சத்திநிபாதமுற்று நின்ற திருஞானசம்பந்தப்பெருமான் நன்மாமனாராகிய சம்பந்தசரணாலயரே அச்சிவஞானத் தமிழ் வேதத்தை எழுதும்பேறு பெற்றவர் ஆகையினால் "எழுதுமறை எழுதும் பேறு நம்பன் அருளதனால் பெற்ற ஞானநன்முனி என்று கூறப்பட்டார்.[12]

தத்துவவிளக்கத்தின் முதலாவது செய்யுள் "சித்தத்து உவந்து எமக்கு இன்பம் பட" எனத் தொடங்குகின்றது. தத்துவவிளக்க ஆசிரியர் "எமக்கு இன்பம் பட" என்று உரைத்ததை உரையாசிரியர் "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என திருமூலர் கூறியதை எடுத்துக்காட்டி, பெரியோர் தாம் அடையும் இன்பத்தை உலகினரும் பெற வேண்டும் என்ற கருணைத் திருவுள்ளத்தினால், தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூவிடத்திலும் உள்ளரையும் உளப்படுத்தும் பொருட்டு "எனக்கு இன்பம் பட" என்று கூறாது "எமக்கு இன்பம் பட" என்று அருளிச் செய்தார் என்கின்றார்.[13] மேலும் ஆன்மா பெத்தநிலையில் எவ்வாறு இன்பத்தை அனுபவிக்கின்றது முத்திநிலையில் எவ்வாறு இன்பத்தை அனுபவிக்கின்றது என்ற ஆராய்ச்சியில் ஆன்மா பெத்தநிலையில் மலங்களோடு சேர்ந்திருந்தது; முத்திநிலையில் மலங்களிலிருந்து விடுபட்டு இறைவனது சிவானந்த இன்பத்தை அனுபவிக்கின்றது என்ற கருத்தை மட்டும் கூறுவதில் சித்தாந்த அறிஞர்கள் திருப்தியுறுகின்றனர். அதற்குமேல் முத்தியடைந்த ஆன்மா சொரூபநிலையில் உள்ள சிவத்துடன் இணைந்து ஆனந்தத்தை அனுபவிக்கின்றதா அல்லது தடத்த நிலையிலுள்ள சிவத்துடன் ஆனந்தத்தை அநுபவிக்கின்றதா என்ற சூக்கும விசாரணை எவையும் அவர்களிடம் இருப்பதில்லை. சுவாமி ஞானப்பிரகாசர் ஆகமங்களின் சார்பில் இறைவன் தடத்தநிலையில் செய்யும் புஞ்சகிருத்தியங்களுக்கு உதவியாக ஆன்மா

பஞ்சகிருத்தியம் செய்யும் என்ற கருத்து, எவ்வித சூக்கு விசாரணையும் இன்றிச் சிவஞானமுனிவர் உட்பட்ட சித்தாந்த அறிஞர்கள் மறுதலித்தமை நன்கு அறியப்பட்டதொன்று. இனி ஆனந்தம் அல்லது இன்பம் சார்பில் செந்திநாதையரின் கருத்து ஆராயத்தக்கது. ஆனந்தம் அல்லது இன்பம் என்பது உயிர்கள் மலங்களோடு சேர்ந்த பெத்த நிலையில் பிரகிருதியில் உள்ள சாத்விக குணம், ஆன்மாவில் மேம்பட்டு விளக்கும் விளக்கமே உலக இன்பமாகக் கூறப்படும். முத்தி நிலையில் ஆன்மாவிற்கு வேறாக சிவத்தின் இடத்திலுள்ள முற்றுணர்வு முதலிய எண்குணங்கள் ஆன்மாவில் மேம்பட்டு விளங்கும் விளக்கமே பேரின்பம் எனப்படும் சிவானந்தமாகக் கூறப்படும். இதனால் இறைவனுக்குரிய சர்வஞ்ஞத்துவம், சர்வகர்த்திருத்துவம் முதலிய ஆற்றல்கள் ஆன்மாவிடத்தும் வருதல் குறிப்பிடத்தக்கது. செந்திநாதையர் இதனை "ஆன்மாவுக்கு வேறாய் சிவத்தின்கண்ணே உளவாகிய முற்றுணர்வு முதலிய எண்குணங்களையும் அடக்கிநின்ற சர்வஞ்ஞத்துவ, சர்வகர்த்திருத்துவம் என்பன அவ்வான்மாவின்மாட்டு மேம்பட்டு விளங்கும் விளக்கமே சிவானந்தப் பேரின்பமாம்." என்றார்.[14] இதற்கு ஆதாரம் சிவபெருமானைப் போல முக்தராயினோரும் சர்வஞ்ஞதாதி குணங்களு டையராகின்றார் என்று சிவதத்துவவிவேகமும், எண்குணங்களாகப் பகுக்கப்படும் பேரறிவுப் பெருந்தொழில் ஆன்மாவில் விளங்குதல் பற்றியே. "நட்டதே சிற்றறிவிற் பேறறிவு" என்றும். "உன் றன்குமிரண்டென்குலமிரண்டுங் குறுகிடா வண்ணம் இன்பமாய்" என்றும் பெரியோர் கூறியிருத்தல் காணலாம்.[15] இதனால் சர்வஞ் ஞத்துவம், சர்வகர்த்திருத்துவம் பெற்ற ஆன்மா செயலாற்றக்கூடாது. அது இறைவன் ஆணை வழியும் நிகழக்கூடாது எனக் கூறுவது சித்தாந்த அறிஞர்களின் பத்தி உணர்வே அன்றி அளவையியல் மற்றும் அனுபவ விளக்கமாக அமையாது என்பது நன்கு புலப்படும்.

**தாடலை முத்தி**

சைவசித்தாந்த முத்தியின் இயல்பினை திருவருட்பயன் தாடலை என்றும், ஏகம் என்றும் குறிப்பிடுகின்றது. இதனது வெளிப்படையான பொருள் ஆன்மா இறைவனது தாளை அல்லது திருவடியை அடைந்து பேரின்பத்தை அனுபவிக்கும் என்பதாகும். அதாவது தாள். தலை என்னும் இரு சொற்கள் தாடலை என்னும் ஒரு சொல்லாய் அத்துவிதப்பட்டு இணைந்திருப்பது போல, முத்திநிலையில் ஆன்மாவும் சிவமும் இரண்டற்ற வகையில் ஏகனாய் இருத்தல் என்பதாகும்.[16] ஆனால் இதனது நுட்பப்பொருள் தாள் என்பது இறைவனது திருவருளாகிய சத்தியையும், தலை என்பது ஆன்மாவையும் குறிப்பது. இங்கு தாள் என்கின்றபோது இறைவனது இரு தாள்களையும் அதாவது இறைவனது வலது, இடது திருவடிகளைக் குறிக்கும். அவை முறையே ஞானசத்தி, கிரியாசத்தி என்பவற்றைச் சுட்டுகின்றது. எனவே ஆன்மா இறைவனது திருவருளாகிய சத்தியுடன் கலத்தல் வழி, சிவத்துடன் அத்துவிதப்பட்டு அநந் நியமாக - ஏகமாக இருத்தல் என்பதையே தாடலை என்ற சொல் உணர்த்திநிற்கின்றது. இக்கருத்தினைத் திருமூலர் திருமந்திரத்தில் "காலுந்தலையும் அறியார் கலதிகள், காலந்தச் சத்தியருள் என்பர். காரணம், பாலொன்று ஞானமே பண்பார் தலை உயிர்" என்றும், (திருமந்திரம், 2398) சிவனாரது வலது திருவடி ஞானசத்தி, இடத் திருவடி கிரியாசத்தி என வாயுசங்கிதையும், தெற்கு முகமாக வீற்றிருக்கும் ஆசாரியர் சீடனை எதிர்முகமாக்கி தமது பாதமிரண்டையும் சிவசத்திரூபமாகக்கொண்டு அச்சீடனுடைய சிரசு முதலியவற்றிலே அத்திருவடியை வைக்க என இரௌரவாகமும் குறிப்பிடுதல் காணலாம். இக்கருத்தனை மணங்கொண்டு ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர்.

"ஒரு தாய்க்கு குழந்தையிடம் உள்ளதாகிய அருவாகிய அன்பினை பிறர் அறியுமாறு வெளிப்படுத்தும் அவ்வன்பின் உருவாகிய முலைப்பால் அக்குழந்தையைக் காண்பதற்கு முன் இல்லாது இருந்து பின் உள்ளதாக இருப்பது போல, நீரின்கண் நிழல் போல உயிர்களிடத்துப் புலப்படாது நின்ற பிரமபுரீசராகிய பரம் பொருள் ஸ்ரீ ஞானசம்பந்தமூர்த்திநாயனார் என்ற ஆசாரிய வடிவம் கொண்டு எழுந் தருளிவந்து சம்பந்த சரணலாயமுனிவர் என்னும் இந்நூலாசிரியரது சிரசின்மீது திருவடிசூட்டுதலாகிய விஞ்ஞான தீட்சையைப் புரிந்தருளினார் ஆதலின் "தாடலை போல் கூடியவை தானிகழ வேற்றின்பக் கூடலை

நீ ஏகமெனக் கொள்" என்னும் திருவாக்கிற்கு இயைய பிரமபுரீசப்பெருமானுடைய ஞானசத்தி, கிரியாசத்தி என்னும் இரண்டும் திருவடிகளைச் சம்பந்தசரணலாயமுனிவர் தம்முடைய ஞானசத்தி கிரியாசத்திகட்கு வியாபகமாகக் கொண்டு, தாடலைபோல் அடங்கித்திருவருள்வயத்தவராய்.[17] என்று உரைவரைந்துள்ளார்.

**சிவனடியார் பெருமை**

சிவனடியார் பெருமையினை திருமுறைகள், பெரியபுராணம், திருவுந்தியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் உட்பட்ட நூல்கள் பெரிதும் சிறப்பித்துக் கூறுகின்றன. தத்துவவிளக்க நூலும் கொச்சைவயம் எனப்படும் சீர்காழிப்பதியின் இறைவனது அன்பராகிய அடியவர்கள், முயன்று பெற்றதிரவியங்களைக்காட்டிலும், உறவினர்களைக் காட்டிலும், சிறந்த உத்தமரானவர்கள் சிவனடியார்கள் எனக்கூறுகின்றது. வேதங்களின் அடிப்படையில் பல சாதிகள் கூறப்பட்டாலும் உண்மையில் சிவனடியார்களுக்கு சாதி, ஆண்டி அரசன் என்ற வேறுபாடு இல்லை என்பதை உபநிடதங்களே வலியுறுத்துகின்றன. இதனை சண்டாளனேனுஞ் சிவன் என்னும் மொழியைச் செப்புவானாயின், அவனொடுண்க" என மூண்டகோபநிடதம் கூறுகின்றது. இச்செய்யுளுக்கு ஸ்ரீசெந்திநாதையர் உரையெழுதும்போது. "தேவருள்ளும், அரசருள்ளும், அரக்கருள்ளும், யக்சருள்ளும், கந்தர்வருள்ளும், நாகருள்ளும், முனிவருள்ளும், மானிடருள்ளும், பிராமணருள்ளும், சத்தியருள்ளும், வைசியருள்ளும், சூத்திரருள்ளும், சங்கரஜாதியருள்ளும். மாகாத்துமாக்களாகிய சிவனடியார் இருக்கின்றார்கள். இவர்களுக்கு எல்லாம் வர்ணாச்சிரமங்களின் கட்டுப்பாடு இல்லை. அந்தச்சிவபக்தர்களாகிய இவரெல்லாம் மாகேசுவரர்களாகக் கொள்ளப்படுகிறார்கள். அவரெல்லாம் அதிவர்ணாச்சிரமிகளென்று சமஸ்த வேதாகமங்களினுத் ஒப்புக் ரெள்ளப்படுகின்றர்கள்" என்று அடியார் பெருமையை ஸ்காந்தபுராண உபதேசகாண்டம் கூறுகின்றது" என்பதை எடுத்துக்காட்டியுள்ளார்.[18] இக்கருத்துப்பட அப்பர் சுவாமிகளும் "சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து தரணியொடு வானாளத் தருவரேனும், மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் மல்லோம் மாதேவர்க் கேகாந்த ரல்லா ராகில், அங்கமெல்லாங் குறைந்தழுகு தொழுநோயராய் ஆவுரித்துத் தின்றுழலும்புலையரேனுங், கங்கைவார்சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரே" (திருமுறை6,95:10) என அருளியிருத்தல் காண்க.

**தத்துவிளக்கமும் தத்துவஞானமும்**

தத்துவவிளக்கம் என்பதில்வரும் "தத்துவம்" என்ற சொல்லிற்கு உண்மைப்பொருள், மெய்ப்பொருள், உள்ள பொருள் என்று பொருள் உரைப்பர். "உண்மை" என்பது உள்ளது எனப்பொருள்படும். இவ்வகையில் நிலைத்த தன்மை இல்லாத பொருள்களுக்கு இடையில், நிலையான உள்பொருள்கள் பற்றிய ஆராய்ச்சியைத் தத்துவம் என்று குறிப்பிடலாம். சைவசித்தாந்த மரபில் "தத்துவம்" என்பது சடதத்துவம் முப்பத்தியாறு என்ற பொருளிலே தான் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் உண்மைப்பொருளாகிய பிரமப்பொருள் அல்லது சிவத்தைக் குறிப்பதற்கும் இத் "தத்துவம்" என்ற சொல் பயன்படுத்தப்படுத்தப்படுகின்றது. வடமொழியில் உள்ள தத்துவப்பிரகாசத்தின் 73 ஆவது சுலோகம் எல்லா உயிர்களுக்கும் போகத்தைக் கொடுத்துக்கொண்டு பிரளயகாலம் வரை எந்த ஒரு பொருள் இருக்கின்றதோ, அது "தத்துவம்" எனவும் அந்தக் காரணத்தினால் சரீரம், கடம் முதலானவை தத்துவமாக ஆவதில்லை எனவும் கூறகின்றது.[19] இங்கு தத்துவம் என்பது சடத்துவத்தைக் குறிப்பதாகின்றது.

மேலும் தத்துவம் என்பதை இன்னொரு வகையில் நோக்கின், தத்துவம் என்பது தத்+துவம் அதாவது, தத் - அது, துவம் - தன்மை (பிரபுத்துவம், சகோதரத்துவம் என்னும் சொற்கள் வழங்குதல் காண்க) துவம் என்ற விகுதி பண்புப்பொருள் பயத்தலின் தத்துவம் என்ற சொல் "அதன் தன்மை" எனப் போருள்படும். "அது" என்ற சுட்டுச்சொல் சமயந்தோறும் வேறு வேறு பொருளைக் குறிக்கும் ஆதலின் பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்மையினை நிலைநாட்டும் அறிவுக்கலைக்குத் தத்துவம் என்ற குறியீடு வழங்கப்பட்டிருக்க முடியும். திருவள்ளுவரும் தத்துவம் என்பதற்கு மெய்ப்பொருள் எனவும், தத்துவஞானம் என்பதற்கு மெய்யுணர்தல் எனவும், குறிப்பிட்டுள்ளார்.[20] இதனை "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு"

(திருக்குறள், 355) என்று குறிப்பிடுதல் இங்கு நோக்கத்தக்கது. தத்துவஞானம் தான் தலையாய அறிவு என்ற வகையில் சித்தாந்த நூல்கள் பிரமப்பொருள் அல்லது சிவம் பற்றிய அறிவையே உயர்ந்த அறிவாகப் பதிஞானமாகச் சுட்டுகின்றன.

அடுத்து, விளக்கம் என்பது உண்மை விளக்கம், மெய்ஞ்ஞான விளக்கம் என்பது போல இந்நூல் பதி, பசு, பாசம் என்கின்ற அநாதி நித்திய மெய்ப் பொருளாகிய உண்மைத்தத்துவங்களை வடமொழி வேத, சிவாகமங்களிற்கு மாறுபடாது தமிழ்மொழியால் விளக்குவது என்ற பொருளில் "தத்துவ விளக்கம்" என்றார். மேலும், வள்ளுவர் தத்துவம் என்பதற்கு மெய்மை எனக்கொண்டு தத்துவஞானம் என்பதற்கு மெய்யுணர்தல் என்று பொருள் கூறியிருந்தார். இதனைப் பரிமேலழகர். "அஃதாவது, பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரித ஐயங்களானன்றி உண்மையான் உணர்தல் இதனை வடநூலார் "தத்துவஞானம்" என்ப எனக் குறிப்பிடுதல் காண்க.[21]

மேலைத்தேய மெய்யியல் அறிவின் விருப்பாக அமைய, இந்திய மெய்யியல் உண்மையை உணர்தல் அல்லது தரிசித்தல் (காண்டல்) என்ற வகையில் அமைந்திருத்தல் காணலாம். இவ்வகையில் தத்துவவிளக்க நூல், இந்தியமெய்யியலின் குறிக்கோளாகிய தத்துவஞானம் எனப்படும் மெய்யுணர்தலையே உயர்ந்த குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பதை நூலாசிரியர் "தத்துவஞானம் தலைப்படுதற்கு ஓரார்" என்று விளக்கியுள்ளார் (தத்துவவிளக்கம்,3). இதன் விளக்கம் வடமொழி யைக் கற்றவர்கள் சிவபெருமான் அருளிச்செய்த சிவாகமங்களைக்கற்றுத்தத்துவஞான உண்மைகளை அறிந்து கொள்வர். அவ்வாறன்றி அம்மொழியைக் கற்காதவர்கள் தத்துவஞானம் எனப்படும் உண்மை அறிவைப் பெறும்பொருட்டு தத்துவவிளக்கம் போன்ற தமிழ் நூல்கள் செய்ததாகக் கூறுவதனால் இதனை அறியலாம். இக்கருத்தினை "சீரார் கயி லைத் தீருவாய்மலர்ந்த சிவாகமம் கற்று, ஆராய்வது வடசொல் பயின்றார்க்கு எளிது அம்மொழியைச், சாராதவருந் தத்துவஞானந் தலைப்படுதற்கு, ஏர் ஆர் தமிழ்ச் செய்யுளால் மையல் தீர எழுதுவனே" (தத்துவவிளக்கம் 3) என்ற பாடல் தருகின்றது.

திருஞானசம்பந்தர் அவதாரத்தினால் பாண்டிய மன்னன் கூன் நிமிர்ந்ததுடன் (கூன் பாண்டியன் நின்றசீர்நெடுமாறன் என்ற பெயர் பெற்றதுடன்) வேதத்தின் கூனும் நிமிர்ந்தது. இக்கருத்தினை "எழுதாமறையும், வழுதிதன் கூனும் நிமிரவந்தாண்டான்" (தத்துவவிளக்கம், 4) என்று அருளினர் சம்பந்தசரணாலயர், சேக்கிழார் சுவாமிகள் இதனைத் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் புராணத்தில், "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" எனக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

**சந்தியாகாயத்திரி மந்திரம்**

இருக்கு, யசுர், சாமம் அதர்வ வேதங்களிலும், பிருகதாரணியம் முதலிய உபநிடதங்களிலும் கூறப்படும்சந்தியாகாயத்திரிமந்திரத்தின்பொருளை சைவசித்தாந்தம் கூறும் செம் பொருளுடன் இணைத்து உரையாசிரியர் விளக்கியுள்ளமை வேறு நூல்களில் காணமுடியாத ஒன்று. சந்தியாகாயத்திரி மந்திரம் "ஓம் பூர் புவ ஸ்வ:, தத் ஸவிதுர் வரேணியம் /, பர்கோ தேவஸ்ய தீமஹி/, தியோ யோந ப்ரசோதயாத் //" எனவருகின்றது. இம் மந்திரத்தின் பொருள் எந்த சிவசூரியனுடைய ஞானா, இச்சா. கிரியா சொரூப் சக்தியொளியானது எங்கள் ஞானா, இச்சா, கிரியைகளைத் தூண்டுகின்றதோ (உஞற்றுகின்றதோ), அந்த முக்கிய பொருளாகிய சிவசக்தி ஒளியை தியானிப்போம் ஆயினோம் என்பதாகும்.[22] மேலும் இம்மந்திரத்தில் சிவபிரான் தேவ எனவும், (தேவசவிதா என்பது சிவசூரியன், பதிப்பொருள் என்பதைக் குறிக்கும்) சிவசக்தி பர்க்கஸ் எனவும், ஆன்மாக்கள் "ந" எனவும், பாசம் ப்ரசோதயாத் எனவும் காட்டப்பட்டது. மேலும் ஆன்மதத்துவம் இருபத்தினான்கும் பூ: என்றும், வித்தியாதத்துவம் ஏழும் புவ: என்றும், சிவதத்துவம் ஐந்தும் ஸ்வ: என்றும் உணர்த்தப்பட்டுள்ளது.

"சிவப்பிரஹ்மத்தின் ஒளியினால் எல்லாம் பிரகாசிப்பனவாகின" என்று உபநிடதங்கள் கூறியவாறு, சூரியசந்திரர் முதலியவனைத்தும் தம்மிடத்தினின்றும் ஒளிபெற்றுப் பிரகாசிப்பன வேயாக, தமது பிரகாசம் அவ்வாறு பிறிதொன்றை வேண்டாது நித்திய சுத்த சுயம்பிரகாசமாய் (தானே ஒளிர்வதாய்) நிற்றலின், சிவபிரான் "தேவ"

எனப்படுவர். ஆதலின், தேவச விதா என்றதற்குச் சிவசூரியன் எனப்பொருள் கொள்ளப் பட்டது.[23] அதாவது உலகில் காணப்படும் பெரிய புறவிருளைச் சூரியக்கடவுள் கெடுத்துக் கண்ணுக்குக் காட்சி கொடுத்தாற்போல, உடம்பிலுள்ள உயிரின அகவிருளாகிய ஆணவமலச் சத்தியைக் கெடுத்து மெய்ப்பொருளை விளக்குதல் பற்றிச் சிவபிரான் சூரியனாகக் கூறப்பட்டார். மேலும் சூரியனுக்கு ஒளி உள்ளது போல, சிவனுக்குச்சக்தி உள்ளது என்பது பர்க்கஸ் என்று கூறப்பட்டது. இதனால் சிவசூரியன் (தேவசவிதா) என்றது பதிப்பொருளாகிய சிவத்தைக் குறித்தது. சீவான்மாக்கள் எண்ணிக்கையற்ற பல என்பதை உணர்த்த "ந" என்பது எங்களுடைய எனக்கூறப்பட்டது. பாசத்தை நீக்கி நல்வினை தீவினைகளிற் சிவசக்தி ஆன்மாக்களைத் தூண்டுவதனால் "ப்ரசோதயாத்" என்னுஞ் சொற்கொண்டு பாசமும் பெறப்பட்டது.[24] இதனைச் "சிவசூரியனுடைய சத்தியொளியினால் விளக்கப்பட்ட அறிவுக்கண்ணி னால் சத்தியோடுகூடச் சிவத்தை ஆன்மா பார்க் கின்றான் அதனாற் பாசம் நீங்கிப்போயிற்று" என்று நிச்சுவாசகாரிகை குறிப்பிடுகின்றமை காணலாம்.[25]

**தத்துவவிளக்கமும் சைவசித்தாந்த சாஸ்திரங்களும்**

தத்துவவிளக்கச் செய்யுள்கள் சிலவற்றை சிவஞானசித்தியார் உரையாசிரியர் மறைஞான சம்பந்தர், நிரம்பவழகியார், சிவப்பிரகாச உரை யாசிரியர் மதுரைச்சிவப்பிரகாசர், பெருந்திரட்டுத் தொகுத்த தத்துவராயர், வெள்ளியம்பல வாணத் தம்பிரான் என்போர் எடுத்தாண்டு உரை எழுதியுள்ளமையைக் காணலாம். இவற்றுள் மறைஞானதேசிகர் தத்துவவிளக்கத்தின் ஒரு செய்யுளையும், நிரம்பவழகியர் ஒரு செய்யுளையும் எடுத்தாளுகின்ற அதேநேரம் மதுரைச் சிவப் பிரகாசர் எட்டுச்செய்யுள்கள் வரை தனது உரைக்கு ஆதாரமாகப் பல இடங்களில் எடுத்தாண்டமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, கலையில் நின்று மூலப்பிரகிருதி தோன்றும் என்பதை "வரும் குணவடிவாய் மூலப்பிரகிருதி கலையில் தோன்றி" (சிவஞானசித்தியார்:147) எனச் சிவஞானசித்தியார் குறிப்பிடுகின்றது. இதற்கு ஆதாரமாக நிரம்பவழ கியர் "ஓதுங் கலையில் நின்று குயந்தரும் மூலப்பகு தியது உற்பவிக்குமாம்" (தத்துவவிளக்கம், 35) என்ற தத்துவவிளக்கச் செய்யுளைத் தருகின்றார். மேலும் புத்தி குணத்திலிருந்து தோன்றும் என்ற பௌஷ்கராகமக் கருத்தை அடியொற்றி "கூறிய மூலப்பகுதியில் தோன்றுங்குணம் அவைதான், தேறிய சாத்விக ராசத தாமதம் என்று செப்பும், மூன்று முக்குணம் ஒத்தவை முன்று உயர் இழி உற்று, ஏறியக்கால் புத்திதத்துவமாகும் என்று எண்ணுவர்" (தத்துவவிளக்கம், 46) எனக் குறிப்பிடுகின்றது. ஆனால் சிவஞானசித்தியார் புத்தி பிருகிருதியில் இருந்து தோன்றும் என்கின்றார். இதனைச் "சித்தமாம் அவ்வியத்தம் சிந்தனை அதுவுஞ் செய்யும் புத்தி அவ்வியத்தில் தோன்றி" (சிவஞானசித்தியார், சுபக்கம். 148) என்பதால் அறியலாம்.

மேலும், இறைவன் சகலர் முதலியோர்க்கு இருவினை ஒப்பு சத்திநிபாதம் நிகழும்போது குருவாய் வெளிப்பட்டு முத்தியை அருள்வான் என்பதில் சகலர்க்கு அருளும்போது மானிடவடிவம் தாங்கி அருளுவான் என்பதை சம்பந்தசரணாலயர், எண்ணும் வினைப்பயனாற் புவனந்தொறும் போகம் என்றும், நண்ணிவருஞ் சகலர்க் ஒரு கால் நயந்து அங்ஙனே, பண்ணிய கன்மந் தொலை ஒத்துழி சத்திபாதமுறக், கண்ணியலுங் குரு வாய்க் காழி வேந்தன் கதிதருமே. (தத்துவவிளக்கம், 18) என்று அருளிச்செய்ய சிவஞானபோத ஆசிரியர் மெய்கண்டார், "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத் தம்முதல் குருவுமாய்தட தவத்தனில் உணர்த்த விட்டு அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே" (சிவஞானபோதம், 8 ஆம் சூத்திரம்) எனவும், "அஞ்ஞான அச்சகலருக்கு அக்குருவாய்- மெஞ்ஞானம், பின்னுணர்த்தும்" (சிவஞானபோத சூத்திரம் 8:2:1) எனவும் அருளி யிருத்தல் காணலாம்.

இக்கருத்தினை போஜதேவரின் தத்துவப் பிரகாசம் "சிவபெருமான் குருமுகமாக எழுந் தருளி திரோதானசத்தியை நீக்குதலினால் ஏற்ப டும் சத்திநிபாதத்தினால் பரிபக்குவமுற்ற மலத்தையுடைய இந்த ஆன்மாக்களை (சிவா னந்த) பரதத்துவத்திற் சேர்ப்பிக்கின்றார் என்று குறிப்பிடுகின்றமை காணலாம். இவ்வாறு தத்துவவிளக்கச் செய்யுள்கள் மற்றைய சாத்திர நூல்களுடன் ஒப்பிட்டு ஆராயத்தக்கன.

இற்றைவரை எமக்குக் கிடைத்த தமிழ் சைவ சித்தாந்த சாஸ்திர நூல்களில் சைவசித்தாந்தக் கருத்துக்களை ஒழுங்குமுறையில் தருகின்ற மிகப்பழைய சாஸ்திர நூல் இத்தத்துவவிளக்க மாகும். என்பதுடன் இந்நூல் திருஞானசம்பந்தரின் மாமனார் சம்பந்தசரணாலயரால் இந்நூல் இயற்றப்பட்டது என்பதனால் கி. பி 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்ததாக அறியப்படும் சம்பந்தசரணாலயர் வேறு என்பதும், இங்கு கூறப்படும் சம்பந்தசரணாலயர் காலம் கி.பி 7 ஆம் நூற்றாண்டு என்பதும் பெறப்படும். மேலும், தத்துவவிளக்கம் சைவசித்தாந்த சாஸ்திர நூல்களில் ஒன்றாக வைக்கத்தக்கது என்பதுடன் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையரின் உரை சைவசித்தாந்த நுண்பொருள்கள் பலவற்றைத் தருகின்றது என்பதை சந்தியா காயத்திரி மந்திரம் முதலியவற்றை சித்தாந்தத் தத்துவநோக்கில் விளக்கியுள்ளமையால் அறியலாம். தத்துவவிளக்கத்தைத் தழுவி தத்துவப் பிரகாசிகை எழுதப்பட்டது என்ற ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் கருத்து பொருத்தமுடையது.

**நிறைவுரை**

இக்கட்டுரையில் சம்பந்தசரணாலயர் அருளிய தத்துவவிளக்க நூலிலும், உரையிலும் வருகின்ற சில முக்கியமான விடயங்கள் எடுத்துக் காட்டப்பட்டன. தமிழில் எழுந்த சாஸ்திர நூல்களில் இதுவேபழமை யானது என்று கூறத்தக்கதாக உள்ளது. பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளுண்மைகளைக் கூறுவதனால் இது சிவஞானபோதம் போன்ற சாஸ்திரநூல்களோடு ஒப்பிட்டு ஆராயத்தக்கதாயினும், இந்நூலில் சிவஞான போதம் போன்று அளவையியல் கருத்துக்களின் அடியாக தர்க்கரீதியாக உண்மைகள் நிறுவப்படவில்லை. அதாவது காட்சி, அனுமான அடிப்படையில் உண்மைகள் நிறுவப்படாது ஆகமப்பிரமாணத்தின் அடிப்படையில் உண்மைகள் நிறுவப்படுகின்றது என்பதாகும். தத்துவவிளக்கம் சிவாகமங்களைத் தழுவிய வழிநூலாக உள்ளது போல் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய வற்றை சிவாகமங்களின் வழிநூலாக சில சித்தாந்த ஆசிரியர்கள் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. மிகப்பழமையான இத்தத்துவவிளக்க நூலை ஏன் மெய்கண்டசாஸ்திரநூல்களில் உள்ளடக்கவில்லை என்ற கேள்வி இங்கு அவசியமற்றது எனினும், கால அடிப்படையில் இத்தத்துவவிளக்கம் மெய் கண்டசாஸ்த்திர நூல்களுக்கு முற்பட்டது என்பதுடன் தேவார காலத்தைச் சார்ந்த நூலாக இருந்து பதி, பசு, பாச உண்மைகளைப் பொதுப்படக்கூறும் சாஸ்திர நூல்களிலிருந்து வேறுபட்டு, இங்கு தோணிபுரத்தில் உள்ள இறைவனைப்பதியாக்கொண்டு பாடுகின்றமையும், சந்தான மரபிலிருந்து வேறுபட்ட சமயகுரவர் மரபு சார்ந்த நூலாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும், வடமொழியில் இந்நூலைத் தழுவி எழுந்ததாகக் கூறப்படும் போஜதேவரின் தத்துவப்பிரகாசம், அத்வைதக் கொள்கைக்கு மறுப்பாக எழுந்தவகையில் நூலாசிரியரும் உரையசிரியராகிய அகோராசிவாசாரியாரும் ஓரளவு தர்க்கக் கருத்துக்களின் அடிப்படையில் முப்பொருள் உண்மைகளை நிறுவுகின்றமையும் தத்துவவிளக்கத்தையும் தத்துவப் பிரகாசத்தையும் இணைத்து ஆய்வுகள் வெளிவரவேண்டிய இன்றியமையாமையை உணர்த்துகின்றது. தத்துவவிளக்க நூலின் உரையாசிரியராகிய ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர், சம்பந்தசரணாலயர் விளக்கிய முப்பொருளுண்மையை வடமொழி மற்றும் தமிழ்மொழி நூல்களை மேற்கோளாகக்கொண்டு உரை வரைந்துள்ளமையும், தத்துவவிளக்கச் செய்யுள்களின் மிக நுட்பமான சித்தாந்த உண்மைகள் பலவற்றையும் விளக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அடிக்குறிப்புக்கள்

01. அருணாசலம் மு. தமிழ் இலக்கிய வரலாறு (பதினான்காம் நூற்றாண்டு) தமிழியல் ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 2005, பக் 175,176.
02. மேலது. ப.177
03. மேலது. ப.176
04. மேலது. ப.190
05. முத்துத்தம்பிப் பிள்ளை. ஆ.(1902), அபிதான கோசம், நாவலர் பதிப்பகம், யாழ்ப்பாணம், ப.116.
06. மேலது. ப.116
07. செந்திநாதையர், ஸ்ரீகாசிவாசி, (1918) தத்துவவிளக்க மூலமும் ஸ்ரீ காசிவாசி செந்திநாதையர் எழுதிய உரையும், சூரியோதய அச்சியந்திசாலை, மதுரை. ப.41.
08. மேலது. ப.10.
09. அஷ்டப்பிரகரணம் (முதல் மூன்று), (1981) திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை. ப.58.
10. கணேசையர், சி. (உரைவிளக்கக் குறிப்புக்கள்), தொல்காப்பியம் எழுத்ததிகாரம், திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1937, ப.6.
11. செந்திநாதையர், ஸ்ரீகாசிவாசி, 1918 மு.கு.நூ.ப.37.
12. மேலது. ப.9
13. மேலது. ப.1
14. மேலது. ப.2
15. மேலது. ப.7
16. ஞானகுமாரன் நா.(2012) சைவசித்தாந்தத் தெளிவு, தூண்டி, யாழ்ப்பாணம். ப.179
17. செந்திநாதையர், ஸ்ரீகாசிவாசி, 1918, மு.கு.நூ. ப.6-7.
18. மேலது. ப.13
19. போஜதேவர், 1981, மு.கு.நூ. ப.57.
20. கந்தசாமி, சோ.ந. இந்திய தத்துவக்களஞ்சியம் (தொகுதி 1), மெய்யப்பன் பதிப்பகம் 2003, பக்.1-2.
21. கௌமாரிஸ்வாரி, எஸ். (பதிப்பாசிரியர்) திருக்குறள் பரிமேலழகர் உரை, சாரதாபதிப்பகம். சென்னை. 2010, ப.109.
22. செந்திநாதையர், ஸ்ரீகாசிவாசி, 1918, மு.கு.நூ. ப.53
23. மேலது. ப.53
24. மேலது. பக். 54-55
25. மேலது. ப.55.

# சர்வதேச அரசியலில் புதிய கோட்பாட்டின் எழுச்சி: ஒரு நோக்கு

கே.ரி. கணேசலிங்கம்

**ஆய்வுச்சுருக்கம்**

அதிகாரம் என்ற எண்ணக்கரு அரசியல் விஞ்ஞானத்தில் அரசுக்குரித்துடைய அம்சமாகும். அரசின் இறைமையின் வியாபகத்தன்மை அதன் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் தடையின்றி பிரயோகிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தைக் குறிப்பதாகும். அவ்வகை அரசின் அதிகாரம் எல்லை கடந்து பிராந்திய மட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்ற தன்மை பிராந்திய வல்லரசு அந்தஸ்தையும் சர்வதேசத்தில் அங்கீகரிக்கின்ற சூழலில் (Super Power) சர்வதேச வல்லரசு என்றும் அழைக்கப்படுகிறது. அடிப்படையில் அதிகாரமே மேலாண்மை செலுத்தும் அம்சமாகும். அரசியலில் அதிகாரம் என்ற எண்ணக்கரு அரசுகளின் நடைமுறை முக்கியத்துவத்தினைக் கொண்டிருந்தாலும் கோட்பாட்டு நோக்கில் புதிய பரிமாணமெடுத்து வருகிறது. அதிகாரம் அரசுகளிடமும் தாராண்மைவாத ஜனநாயக அரசுகளிடமும் சோஸலிஸ அரசுகளிடமும் பிரயோகத்தன்மையில் ஒரே அம்சமாகவே பிரதிபலிக்கின்றன. அதிகாரத்தின் பிரயோகம் அரசுகளைப் பொறுத்தவரை படைப்பல வல்லமை சார்ந்ததாகவே ஆய்வு செய்யப்படுகின்றது. இவற்றுடன் வளங்களும் தொழில்நுட்பத்திறன்களும் பாரியளவிலான ஆயுதத் தளபாடமும் ஓர் அரசின் அதிகாரத்தை அளவீடு செய்யும் காரணிகளாக விளங்குகின்றன. மக்கள் தொகை, அரசுகளின் அமைவிடம், பொருளாதார தீரியிலான வளம், தொழில்நுட்பத்திறன், அரசியல் உறுதிப்பாடு என்பன இராணுவ வல்லமைக்கு மேலும் வலுவூட்டும் அம்சமாகும்.

**திறவுச்சொற்கள் :**

**அறிமுகம்**

1990களுக்குப் பின்பு ஆரம்பிக்கப்பட்ட புதிய உலக ஒழுங்குகளுக்குள் மென் அதிகாரக் (Soft Power) கோட்பாட்டின் வடிவம் வெளிப் படைத் தன்மை கொண்டதாக மாறியது. அமெரிக்காவின் பிரபல்யமான ஹவாட் பல் கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜோசப் நை என்பவர் இக் கோட்பாட்டின் மரபினைத் தோற்று வித்தார். ஆனால் துரதிஷ்டம் அமெரிக்காவின் சூழல் முழுக்க முழுக்க வன்முறை சார்ந்த வன் அதிகாரத்தின் பிடிக்குள்ளே இயங்கிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவின் உலகளாவிய போக்கின் முதலீடு முழுமையாக வன் அதிகாரத் தளத்தினைக் (Hard Power) கொண்டது. இதனால் அவரது கோட்பாட்டின் எல்லை அமெரிக்கா வின் மென்போக்கு அணுகுமுறைகளை வெளிப் படுத்தவும் வேண்டிய நிலைக்கு அவரது சிந்தனை களை மட்டுப்படுத்தியிருந்தது.

ஜோசப் நைஇன் கோட்பாட்டின் முழுமை யினை அமுலாக்க முடியாத அமெரிக்கா ஆட்சியாளர்கள் அதனைப் பலவீனப்படுத்தும் போக்கினைக் கையாண்டனர். ஆனால் முழு உலகத்தில் நை இன் சிந்தனை ஒரு வகை தனித்துவமான புரட்சி அலையை ஏற்படுத்தியது. ஆனால் உலகத்தில் பனிப்போர் முடிவை ரஷ்யா ஏற்றுக் கொண்ட பின்னர் காணப்பட்ட ஒற்றை மைய உலகம் 2001 இல் வன்முறை அதிகாரத்தின் தெறிப்புகளின் விளைவுகளை எதிர்கொண்டது. அதன் பின்னர் ஒற்றை மையம் தகர்ந்து போகும் நிலை ஆரம்பமானது. அக்காலத்தில் பல துருவ அரசியல் உருவெடுத்தது. ஆனாலும் உள்ளார்ந்த ரீதியில் மீளவும் இரு பிரதான அரசுகள் ஆதிக்க அரசுகளின்பட்டியலில் முதன்மை பெற்றன. அவை அமெரிக்காவும் சீனாவுமாகும். இதில் அமெரிக்கா பக்கம் இந்தியா, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் என்ற பெரும்முதலாளித்துவ ஜனநாயகக்கூட்டணி விளங்க சீனா பக்கம் ரஷ்யா, தென்னாபிரிக்கா, பிறேசில், ஈரான் போன்ற தனிக்கட்சி அல்லது முதலாளித்துவ ஜனநாயகத்திற்கான ஆரம்ப நிலையைக் கொண்ட அரசுகளின் கூட்டணி அணி வகுத்துள்ளன. இந்த உலக ஒழுங்கின்

முதலாவது கூட்டணியை முதன்மைப்படுத்தி உலகத்தின் இயங்குதிறன் காணப்படுகின்றது. அவை அமெரிக்காவின் அணுகுமுறையின் கீழ் அதிகாரத்தினைக் கைப்பற்ற போரை ஓர் உத்தியோகக் கடைப்பிடித்து வருகின்றன. போரின் விளைவுகளை பனிப்போர்க் காலத்தில் அனுபவித்த உலகம் அதிலிருந்து விடுபடுவதற்கான சூழலை வழங்கியிருந்தது. ஆனால் அமெரிக்க தலைமையிலான சக்திகள் இன்னோர் யுத்தத்துக்கே அதனைப் பயன்படுத்தியிருந்தன. ஒரே நாளில் மேற்குலக நாடுகளில் மட்டும் 60இலட்சம் மக்கள் ஈராக் யுத்தத்திற்கு எதிராக அணிதிரண்டனர்[2]. அமெரிக்கா யுத்தத்தை ரத்து செய்ய மறுத்தது. போரை நடாத்தி முடிக்க அமெரிக்கா உலகம் முழுவதும் மீள் எழுச்சிக்கு முனைந்தது. ஆனால் நிதி நெருக்கடியும் அதன் வன்முறை அதிகார அணுகுமுறையும் எழுச்சியை மட்டுப்படுத்தியது.

சீனா தலைமையிலான இரண்டாவது அணி மென்போக்கு அதிகாரத்தினை பெருமளவுக்கு கடைப்பிடித்துவரும்நாடுகளைஉள்ளடக்கியுள்ளன எனமுழுமையாகக்கூறிவிட முடியாது விட்டாலும் தனிக்கட்சி ஆட்சிமுறையைக் கொண்ட அரசுகள் என்ற அடிப்படையில் 'சீனாவின் அணுகுமுறை அவ்வகையான தந்திரத்தினைக் கொண்டுள்ளதாகவே உள்ளது. சீனாவின் முன்னாள் ஜனாதிபதி வூ ஜிண்டாவேவின் ஆட்சிக்காலம் மென்போக்கின் அடிப்படைக்குள் முழுமையாக சீனாவை நகர்த்தியதனைக் காண லாம். சீனாவை உலகத்தின் முன் நிறுத்துவதில் வெற்றிகண்ட ஆட்சியாளனாக ஜீண்டாவே விளங்குகின்றார். ரியானன்மென (1989) படுகொலையை அடுத்து வீழ்ச்சியுற்றிருந்த சீனாவின் அரசியல் அணுகுமுறையை புதிய திசைக்குள் இழுத்துவிட்டு நாகரீகமான உலக அரசியலை நிகழ்த்திக் காட்டியவர் ஜீண்டாவே, அதுமட்டுமன்றி பொருளாதாரப் பாய்ச்சலிலும், தொழில்நுட்ப வல்லமையிலும் மிக வேகமான வர்த்தக வளர்ச்சி யிலும் வெற்றி பெறச் செய்த ஜிண்டாவோ உலக நாடுகளுடன் சீனாவின் அணுகுமுறையில் மென்போக்கினைப் பிரயோகித்து வெற்றி கண்டார்.

**மென் அதிகாரம்** (Soft power)

அரசியல் விஞ்ஞானத்தில் இது ஒரு தந்தி ரோபாயக் கோட்பாடு. அறிவியல் விஞ்ஞானத்தில் ஒரு அரசு சார்பியல் கோட்பாடு, இது அரசுகள் ஒவ்வொன்றும் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகளை உள்ளடக்கிய நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகும். ஜோசப் நைஇன் வார்த்தையில் கூறுவதாயின் மென் அதிகாரம் என்பது பிற சக்திகளுக்கு (நாடுகளை) முன்னுரிமை வழங்குவதற்கான வலுவுடைய உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் ஒரு செயல்[4] என கூறிக்கொள்ளலாம். அதாவது அரசுகளின் நட்பு கலந்த நடத்தையால் பிற அரசுகளைக் கவர்வதனைக் குறிப்பதாகும். அதிகாரம் என்பதை அடைவதற்கு ஆயுதத்தைப் பிரயோகிக்கும் நடைமுறைகளைக் கைவிட்டு பரஸ்பரம் நட்புறவாக பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப (Soft Skills) ஒத்துழைப் புக்களைப் பரிமாற்றுவதன் ஊடாக அதனை அடைதல் என விளங்கிக் கொள்ள முடியும். பொருளாதார ஒத்துழைப்புக்கள், சமாதானம் உரையாடலுக்கான அனுசரணை வழங்குதல், பொருளாதார அடிப்படையில் வளங்களுக்கும் தொழில்நுட்ப உதவிகளுக்கும் வாய்ப்பளித்தல் என பல அம்சங்களில் சாதாரண அரசுகளை வலுவான அரசுகள் ஈர்த்துக்கொள்ள முனைகின்றதையே மென் அதிகாரமென ஜோசப் நை குறிப்பிடுகின்றார்[5]. மேலும் இவ்வகை அதிகாரத்தை ஜனநாயக மரபைப் பின்பற்றுகின்ற அரசுகளிடையே அதிகமாகப் பின்பற்றும் நடைமுறையைக் காணமுடியுமென அவர் வாதிடுகின்றார்.

அரசொன்றின் அணுகுமுறையால் அந்த அரசுடன் நெருக்கமாக உறவைப் பேணுவதற்கான தூண்டுதலைக் கொடுத்து பரஸ்பரம் நட்புறவினை வளர்க்க முயல்வதைச் சுட்டுவதாகவுள்ளது. ஆச்சரியமான விழுமியங்களைக் கொண்டிருத்தல் ஏனைய அரசுகளுக்கு முன்மாதிரியாக செயல்படுதல், ஏனைய அரசுகளின் விருப்புரிமைகளுக்கு முன்னுரிமை கொடுத்தல் என்ற பண்புகளை வெளிப் படுத்துவது மூலமே உலகளாவிய அதிகாரத்தினைப் பெறமுடியுமென்பது மென் அதிகாரம் பற்றிய எண்ணக்கருவாக்கமாகும்.

கவர்ச்சிகரமான தலைமை, நாகரீகமான அரசியல் விழுமியங்களைக் கொண்ட அரசியல்சார் நிறுவனங்கள், சட்டத்தின் ஆட்சி என்பவற்றுடன் பிற அரசுகளின் அங்கீகரிக்கின்ற தலைமைகளின் பங்குபற்றல்கள் ஜனநாயக மரபுகளாக அமைவது மென் அதிகாரத்தின் வலிமையைக் காட்டுகின்றது. மக்களின் கருத்துக்களை அங்கீகரித்தல், அதற்கு அமைவான சூழலை ஏற்படுத்தல் என்பன மென் அதிகாரத்தின் பிரதான அம்சங்களாக விளங்குகின்றன. மென் அதிகாரத்தின் துணை மூலமாக பிற அரசுகளைக் கவரும் விதத்திலான அணுகுமுறை நோக்கப்படுகிறது. மக்களாலும் வலுவுடைய குழுக்களாலும் அரசு மீதான அபிப் பிராயத்தை அரசுகளின் ஈர்ப்புத்தன்மையால் உருவாக்கப்படுதல் முக்கியமான அம்சமாகப் பார்க்கப்படுகிறது. மேலும் ஒத்துழைப்புடைய அதிகாரம் அரசுகளின் போக்கினை நிர்ண யிக்கக் கூடியது. ஓர் அரசுடன் பிற அரசுகள் பகிர்ந்தளிக்கக் கூடிய அரசியல் பொருளாதார, கலாசார தெரிவுகளை முதன்மைப்படுத்தும் போது மென்அதிகாரம் வலுவடைகின்றது.[7] வல்லரசுகளுக்கு மட்டுமே உரிய அம்சமாக மென் அதிகாரம் கருதாது இதர அரசுகள் மேற்கொள்ளும் சிலநடவடிக்கைகளைமென் அதிகாரம்வரைபுக்குள் உட்படுத்த முடியுமென்பதை கோடிட்டுக் காட்ட நை முயல்கின்றார்.

நோர்வே அரசாங்கத்தின் மரபுரிமை சார் லூதெறன் மிஷனரி (lutheran missionary heritage) மூலமான சமாதான பேச்சுவார்த்தைகளை மோதல் சக்திகளுக்கிடையில் ஏற்படுத்த முயன்றுள்ளமை நோர்வேயின் மென் அதிகாரம் என்றே குறிப் பிடப்படுகின்றது. பிலிப்பைன்ஸ், பல்கன், கொலம்பியா, இலங்கை, பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் நிலவும் முரண்பாடுகளைத் தீர்க்கும் சமாதான முயற்சிக்கான அடையாளங்களை இனங்கண்டு மேற் கொண்டமை உலகளாவிய ரீதியில் நோர்வேயின் மென் அதிகாரம் அணுகு முறையாகப் பார்க்கப்படுகின்றது. அவ்வாறே ஈராக் யுத்தத்திற்குப் பிற்பாடு போலந்து அரசாங்கம் எல்லையில் படைகளை குறைத்துக் கொண்டமை ஈராக்கில் சட்ட ரீதியான ஆட்சிமுறையை ஆரம் பிக்க அமெரிக்கா, இந்தியா என்பன நடவடிக்கை மேற்கொண்டமை ஆப்கானிஸ்தான் போருக்குப் பின்பான அரசாங்கம் ஆயுதமா? உணவா? என்கின்ற திட்டத்துடன் வேகமாக நகரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக, பொலிவூட் சினிமாவையும் இசை நடன நிகழ்ச்சிகளையும் இதர கேளிக்கை விடயங்களையும் மேற்கொண்டமை மென் அதிகாரத்தின் அணுகுமுறைகளாகவே கருதப்படுகின்றது.

**மென் அதிகார மூலங்கள்**

மென் அதிகாரத்தின் மூலங்களை அடையாளம் காண முயற்சிக்கும் ஜோசப் நை, அவற்றை பின்வருமாறு வகைப்படுத்துகின்றார்

1. கலாசாரம்
2. அரசியல் விழுமியம்
3. வெளிநாட்டுக்கொள்கை

இவற்றை விரிவாக நோக்குவோம்

**கலாசாரம்**

கலாசாரம் அதிகார மூலக்கூறுகளில் மிகப் பிரதான விடயமாகும். இது சமூக நடத்தையின் மாதிரி எந்தப் பிரிவினரின் விழுமியங்கள் அறிவூட்டல்கள் பல்பரிமாணத்தளத்தில் பரவலாகின்றதோ அதுவே அதிகாரத்தினை நிர்ணயிக்கும் வலிமையுடையதாகின்றது[9]. கலாசாரம் ஒன்றுக்கு மேற்பட்ட பரிமாணத்தினைக் கொண்டது. உலகளாவியது தேசிய எல்லைக் குட்பட்டது. சில வகை கலாசாரம் குறிப்பிட்ட குழுக்களுக்கு மட்டுமே உரியதாக அல்லது சமூகங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாக அமையும். சில நாடுகளின் தனிப்பட்ட மனித நடத்தைகள் தனித்துவமான அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தக்கூடியது. கலாசாரம் நிலையானதோ அல்லது மாறாததோ அன்று இது எப்போதும் தன்னியல்புக்கு அமைவாக மாற்றமடைந்து கொண்டிருக்கும். மாறுபட்ட கலாசாரங்கள் மோதும் போது அல்லது ஒன்றோடு ஒன்று இணையும் போது புதிய கலாசார பரி மாணங்களை அவையவையின் தன்மைக்கேற்ப சிருஷ்டித்துக் கொள்கின்றன. ஆனால் இஸ்லாமிய கலாசாரம் மாறுதலை ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற

போதும் மாற்றத்தை அதிகம் விரும்பும் மேற்குலக கலாசாரத்துடன் மோதலை எதிர் கொள்கின்றது ஆனாலும் இஸ்லாமிய கலாசாரத்தின் மாறுதல் தவிர்க்கமுடியாதொன்றாக வளர்ந்து வருவதனை அவதானிக்க முடிகின்றது.

கலாசாரம் மென் அதிகாரத்தின் மூலமாக அமைவதற்குரிய இரு பரிமாணங்கள் வலுவான பிற்சேர்க்கையாக அமைந்துள்ளது. முதலாவது மரபுகளை ஆதாரமாகக் கொண்ட இன , மத மொழி அடிப்படையிலான உறவுமுறையினைத் தோற்றுவிக்கின்றது. குறிப்பாக இஸ்லாமிய தொடர்ச்சி ஐரோப்பிய தொடர்ச்சி மொங்கோலிய தொடர்ச்சி, இந்துதத்துவ தொடர்ச்சி ( Islamic belt. European Belt. Mongolion Belt Hindu Belt) என மரபு சார்ந்த படர்க்கை தனித்துவமான கலாசார அடையாளங்களை உருவாக்குகின்றது. இதில் மேலும் மேற்குலக கலாசாரம் , கீழைத்தேசக் கலாசாரமெனக் கருதும் மரபும் காணப்படுகின்றது ஆசிய, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா நாடுகளில் இந்தியா, சீனா, பிறேசில், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் செல்வாக்கு மேற்குறித்த கீழைத்தேய கலாச்சார மரபினூடாக வளர்ச்சியடைந்து வருகிறது.

இரண்டாவது நவீன கலாசார மாதிரிகளை உள்வாங்கும் புதிய சந்ததியினரின் எழுச்சி மேற்குப் பாணியிலான நவீன நாகரிக அடையாளங்களை சேர்த்துக் கொள்வதன் வாயிலாக ஒரு புதிய உறவு அரசுகளுக்கிடையே நிகழ்கின்றது. இதில் அமெரிக்கா, சீனா , ஜப்பான் என்பன இளைய தலைமுறையினரைக் கவரும் அம்சங்களை அதிகம் கொண்டு செயல்படுகின்றன.[10] இதில் பிரபலமான கலாசாரம் உயர் கலாசாரம் (popular cultural and highculture) என்பன கவர்ச்சிகரமான அம்சங்களை வெளிப்படுத்தி நாடுகளையும் மக்களையும் ஈர்க்கின்றதைக் குறிப்பதாக அமைகின்றது. மைக்டொனாட் (mac Donald) நிறுவனத்தின் உற்பத்திகளைச் சார்ந்து நாடுகளையும் அவற்றின் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் பலம் கலாசார காரணிக்குரியதாகும். அமெரிக்க நாட்டின் சின்னத்தை அடையாளமாகக் கொண்ட ஆடை, அலங்காரப்பொருட்கள் மற்றும் சீன நாட்டின் சின்னத்தை அடங்கிய உற்பத்திப் பொருட்கள், கொலிவூட், சினிமா மற்றும் பொப்பாடல்கள் (Hollywood movies pop music) என்பன வரலாறு காணாத மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் நாடுகளை வேகமாக இணைத்துவிடும் என்ற அவதானிப்பு வளர்ச்சியடைந்துள்ளது. பின் நவீனத்துவ மரபுக்குள் எழுச்சி பெற்ற அனைத்து தொழில்நுட்ப வளர்ச்சியும் நாடுகளை மிக இலகுவாக இணைக் கும் கலாசாரத் திறனைக் கொண்டிருக்கின்றது. சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் உற்பத்திப் பொருட்களே அதிக பிரபல்யமடைந்துள்ளன. இவை ஏற்படுத்தியிருக்கும் கலாசாரம் அந்த நாடுகளின் செல்வாக்கை பிற நாடுகளில் அதிகரிக்க வழியமைத்துள்ளது. மென் அதிகார எண்ணக்கருவின் வளர்ச்சியானது சுமூகமாக நாடுகளை ஒன்றிணைப்பதில் அதிகமான அக்கறை காட்டி வருகின்றது. கலாசாரம் வெகுவேகமாக நாடுகளினால் உள்வாங்கப்படுகின்றது. எந்த மக்களும் நவீன தொடர்பாடலினால் ஒன்றிணைக் கப்படும் போது அந்தந்த நாடுகளின் கலாசார செல்வாக்கு வளர்ச்சியடைகின்றது.

**அரசியல் விழுமியம்**

ஒரு நாடு உள்நாட்டு எல்லைக்குள் கொண்டி ருக்கும் அரசியல் ஆட்சி முறைமையின் இயல்பு பற்றிய அந்நாட்டு மக்களின் நடத்தை மற்றும் அவர்களின் மனோநிலையைக் குறிப்பதே அரசியல் விழுமியமாகும்[11] ஓர் அரசு பின்பற்றும் கொள்கைகளே அதன் நட்பு நாடுகளுக்கும், உறவு கொள்ளும் அரசுகளுக்கும் பரவலாக்க முயற்சிக்கும் அவ்வகைக் கொள்கை சார்ந்தே நாடுகளுக்கிடையிலான உறவு வளர்ச்சியடைவதைக் காணலாம். ஜனநாயக மரபுகளைப் பேணும் அரசுகளின் ஆட்சிமுறைமை உள்நாட்டில் சட்ட ஒழுங்கு முதன்மை அடைவதுடன் மக்கள் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு, மதிப்பளித்து தமது அபிப்பிராயங்களை அல்லது எண்ணங்களை வெளிப்படுத்தும் சூழலைக் கொண்டதாக அமையும் போது மக்களின் விருப்புக்குரியதாக ஆட்சி அமையும். அதனை பிற நாடுகளுடன்

பகிரும்போது அரசுகளுக்கிடையிலான நட்பு வளர்ச்சி அடையும். அதனையே மென் அதிகாரம் முதன்மைப்படுத்துகின்றது. அரசுகளின் உள்நாட்டு ஆட்சிமுறைகளின் இயல்புகளே பிற நாடுகளுக்கும் பரவலாக்கப்படும்.[12] இதில் வலிமையுடைய அரசுகள் கடைப்பிடிக்கும் மனித உரிமைப் பிரகடனங்கள், ஜனநாயக விழுமியங்கள், சட்டவாட்சித் தத்துவங்கள், பிற அரசுகளின் நட்புறவின் முதன்மையான விடயமாகும் சந்தர்ப்பம் அந்த நாடுகளின் மென் அதிகாரக் கட்டமைப்பினை வளர்ச்சியடையச் செய்கின்றது[13].

அரசாங்கங்கள் பின்பற்றுகின்ற கொள்கைகள் மென் அதிகாரத்தின் வலுவான மூலக்கூறாக அமையும் போது ஆட்சி முறைமையும் உறவு முறைமையும் அதிக மென் அதிகாரம் உடையதாகக் காணப்படும். இது பிரஜைகளின் நலன்களை முன்னிறுத்துவதுடன் மக்களின் அரசியல் விருப்புக்களை அமைதியான வழிமுறையினூடாக அடைவதற்கான அணுகுமுறை காணப்படும். அதனால் பிரஜைகளுக்கும் அரசுகளுக்குமான உறவும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதற்கான போக்கும் வளர்ச்சிடையும். இது இன்றைய வல்லரசுப் போட்டியில் ஓரம்சமாக நோக்கப்படுகின்றது. இதனைக் கடைப்பிடிக்கும் அரசுகள் உள்நாட்டில் பேணும் கொள்கைக்கு அதிகப்படியாக வெளி நாடுகளுடன் வெளிப்படைத்தன்மை அதிகம் கொண்டதாக பார்க்க முயலுகின்றன.

கடந்த இரு தசாப்தங்களாக அரசுகளுக்குள் நிலவிய உறவின் மனித உரிமை முதன்மையான அம்சமாக நோக்கப்படுகின்றது. சில அரசுகள் மீதான பொருளாதாரத் தடை மற்றும் வர்த்தகத் தடைகள் அமுலாக்கப்பட்டதுடன் சர்வதேச நிறுவனங்களும் கொடையாளி நாடுகளும் மனித உரிமையினைப் பேணாத நாடுகள் மீது தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்தமை குறிப்பிடதக்க அம்சமாகும். மென் அதிகாரத்தின் பிரதான மூலமான, அரசியல் விழுமியம் அரசுகளின் கொள்கைகளை பிரஜைகள் சார்ந்ததாக உருவாக்குவதில் கவனம் கொள்கிறது. இதனை கடைப்பிடிக்கும் நாடுகளின் உள்நாட்டு அரசியல் ஜனநாயக ஆட்சி மாற்றத்தைக் கொண்டிருப்பதுடன் அதனைக் கடைப்பிடிக்க பிரஜைகளுக்கு வழிசமைப்பதனூடாக ஆட்சி அதிகாரத்தை பலப்படுத்த முயல்கின்றது. இதனைக் கடைப்பிடிப்பதன் மூலம் அரசுகளின் உள்நாட்டு அரசியல் உறுதியடைவதுடன் சர்வதேச மட்டத்தில் அவ்வரசுகளின் இருப்பு நிலையானதாகவும் பார்க்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் அமையமும் அதன் இதர நிறுவனங்களும் நேரடியாக உதவுவதுடன் பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாப்புப் பெறும் நடவடிக்கையில் உதவுகின்றதைக் காண முடிகின்றது. இக் கொள்கையைப் பின்பற்றுவதில் ஐ.நா. சபை மட்டுமன்றி அமெரிக்காவும் அதன் கொள்கைவகுப்பாளர்களும் அரசியல் தலைமைகளும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.[14]

எனவே அரசியல் விழுமியம் பிரஜைகளின் அரசியல் பற்றிய எண்ணக்கருவாக அமைந்த போதும் அதன் வலிமை ஓர் அரசின் வல்லரசுப் போட்டியில் முதன்மை பெறச் செய்கின்றது. அரசாங்கங்கள் கொள்கைகளைச் சார்ந்து பிற அரசுகளின் உறவு பலப்படுத்தப்படும். அதற்கு பிரஜைகளின் அரசியல் பற்றிய அபிப்பிராயம் முக்கியமானது. பிரஜைகளுக்குள் நிலவும் உறவும், புரிந்துணர்வும் அரசுகளை ஒன்றிணைப்பதில் வலிமை செலுத்தும் வல்லமையுடையதாக அமையும்.

**வெளிநாட்டுக் கொள்கை**

மென் அதிகார மூலத்தில் முதன்மையுடையதாக வெளிநாட்டுக் கொள்ளை விளங்குகிறது. ஒரு நாடு பிறநாடுகளுடன் பின்பற்றும் உறவின் கொள்கையின் தன்மையைக் குறிப்பது எனக் கூறிக்கொள்ளலாம். ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்ளை அரசியல், பொருளாதார, இராணுவ, கலாசார கூறுகளின் நலன்களுடன் மேற்கொள்ளப்படுகின்ற போது பிற நாடுகளின் நலன்களுடன் இசைந்து முன்னெடுப்பதாக அமையக்கூடியது[15] அவ்வகை ஈர்ப்புத்தன்மை வெளிநாட்டுக் கொள்கையூடாகவே நிகழக்கூடியது பரஸ்பரம் அரசுகளுக்கிடையே விட்டுக்கொடுப்புக்கள், நெருக்கடிகால உதவிகள்,

பாரிய நன்கொடைகள் தவிர்க்க முடியாத ஒத்துழைப்புக்களாக அமைவது அவசியமானது. பனிப்போர்க் காலத்தில் அமெரிக்காவும், சோவியத்யூனியனும் கடைப்பிடித்த மென் அதிகார வெளியுறவுக் கொள்கைகள் வன் அதிகார அணுகுமுறை சார்ந்ததாகவே காணப்பட்டது. ஆனால்ஒப்பீட்டடிப்படையில்சீனாமிகஅதிகமான மென் அதிகார வெளியுறவுக்கொள்கையில் சேர்த்துக் கொண்டுள்ளது.

வல்லரசு போட்டியிலுள்ள எல்லா சக்திகளும் ஏறக்குறைய பிற அரசுகளை ஈர்க்கும் விதத்திலேயே வெளியுறவுக் கொள்கைகளை மேற்கொள்வது மரபாகப் பின்பற்றுகின்றன. வெளியுறவுக் கொள்கையின் அறிவியலுக்குள் கோட்பாட்டாளர் முதன்மைப்படுத்தும் அம்சமாக சர்வதேச ஒழுக்கவியல் (International morality) பேணப்படுவதுடன் நியாயாதிக்கமுடைய சட்டங்களை அங்கீகரிக்கும் முறைமைகள் அரசுகளின் உள்நாட்டிலும் பிற நாடுகளிலும் கடைப்பிடிக்கும் தன்மை இருத்தல் வேண்டுமேன வலியுறுத்துகின்றன. தன்னாதிக்கம் , சுயநிர்ணயம், பாதுகாப்பு தனிமனித உரிமையை அங்கீகரித்தல், வெளிநாடுகளுக்குரிய பொறுப்பாண்மையை ஒப்படைத்தல் என பல்வேறுபட்ட அம்சங்கள் வெளியுறவுக் கொள்கை கொண்டிருத்தல் மென் அதிகாரத்தின் மூலக்கூறாகப் பார்க்கப்படுவதற்கு காரணமாகிறது.

எல்லா அரசுகளும் வெளியுறவுக் கொள்கைளை வரைவதில்லை என்ற விவாதம் சர்வதேச அரசியல் கோட்பாட்டாளர்களிடம் மேலோங்கியுள்ளது. வல்லரசுகள், பிராந்திய வல்லரசுகள் வகுக்கும் வெளியுறவுக் கொள்கைக்கு இசைவுபடும் அணுகுமுறையை மட்டுமே சிறிய நாடுகள் பின்பற்றுகிறன. இது பனிப்போர்காலத்தில் அதிகம் கடைப்பிடிக்கப்பட்டதை அவதானிக்க முடியும். ஆனால்ஏதோ ஒரு அடிப்படையில்தனித்துவமான வெளியுறவுக் கொள்கைளை பின்பற்ற சிறிய சாதாரண அரசுகள் முனைகின்றன. இதற்கு மென் அதிகாரத்தின் அணுகுமுறையே காரணம் என ஜோசப் நை கருதுகிறார்.[17] அரசுகளும் அரசுகளின் கொள்கைகளும் மாற்றமடைந்து விட்டன. உலகத்தைஈர்க்கும்கொள்கைகளுக்குமுக்கியத்துவம் கொடுக்கும் இயல்பு வளர்ச்சியடைந்துள்ளது. மாறாக இதனைத் தவிர்த்து அரசுகளின் சுயவிருப்புக்கு உட்பட்டு செயல்படுமாயின் அதன் விளைவுகள் மென் அதிகாரத்தை பாதிப்புக்கு உள்ளாக்கும் அடிப்படை அரசியல் நியமங்களை பலவீனப்படுத்தி நாடுகளுக்கிடையிலான நட்புறவினை சிதைக்கும் வழிமுறையாக அமையும். அரசியல் தலைமைகளின் பிரபல்யம் வெளியுறவுக் கொள்கைகளை வகுத்து விடாது மாறாக அபிப்பிராயம் நிர்ணயமானதும் நியாயபூர்வமானதுமான கொள்கைகள், அங்கீகாரம் மிக்க அணுகுமுறைகள் , வெளியுறவுக் கொள்கையின் போக்கினை வலிமைப்படுத்தும். இதனூடாக மென் அதிகார அணுகுமுறை வலுவடையும். இதுவே வெளியுறவுக் கொள்ளையின் பிரதான பங்கெடுப்பாக காணப்படுகின்றது.

சீன ஆய்வாளர்களில் முதன்மையாளரான மிங்லீ, ஜோசப் நை இன் வாதங்களில் முரண்பாடுடையவராகக் காணப்படுகின்றார். காரணம் உலகில் அமெரிக்க , சீன ஆய்வாளர்களே மென் அதிகாரத்தைத் தமது அரசுகள் பின்பற்றுகின்றன என்பதனை ஆதாரபூர்வமாக நிறுவ முயலுகின்றனர். சீனாவும் அமெரிக்காவுமே மென்போக்கு அதிகாரத்தினை அதிகம் கடைப்பிடிக்கும் அரசுகளாக உள்ளன. அதிலும் சீனாவே முன்னிலை பெறுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அமெரிக்காவின் போக்கில் கடந்த காலத்தில் பின்பற்றிய வன் அதிகார அணுகுமுறையையும் அதிலிருந்து வெளிவர முடியாத அரசாக காணப்படுவதனையும் வைத்து நோக்கும் போது ஜேர்மனிய ஆய்வாளரான யூசுப் யேபி என்பவர் அமெரிக்காவின் மென்போக்கு அதிகாரம் என்பது பொருளாதார உதவிகளை விட இராணுவ உதவிகளைத்தான் முதன்மைப்படுத்த முயலுகிறது என விவாதிக்கின்றார். அமெரிக்க மென் அதிகாரம் என்பது பேரரசுக்கான ஆட்சியை கைப்பற்றுவதையே நோக்காகக் கொண்டுள்ளது என அவர் மேலும் விபரிக்கின்றார். பேரரசை ஸ்தாபிக்காது அமெரிக்க சூரியன் அஸ்தமிக்காது

எனக் குறிப்பிடுகின்றார். வரலாற்று ஆய்வாளன் நிகால் புக்கூஷன் பண்பாடும். வர்த்தகப் பொருட்களும் மென் அதிகாரக் கோட்பாட்டின் மூலவேர்கள் எனவும் , மென் அதிகாரம் ஒன்றும் மரபு சார்ந்த வலுவல்ல எனவும் அதனை உருவாக்கு வதும் பின்பற்றுவதும் மிகக் கடினமான அம்சம் எனக் குறிப்பிடுகின்றார்.

இன்னோர் சாரார் மென் அதிகாரக்கோட்பாட்டை மலினப்படுத்தும் வாதங்களை முன் வைக்கின்றனர். அமெரிக்காவுக்கு நிகராக உலகத்தை அமெரிக்க மயவாக்கத்துக்குரியதாக விவாதிக்கின்றனர். ஏறக்குறைய ஜோசப் நையும் அதனைத்தான் முன்வைத்தாலும் நியாயபூர்வமாக வாதிட முயலுகின்றார். அமெரிக்கா மென்போக்கு அதிகாரம் சார்ந்த அணுகுமுறையை அதிகம் பின்பற்ற வேண்டுமெனக் குறிப்பிடும் ஜோசப் நை அதனைப் பின்பற்றத் தவறும் அரசுகள் இருபத்தியோராம் நுற்றாண்டில் நிலைத்திருப்பது கடினமென கூறுகின்றார். இதனால் கடந்த காலத்தில் அமெரிக்கா பின்பற்றிய மென்நோக்கு உபாயங்களை முன்வைத்து விபரிக்கும் ஜோசப் நை, அதனை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை அமெரிக்க ஆட்சியாளருக்கு வலிந்து கூறுகின்றார்.

**மென் அதிகாரத்தின் எல்லை**

கோட்பாடுகள் எவையும் வரையறைக்கு உட்பட்டவையல்ல. அதன்படி மென் அதிகாரத்தின் எல்லை மட்டுப்படுத்தப்படுத்தப்பட்ட தொன்றா கவே உள்ளதெனக் கூறமுடியும். மட்டுப்பாடுடைய எல்லைக்குள்ளே அதிகார குறுக்கம் மென் அதிகாரம் என்ற எண்ணப்பாட்டையும் கட்டுப்படுத்துகிறது. நை குறிப்பிடுவது போல் மென் அதிகாரம் என்ற எண்ணக்கருத்தை கட்டளையூடாகவே கட்டுப்படுத்துவதன் மூலமாகவோ சுருக்கிக்கொள்ள முடியும். பிற நாடுகளை ஈர்ப்பதன் மூலம் அதிகாரத்தைத் தக்க வைக்க முடியுமென்பது கடினமானதாகவே புரியப்படுகிறது. இது அதிகாரத்தை பலப் படுத்துமென்பதையோ உருவாக்கும் என்பதையோ கணிப்பிட்டுக் கொள்ள முடிவது கடினமானது. அதனாலேயே மென் அதிகாரத்தின் எல்லை மட்டுப்பாடு சாத்தியப்படுகின்றது என்ற வாதம் ஆய்வாளரிடம் வளர்ந்துள்ளது. இதனையே ஆட்சியாளர்களும் பின்பற்ற விளைகின்றனர். அதிகாரத்திற்குரிய அணுகுமுறை கட்டளை பிறப்பித்தல். கட்டுப்படுத்துதல் என்ற வரைபுக் குள்ளால் கடந்த நுற்றாண்டு முழுவதும் வளர்ந்துள்ளது. இதனால் வன் அதிகார எண்ணப் பாட்டை உடைத்து விட்டு உலகிலுள்ள எல்லா அரசுகளும் மென் அதிகார எண்ணப்பாடு முற்றிலும் அங்கீகாரமற்ற கோட்பாடென வாதிடவும் முடியாது. பிற அரசுகளை ஈர்க்கும் சக்திகளைப் பின்பற்றிக் கொண்டு மக்களையும் அந் நாடுகளையும் திருப்திப்படுத்தி நட்புறவு வடிவத்தில் கோட்பாட்டை வளர்த்துச் செல்கின்றன.[19] ஆனால் அவற்றுக்கு வலுவான பின்புலமும் அரசியல் இராணுவ பொருளாதார பலமும் அவசியமாகின்றன. குறிப்பாக கடந்த காலத்தில் அவ்வகை அரசுகளின் இராணுவ பலம் மீளவும் அவற்றை வலுமிக்க சக்தகிளாக மாற்றுவதில் வெற்றி காணுகின்றன. அதாவது நட்புறவுக்கு பதில் வன்முறை அதீதமான அணுகுமுறையாகக் காணப்படுகின்றது.

மென் அதிகாரம் எதிர்கொள்ளும் அடுத்த பிரதான சவால் இராணுவ ரீதியான அதிகாரத்தில் அரசுகள் கொண்டுள்ள கரிசனையாகும். இவை ஒரு வரலாற்றை தொடர்ச்சியான விஞ்ஞான பூர்வமாக வளர்ச்சிக்கட்டமாக ஏற்படுத்தி வருகின்றன. மேலும் தகவல் தொழில்நுட்பத்தின் பிரயோகத்தை அதிகமாக இராணுவ தொழில்நுட்ப வளர்ச்சியில் காட்டி வருவது குறிப்பிடத்தக்கதாகும்[20].

பயங்கரவாதம் மிகப் பிரதான சவாலான அம்சமாகக் காணப்படுகின்றது. மென் அதிகாரம் எதிர்நோக்கிய மிகப்பெரிய அபாயம் (9,11) செப்ரெம்பர் 11 தாக்குதலாகும். வரலாற்று ஆய்வாளன் வேல்டர் லாக்குவர் மரபார்ந்த பயங்கரவாதிகள் யாராயினும் அவர்கள் இடது சாரிகளாயினும், வலதுசாரிகளாயினும், தேசிய வாதிகளாயினும், பிரிவினைவாதிகளாயினும் அவர்களின் நோக்கம் பாரிய அழிப்பினை ஏற்படுத் துவதாகும் என்றார். இவர்களிடம் மென் போக்கு

அணுகுமுறை ஒருபோதும் காணமுடியாது. மென் அதிகாரத்தின் மிகப் பிரதான சவால் பயங்கரவாதம் என்பது தவிர்க்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இதனோடு இஸ்லாமிய தீவிரவாதம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. அல்னைஹய்தா ஏறக்குறைய 60 நாடுகளுக்கு மேல் கிளைகளைக் கொண்டு இயங்குவது சர்வதேச மட்டத்தில் இராணுவ ரீதியான சவாலாக மாறியுள்ளது. வல்லரசுகளின் அதிகாரப் போட்டி மென் அதிகாரத்தின் சவாலாகி விட்டது.

பிராந்திய அரசுகளையும் அரசுகளுக்கிடையிலான மோதலையும் தூண்டிவிடுவதுடன் தமது அரசியல் இலாபத்துக்காக அரசுகள் மீது இராணுவத் தாக்குதலைப் புரிவது அதிகரித்த நெருக்கடியாகியுள்ளது. அமெரிக்க இராணுவம் ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் நடத்திய தாக்குதல் ஐக்கியநாடுகள் சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டாலும் அதன் உத்தியும், உபாயமும் அமெரிக்க இராணுவ நலனாகவே பார்க்கப்படுகின்றது. அமெரிக்க தாக்குதலை இஸ்லாமிய மக்கள் மௌனமாக நிராகரித்ததை தகவல்கள் வெளிப்படுத்தியிருந்தன. இது ஒரு வகையில் மென் அதிகாரக் கோட்பாடு குறிப்பிடுவது போல் மக்களின் அபிப்பிராயமாகவே பார்க்கப்படுதல் வேண்டும். இஸ்லாமிய மக்களின் அபிப்பிராயத்தை மட்டுமல்ல உலக மக்களின் அபிப்பிராயத்தையே அமெரிக்கா நிராகரித்து போரைப் பிரயோகித்தது.

**முடிவுரை**

சர்வதேச அரசியல் என்பது அதிகாரத்திற்கான அரசியலாகும். அதன் வடிவங்கள் மாறலாம். ஆனால் அரசுகளுக்கு அதிகாரம் என்ற இலக்கும் அடையப்படும் கோட்பாடாகவே விளங்குகிறது. இங்கு அரசு என்ற நிறுவனம் மேலும் பலப்படுத்தப்படுகின்றது. பொருள்சார் அரசுகளும், மென்போக்குடைய தொழில்நுட்பங்களுக்கான அரசுகளாகவும் காணப்படுகின்றன. இந்த வகை அரசுகளின் எண்ணிக்கையும் பலமும் அதிகரித்துள்ளது. அவற்றின் ஆயுளை நீடிக்கும் உள்கட்டுமானமும் தேசிய ஒருங்கிணைப்பும் தவிர்க்க முடியாத எழுச்சியை ஏற்படுத்தவுள்ளது. இத்தகைய தேசிய அரசுகளின் எழுச்சிகளுக்கு எதிராக தோற்றம் பெற்ற புரட்சிகள் அனைத்தும் தகர்ந்து போவதுடன் குறிப்பிடப்பட்ட பிரதேசத்தில் அதற்கான இழுபறி அதிகப்படியான பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த நூற்றாண்டின் அரசியல் மென் அதிகாரம் என்ற தளத்தை நோக்கி விரிவடையவுள்ளது. இது ஒருவகையில் புதியது. இதனைப் பின்பற்றும் சக்திகள் ஆரோக்கியமான புதிய தளத்தை ஏற்படுத்தி அரசுகளை பொருள் சார் உலகத்தில் சமப்படுத்த முடியும். ஆனால் அதனை செய்யும் நிலையை அமெரிக்கா தலைமையிலான மேற்கு அரசுகள் அனுமதிக்குமா என்பதே முக்கிய கேள்வியாகும். இந்தக் கேள்வி மறுதலிப்பான பலவீனங்களின் கூட்டணி உலகத்தை உருவாக்க வாய்ப்புள்ளது. அதுவும் மீள ஒருங்கிணையும்போது அதிகாரம் பலமானதாக மாறும் நிலை தவிர்க்க முடியாததாகும்.

**அடிக்குறிப்புகள்**

1. Citied joseph S.Nye.(Jr) Power in a Global information Age.Routlede 2004.P.53
   Joseph Nye 1990 இல் Bound to lead The Changing Nature of American Power என்ற நூலின் மூலம் கோட்பாட்டினை உலகத்திற்கு தெரியப்படுத்தினார். இந்நூலில் Nye அமெரிக்காவின் soft power அணுகுமுறை பற்றிய வாதத்தினை முன்வைத்து விட்டு அமெரிக்காவின் அவ்வகை கொள்கையின் வரலாற்றைத் தெளிவுபடுத்தியிருந்தார்.
2. கேரீ.கணேசலிங்கம். சமகால அரசியல், கல்வியியல் வெளியீட்டு நிலையம், யாழ்ப்பாணம், 2005, ஏப்ரல், பக் - 24
3. Bonnie.S.Glaser and Melissa E.Murphy, Soft Power with Chinese Characteristics, The on Going Debate. foreign Affairs march, April 2011. pp80 - 91

4. Mingjiang Li (Ed) soft power. China`s Emegring in international politics, Lexington books, Rowman and littlefield publishers, Uk 2009.p.01
5. Joseph S.Nye (jr) Soft Power. The Means to Success In world Politics, public Affairs, NewYork , 2004.p.08
6. Ibid. p.06
7. Joseph S.Nye, The future of Power. New York, Public affairs, 2011, P.21
8. Ibid. P.21
9. Ibid. P.21
10. Joseph Nye, P.85
11. KT.Ganeshalingam, ThennasiyavinArasiyal Kalasaram (in Tamil) Chemamadu Poththakasalai. colombo. 2008, P.13
12. Joseph Nye The Future of Power .P.85
13. Joseph Nye "soft Power" P.13
14. Ibid Pp12 - 15
15. Joseph Nye P.11
16. Ibid.P . 11 - 15
17. Ibid. P.17
18. Ibid. P.15
19. Ibid. P.16
20. Ibid.P.21
21. Parama Sinha palit, and Amitendu pelit Strategic influence of Soft power inferences For india From Chinese Engagament of South And south Wast Asia, ICRICER, policy series NO - 03. August, 2011 .P.5

# காலனிய யாழ்ப்பாணத்தில் சுதேச உயர்குழாமினர்:

## மரபும், உருமாற்றமும் பற்றிய ஒரு வரலாற்றுச் சமூகவியல் பார்வை

இராஜேஸ்வரன் இராஜேஸ்கண்ணன்

**ஆய்வுச்சுருக்கம்**

*சமூகவியல் ஆய்வுகளில் வரலாற்றுச் சமூகவியற் புலம் சார்ந்த ஆய்வுகள் தனித்துவம் மிக்கவையாக விளங்குகின்றன. வரலாற்றுச் சமூகவியல் ஆய்வுகள் ஒரு குறித்த காலகட்டத்தின் சமூகத்தின் இயக்கம் மற்றும் அசைவியக்கத்தின் போக்குகளை வெளிக்கொணர்கின்றன. இந்த ஆய்வும் ஒரு வரலாற்றுச் சமூகவியல் ஆய்வாக அமைவதால் இலங்கையில் காலனித்துவ காலத்தில் நிகழ்ந்த சமூக உருமாற்றம் ஒன்றினை வெளிக்கொணர்கிறது. இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காலனிய ஆட்சியின்போது சுதேச உயர்குழாமினராக விளங்கிய முதலியார்களிடத்தில் நிலவிய மரபார்ந்த அம்சங்களில் ஏற்பட்ட உருமாற்றங்களை சமூகவியல் கோட்பாடுகளின் பின்புலத்தில் ஆய்வுசெய்கின்றது. அத்துடன் காலனித்துவ காலத்தில் சுதேச உயர்குழாமின் உருவாக்கத்திற்குப் பின்புலமான காரணங்கள் குறித்தும் விளக்குகின்றது. உயர்குழாம் உருவாக்கம் தொடர்பான சமூகவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் வரலாற்று நூல்கள் முன்னைய ஆய்வுத்தகவல்கள் என்பவற்றின் துணையுடன் யாழ்ப்பாணத்தில் சுதேச உயர்குழாமின் உருமாற்றம் சமூக உருமாற்றத்தின் ஒரு கூறாக விளக்கப்பட்டுள்ளது.*

**திறவுச்சொற்கள் :** சுதேச உயர்குழாமினர், முதலாளித்துவ தாக்க நிலை, ஏறுநிரல் கட்டமைப்பு, உயர்குழாமினர், காலனித்துவ அதிகாரம்

ஒரு சமூகத்தில் அதிகாரம், பொருளாதார பலம், சமூக அந்தஸ்து, மரபுரிமைகள், பதவி நிலைகள், அரசியல் செல்வாக்கு, கல்வி அறிவு முதலியவற்றின் துணையுடன் உயர்குழாம் உருவாக்கம் நிகழ்வது ஒரு பொதுவான செயன்முறையாகும். இந்த உயர்குழாமினர் பிரதேச பண்பாட்டு அம்சங்களால் வேறுபடுகின்றனர். எனினும் அவர்களின் பண்புகள் உலகப் பொதுநிலைக்குரியவை. உயர்குழாமினரின் உருவாக்கத்திற்குப் பின்புலமான காரணிகள், அவர்களின் சமூக முதன்மை என்பன குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டிய தேவை உள்ளது. வரலாற்றுச் சமூகவியல் (historical sociology) அடிப்படைகளில் நின்று இத்தகைய உயர்குழாமினரை ஆய்வு செய்வது மிகவும் அவசியமான ஒரு சமூக வரலாற்று ஆய்வுத் தேவையாகின்றது.

வரலாற்றுச் சமூகவியலில் ஆய்வுகளை மேற்கொள்கின்றபோது அதற்கான முறையியல்களும் தரவு சேகரித்தலுக்கான வழிமுறைகளும் வரலாற்று நிலைப்பட்டவையாகவே அமைகின்றன. ஒரு காலவோட்டத்தின் பதிவுகளுக்கூடான விவரணப் பகுப்பாய்வு இன்றியமையாததாகின்றது. இங்கு பின்காலனிய சமூக மாற்றத்தினை விளங்கிக் கொள்வதற்காக காலனியத்தின் முன், பின்னான ஓர் ஒப்பியல் நோக்கினை மேற்கொள்வதற்காக வரலாற்றுப் பதிவுகள் தகவல் மூலங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. அவ் வரலாற்றுத் தகவல்களை காலனிய மற்றும் பின்காலனிய சமூக உருமாற்றம் தொடர்பான சமூகவியல் கோட்பாட்டு விளக்கங்களின் அடிப்படையில் புரிந்துகொள்ள முனைகின்றது.

உயர்குழாமினரின் இயல்புகளை விளக்க முனைந்த ஹாரல்ட்.டீ.லாஸ்வெல் 1952 இல் இதுபற்றி எழுதும் போது "ஒரு குறிக்கப்பட்ட சமூகத்தில் உயர்தகுதி நிலையினை உடையவர்களென வகுக்கத்தக்க, விவரிக்கத்தக்க தகுதிநிலை அளிக்கத்தக்கவர்கள் உயர்குழாமினர் என எண்ணக்கருப்படுத்தப்படுகின்றனர். அவர்களின் விழுமியங்களுக்கு அமைவாக பல்வகைப்படுவர். அதிகாரஉயர்குழாமினருக்கு(அரசியல்உயர்குழாம்) அப்பால் செல்வம், மதிப்பு, அறிவு (பெயரிடத்தக்க ஆனால் சொற்ப) சார்பான உயர்குழாமினரும் உளர். லாஸ்வெல்லினால் கூறப்பட்ட இந்த உயர்குழாம் விழுமியங்கள் அண்மையில் மேலும் எட்டுவகைப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக அதிகாரம், அறிவெழுச்சி, செல்வநிலை, நன்னிலை, (சுகநலம், பாதுகாப்பு மற்றும் மனிதனின் சௌகரிய நிலை) திறன், கவர்ச்சி/ ஈர்ப்பு, மதிப்பு மற்றும் நேர்மை என்பவை"[1] என்று குறிப்பிடுகின்றார். இவர் மேலும்தன்கருத்தினை விளக்குகையில், உயர்குழாம் சமூகக் கட்டமைப்பானது அதன் அடிப்படை விழுமியங்களை மாத்திரம் பிரதிபலிப்பதில்லை. அத்துடன் சமூகம் ஒன்றின் தீர்மானம் எடுத்தல் செயன்முறை மற்றும் அதிகாரக் கட்டமைப்பினைத் திடமாக வெளிப்படுத்துதல் என்பவற்றை நோக்கி அந்த அடிப்படை விழுமியங்களை விரிவுபடுத்தும் என்றார். இந்த விழுமியங்களின் ஒரு வகைமையாகத்தான் சமூகத்தின் தலைமைத்துவம் உருவாகின்றது. இந்தப் போக்கில் தான் தலைமைத்துவம் தெரிவுசெய்யப்படுகின்றது. அத் தலைமைத்துவம் சமூகத்தின் உயிர்மூச்சின் அடித்தளத்திலிருந்து தேர்வு செய்யப்படுகின்றது. இதனால் தான் தீர்மானம் எடுத்தலுக்கான அதிகார[20] செயற்படுத்தப்படுகின்றது. இக்கருத்தின் வழியே ஒரு சமூகத்தின் தலைமைத்துவம் உயர்குழாம் விழுமியங்களின் வழியாக எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றது என்பதை புரிந்து கொள்ளலாம்.

மரபுசார்ந்த சமூகம் ஒன்று விழுமிய கட்டமைப்பில் ஒருமுகத்தன்மை உடையதாக அமையும். அத்தகைய சமூகங்கள் மரபார்ந்த வகையில் மூடப்பட்டவை என்பதால் அதனுள் சொற்ப விசேடத்தத்துவங்களே (specialization) அமையும். இதனால் அந்த சமூகத்தின் உயர்குழாமினரிடையே அதிகளவு வகைமைகளோ அல்லது வேறுபட்ட மட்டங்களோ அமைவதில்லை. அந்த சமூகங்களின் உயர்குழாமினர் மூடப்பட்ட குழுவினராக விளங்குவர். அவர்களின் அந்தஸ்து மரபினால் வழிவந்த அந்தஸ்தாக (ascribed status) அமையும். இந்த அந்தஸ்து பிறப்பு, இரத்த உறவு மற்றும் வயதினால் வழிவந்ததாக அமையும். இது அவர்களிடத்தே ஒரு பிரபுத்துவப் போக்கினை உருவாக்கும். அவர்களில் ஒரு பகுதியினர் மாத்திரமே வியாபாரம், வணிகம் போன்ற வேறு தொழில்களுக்குச் செல்கின்றனர். மரபார்ந்த உயர்குழாமினரின் உலக நோக்கானது மறைபொருள் பற்றிய தேடலிலும் தத்துவார்த்த இலட்சியத்திலும் வேரூன்றியுள்ளது. இவர்களிடம் கைவினைத் தொழில்நுட்ப வேலைகள் தொடர்பான அலட்சியப் போக்கு உள்ளது. கைவினைத் தொழினுட்ப வேலைகள் குடியானவர்களுக்குரியதெனக் கருதுகின்றனர். இது சமூகத்தின் பொருள்சாராந்த மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் தொடர்பானஇவர்களின்சிந்தனைகளில்புத்தாக்கம் மற்றும் புனைவாக்கத்திலான தேக்கநிலைக்கு வழிசமைக்கின்றது. மரபார்ந்த சமூகங்களின் உயர்குழாமினர் உளவியல் ரீதியாக ஆக்கிரோசம் (aggressive) மற்றும் அந்தஸ்துசார் பதற்றநிலை (status anxiety) தொடர்பான ஆழவேரூன்றிய உணர்வுப் பீடிப்பு உள்ளவர்களாகவும் இருப்பர். இவர்களின் உளம்சார் நகர்ச்சித் தன்மைக்கும் (psychic mobility), பரிவுக்குமான (Empathy) திறன் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும்[2].

யாழ்ப்பாணத்தில் இத்தகைய இயல்புகள் உள்ள நிலஉரிமை, அதிகாரம், அரசியல்பலம், பணபலம் உள்ள ஒரு உயர்குழாமினர் வாழ்ந்திருந்தனர். இவர்கள் சமூகத்தில் எவ்வாறு தொழிற்பட்டார்கள்? இவர்களின் சமூக அதிகாரங்கள் எவை? இவர்களிடத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எத்தகையவை? இவர்களின் நிலைபேற்றுக்கும் மாற்றங்களுக்குமான பின்னணி விசைகள் எவை? என்பன குறித்து இந்தக் கட்டுரை தெளிவுபடுத்த முனைகின்றது.

யாழ்ப்பாணத்தில் 19ம் நூற்றாண்டின் முன்னர் தோன்றிய சுதேச உயர்குழாமினர் (native elites) பெரும்பாலும் அதிகார மையமாகவே தோன்றினர். அவர்கள் யாழ்ப்பாண மன்னர் காலத்தின் தொடர்ச்சியாக அமைந்தனர். இதனால் போத்துக்கேய மற்றும் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலங்களில் இவர்கள் நிர்வாக மற்றும் அரச கடமைகளில் அமர்த்தப்பட்டனர். அதிகார மையமான இந்த உயர்குழாமினரின் உதவியின்றி அவர்களின் ஆட்சி, நீதிபரிபாலனம், நிர்வாக ஒழுங்குகள் என்பவற்றைச் சரிவரச் செய்யவியலாதிருந்தது. அதேநேரத்தில் இந்த உயர்குழாமினரில் சிலர் ஆட்சியாளர்களின் விசுவாசிகளாகவும் மாறிவிட்டனர். இதனால், அவர்களின் சமூக அந்தஸ்தும் உயர்நிலையும் தொடர்ந்துபேண வழி ஏற்பட்டது.

யாழ்ப்பாண சமூகத்தில் அன்றிருந்த முதலியார்கள், றெசிபுதோர்கள் (recebedore) கண்காணிகள், உடையார்கள், தலையாரிகள் போன்றவர்களும் அவர்களின் குடும்பங்களில் தோன்றியவர்களும் உயர்குழாமினராக விளங்கினர். இந்த உள்ளூர் உயர்குழாமினர் எந்தளவிற்கு ஆட்சியாளர்களுக்கு விசுவாசமாக இருந்தனரோ அந்தளவிற்கு ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டி கிளர்ச்சிகளைச் செய்யும் வலுவும் உடையவர்களாக இருந்தனர். இதனாற்றான் ஆட்சியாளர்கள் இவர்களுடன் இணங்கிப் போகும் நிலையில் இருந்தனர். பதவிநிலையினாலும் இவர்கள் சமூகத்தில் மேனிலை பெற்றிருந்தனர்.

போத்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரின் நிர்வாகமுறை பழமையினைப் பின்பற்றியிருந்தது. சுதேசிகளின் ஆதரவுடன் செலவுகளின்றி அது தொடரப்பட்டது. அக்காலத்தில் 'அதிகாரி' என்று ஒரு பதவிநிலை இருந்தது. இருவகை அதிகாரிகள் காணப்பட்டனர். "அவர்களில் ஒருவகையினர் பிரதேசவாரியான நிர்வாகத்திலே தலைமைப் பதவியினையும் பொறுப்புக்களையும் கொண்டிருந்தனர். மற்றொரு வகையினர் சமூகப் பிரிவுகள் சிலவற்றோடு தொடர்புடைய பொறுப்புக்களைப் பெற்றிருந்தனர். தச்சர், கொல்லர், வண்ணார், நளவர், கைக்கோளார், கரையார் என்னும் சாதிப்பிரிவினரின் தலைவர்களாக அதிகாரிகள் இருந்தனர். அரசாங்கப் பொறுப்புக்களையும் அரசாங்கத்துக்கு அவர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய வரிகள், சேவைகள் என்பவற்றையும் கவனித்தல் அவர்களின் பொறுப்பாகும்."[3]

யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்தில் முதலியார் பதவி முக்கியமானது. சமுதாயச் செல்வாக்கு, அரச விசுவாசம், நிர்வாக அனுபவம் உள்ளவர்கள் முதலியார்களாக நியமிக்கப்பட்டனர். ஆட்சியாளர்கூட முதலியார்களின் ஆலோசனைகளைப் பெற்று வந்தனர். இலங்கைத் தமிழரிடையே 'முதலியார்கள்' பொதுநிர்வாகம், நீதிநிர்வாகம், இராணுவச் சேவைகளில் ஈடுபட்டிருந்தனர். 'றெசிபுதோர்' என்ற பதவி போத்துக்கேயர் காலத்திலிருந்து வழங்கி வந்துள்ளது. அரசாங்க வரிகளைச் சேகரிப்பவர்களாக இவர்கள் அமைந்தனர். இவர்கள் செல்வாக்குமிக்க குடும்பப் பின்னணியிலிருந்து தோன்றியவர்கள் இவர்களுடன் நெருங்கிய தொடர்புபட்ட பதவியாக 'பண்டாரப்பிள்ளைகள்' அமைந்தனர். இவர்கள் வரிசேகரிப்பதில் றெசிபுதோர்களுடன் சேர்ந்து பணியாற்றினர். 'கண்காணிகள்' இறைவரி நிர்வாகத்தில் பணிபுரிந்தனர். கிராமத்தலைவராகப் பணிபுரிந்த 'தலையாரி' யைவிட சற்று முக்கியம் வாய்ந்த பதவியாக 'உடையார்' பதவி அமைந்தது. உடையார்கள் களவு, கொள்ளைகளைத் தடுப்பது, அமைதியை நிலைநாட்டுதல், ஊரைக் காவல் செய்தல் முதலியவற்றைச் செய்தனர்.

இந்தப் பதவிநிலை ஒழுங்கமைப்பானது மேலிருந்துகீழான அதிகார ஒழுங்கமைப்புக்களுடன் இயங்கின. யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் ஐரோப்பியர் வருகைக்கு முந்தியே இவ்வாறான ஒரு ஒழுங்கமைப்பு நிலைபெற்றிருந்தது. நிர்வாக ஒழுங்கமைப்பில் இது முறைப்படுத்தப்பட்ட ஒரு பணிக்குழு (bureaucracy) அமைப்பாகத் தொழிற்பட்டிருந்தது. இப் பணிக்குழு அமைப்பு

எளிதான நிர்வாக ஒழுங்கைப் பேணுவதற்கு துணையானதுடன் அதிகாரத்தின் தொடர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்தது.

யாழ்ப்பாணத்தில் 19ம் நூற்றாண்டில் நிலவிய ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் ஒரு முதன்மையான உருமாற்ற காலமாகும் (transformative period) அக்காலத்தில் உருவான 'மத்தியதர வர்க்கம்' குறிப்பிடத்தக்கது. அவ்வாறே இலங்கை முழுவதும் ஒரு 'முதலாளித்துவத் தர்க்கநிலை' (capitalist rationality) யினைத் தன்னகத்தே கொண்ட உயர்குழாம் பிரிவினர் வளர்ச்சி பெற்றனர். அவ்வாறு வளர்ச்சி பெற்ற பிரிவினர்களில் முதலியார்கள் முக்கியமானவர்கள். இவர்களின் உருவாக்கம் மற்றும் எழுச்சி இலங்கையின் சமூக பண்பாட்டு வரலாற்றில் ஒரு முதன்மையான நிகழ்வாகும்.

முதலியார்கள் பொதுவாக நிலவுடைமையாளர்களாக இருந்தனர். இவர்கள் பிரித்தானியர்கள் உருவாக்கிய நிலவுடமையாளர்கள். இவர்கள் ஆங்கில அரசுடன் அண்டியிருந்து பதவிகள், பட்டங்கள், அதிகாரங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள். இலங்கையில் முதலியார்கள் என்ற உயர்குழாமினர் பற்றி பலர் ஆய்வு செய்துள்ளனர். மைகல் றொபேட்ஸ் என்பவர் caste conflict and elite formation (1995) என்னும் ஆய்வினைச் செய்துள்ளார். அவ்வாறே குமாரி ஜெயவர்த்தனாவின் ஆய்வுகளில் Nobodies to Some bodies : The rise of colonial bourgeoisie in Sri Lanka என்ற ஆய்வில் முதலாளிவர்க்கமாக முதலியார்கள் குறித்து விளக்குகின்றார். இவ்வாறே Social change in nineteenth century Ceylon (1995) என்ற பற்றிக் பீபிள்ஸ் இன் ஆய்வு 19ம் நூற்றாண்டின் இலங்கையின் முதலியார்கள் குறித்து வெளிப்படுத்துகின்றது. இத்தகைய ஆய்வுகளில் பெரும்பாலானவை இலங்கையின் சிங்கள மக்களிடையே நிலவிய பிரதேசங்களில் உயர்குழாம் முதலியார்கள் தொடர்பாக விளங்குகின்றன.

'முதலியார்' என்ற சொல் (chieftain) ஒரு ஆதி திராவிடச்சொல். இது 'முதல்' என்ற சொல்லிருந்து வந்தது. சிங்களத்தில் 'முதலி பேருவா' என்பது முதலியார்களின் தொகுதியை அல்லது முதலியார் வர்க்கத்தினைக் குறிக்கின்றது. 'முடியான்சி' என்பது சிங்களத்தில் வழமையாக ஒரு தனிப்பட்ட முதலியாரையே குறிக்கின்றது. தென்னிந்தியாவில் முதலியார் என்பது குறித்த தமிழர்களின் சாதி ஒன்றுக்கான தனியாளை அடையாளப்படுத்தும் ஒரு பொதுப்பின்னொட்டாக அமையும்[4]. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் 'முதலியார்' என்பது ஒரு சாதிப்பெயராக அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளது5. என்று குறிப்பிடுகின்ற போதிலும் யாழ்ப்பாணத்துச் சாதிய உயர்நிலை அதிகாரங்களின் உயர்நிலைப் பிரதிநிதிகளாக கல்வி, உத்தியோக வாய்ப்பில் உயர்நிலை வகித்தவர்களாக இவர்கள் விளங்கியிருந்தனர். பொதுவாக இவர்கள் தலைமைத்துவம், தீர்மானம் எடுக்கும் அதிகாரம், வழங்கப்பட்ட மதிப்பு, வழங்கப்பட்ட நன்னிலை, வழங்கப்பட்ட பாதுகாப்பு என்பவற்றை உள்ளடக்கியவர்களாக விளங்கினர்.

யாழ்ப்பாணத்தைத் தமிழ் அரசர்கள் ஆண்ட காலத்திலிருந்து வேளாள சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ராயன், அதிராயன், முதலி என்ற பட்டப்பெயர்கள் வழங்கிவந்தன. ராயன் என்ற தமிழ்ப்பெயரில் King என்ற ஆங்கிலப் பதத்தின் பொருள் அமைந்திருந்ததால் அவர்கள் கர்வமடைவர் எனக்கருதிப் போத்துக்கேயர் Don என்ற பெயரைச் சேர்த்துக் கொண்டனர். 19ம் நூற்றாண்டின் முன்னர் முதலியார்களின் கடமைகளென மேலே நோக்கப்பட்ட விடயங்களில் ஆங்கிலேயர் இந்த உயர்குழாமினருக்கு நைட் பட்டம், CMG பட்டம், முதலியார் பட்டம், சமாதான நீதிபதிப் பட்டம் என்பவற்றை வழங்கியிருந்தமை அந்தக்கால சமுதாயத்தின் அடுக்கமைப்பில் அவர்கள் பெற்ற இடத்தினைப் புலப்படுத்துகின்றது. சவரிமுத்து முதலியார், கனகரத்தினம் முதலியார், குமாரகுலசிங்க முதலியார், முருகேசப்பிள்ளை முதலியார், அரசர்கோன் முதலியார், உயரப்புலம் சின்னையாமுதலியார், இலங்கை நாயக முதலியார், ம. முத்துக்குமாரசாமி முதலியார், இராமலிங்க முதலியார், நாகலிங்க முதலியார் போன்றவர்களின் பெயர்கள் குறிப்பிடத்தக்கவை.

சமுதாயத்தின் அதிகாரம், கௌரவம், செல்வந்தநிலை என்பவற்றில் உயர்ந்தவர்களாக இவர்கள் விளங்கினர். பிரித்தானிய வர்த்தக நிறுவனங்களுடனும் காலனித்துவ அதிகாரத்துடனும் (colonial bureaucracy) உள்ள இணைப்பினால்[6] உருவான இலங்கையின் வர்த்தக முதலாளித்துவத்தினருடன் ஒப்பிடும்போது முதலியார்கள் பழம் பெருமைவாய்ந்த பணக்காரர்களாக விளங்கியிருந்தனர். இலங்கையில் வளர்ந்த வணிக முதலாளித்துவப் பிரிவினர் பெருந்தோட்டத்துறை, சாராய விற்பனை என்பவற்றால் உருவானவர்கள். ஆனால் முதலியார்கள் இந்த வணிக முதலாளித்துவத்துக்கு முன்பே செல்வாக்குமிக்க பிரிவினராக தோன்றிவிட்டனர்.

தமிழ்ச்சமூகத்திலும் சிங்களச்சமூகத்திலும் முதலியார்களின் வரலாறு மிகப்பழமை வாய்ந்தது. முதலியார்கள் பல கடமைக் கூறுகளைக் கொண்டவர்கள். வரிசேகரிப்பவர்க்கு உதவுதல், தகராறுகளை விசாரித்து நீதிவழங்குதல், தேச வழமைகளைப் பேணுதல், மாகாண நிலைமைகள் தொடர்பாக அதிகாரிகளுக்கு அறிக்கை சமர்ப்பித்தல் போன்றன முக்கியமான சில கடமைகளாகும். இந்தக் கடமைகள்தான் அவர்களின் அதிகாரம் மற்றும் சமூக கௌரவத்திற்குக் காரணமாயின. இந்த அதிகாரங்கள் 19ம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே மரபுவழியாக வந்தவை. ஆயினும், 1833 இல் கோல்புறூக் கமரூன் சீர்திருத்தத்தின் விளைவாக அவர்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. "கோல்புறூக் கமரூன் சீர்திருத்தங்களின் முன்னர் பிரித்தானியர்கள் முதலியார்களைச் சிங்கள சமூகத்தின் சட்டபூர்வமான பிரதிநிதிகளாக அங்கீகரித்ததன் வழி அவர்களின் அதிகாரத்தினை மேம்படுத்தியிருந்தனர். 1833இன் பின்னர் இலங்கையில் நிலவிய பிரித்தானிய அரசு இந்த சட்டபூர்வ அங்கீகாரத்தினை வாபஸ் பெற்றது. எல்லாப் பொறுப்புக்களும் மறுக்கப்பட்டதுடன் மிகச்சாமானியர்களாகப் பார்க்கப்பட்டனர். கோல்புறூக் - கமரூன் சீர்திருத்தத்திற்குப் பின்னான சந்ததியில் முதலியார்கள் அலுவலராக இருந்து அடக்கி ஆளும் அதிகாரம் தொடர்ந்தது. ஆனால், அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்ட வேறுபாடுகள் குறைக்கப்பட்டன. முதலியார் பதவிக்கான போட்டியிடும் நிலை புதிய சமூகக் குழுவினருக்கும் திறந்து விடப்பட்டது. முதலியார்களில் ஒரு சிறு தொகையினர் உயர்குழாமினர் அல்லாதவர்களால் கௌரவமாக அபகரிக்கப்பட்டனர்[7] இக்கருத்தின்படி முதலியார் பதவி புதிய குழாமினருக்கு திறந்து விடப்பட்ட நிலைமை என்பது ஒரு முக்கியமான சமூக உருமாற்றம் தான் எனினும், அந்தப் புதிய குழு என்பது கூட யாழ்ப்பாணத்தில் மாத்திரமின்றி ஏனைய இடங்களிலும் சாதி, பொருளாதாரம் மற்றும் சமயம் என்பவற்றினால் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மாத்திரமின்றி ஏனைய பிரதேசங்களிலும் முதலியார் வகுப்பினர் சாதிநிலையில் உயர்ந்தவர்கள். சாதி முதலியார்களின் அதிகாரத்தினைத் தீர்மானித்திருந்தது. முதலியார்களின் குடும்பங்கள் மரபுவழியான நிலவுடையாளர்களாக இருந்தனர். இதனால் பொருளாதார பலம் மிக்கவர்களாக இருந்தனர். மக்ஸ் வெபரின் கருத்தின்படி "அதிகாரம் நிலைத்திருத்தலுக்கான விளைவாக பொருளாதார அதிகாரத்தின் எழுச்சி காரணமாக அமையலாம். மனிதர்கள் தம்மைத்தாம் பொருளாதார ரீதியில் செழுமைப்படுத்துவதில் மட்டும் அதிகாரத்துக்காக போட்டிபோடுவதில்லை. அதிகாரம் என்பது அதற்குரிய சொந்த மதிப்பாக பொருளாதார வலுவையும் உள்ளடக்கியதாக பெறுமானம் அளிக்கப்படலாம். வழமையாக சமூக கௌரவத்தினாலும் அதன் பயனாலும் தான் அதிகாரத்துக்கான போட்டி தொடரப்படுகின்றது". எல்லாவகை அதிகாரம் இல்லையாயினும், சமூக கௌரவத்தின் பயனாகவே முதலியார்கள் பொருளாதார பலம் மாத்திரமன்றி சமூக கௌரவம் மிக்கவர்களாக விளங்கினர். சுதேச பண்பாட்டு அம்சங்களைத் தங்களோடு இணைத்துக் கொண்டவர்களாக ஆங்கிலேயர் காலத்தில் அவர்கள் வாழ்ந்தனர். முதலியார்களின் சமூகப் பெறுமானத்தை சாதி, கல்வி, பொருளாதாரபலம், சமய ரீதியான கௌரவங்கள் என்பன தீர்மானித்திருந்தன. சாதி அதிகாரத்தைப் பேணும் மையங்களாக சமய நிறுவனங்கள் தொழிற்பட்டன. யாழ்ப்பாணத்தில்

சைவசமய மரபுகளைப் பின்பற்றும் குடும்பங்களி லிருந்து தான் முதலியார்கள் வந்தனர். "சமத்துவம் அற்ற அல்லது அடுக்கமைக்கப்பட்ட சமூகக் கட்டமைப்பினைஏற்கனவேதம்மகத்தேஉள்ளடக்கி விட்ட இந்து சமயத்துக்கு முன்பே பௌத்தம் ஆகக்குறைந்தது மேற்பரப்புக்காயினும் சமத்துவக் கருத்து நிலைகளைக் கொண்டு வந்தது"[8] இந்தக் கருத்தின் பிரகாரம் சமூகத்தில் நிலவும் "ஏறுநிரல் கட்டமைப்பின்" (hierarchized social structure) ஒரு விளைபொருளாகத்தான் முதலியார்களை நோக்க முடியும். 19ம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் முதலியார்கள் சைவசமயப் பின்னணியில் தான் தமது அதிகாரத்தினை நிலைநாட்டினர். 19ம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் சைவத்திலிருந்து கிறிஸ்தவத்துக்கு மதம் மாறியவர்கள் கூட அதிகாரம் தரும் ஒரு அம்சமாகவே தமது மதமாற்றத்தினைக் கருதினர். அவ்வாறு மதம் மாறியவர்களின் சமூக அதிகாரத்தின் தொடர்ச்சித் தன்மை கிறிஸ்தவ சமயத்தினால் தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் முதலியார்களின் அதிகாரம், கௌரவம் என்பவற்றின் நிலைபேற்றினைத் தீர்மானிக்கும் அம்சமாகச்சமயம் விளங்கியதைப் புரிந்து கொள்ள முடியும்.

சமயம் மற்றும் பண்பாட்டு ரீதியான அடையா ளங்களோடு செல்வாக்குப் பெற்ற குறித்துச்செல்லக் கூடியசிலர்யாழ்ப்பாணசமூகத்தின்உருமாற்றத்தின் தனியாளுமை விசைகளாகத் தொழிற்பட்டனர். சேர்.பொன்னம்பலம் இராமநாதன், சேர். பொன் அருணாச்சலம் போன்றவர்களின் கல்வி, சமயம், அரசியல், ரீதியான செயற்பாடுகளுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளில் ஒன்று பொன்னம்பல முதலியாரின் சமூக கௌரவமே. சேர். பொன். அருணாச்சலம் அவர்கள் Ceylon civil service (CCS) பரீட்சையில் 1875ல் இலங்கையிலிருந்து சித்திபெற்றமை முக்கியமான நிகழ்வாகும். "முதன்மையான தமிழ் குடும்பம் ஒன்றின் அங்கத்தவர் ஒருவர் பொன்னம்பலம் அருணாச்சலம், இந்தப்பரீட்சையில் சித்தியெய்திய ஒரே ஒரு இலங்கையின் தேர்வு நாடி. அவர் 1875 ல் சீ.சீ.எஸ். இல் நுழைந்தார்[9]." அத்துடன் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் நியமன அங்கத்துவரானமை முக்கியமானது. "1879 ல் இலங்கைத் தீவின் தமிழ்பேசும் மக்களின் நியமன அங்கத்துவம் பெற்ற பிரதிநிதியாக முதலில் இராமநாதன் பொதுவாழ்வில் நுழைந்தார்[10]" இவர்கள் யாழ்ப்பாண சமூகத்தின் அன்றைய கால இயக்கத்தில் முக்கிய விசைகளாகத் தொழிற்பட்டனர். இந்த விசைகளின் எழுச்சிக்கான பின்புலம் சமயம், சாதி, பொருளாதாரம் என்ப வற்றுடன் பின்னப்பட்ட முதலியார் உயர் குழாமிலிருந்து உருவான ஒன்றாகும். அரசாங்கக் கடமைகளுடன் பிணைக்கப்பட்ட முதலியார் வகுப்பிலிருந்து தோன்றிய இத்தகைய ஆளுமைகள் யாழ்ப்பாண சமூகத்தின் அரசியல் மயப்படுத்தல் செயன்முறைகளின் பிதாமகர்களாயினர். இவர்களின் எழுச்சி சைவம், தமிழ் என்ற இரண்டு விடயங்களுடன்இணைக்காது பேசப்படுவதில்லை.

யாழ்ப்பாணத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 'முதலாளித்துவ தர்க்க நிலையுடன்' வளர்ந்த ஒரு பிரிவினர் இருந்தனர். இவர்கள் வர்க்க நிலையில் மத்தியதர வர்க்கத்தினராகவும், உயர்வர்க்கத்தினராகவும் விளங்கினர். அத்தகைய ஒரு வகுப்புநிலை உருவாவதற்கு பின்வரும் காரணிகள் பின்புலமாயின.

1. ஆங்கிலேயர் வழங்கிய கல்வியும் படித்த சுதேசிகளின் எழுச்சியும்
2. யாழ்ப்பாணத்தில் சுதேசிகளுக்கான உத்தியோக வாய்ப்புக்கள்.
3. யாழ்ப்பாணத்தவர்களின் வெளிநாடுகள் நோக்கிய பெயர்வுகள்.
4. வர்த்தக நடவடிக்கைகளிலான விரிவாக்கம்.
5. அரசியல் ரீதியான செயற்பாடுகள்

மேற்கண்ட காரணிகளால் தமது வாழ்வை மேல்நிலைப்படுத்திக் கொண்ட பிரிவினரின் வாழ்வு வர்க்கசமூகத்தின் பிரதிநிதிகளாக அவர் களை வெளிக்காட்டிய அதே வேளையில் 'உயர் குழாமினருக்கான' பண்புகளை வெளிப்படுத்தி யிருந்தது. 'யாழ்ப்பாண வைபவ கௌமுதி' (1918) என்ற நூல் 'டைக்' (Dyke) என்ற அரச அதிபர் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் (1829-1869) சவரிமுத்துமுதலியார், கனகரத்தினம்

முதலியார் என்போர் கச்சேரியில் (மாவட்டச் செயலகம்) உத்தியோகம் பெற்றதாகவும், கோப்பாய் அம்பலவாணர் முதலியார் நீதிபதியாக உத்தியோகம் பெற்றதாகவும் கூறுகின்றது. யாழ்ப்பாணத்தில் கல்விகற்று உயர்ந்த இளைஞர் பலர் சிங்கப்பூர், மலாய் போன்ற நாடுகளுக்குச் சென்றதாலும் அவர்களின் உயர்குழாம் நிலை பேணப்பட்டது. 1855இல் வட்டுக்கோட்டை ஆங்கில மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற மு. வைத்திலிங்கம் என்பவர் தான் முதன் முதலாக சிங்கப்பூர் சென்றவர்[12] என்பது அறியப்படுகின்றது. இத்தகைய பெயர்வுகள் சுதேசிகளின் பொருளாதார மற்றும் அதிகார மையமான உயர்குழாமாதலுக்கு வழிவகுத்திருந்தது.

எனவே யாழ்ப்பாண சமூகத்தின் சமூக வரலாற்றில் தனித்துவம் வாய்ந்ததொரு உயர்குழாமினர் ஐரோப்பியர் ஆட்சிக்கு முன்பிருந்தே இருந்துவந்த போதிலும் ஐரோப்பியர் கால காலனித்துவ ஆட்சியில் அதன் இயல்புகள் மற்றும் இயக்க நிலைகளில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இந்த மாற்றங்கள் ஆங்கிலேயர் ஆட்சியின் யாழ்ப்பாண சமூக உருமாற்றத்தை தூண்டிய பல்வேறு விசைகளினாலும் துரிதப்படுத்தப்பட்டன. சாதிய சமூகத்திலான உருமாற்றமும் வர்க்க சமூகத்தின் பண்புகளை நோக்கிய நகர்வும் சுதேச உயர்குழாமினரைத் தீர்மானிக்கும் காரணிகளை மாற்றியமைத்தன. மரபார்ந்த சாதி, சொத்துரிமை, சமயம் போன்ற காரணிகளின் வழிவந்த உயர்குழாம் அதிகாரமானது கல்வி, அரசதொழில், மதமாற்றம், வணிக முயற்சிகள், புலப்பெயர்வுகள், அரசியல் கலாசார வளர்ச்சி போன்றவற்றோடு இணைந்து உருமாற்றம் பெற்றது. இந்த உருமாற்றத்தின் ஒரு சிறு வெட்டுமுகத்தினைப் புலப்படுத்த இக்கட்டுரை உதவும்.

**அடிக்குறிப்புக்கள்:**

1. Singh, Yogendra (2001), *Modernization Indian Tradition,* New Delhi: Rawat Publication, p: 130.
2. *Ibid.*
3. பத்மநாதன், சி (2001), *இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்,* கொழும்பு: குமரன் பதிப்பகம், ப: 83.
4. Peebles Patrick (1995), *Social change in nineteenth century Ceylon.* New Delhi: Navarang. p: 25.
5. ஜெயவர்த்தனா குமாரி (2009), அநாமதேயங்களாக இருந்தோர் அறியப்பட்டவர்களானமை இலங்கையின் முதலாளித்துவத்தின் தோற்றம் (தமிழ் மொழியாக்கம்: க. சண்முகலிங்கம்), கொழும்பு: குமரன் பதிப்பகம், முன்னுரையிலிருந்து ப:xiii
6. சமூக விஞ்ஞானிகள் சங்கம் (1984), *இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும்,* ப: 147.
7. Peebles Patrick (1995), *Social change in Nineteenth century Ceylon,* New Delhi. Navarang, p:119.
8. Hettige, S.T (1984), *Wealth, power and prestige: emerging patterns of Social inequality in a peasant context,* Sri Lanka: Ministry of Higher Education, p:33.
9. Peebles Patrick (1995) , *Social change in nineteenth century Ceylon,* New Delhi: Navarang, p: 237.
10. Vaithilingam, M(1977), *The life of Sir. Ponnambalam Ramanathan,* Vol II, Sri Lanka, Chunnaham, p:05
11. வேலுப்பிள்ளை, க(1918), *யாழ்ப்பாண வைபவ கௌமுதி,* ஜெயஸ்ரீ சாரதா, யாழ்ப்பாணம், ப: 294
12. மேலது ப: 295.

# இக்கட்டான நிலையில் மீன்பிடித்தல் பாக்குக்குடா பிரதேசத்தில் எல்லைதாண்டும் அத்துமீறல் ஓர் ஆய்வு

ஏ.எஸ். சூசை ; ஜே. இஸ்கொல்டன்; எம். பாவின்க்

**ஆய்வுச்சுருக்கம்**

*இந்திய இழுவைப் (டோலர்) படகுகள் பாக்குக்குடா நீர்ப் பிரதேசத்தில் இலங்கை கடலாதிக்கப் பரப்பினுள் அத்துமீறி நுழையும் சர்ச்சைக்குரிய நிகழ்வுகள் குறித்த செய்திகளையே 1990 ஆம் ஆண்டின் பின்னர், இலங்கை மற்றும் இந்திய பத்திரிகைகளில், அடிக்கடி தலைப்புச் செய்திக்குரிய விடயமாக இருந்து வருகின்றது. பாக்குக்குடா மோதலில் சேர்த்துக் கொண்டுள்ள புதிய பரிமாணங்களான, இலங்கையின் வடபிராந்திய மீனவ மக்களின் யுத்தத்திற்கு பின்னரான நிலைமை மற்றும் அண்மைக்கால இயல்பு நிலைக்கு திரும்புதல் ஆகிய அடிமட்ட உண்மை நிலவரங்களை வெளிக்கொண்டு வருவதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும். இரண்டாவது நோக்கம் யாதெனில், மோதலின் இயல்பு நிலைமைகளை புரிந்து கொள்வதும், தற்போது ஆட்சியியலின் கீழ் இருப்பதும், அவர்களால் முன்மொழிந்துள்ளதுமான பரிந்துரைகளின் தொடர்புகளைப் பகுப்பாய்வு செய்வதுமேயாகும். பாக்குக்குடா மோதலானது, இந்தியாவின் பரவலாக அறிந்திருக்கின்ற இது பற்றிய உள்ளார்ந்த எண்ணங்களுக்கு மாறுபட்டதாக தற்போது தொழில் நுட்பம் வளங்குன்றிய இலங்கை மீனவர்கள் இந்திய இழுவைப்படகு மீனவர்களினால் பாதிக்கப்படுவதை நாம் இங்கு விவாதிக்கின்றோம். இந்திய தரப்பினர், மோதலின் இயல்பு நிலைமையை விளங்கிக்கொள்ளாத வரைக்கும், இலங்கையின் அதிகாரம் அளிக்கப்பட்டோர் மீனவர்களையும் அவர்களது அரசாங்கத்தையும் நெருக்கமாகக்கொண்டு வராத வரைக்கும் அரசாங்கம் மற்றும் மீனவர் மட்டங்களிலான சகல விதமான மோதல் தீர்வு முயற்சிகளும் வினைத்திறனற்றவைகளாகவே இருக்கும் என இக்கட்டுரையின் முடிவில் குறிப்பிடுகின்றோம்.*

**திறவுச்சொற்கள் :**

**அறிமுகம்**

தமிழ் நாட்டு மீனவர்கள் "எமது வீட்டின் கொள்ளைக்காரர்கள்" எனக்கருதிய இலங்கை மீனவர்கள், வட இலங்கையின் மீனவ நகரமான பருத்தித்துறையில் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒன்றுகூடினர். சிறியரக மீனவ படகுகளை உபயோகித்து இலங்கை கடல் ஆதிக்க எல்லையினுள் மீன் பிடித்துக்கொண்டிருந்த நாகபட்டினத்தைச் சேர்ந்த 18 இந்திய இழுவைப் படகுகளையும் 112 மீனவர்களையும் பிடித்துத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்தனர். இச்சம்பவத்தின் ஒரு நாள் கழிந்த பிறகு, இதே பாணியிலான நடவடிக்கையாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் "டோலர்" படகுகள் தரித்து நிற்கும் கோட்டைப் பட்டினத்தைச் சேர்ந்த 7 படகுகளும், அதன் வேலையாட்களும் இலங்கை வட பகுதி மீனவ பிரதேசமான மாதகல் மீனவர்களால் பிடிக்கப்பட்டனர். இந்திய மீனவர்களும், மீனவ படகுகளும் இரண்டு நாட்களின் பின்னர் உயர்மட்ட அரசியல் இராஜதந்திர தலையீட்டினால் இந்தியாவிற்கு மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டாலும் இலங்கை மீனவர்கள் தமது தெளிவான நிலைப்பாட்டினை எடுத்துக்காட்டியுள்ளனர். ''அண்ணனுக்கு''

எதிராக தம்பி கிளர்ந்து எழுந்திருந்த இச்சம்பவத்தினைப்பற்றி, சில வாரங்களாக மீனவ சமூகங்களுக்கிடையிலான கலந்துரையாடல்களும், பத்திரிகைகளின் தலைப் புக்களும் அரசியல் நகர்வுகளும் காத்திரமான அம்சங்களாகக் காணப்பட்டன. அத்துடன் இந்நிலைமையானது, இப்பிராந்தியத்தில் காணப்படும் மீனவ மோதல்களின் பல்வேறுபட்ட பரிமாணங்களை எடுத்துக் காட்டுவதற்கான சிறந்த உதாரணம் எனலாம்.

தொழில்நுட்ப ரீதியாக பலமிக்க இழுவைப் படகுகளுக்கு எதிராக சிறிய அளவிலான இயலுமைக்கொண்ட மீனவ சமூகங்கள் எழுச்சி கொண்டமை தென் ஆசியாவில் இது முதல் தடவை அன்று. (Bavinck 2001, 2011b, Kurien and Achari 1988) இழுவைப் படகுகளினால் பாரியளவிலான கடல் வளங்கள் சூறையாடப் படுவதனால் சிறியமட்ட மீனவர்கள் ஏமாற்றத் திற்கு ஆளாகுவதோடு அவர்களுடைய மீனவ உபகரணங்கள் பாரியளவில் அழிவுக்கு முகம் கொடுப்பதனால் ஏற்படும் அநீதியின் பிரதிபலிப்பாகவே இவ்விதமான மேலெழுச்சிகள் ஏற்படுகின்றன. தமிழ்நாட்டில் பாரியளவிலான மிகப் பெரிய இழுவைப்படகு மீனவர்களுடன் யுத்தத்திற்குப் பின்னர் மீள் உருவாக்கம் பெற்று வருகின்ற இலங்கையின் வடபகுதி சிறிய மட்ட மீனவர்கள் இத்தகைய மோதல்களில் ஈடுபடுவதானது, இங்கு பாரிய ஆச்சரியத்தை ஏற்படுத்தவில்லை. இவை அனைத்திற்கும் அப்பால், இவ்விரு சாராரும் பாக்குக்குடாவில் ஒரே மீன்பிடி தளத்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பிளவு, தனித்துவமானதாகவும் ஒருவகையில் இதனைப் புரிந்துகொள்வதற்கு இடர்பாடாகப் இருப்பதற்குமான காரணம் என்னவெனில், இது இயல்பாக அமைந்துள்ள பாக்குக் குடா கடலாதிக்கங்களின் எல்லைகளைத் தாண்டுதலுமே ஆகும்.


பாக்குக்குடாவானது, சராசரி 9 மீற்றர் ஆழமும், குறைந்தளவிலான நீரலைகளையும் கொண்ட ஒப்பீட்டளவில் ஆழமற்ற அமைதியான குடாவாகும். இதனுடைய வடக்குமுனையானது, வங்களாவிரிகுடாவுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது. தெற்கில் இதனை, சிறிய தீவுக் கூட்டங்களும் இராமர் (ஆதம்) பாலம் - என பிரபல்யமாகக் குறிப்பிடப்படும் பவளப்பாறைகளும் மன்னார் குடாவிலிருந்தும் பிரிக்கின்றன. பருவகால உணவுகாவிச் செல்லும் நீரோட்டங்களினால், பாக்குக்குடாவானது மிகச் சிறந்த மீன்வளம் மிக்கதொன்றாகக் காணப் படுகின்றது. அதிலும் குறிப்பாக, பருத்தித்துறை பேதுரு மீன்களம், இறால்களம் மற்றும் முத்துக்களம் என்பனமுக்கியமானவையாகும். (Sivasubramaniam 1995)

யுத்தத்துக்குப் பின்னர் இயல்புநிலைக்குத் திரும்பும் இலங்கை வடபகுதி மீனவத் தொழில் துறை பாக்குக்குடா மோதலோடு எவ்விதம் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது என்பதை அறிந்துகொள்ளும் நோக்கத்தைக் கொண்டதாகவே இவ் ஆய்வு காணப்படுகின்றது.

கீழ்வரும் இரண்டு பகுதிகளும், எண்ணக்கரு ரீதியிலமைந்த எழுத்துமூலமான ஆக்கங்களையும், வரலாற்றின் அடிப்படையில் விளங்கும் வெளிப் பாடுகளையும் தருகின்றன.

பகுதி 4 ஆய்வின் வழிமுறையை விவரிக்கிறது. அத்தோடு தொடர்கின்ற பகுதி இலங்கையின் வடபகுதி மீன்பிடித்துறையின் தற்கால போக்குகளையும், 6 ஆவது பகுதியானது யுத்தத்துக்குப் பின்னர் இயல்புநிலைக்குத் திரும்பும் இலங்கை வடபகுதி மீன்பிடித் தொழிற்றுறை, இந்திய இழுவைப் படகுகளினால் எதிர்கொள்ளும் தாக்கங்களை மதிப்பிடுகின்றது. மீனவர்களும் அரச நிறுவனங்களும் மற்றும் இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களும் (NGOS) பாக்கு மீன்பிடித்துறையில் உள்ள இவ் இக்கட்டான நிலைமையை எவ்வாறு எதிர்கொண்டன என்பதை இதன் 7 ஆம் பகுதி ஆய்வு செய்கிறது. இறுதியாக, பகுதி 8, அரசும் சிவில் சமூகமும் இதனை எதிர் கொண்டு மேற்கொண்ட நடவடிக்கைகளை அட்ட வணைப்படுத்துகிறது.

படம்1, எல்லைதாண்டிய கடலாதிக்கங்களில், பாக்குக் குடாவினதும் பாக்கு நீரிணையினதும் அமைவிடம்.




மூலம்: Soosai and Stokke 2006

**02) மீன்பிடி மோதலை விளங்கிக்கொள்ளுதல்.**

மீன்பிடி மோதல்கள் உலகளாவியவை ஆகும். தவிரவும் அவை, பல்வேறு வகையில் தம்மை வியாக்கியானப்படுத்துகின்றன (Platteau 1989, Charles 1992, Bennett et al. 2001) உணவு விவசாய ஸ்தாபனத்தின் கூற்றுப்படி பொதுவாக, மோதல்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர் மோதிக்கொண்டு மற்றைய தரப்பினரின் நலன்களை ஒரு தரப்பினர் சுவீகரித்துக் கொள்ளலாகும். இவ்விதமான சுவீகரிப்பு - நலன் காப்பு முயற்சிகளால் ஏற்படும் மோதல்கள் மீன் வளம் மீன்களம் - மீன்பரப்பு அல்லது சந்தை வாய்ப்புக்கான வழிகள் ஆகியவற்றின் மீதான போட்டியின் பிரதிபலனாகவும் இருக்கலாம். (Bavinck 2005) இத்தோற்றப்பாட்டை விரிவுபடுத்த மல்தூஸிய வாதநவ அடிப்படையில் இயற்கை வளங்களின் இருப்பில் படிமுறையாக ஏற்படும் தேய்வுகள் மோதல்களுக்கான முக்கிய காரணியாக உள்ளது. (Homer - Dixon 1994).

இயற்கை வளங்கள் மீதான மோதல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு நலன் அடிப்படையிலான அணுகுமுறை பயன்மிக்க ஆரம்பத்தினை வழங்கினாலும் அது நிறுவனங்களினதும் சட்டத்தினதும் வகிபாகத்தினை உதாசீனப்படுத்துகின்றது. நோர்த் (1992) பொருளியல் விவகாரங்கள் மீதான நிறுவனங்களது வகிபாகங்கள் மீது கவனம் செலுத்தும் போது சட்ட மானுடவியலாளர்கள் சட்ட பன்மைத்துவத்தின் சார்பு நிலைமையைச் சுட்டிக் காட்டுகின்றனர். (Benda - Beckmann 2002) மானுடவியலாளர்களது கூற்றின் தொடராக மோதல்களில் ஈடுபடும் மீனவத் தரப்பினர் பல்வேறு சமூக - சட்ட முறைமை பற்றி அடிக்கடி குறிப்பிடுகின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினர், எதனை நியாயம் எனநோக்குகிறனரோ அதுவே இவர்களுக்கிடையே இவ்வேறுபாடு தோன்றக் காரணம் ஆகும். என Bavinck (2005) விவாதிக்கின்றார். ஜோன்சன் மற்றும் பேவின்க் (2010) ஆகியோர் 1950 களின் பின்னர் இந்தியாவில்

உருவான நீலப்புரட்சி சட்டரீதியான பன்மைத்துவ தோற்றப்பாடுகளுடன் தொடர்புபட்டிருப்பதாக கூறுகின்றனர். எனவே இவ்வாறான உள்ளார்ந்த நிலைமைகளை கருத்திற் கொள்ளும்போது, இம் மீனவ மோதல்களை பரந்துபட்ட அணுகுமுறையில் விளங்கிக்கொள்ள வேண்டுமாயின், சமூக - சட்ட ஒழுங்கமைப்புக்கள் மற்றும் நிறுவன ஏற்பாடுகள் மீது கட்டாயமான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மீனவ மோதல்களை வினைத்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்யும் திட்டவட்டமான எவ்வித முறைகளும் இல்லை (Ostrom 2007) இங்கே மீனவ மோதல்களை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான நிறுவனங்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. (Kooiman et al. 2005). ரெபோபோட்டின் (1974) சமூக மோதல்கள் பற்றியபகுப்பில் முக்கிய இரண்டு விடயங்கள் காணப்படுகின்றன. முதலாவதாக உள்ளக - வெளியக மோதல்களுக்கிடையிலான வித்தியாசமாகும். இரண்டாவதாக, மோதல்களை சமச்சீரான மற்றும் சமச்சீரற்ற மோதல்கள் என அவர் வேறு படுத்துகின்றார்.

உள்ளக மோதல்களில் மோதும் தரப்பினர், நிலையான அரசினைக் கொண்டு நடாத்த தங்களுக்கே உரித்தான ஒரு பொறிமுறையைக் கொண்டுள்ளனர். இப்பொறி முறையானது, குறித்த தரப்பினர்களுக்கிடையே மோதல் தீர்வு அல்லது கட்டுப்பாடு என்பனவற்றைக் கொண்டுள்ளது Rapoport's (1974). மறுபுறத்தில் வெளியக மோதல்களைப் பார்க்கின்றபோது, அதன் மோதல் தரப்பினர் எவ்விதமான பாரிய அளவிலான நிறுவன முறைமைகளுக்கும் உட்படாதவர்களாகவும், அதனால் மோதலைத் தீர்க்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற எவ் விதமான இணைந்த பொறிமுறைகளையும் கொண்டிராதவர்களாகவும் காணப்படுகின்றனர். இவ்விதமான தொரு சிந்தனைத் தொடரில் Bavinck, (2011 b). ஆந்திர மாநில மற்றும் தமிழ் நாடு மீனவர்களுக்கிடையே ஏற்படுகின்ற மீனவர் யுத்தம் - மீனவர் மோதல் குறித்துக் கலந்துரையாடும்போது, ஒரே மாநில மீனவர்களுக்கிடையே இடம்பெறும் யுத்தத்தை விட, வேற்று நாட்டு மீனவர்களுக்கிடையேயான மோதலானது நீடித்த கால இழப்பையும் பாரிய அழிவினை ஏற்படுத்தக்கூடியதாகவும் உள்ளது எனக் குறிப்பிடுகின்றனர்.

இதன்மூலம் விளங்குவது யாதெனில், வெளியக மோதல்களில் ஈடுபடும் மோதல் தரப்பினரை, ஒரு ஆட்சிப் பொறிமுறையின் கீழ் கொண்டுவருவது கடினம் என்பதாகும். ஆகவே அவற்றை ஓர் உள்ளக மோதலாக மாற்ற இயலாது. (Rapoport) இன் இரண்டாவது வேறுபாடானது. மோதல்கள், சமச்சீரானவை மற்றும் சமச்சீரற்றவை என்ற அடிப்படையில் பகுத்து நோக்குகிறார். ஒப்பீட்டளவில், சமச்சீரான மோதல்களின்போது, எதிரிகள் ஒத்த தன்மையைக் கொண்டிருப்பர். அதேவேளை, சமச்சீரற்ற மோதல்களின்போது, பரந்தளவிலான நம்பிக்கை வரட்சியோடு ஒருவரையொருவர் அறிந்திருக்கக்கூடிய முறையில் தரப்பினர்கள் அடுத்தடுத்து நிலை கொண்டிருக்கப்படலாம்.

இவ் வேறுபாடுகளானவை, மீனவத் தொழில் போன்று சமூக ஆற்றல்மிக்க ஒரு முறைமையில் இவ்விவகாரத்தில் அதிகாரமும் அதனால் ஏற்படும் தாக்கமும் அறிமுகப்படுத்தப்படும் (Jentoft 2007). ரெபோபோட்டினுடைய மேற்கூறிய தலைப்பினை விரிவாக விவாதிக்கும்போது. சமச்சீரற்ற மோதலானது தமக்குள்ளேயே தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் சட்ட அங்கீகாரம் அளிக்கும் முறைமைகளை எதிர்த் தரப்பினர் மீது ஏற்படுத்திக் கொண்டிருக்கும். கிளர்ச்சியாளர்கள் தங்களை சமூக மாற்றத்தின் கருவிகளாக எடுத்துக் காட்டுகின்றனர். இரு தரப்பினரும் (போதுமான அளவு) நியாயமான தீர்வெனக் கணிக்கும் ஓர் ஒப்பந்தத்தை, இடையீடு செய்து எளிதாக்கும் வசதியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, ஒரு சாரார் தாம் விரும்புவதை மற்றத் தரப்பினர் மீது திணிப்பதைத் தடை செய்வதே இங்கு ஆட்சியாளர் எதிர்நோக்கக்கூடிய ஒரு சவாலாக அமையலாம்.

### *03)* பாக்குக்குடா மீனவ மோதல்: எல்லைகளை வரைதல்


ஆயிரக்கணக்கான பத்திரிகைக் கட்டுரைகளுக்கு அப்பால், பல ஆண்டுகாலமாக பல்வேறு கோணங்களில் பாக்குக்குடா மீனவ மோதல்கள் பற்றி பல்வேறு அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இந்தக் கட்டுரையின் சேர்வையானது, பாக்குக்குடா மீனவர்களின் நாடுகடந்த அடையாளங்கள் பற்றி விசேட கவனம் செலுத்துகின்றது. (Gupta 2009) இந்திய இழுவைப்படகு மீனவர்களுக்காக முன்மொழியப்பட்டுள்ள இழுவைப்படகுகளை மீளப்பெறும் நிகழ்ச்சித்திட்டத்தின் சாத்தியத் தன்மை (Sathyapalan et al. 2007), இலங்கை மீனவர்கள் மீது சிவில் யுத்தம் ஏற்படுத்திய பாரிய பாதிப்புக்கள் (Soosai and Stokke 2006 and Stokke and Soosai 2007). அதேபோல் பாக்குக்குடா பிரதேசத்தில் இழுவைப்படகுகள் மீதான ஆட்சியியல் பிரச்சினைகள் எவ்விதம் பாதிக்கின்றன என்பது பற்றிய விசாரணைகள் (Scholtens and Bavinck Forthcoming) ஆகியன இடம்பெறுகின்றன. இன்னும் அதிகமானதும் முழுமையானதுமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இழுவைப் படகுகளின் திடீர் அத்துமீறல்களினால் ஏற்படுகின்ற இலங்கை கொள்கைகள் மீதான தோற்றப்பாடுகளில் ஏற்படுகின்ற மாற்றங்களின் விவரணங்களை உள்ளடக்கியதாக இலங்கைக் கண்ணோட்டம் காணப்படுகின்றது. (Subramanyam Raju et al. 2006. Hettiarachchi 2007, Amarasinghe 2011) இந்திய கண்ணோட்டத்தினூடாகப் பார்க்கின்றபோது, கச்சதீவு மற்றும் சர்ச்சைக்குரிய கடல் எல்லைக்கோட்டு உருவாக்கத்தின் இயல்பு பற்றிய சட்ட, அரசியல் விடயங்களின் விரிவான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளதாக பல அண்மைக்கால வெளியீடுகள் கூறிக்கொண்டிருக்கின்றன. (Suryanarayan 2004 and 2009). விவேகானந்தன் (2004, 2010a, 2010b, 2011) மீனவ மோதலின் பல்பரிமாண விடயங்களை 2004 மற்றும் 2010 ஆம் ஆண்டு கலந்துரையாடல்களினூடாக கோடிட்டுக் காட்டியுள்ளார். (7 ஆவது பகுதியைப் பார்க்க.) இந்த வெளியீடுகளானவை இவை அனைத்தையும் உள்ளடக்கியதும் இம் மோதலுக்கான காரணிகள், சிக்கல் தன்மை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பல்பரிமாண நோக்கங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்றன.

#### *3.1* இந்திய இழுவைப் படகுகளின் எழுச்சி

இந்திய விவசாயத் துறையில் ஏற்பட்ட பசுமை புரட்சியைப் போன்று 1960 களின் பின்னர் இழுவைப் படகுகளின் அறிமுகத்துடன் இந்திய மீன்பிடித்துறையில் "நீலப் புரட்சி" ஏற்பட்டதெனலாம். (Johnson and Bavinck 2010) இழுவைப் படகுகளின் பிரவேசமானது. பாக்குடாவில் செறிந்து காணப்பட்டது. 1980 மற்றும் 1996 காலப்பகுதிகளில் மாத்திரம் இப்பிரதேசத்தில் கடல் மீன் உற்பத்தி இருமடங்காக அதிகரித்தது. (பார்க்க அட்டவணை 2). இது அந் நாட்டினுடைய மொத்த உற்பத்தியில் வெறும் 38 சதவீதம் அதிகரிப்பாகும். (Vivekanandan 2010a). சத்தியபாலன மற்றும் அவருடைய சகாக்களின் (2007) கருத்துப்படி, ஒப்பீட்டு ரீதியாக மிகச்சிறிய பிரதேசமான பாக்குக்குடாவில் 2500 இற்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் ஈடுபடுத்தப்படுகின்றன. இந்நிலமையானது, பாக்குக்குடாவின் பரப்பளவுக்கு அதிகமான இழுவைப் பட்குகள் பயன்படுத்தப்படுவதை எடுத்துக்காட்டுகின்றது. இது தமிழ் நாட்டு சிறியரக மற்றும் பாரிய ரக தொடர் தேச்சியான மீன்பிடி முறையினால் மீன் இருப்புக்களின் போக்கில், பாரிய வீழ்ச்சியினை ஏற்படுத்துகின்றது. (Johnson and Bavinck 2010 Scholtens and Bavinck forthcoming). மீன் தளங்களில் கிடைக்கப்பெறுகின்ற அளவுக்கும் அதிகமான மீன்கள் இழுவைப் படகுகளினால் காவிச் செல்லப்படுகின்றன. இலங்கையில் யுத்தகாலப்பகுதியில் வெற்றிடமாகக் கிடந்த இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்கத் தள்ளப்படுகின்றமையானது மேற்கூறிய விடயங்களுக்கு முக்கிய காரணமாக அமைந்தது எனலாம். தமிழ் நாட்டில் மொத்தம் 5300 இழுவைப் படகுகள் காணப்படுகின்றன (CMFRI 2005) இலங்கைக் கடற்பரப்பில் அதிகளவு இலாபமீட்டும் முழுநேர அல்லது பருவ காலங்களில் அண்ணளவாக 2500 இற்கும் மேற்பட்ட இழுவைப் படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. (Sathyapalan et al. 2007, Vivekanandan 2010)

இருபக்க ஒப்பந்தத்தின் மூலம், 1974 ஆம் ஆண்டு பாக்குக் குடாவின் இருபக்க இறைமைகளுக்கு உட்பட்ட விதமாகவே இக்கோடு பிரிக்கப்பட்டது. ஆயின், இக்கோடு, தமது பாரம்பரிய மரபு முறைக்கு உட்பட்ட மீன்பிடி எல்லைகளை ஊடறுப்பதாகவும், சட்டபூர்வமற்றதாவும் உள்ளதென இந்திய இழுவைப்படகு மீனவர்கள் உரிமை கோருகின்றனர். இலங்கை கடற்படை மற்றும் அண்மைக்காலமாக இலங்கை மீனவர்களின் கூட்டணிகளால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டாலும் இந்திய மீனவர்கள் தமது இயலாமையினால் இலங்கை கடற்பரப்புக்குள் உள்ளிடுவதைத் தவிர்க்க முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். குறிப்பாக, இலங்கையின் சிவில் யுத்த காலத்தில் பல இழப்புக்கள், காயங்கள், பல துப்பாக்கித் தாக்குதல்கள் என்பவற்றோடு இலங்கை கடற்படையினரின் சந்தேகத்திற்கும் இந்திய மீனவர்கள் ஆளாகி இருந்தனர். தவிரவும் மக்கள், திட்டவட்டமான கணக்கெடுப்புக்களை ஏற்றுக்கொள்ள மறுத்தபோதிலும். அண்மைக்காலமாக 100 இந்திய மீனவர்கள் கொல்லப்பட்டும் மேலும் 350 மீனவர்கள் கடுமையான தாக்குதல்களுக்கும் ஆளாகியுள்ளனர். (Suryanarayan 2009). விவேகானந்தன் (2011) கணிப்பீட்டின் படி. "யுத்த காலப்பகுதியில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் சுதந்திரமாக செயற்படக்கூடிய நிலைமை காணப்பட்டதுடன், இலங்கை சகோதரர்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்வதில் இருந்தும் தடுக்கப்பட்டிருந்தனர்." இதனை மற்றுமொரு விதத்தில் கூறுவோமாயின் சிவில் யுத்தமானது இந்திய மீனவர்கள் இராணுவ ரீதியான அச்சுறுத்தலுக்கு ஆளாகி இருக்கலாம். ஆனால் இலங்கை தரப்பில் மீன்பிடியில் ஏற்பட்ட இடைவெளி இந்திய மீனவர்களால் நிரப்பப்படுவதற்கும் வழிவகுத்தது எனக் கூறலாம்.

*வரைப்படம் 2: இந்தியா மற்றும் இலங்கைக்கும் இடையிலான பாக்குக் குடா மீன் உற்பத்தியின் (டொன்கள்) ஒப்பீட்டு நோக்கு.*




*மூலம்:- இந்தியா, 1980 - 2001 வரையிலான தமிழ் நாட்டு தகவல்கள், 2002 - 2010 வரையிலான தகவல்கள் (MFR), இலங்கை 1977 - 1982 வரையிலான தகவல்கள் இலங்கை அரசாங்கத்தினுடைய 2000. FAO 2003, 1983களுக்குப் பின்னரான மீனவர்கள் மற்றும் கடல் வளங்கள் (2011) மற்றும் சூசை 2006.*

### 3.2 வட இலங்கை மீன் பிடியும் சிவில் யுத்தமும்.

பாக்குக் குடாவின் இலங்கையின் பக்கம், வட பகுதி மீனவர்கள் நீண்டகால சிவில் யுத்தத்திலிருந்து தற்போது இயல்பு நிலைக்கு மீண்டு வருகின்றனர். சுமார் மூன்று தசாப்த காலம் இடம்பெற்ற இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான யுத்தத்தினால், பல மீனவர்கள் தமது மீனவக் கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர். மட்டுமன்றி பாதுகாப்புக் காரணங்களுக்காக மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைக்கும் பாரிய தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதன் பின்னர், மீனவர்கள் மீண்டும் குறிப்பிட்ட பிரதேசங்களில் படிப்படியாக தற்போது மீள்குடியேறிக்கொண்டிருக்கின்றனர். மேலும், மீனவர்களுக்கான தடைகள் ஓரளவு தளர்த்தப்பட்டுள்ள நிலையில் மிகவும் மெதுவாக அவர்கள் இயல்பு நிலைமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்விதமாக இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் மீனவர்கள் தமது எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் இந்திய மீனவர்களினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்களின் தொடர்தேர்ச்சியான திடீர் தாக்குதல்கள் மற்றும் மீன்வலைகள் மீதான அழிவுகள் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

இலங்கையின் சிவில் யுத்தத்திற்கு முன்னர், வட மாகாண மீன்பிடித்துறை மிகவும் வளர்ச்சியடைந்து காணப்பட்டதை அட்டவணை 2 எடுத்துக்காட்டுகின்றது. 1982 ஆம் ஆண்டு இலங்கையில் பிடிக்கப்பட்ட மொத்த மீன்களில் 25% (48000 டொன்) யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் பிடிக்கப்பட்டது. (Soosai and Stokke 2006). இந்திய அமைதிகாக்கும் படையின் வருகை மற்றும் 2002 - 2006 வரை காலப்பகுதியிலான யுத்த நிறுத்தம் போன்ற இரு இடைவெளிகளைத்தவிர, மற்றைய யுத்த காலப்பகுதியிலான வட பிராந்திய மீன் உற்பத்தி பூச்சியமாகவே காணப்பட்டது. மீன்பிடிப்பதற்கான தடைகள், மீனவ சமூகங்களின் பேரிடப்பெயர்வு மற்றும் மீன்பிடி உபகரண அழிவுபோன்ற இப்பிராந்திய மீன்பிடித்துறையின் வீழ்ச்சிக்கு பிரதான காரணியாகக் காணப்பட்டது. (Soosai and Stokke 2006) யுத்தம் முடிவடைந்து ஒன்றரையாண்டு காலப்பகுதியில், பெரும்பாலான மீன்பிடி உபகரணங்கள் படிப்படியாக பிரதியீடு செய்யப்பட்டதனால் யுத்தத்திற்கு முன்னர் காணப்பட்ட நிலையை விடவும் தற்போது 42% மாத்திரமே வளர்ந்துள்ளது. இது சமகால இலங்கை மீன்பிடியில் வெறும் 6 சதவீதம் மட்டுமே ஆகும். அது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% ஆகும். (MFAR 2011) இதற்கு மறுபுறமாக இந்தியா பக்கம் பார்க்கும்போது, யுத்த காலப்பகுதியில் இந்திய மீன்பிடி உற்பத்தி 3 மடங்காக அதிகரித்திருந்தது.

யுத்தமானது இலங்கை வட பகுதி மீனவ சனத்தொகை மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. 10% மான மீனவ குடும்பங்கள் தமது குடும்ப அங்கத்தவர்களில் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டோரை இழந்துள்ளதுடன் 89 சதவீதமானோர் குறைந்தது ஒரு தடவையாவது, இடப்பெயர்வுக்குஆளாகியும்உள்ளனர். (Soosai and Stokke 2007) பல மீனவ குடும்பங்கள், தொடர்ந்து நீண்டகாலங்களாக இடம்பெயர்ந்து கொண்டே இருந்தனர். இதற்கு அப்பால், பெரும்பாலான கரையோரப் பிரதேசங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டதுடன். ஒரு நாளில் சில மணிநேரங்கள் மாத்திரமே 1 கி.மீற்றருக்குள் இயந்திரமற்ற உபகரணங்களுடன் மீன்பிடித்தலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டன.

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் மீன்பிடித்துறையில் "எல்லை கடந்த மீன் பிடியானது" புதியதொரு பரிமாணமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதை மறுக்க முடியாது. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கைக் கடற்படையினருக்கும் இந்திய இழுவைப்படகுகளுக்கும் இடையிலான மோதல்கள், இலகுரக மற்றும் பாரியரக மீனவர்களுக்கு இடையிலான மோதலாகவே மாறியது. மேலும், யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் தெளிவில்லாத தருணங்களில் இடம்பெற்ற இந்திய மீனவர்களின் இறப்புகள்

பற்றி இந்திய அரசாங்கமானது, இலங்கை அரசாங்கத்தின் மீது ஏற்படுத்திய அழுத்தங்களின் விளைவாக, உண்மையான மீனவர்களை மீன்பிடிக்க அனுமதிக்குமாறு இலங்கை கடற்படையினரிடம் கண்டிப்பாக கொழும்பு கேட்டுக்கொண்டது. இலங்கை மீனவர்கள், இந்திய இழுவை மீனவர் கள் பற்றி இலங்கை கடற்படையினரிடம் முறை யிட்டு, அவர்களைத் துரத்துமாறு கெஞ்சிய போது, "எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள்; எங்கள் கரங்கள் (எங்களுடைய அமைச்சினால்) கட்டப்பட்டுள்ளன" என அவர்கள் தெரிவிக்கின் றனர். எங்களுடைய இந்த ஆய்வானது, இலங்கை மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள கையறு நிலையைத் தெளிவுபடுத்துகிறது. அது மாத்திரமன்றி, தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் அவர்களுடைய மீனவர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் அதேவேளை, இலங்கை அரசாங்கமானது சக்தி வாய்ந்த அயல்நாட்டுடனான மோதலைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காமல் கண்ணை மூடிக்கொண்டு இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

### 04) ஆய்வு முறைமை

இவ் ஆய்வானது REINCORPFISH எனப்படும் செய்திட்டத்தின் ஒருபகுதியாகும். இச் செய்திட்டத்திற்கு நிதி அனுசரணை வழங்கும் விஞ்ஞான ஆய்வுக்கான நெதர்லாந்து நிறுவனத்தின் நோக்கம் யாதெனில், பாக்கு நீரிணைப் பகுதி யில் இடம்பெறும் மீனவ மோதல்களைப் புரிந்துகொள்வதற்கு உதவுவதும் அவற்றின் தீர்வுக்குப் பங்களிப்புச் செய்வதுமேயாகும். (Netherlands Organisation for Scientific Research - NWO/WOTRO) 2011 ஆம் ஆண்டு வட இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட 8 மாதகால கள ஆய்வினூடாகப் பெறப்பட்ட தர மற்றும் அளவு அடிப்படையிலான, தகவல்களை, இவ் ஆய்வு உள்ளடக்கியுள்ளது அளவு ரீதியில் அமைந்த உள்ளடக்கமானது, யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் மன்னார் போன்ற மாவட்டங்களில் இருந்து கடலுக்குச் செல்லும் மீனவ குடும்பங்களின் (N=1120) நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்டன. (அட்டவணை 1 ஐ பார்க்க.) பல்நிலை கொத் தணி மாதிரிகளை அடிப்படையாகக் கொண்டு, இருநிலை செயன்முறைகளின் அடிப்படையில் மீனவ குடும்பங்களின் மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டன. (Bryman 2004). முதலாவதாக, பெரிய மீனவக் கிராமங்களுக்கு விகிதாசார அடிப்படையில் முக்கியத்துவம் வழங்கப்பட்டு, மொத்தம் 120 மீனக் கிராமங்களில் 36 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன. இரண்டாவது நிலை, தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் கிராமசேவகர் பிரிவுகளில் இருந்து எழுமாற்றாக, 28 மீனவக் குடும்பங்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. இந்தக் கள ஆய்வானது, 25 யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு 4 வாரங்களில் மேற்கொள்ளப்பட் டதுடன், 84% மான பதிலிறுப்பவர்களிடமிருந்து பதில்கள் கிடைக்கப்பெற்றிருந்தமையும் மாண வர்கள் உறுதிப்படுத்தினர்.

இதற்கு மேலதிகமாக இக்கட்டுரையின் முதற் கட்டுரையாளர் (J.Scholtens) மூன்று மாவட்டங்களில் உள்ள வித்தியாசமான கிராமங்களில் இருந்து, மீனவ சமூகத் தலைவர் களுடனான ஓரளவு கட்டமைக்கப்பட்ட திறந்த நேர்காணல்கள் மூலம் தர அடிப்படையிலான தகவல்களைப் பெற்றுக்கொண்டார். இவர் தொடர்ந்து இரண்டு மாதகால ஒழுங்கிலமைந்த பங்கேற்புடனான அவதானிப்புக்கள் மூலம், தெரிவுசெய்யப்பட்ட காரைநகர் மற்றும் மாதகல் ஆகிய மீன்பிடித்துறைகளில் விடய ஆய்வுகளை மேற்கொண்டார். 2006 மற்றும் 2007 காலப்பகுதியில் இந்திய பாக்குக் குடா பகுதிகளில் இந்திய இழுவைப்படகு சமூ கத்தினரிடையே 6 மாதகால கள ஆய்வினை இவர் ஏற்கனவே மேற்கொண்டிருந்தார். 1990 களின் பின்னரான தென்னாசிய மீன்பிடித்துறை பற்றிய அவதானிப்பாளராக இரண்டாவது கட்டுரையாளர் இருந்தார். அதேவேளை, வட இலங்கையில் மீன்பிடி சம்பந்தமாகப் பல வருடகாலம் கற்றுக் கொண்டிருக்கின்ற ஒருவராகவும் மூன்றாவது கட்டு ரையாளர் காணப்படுகின்றார்.

அட்டவணை 1 - குடும்ப ஆய்வின் மேலோட்டம்.

| கரையோர பிரதேசம் | மீனவ குடும்பங் களின் எண்ணிக்கை | கிராம சேவ பிரிவுகளின் எண்ணிக்கை | கிராம சேவகர் பிரிவுகள் | அங்கீகரிக்கப்பட்ட நேர்காணல்கள் | நேர்காணல் களின் தவீதம் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் வடக்கு | 5,332 | 31 | 10 | 239 | 4,5 % |
| யாழ்ப்பாணம் தீவுகள் | 4,608 | 45 | 11 | 242 | 5,3 % |
| யாழ்ப்பாண நகரம் | 2,711 | 4 | 4 | 150 | 5,5 % |
| வன்னிக் கரையோரம் | 2,452 | 17 | 5 | 150 | 6,1 % |
| மன்னார் தீவுகள் | 2,398 | 23 | 6 | 144 | 6,0 % |
| மொத்தம் | 17,501 | 120 | 36 | 925 | 5,3 % |

மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம் 2011 மற்றும் MFARD 2011

## 5) வட இலங்கை மீனவர்கள்: தற்போதைய நிலை

யாழ்ப்பாண நகரில் இருந்து யாழ்ப்பாணக் குடாவின் மேற்குப் பகுதி வரையிலான யாழ்ப் பாணத் தீவுக்கூட்டத்தை ஒன்றுசேர்த்து, பருத்தித் துறையில் இருந்து மேற்குப் பக்கமாக 420 கி.மீ கரையோரப் பகுதியை உள்ளடக்கியதாகவும் இப்பகுதி யாழ்ப்பாணக் கடநீரேரியை ஊடறுத்து கடந்து செல்கின்ற போது கிளிநொச்சிக் கரை யோரம் போன்ற ஓரளவு குறைவான சனத்தொகை கொண்ட பிரதேசமும் மன்னார் மாவட்டத்தின் வடகரையோரம் (பலகை முனைமுதல்தேவன் பிட்டி வரை) மற்றும் மன்னார் தீவின் வடகரை யோரமும் (தலைமன்னார் முதல் பள்ளிமுனை வரை) இதில் அடங்குகின்றன. எல்லா திசை யிலும் கடல் மற்றும் களப்புக்களால் சூழப்பட்டு மிகக் குறைந்தளவான கைத்தொழில் மற்றும் சேவைத் துறைகளைக் கொண்ட இலங்கை யின் வட மாகாணத்தில் யுத்தத்திற்குப் பின்னர் மீன்பிடித்துறை மீதான செல்வாக்கு அதிகரிப் பதானது ஆச்சரியத்துக்குரிய விடயம் அன்று. 3 மாவட்டங்களிலும் 2011 ஆம் ஆண்டு மீன் பிடித்துறையில் ஈடுபட்ட குடும்பங்களின் மொத்தத் தொகை 28.639 (DFAR 2011)iii இத் தொகையானது அண்ணளவாக, 119000 மீனவ மக்கள் மீன்பிடியில் ஈடுபடுவதை எடுத்துக்காட்டுகின்றது. (2 ஆவது அட்டவணையைப் பார்க்க.) 871000 மொத்த சனத்தொகை கொண்ட இப்பிரதேசத்தை நோக்குகின்ற போது, இவ்வாறான எண்ணிக்கை இப்பிரதேச மக்கள் எந்தளவு மீன்பிடித் துறையில் தங்கிவாழ்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டுவதாய் உள்ளது.

அட்டவணை 2. யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் வாழ்கின்ற மீனவ குடித்தொகை

| மாவட்டம் | வகை | 1999 | 2011 | மொத்தக் குடித்தொகை 2011* | மீனவர்களின் சதவீதம் 2010 |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | மீனவக் குடும்பங்கள் | 10,698 | 17,579 | | |
| | மீனவக் குடித்தொகை | 48,653 | 76,820 | 567,229 | 14 % |
| கிளிநொச்சி | மீனவக் குடும்பங்கள் | n,a | 3,220 | | |
| | மீனவக் குடித்தொகை | n,a | 12,000 | 103,717 | 12 % |
| மன்னார் | மீனவக் குடும்பங்கள் | 4,165 | 7,840 | | |
| | மீனவக் குடித்தொகை | 20,637 | 30,181 | 95,430 | 32 % |
| மொத்தம் | மீனவக் குடும்பங்கள் | n,a | 28,639 | | |
| | மீனவக் குடித்தொகை | n,a | 119,001 | 766,376 | 16 % |

மூலம்: புள்ளிவிபரவியல் திணைக்களம் 2011 மற்றும் MFARD 2011

யாழ்ப்பாண மாவட்டத்தின் மேற்குப் புகுதியில் விதிவிலக்காக சிறிதளவு "முக்கியர்" மற்றும் திமிலர் குழுக்களைத் தவிர "கரையார்" சாதியினரே மீன்பிடித்துறையில் பாரியளவு பங்களிப்புச் செலுத்துகின்றனர். மன்னாரைப் பொறுத்தமட்டில், பாக்குக் குடாவில் 30 கி.மீ க்கு அப்பால் காணப்படுகின்ற இந்திய மீனவ சாதியினரைப் போன்ற "பரதவர்" சாதியினரே ஆதிக்கம் செலுத்துகின்றனர். இம் மீனவப் பிராந்தியத்தில் 52 சதவீதமான கிறிஸ்தவர்களும் 40 சதவீதமான இந்து தமிழர்களுமே பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர். எஞ்சிய 8 சதவீதமானவர்கள் மன்னார் தீவுகளில் வாழ்கின்ற முஸ்லிம்களாவர்.

வடமாகாண மீன்பிடித்துறையில் பல்வேறு வகைகளைச் சேர்ந்த படகு உபகரண இணைப்புக்கள் பாவனையில் உள்ளன. பொதுவாக 18 தொடக்கம் 23 அடி நீளமான "பைபர்" படகுகளும், மோட்டார் படகுகளுமே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. இக்கொள்கலம் படகு என்பன 40 கிலோ மீற்றர் சுற்றுவட்டாரத்தில் இயங்கக்கூடியதாகும். களப்பு மற்றும் கரையோரப்பகுதிகளில் கட்டுமரம் மற்றும் வள்ளம் போன்ற மரபு ரீதியான ஓடங்களும் இப்பிரதேசத்தில் மிகவும் பிரபல்யமடைந்து காணப்படுகின்றன. இலங்கையின் நீலப் புரட்சியானது இரண்டாவது சிறிய வகையான 3.5 டொன் எடையுடைய (28- 32 அடி நீளமுடைய) 50 இற்கும் குறைந்த குதிரைச்சக்தியுடைய படகுகள் பாவனைக்கு வந்தன. யாழ்ப்பாண நகரம், வல்வெட்டித்துறை மற்றும் பேசாலை உள்ள துறைகளில் தங்க வைக்கப்பட்டிருக்கும் படுப்பு வலைப் படகுகளும் 200 பழைய இழுவைப் படகுகளும் இவற்றுள் அடங்கும். இறுதியாக, 444 படகு உரிமையாளர்களிடம் பெறப்பட்ட தகவல்களினடிப்படையில், 83 சதவீதமானவர்கள்1

படகையும், 15 சதவீதமானோர் 2 படகுகளையும், 2 சதவீதமானோரிடம் 2 அல்லது 3 இற்கு மேற்பட்ட படகுகளையும் கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ் எண்ணிக்கை, குறைந்த மட்டத்தில் முதலீடு செய்து உரிமை கொண்டுள்ள கொத்தணியினைக் குறிக்கும்.

அட்டவணை 3: வடமாகாணத்திலுள்ள படகுவகைகளின் கண்ணோட்டம் (2010)

| மாவட்டம் | ஒரு நாள் பகுகள் (உளினை இயந்திரப் படகு) | கண்ணாடி நாரிழைப் படகுகள் | மரபுவழி - இயந்திரப் படகுகள் | மரபுவழி - இயந்திரபற்று படகுகள் | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 148 | 2,040 | 720 | 2,910 | 08 |
| கிளிநொச்சி | 0 | 170 | 90 | 100 | 00 |
| மன்னார் | 286 | 2,410 | 380 | 590 | 21 |
| மொத்தம் | 434 | 4,620 | 1,190 | 3,600 | 87 |
| | | | | | |
| யுத்தம் மற்றும் சுனாமியால் யாழ்ப்பாணத்தில் அழிக்கப்பட்ட படகுகள்* | 658 | 2,928 | 1,691 | 6,290 | ------ |

மீன்வகை, பருவகாலம் மற்றும் விசேடமான இடங்களுக்கு ஏற்ற விதத்தில் பல்வேறுவிதமான வலைகளை மீனவர்கள் பயன்படுத்துகின்றனர். படுப்புவலை மீன்பிடி தலையாயதாகக் காணப்படுகின்றது. இம் மீன்பிடி முறையினை சுறுசுறுப்பில்லாத மீன்பிடிப்பாணி முறை என அடிக்கடி கூறுவர். இப்படுப்பு வலைகள், இரவு நேரங்களில் கடலின் மேற்பகுதி, மற்றும் அடிப்பகுதிகளில் இடப்பட்டு பின்னர் இழுக் கப்படும். 1.5 அங்குல இழைகளைக் கொண்ட படுப்பு வலைகளை சூரை, காரல் போன்ற வகை மீன்களைப் பிடிப்பதற்கு உபயோகிக்கின்றனர். சிறிய இழையங்களைக் கொண்ட தங்கூசி (அண்மையில் தடைசெய்யப்பட்ட) வலைகள், மன்னார் மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட் டங்களில் நண்டுவகைகளைப் பிடிப்பதற்குப் பயன் படுத்தப்பட்டன. பாரிய படுப்புவலைகள் (6-18 அங்குல நீளமான) சுறா, சூரை, பாரை, அறக்குலா மற்றும் திருக்கைபோன்ற மீன் வகைகளைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. உள்ளூர் மொழி வழக்கில் 'டிஸ்கோ வலை' எனப்படுபவை கரையோரம் மற்றும் பவளப்பாறைப் பகுதிகளிலும் பயன்படுத்தப் படுகின்றது. ஆழ்கடல் மீன்பிடித் தலுக்கான உபகரணங்களை மீனவர்கள் தம்மகத்தே கொண்டு காணப்படுகின்றனர்.

மேலும், இவற்றுக்கப்பால், மீனவர்கள் மரபு ரீதியான உபகரணங்களான வலைகள், இறால்கள் கூடுகள், கரைவலை, வீச்சு வலை, நீள்வரிசைத் தூண்டில், சுருக்குமடி போன்றவற்றையும் பயன்படுத்துகின்றனர். பருவ காலத்துக்கேற்ப பல்வேறுவிதமான வலைகளைச் சொந்தமாக வைத்துக்கொள்ளல் அல்லது உரியவழிமுறைகளைக் கையாள்வது மீனவர்களுக்கு அத்தியாவசியமானது

என அறிஞர்கள் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். (Bavinck 2001) காரைநகர் அல்லது மாதகல் போன்ற பிரதேசங்களிலுள்ள வெற்றிகரமான மீனவர்கள் சூடைவலை, டிஸ்கோ வலை (1 அங்குல) அரக் கொட்டியான், 7 அங்குலவலை, (2-3 அங்குல) சிறகு வலையையும் சொந்தமாக வைத்திருக்கின்றனர்.

நாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்று, 2009 தொடக்கம் 2011 வரையிலான காலப்பகுதிகளில் மீன்பிடியில் இருந்த பல்வேறு தடைகள் தளர்த்தப்பட்டும், பல்வேறு உயர் பாதுகாப்பு வலயங்கள் குறைக்கப்பட்டும் வரு கின்றன. ஆனால் இந் நிலைமை முற்றுமுழுதாக வழமைக்குத் திரும்பிவிட்டது எனக் கூறமுடி யாது. பல கரையோரப்பிரதேசங்கள் இன்னும் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்து விடப் படாமலும், மன்னார் மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் மீன்பிடிப்பதற்குக் கடற்படையினரிடம் அனுமதிபெற வேண் டிய நிலைமையும் காணப்படுகின்றன. வட மாகாணத்தின் நிலப் பிரதேசங்களில் கடற் படையினரும் இராணுவத்தினரும் பாரியளவில் நிலைகொண்டுள்ள அதேவேளை, முக்கியமான மீனவ துறைமுகங்கள் கடற்படையினரின் ஏகபோகக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படு கின்றன. யுத்தத்திற்குப் பின்னர், மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அறிந்து கொள்வதற்காக அவர்களிடம் முன்வைத்த கேள்விக்கொத்தினடிப்படையில் அவர்கள், எதிர்கொள்ளும் அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு தனிப் பிரச்சினைப் பற்றி வினவப்பட்டது. வறுமை மற்றும் குறைந்தளவு மீன்பிடி உபகரணங்கள் என்பதாகவும், 26% (2 மற்றும் 5) சதவீதமானோர், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய பிரவேசம் மற்றும் குறைந்தளவான மீனவ வளங்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெரிதும் பாதிப்பதாகவும் குறிப்பிட்டனர், அடுத்த பகுதியில் முதலாவது அம்சமாக வறுமை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய பிரவேசம் பற்றியும் ஆராய்வோம்.

அட்டவணை 4 : வடபகுதி மீனவர்கள் தற்காலத்தில் எதிர்கொள்ளும் மிக முக்கிய பிரச்சினைகள்

| நிலை | பிரச்சினை | வீச்சு | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | குறைந்த வருமானம் / வறுமை | 203 | 22% |
| 2 | இந்திய ரோலர்களின் அத்துமீறல் | 180 | 19 % |
| 3 | குறைந்தளவு படகுகள் | 140 | 15 % |
| 4 | தடைசெய்யப்பட்ட வலைகள் | 83 | 9 % |
| 5 | குறைந்தளவான மீன் வகைகள் | 67 | 7 % |
| 6 | காலநிலை, நிச்சயமின்மை மற்றும் பருவகாலம் | 54 | 6% |
| 7 | பாதுகாப்பு (பாஸ்முறை, கடற்படை, உயர் பாதுகாப்பு | 45 | 5% |
| 8 | வலயம்) | 12 | 1% |
| - | தொழில் வாய்ப்பின்மை | 113 | 12% |
| - | ஏனையவை | 28 | 3% |
| - | பதிலில்லை | 925 - | 100% |
| | மொத்தம் | | |

#### 6) எல்லை தாண்டிய மீன்பிடி உள்ளூர்த் தாக்கம்

இந்திய இழுவைப்படகுகளினால், இலங்கைப் பொருளாதாரத்திற்குப் பாரிய தாக்கம் ஏற்பட உள்ளதாகப் பல அறிஞர்கள் எடுத்துரைத்தபோதிலும், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய பிரவேசத்தால் உள்ளூர் மட்டத்தில் வட பகுதி மீனவர்களின் ஜீவனோபாயத்திற்கு ஏற்பட்டுள்ள தாக்கங்களை ஆராய்வதே எங்களது நோக்கமாகும். மீனவக் குடும்பங்களிலிருந்து பெறப்பட்ட

தகவல்களின் அடிப்படையில், 62சதவீதத்தினர் (N=569) இந்திய இழுவைப் படகுகளினால் பாதிக்கப்படுபவர்களாகவும், எஞ்சிய 38 சதவீதமானோர் மரபு ரீதியான படகுகளை உபயோகிப்பதாகவும் தெரிய வந்துள்ளது. ஏற்பட்டுள்ள தாக்கத்தின் இயல்புநிலை பற்றி அறிந்துகொள்வதற்காக அவர்களிடம் முன்வைக்கப்பட்ட திறந்த கேள்விக்கு அமைய, அவர்களுடைய பதில்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 5 - நீங்கள் இந்திய இழுவைப்படகுகளினால் எவ்விதத்தில் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்ற கேள்விக்கான பதில்கள் (N=569 -மேலதிகமான பதில்கள்)

| | வலைகளுக்கான பாதிப்பு/ இழப்பு | வருமான இழப்பு | மீன்பிடி நாட்களின் இழப்பு | மீன் வளங்களின் இழப்பு |
|---|---|---|---|---|
| வீச்சு | 314 | 322 | 407 | 383 |
| சதவீதம் | 55.2% | 56.6% | 71.5% | 67.3 |

இந்திய மீனவர்களால் இடப்படுகின்ற கண்ணுக்குப் புலப்படாத வலைகள் இந்திய இழுவைப்படகுகளால் இழுத்துச் செல்லப்படுகின்றமையானது, மீன் வளங்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்கள் அல்லது காணாமல் போதல் என்பவை மிகவும் எடுத்துக்காட்டக்கூடிய இழப்புக்களாகக் காணப்படுகின்றன. யுத்தத்திற்குப் பின்னர், தங்களுடைய வலைகள் காணாமல் போகின்றமை பற்றி, 314 பதிலிறுப்பவர்கள் கூறி இருக்கின்றார்கள். இரு கிராமங்களில் ஏற்பட்ட இழப்புக்களின் புள்ளிவிபரம் அட்டவணை (6) கீழே தரப்பட்டுள்ளது.

அட்வணை 6 - இய்ந்திர அழிவுகளினால் இரண்டு கூட்டுறவு கிராமங்களில் ஏற்பட்ட நிதி இழ்ப்புக்கள்.

| | காரைநகர் மீனவ கூட்டுறவுச் சங்கம் | மாதகல் மீனவ கூட்டுறவுச் சங்கம் |
|---|---|---|
| அறிக்கைக் காலம் | 2010 பெப்ரவரி 1 தொடக்கம் 2011 ஏப்ரல் 1 வரை | 2009 ஜுலை 1 தொடக்கம் 2011 ஒக்டோபர் 1 வரை |
| அறிக்கை நீடிக்கும் காலம் | 14 மாதங்ள் | 26,5 மாதங்கள் |
| கூட்டுறவுச் சங்கத்தினுடைய படகுகளின் எண்ணிக்கை | 43 | 83 |
| டோலர்களுடனான சம்பவங்கள் | 76 | 124 |
| பாதிக்கப்பட்ட வலை உரிமையாளர்கள் | 52 | 110 |
| இழந்த வலைகளின் மொத்தப் பெறுமதி | 476.5 | 769.5 |
| நிதி இழப்புக்கள் (இலங்கை ரூபா) | 2,898,000 | 6,459,100 |
| ஒரு படகுக்கான சராசரி இழப்பு (இலங்கை ரூபா) | 67,395 | 77,820 |

இலங்கை மீனவர்கள், இந்திய இழுவைப் படகுகள்வரும்எனஎதிர்பார்த்திருக்கும்இரவுகளில், தங்களுடைய வலைகள் காணாமற் போக லாம் என்ற உள்ளச்சத்தால் அத்தகைய இரவு நேரங்களில் கடலுக்குப் போவதைத் தவிர்த்து எச்சரிக்கையாக இருக்கின்றனர். சனி, திங்கள் மற்றும் புதன்கிழமை களில் தான் இந்திய இழுவைப் படகுகள் பாக்குக்குடா பிரதேசங்களில் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் இந்திய இழுவைப்படகுகளின் வருகையை முன்னெதிர்வு கூறமுடிகின்றது. இவ்வாறான நாட்களில், இலங்கை மீனவர்கள் கடலில் பாரியளவிலான இடையூறுகளை எதிர்பார்ப்பதுடன், எல்லோரும் ஒன்று சேர்ந்து கரையை அல்லது அண்டிய பிரதேசங்களில் மீன்பிடியை மேற் கொள்கின்றனர். அல்லது இதனால், 71.5% வீதமானோர் தத்தமது வீடுகளிலேயே தங்கியும் விடுகின்றனர். மீன்பிடி தினங்களை இழப்பதற்குக் காரணமாகின்றது. (அட்டவணை 5 ஐப் பார்க்க)

**காரைநகர் கடற்கரையின் மூட்**

டோலர்கள் இல்லாத இரவில் பி.ப. 4 மணியளவில் காரைநகர் கடற்கரையானது சுமார் 100அதிகமான பைபர் படகுகளில் வலைகள், எரிபொருள், சிகரட், உணவு, ஒளிவிளக்குகள் என்பன ஏற்றப்பட்டு கடலுக்குச் செல்ல ஆயத்தமாகின. பி.ப. 4.30 ஆகின்ற போது கடலோரம் வெறிச்சோடிக் கிடந்தது. பி.ப. 5 மணியாகின்ற போது, டோலர்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மீனவர்க ளுக்குமிடையில் நடைபெறும் சம்பாசனையின்போது......

ஒருவர் : நீங்கள் இன்று கடலுக்குச் செல்கிறீர்களா?

மீனவர் : இன்னும் முடிவு எடுக்கேல்ல.

ஒருவர் : ஏன்?

மீனவர் : இரவைக்கு டோலர்கள் வருதே.

ஒருவர் : இனி...?

மீனவர் : நான் போனால் மீன் பிடிப்பதற்கு முன்னரே திரும்பவேண்டி வரும். அப்ப கோளையாவுக்கான கூலியும், எரிபொருளும் வீணல்லவே.. ஆனாலும் உணவுக் காக நான் போய்த்தானாகவேண்டும்.

ஒருவர் : அப்ப நீ என்ன செய்யப் போற.

மீனவர் : பாப்பம். 8 மணிவரை அவர்களைக் காணாட்டி நான் போவன். ஆனால் கரைக்கு அண்மையிலதான் மீன் பிடிப்பேன். கடந்த வாரம் என்ர கூட்டாளி 50000 ரூபா பெறுமதியான வலைகளை இழந்திட்டான். நாம எப்படி ஐயா வாழ்றது?

இந்தியஇழுவைப்படகுகள்இருக்கின்றஅல்லது இழுவைப்படகுகள் அற்ற இரவுகளில், காரைநகர்ப் பிரதேசங்களில் பிடிக்கப்படுகின்ற மீன்களின் பெறுமதிகளுக்கிடையிலான வித்தியாசங்களை அட்டவணை 7 காட்டுகின்றது. பிடிக்கப்படுகின்ற மீன்களின்தொகைகளை அடிப்படையாகவைத்துப் பார்க்கின்ற போது, 75 சதவீதமான (ஏல விற்பனை மற்றும் 2 தனியார் வியாபாரிகள்) மொத்தக் கிடப்பில், வருடத்திற்குக்கிட்டத்தட்ட 6 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான வருமானத்தை இழப்பதுடன், மீனவர்களின் தலா வருடாந்த வருவாயில் 2 சதவீதமான 40,000 ரூபாவையும் இழக்க நேர்கின்றது. தவிரவும் ஆழ்கடலில் பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கு அதிகளவில் கிராக்கியும் வர்த்தகர்களும் காணப்படுவதுடன், கரையை அண்மித்த பகுதிகளில் பிடிக்கப்படுகின்ற மீன்களுக்கு குறைந்தளவு கிராக்கியும் உள்ளூர்ச் சந்தையுமே காணப்படுகின்றதை வலது பக்க அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது. இந்தப் பெறுமதிகளும் உண்மையான வருமான இழப் பினை எடுத்துக்காட்டுவதற்குப் போதுமானதாக இல்லை. இந்திய இழுவைப்படகுகள் இல்லாத நாட்களிலேதான் இலங்கை மீனவர்கள் அதிகளவு மீன்களைப் பிடிக்கின்றனர்.

அட்டவணை 7: இழுவைப்படகுகள் அற்ற மற்றும் இழுவைப்படகுகள் வருகின்ற நாட்களில் பிடிக்கப்படும் மீன்களின் பெறுமதி (இலங்கை ரூபா) வித்தியாசங்கள்.

| **தரவு மூலம் :** <br> **காலம் :** <br> **மீன்பிடி இரவுகள்:** | **ஏல விற்பனை** <br> **2010 ஜுன் 1 - 2011 மே 1** <br> **பிடிக்கப்பட்டவைகளின் மொ.பெ** | **தனியார் வியாபாரி** <br> **2011 செப்டெம்பர்** <br> **பிடிக்கப்பட்டவைகளின் மொ.பெ** |
|---|---|---|
| வெள்ளி - சனி (டோலர் இல்லாத நாட்கள்) | 3,597,940 | 83,762 |
| சனி - ஞாயிறு (டோலர் நாட்கள்) | 3,189,420 | 25,349 |
| ஞாயிறு-திங்கள் (டோலர் இல்லாத நாட்கள்) | 3,981,780 | 197,486 |
| திங்கள் - செவ்வாய் (டோலர் நாட்கள்) | 2,299,740 | 48,270 |
| செவ்வாய்-புதன்(டோலர் இல்லாத நாட்கள்) | 3,522,560 | 95, 160 |
| புதன் - வியாழன் (டோலர் நாட்கள்) | 2,418,360 | 67,686 |
| டோலர் இல்லாத மொத்த நாட்கள்) | 11,102,280(58%) | 376,408, (73%) |
| மொத்த டோலர் நாட்கள்) | 7,907,520 (42%) | 141,305, (27%) |
| இழக்கப்படும் வருமானம் | 3,194,760 | 2,821,242 |

மூலம்: அம்பாள் மீனவ கூட்டுறவுச் சங்கம், காரைநகர் மற்றும் அன்னை கடலுணவு (Annai Seafoods)

இவ்விதமான இழப்புக்கள் உள்ளூர்ப் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. படகு உதவியாளர்கள் வாரத்துக்கு 3 நாட்கள் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதால் மாத்திரம் தமது வாழ்க்கைச் செலவை முடிவதில்லை. அவர்கள் நகரை நோக்கிக் கூலித் தொழில்கள் செய்வதற்காகச் செல்கின்றனர். இதனால் தொழிலாளர் தேவை ஏற்படுகின்றபோது அவர்களுடைய சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றுகின்றது. இந்துமத மீனவர்கள், இந்து மத விசேட தினங்களில்கூட இந்திய இழுவைப்படகுகள் இல்லாத நாட்களில்,

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டி ஏற்படுவதாக காரைநகர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் குறிப்பிடுகின்றார். சில மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் இலாபமீட்ட முடியாததால் அதனை விட்டுவிடக் கூடியநிலைமையும் தோன்றியுள்ளது. பாவனைக்குப் பயன்படுத்தப்படாது வீணே கிடக்கின்ற படகுகள் இந்தக் கரையோர கிராமங்களில் காணப்படுவது இதனைச் சிறந்த முறையில் விபரிக்கின்றது.

இத்தகைய மீனவர்களுக்குக் குறிப்பிடத்தக்க நேரடித் தாக்கங்கள் இருந்த போதிலும் அவர்கள் குறைந்த அளவு புலப்படுகின்ற அம்சங்களைப் பற்றியே ஆக்ரோஷமாக முறையிடுகின்றனர். அதாவது இந்திய மீனவர்களால் உபயோகிக்கப்படும் இழுவைப்படகு மூலம் ஏற்படும் வலை அழிவு பற்றியது ஆகும். "இந்த இழுவைப்படகுகள் எல்லாவிதமான மீனினங்களையும் காவிச் செல்கின்றன; இது இவ்வாறு தொடருமானால், எங்களுடைய பிள்ளைகளுக்கு கிடைக்கப்போவது என்ன?" என ஒரு மீனவர் வினவுகின்றார். அத்துடன், கீழ்ப்படிவுகளையும் காவிச் செல்லும் தன்மை கொண்ட இழுவைப் படகுகளினால் கடலின் மேற்பகுதி துடைத்தெறியப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது. (e.g.pauly et al. 2002). முன்னர் குறிப்பிட்டதைப் போன்று, அதிகளவு இலாபமீட்டுவதற்காக எல்லை தாண்டிய மீன்பிடியில் பாக்குக் குடாவானது இலக்காவதால் அளவுக்கதிகமாக வளம் சூறையாடப்பட்டு வருகின்றது. அதாவது பேர்கஸ் மற்றும் அவருடைய சகாக்கள் (2006) குறிப்பிட்டதைப் போன்று "கடற்கொள்ளைக்காரர்களால்" இந்தப் பாக்குக் குடா அளவுக்கதிகமாக சூறையாடப்பட்டு வருகின்றது. 2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் நான்காம் திகதி இலங்கை எல்லையினுள் ரோலர்படகுகள் செல்வதுதடைசெய்யப்படிருப்பதனால், இலங்கைக் கடற்பரப்பில் இந்திய இழுவைப்படகுகளின் சுதந்திரமானநடமாட்டம்சகித்துக்கொள்ளக்கூடிய தொன்றாக இல்லை. இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வருவது குறித்து எமக்கு ஏதும் கரிசனை இல்லை. ஆனால் அவர்களுடைய இழுவைப்படகு வலைகள் எமக்குள்ள பிரச்சினை" என்ற கூற்றை வினாக்கொத்துக்கு பதிலளித்த 65 சதவீதமானோர் ஏற்றுக்கொள்கிறார்கள்.

### 7) இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைவது தொடர்பாக மீனவர்களின் பதில்கள்

வடபகுதி மீனவர்கள் இழுவைப்படகுகளினால் ஏற்படுகின்ற சவால்களுக்கு எவ்விதம் கூட்டாக நின்று தங்களது துலங்கலை வெளிக்காட்டுகின்றார்கள் என்பது பற்றியே நாம் விசாரணை செய்துள்ளோம். இதனுடன் தொடர்புபட்டவகையில், மீனவர் களின் ஆரம்ப நிலைப் பிரதிநிதித்துவமாக செயற்படக்கூடிய மீனவ கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகள் கவனிக்கத்தக்கனவாகும். இது வட மாகாணத்தில் ஒவ்வொரு படகுத்துறை நிலையங்களிலும் செயற்படுவதோடு, பல சங்கங்களில் கூட்டாகச் சமாசமும் ஒழுங்கமைக் கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் கூட்டாக ஒழுங்கமைக்கப்பட்ட வடமாகாணத்தில் பரந்து காணப்படுகின்ற மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் மூன்றாவது படிநிலை அமைப்புமாகும். கடந்த தசாப் தங்களில் இலங்கையின் ஏனைய பகுதிகளில் செயற்படக்கூடிய கூட்டுறவு இயக்கங்கள் அதன் முக்கியத்துவத்தை இழந்துள்ளன. (Amarasinghe and Bavinck 2011). இருந்தும் வடக்கில் செயற்படக்கூடிய மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் மீனவ விவகாரங்களில் முக்கியமான வகிபாகத்தினைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றன. (Shanmurugan 2003).

2011 பெப்ரவரி மாதத்தில் இந்திய இழுவைப் படகுகள் வட இலங்கை மீனவர்களால் கைப்பற்றப் பட்டன. இது ஊடகங்களின் அவதானத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தன. இதைத் தவிர மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் வேறெந்த நட வடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கவில்லை. சுமார் 100 மாதகல் மீனவ கூட்டுறவுச்சங்கங்களின் மீனவர்கள், இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் முன்னால் தங்கள் வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு வெட்டப்பட்ட வலைகளை காட்டியவண்ணமும்

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மீனவ கூட்டுறவு சம்மேளனமானது, இலங்கை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்திய தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா, இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் ஆகியோருக்கும் தங்களுடைய இந்த மோசமான நிலையை இல்லாமல் செய்யக்கோரி பெருமளவிலான கடிதங்களையும் எழுதினார்கள். அத்தோடு இந்த மீனவ கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் ஊடக ஆதரவு அல்லது கவனத்தையும் தேடி ஓரோர் சமயம் தம் பக்கம் ஈர்த்துக் கொண்டும் உள்ளனர். மேலும் 2011 மார்ச் மாதம் உருவாக்கப்பட்ட வட மாகாண மீனவ மக்கள் கூட்டமைப்பானது, வடக்கின் அனைத்து மீனவ கூட்டுறவுச் சங்கங்களோடும் கூட்டாக இணைந்து செயற்படுவதற்கான ஒரு கூட்டுக் களமாக விளங்கக்கூடிய சிறந்தொரு முயற்சியாக இருக்க இயலும். மீனவ தலைவர்களுக்கிடையில் காணப்படக்கூடிய உள்வாரியான போட்டித்தன்மை, பிளவு மற்றும் அரசியல் தலையீடுகள் போன்றவற்றின் காரணமாக இந் நிறுவனமானது ஆரம்பித்த முதல் வருடத்திலேயே மிகவும் பின்தங்கிய நிலையிலேயே செயற்பட்டது. இருந்தபோதும், இந்த விடயமானது தங்களது பிரச்சினைகளுடன் தொடர்புபட வருகின்ற சந்தர்ப்பத்தில் மீனவத் தலைவர்கள் செய்வதறியாது நிலை குலைந்துள்ளனர். எங்களது வாதத்தின் பிரகாரம் இதற்கு மூன்று உள்ளிணைந்த காரணிகளே காரணமாக அமைந்துள்ளன.

விடுதலைப்புலிகளின் காலத்திற்குப் பின்னரான அரசியல் சூழ்நிலை தமிழ் மீனவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான மற்றும் தங்களது போராட்டங்களைத் தங்களுடைய கைகளுக்குள் கொண்டு வருதற்கான இயலுமையைக் கட்டுப்படுத்தியது. மீனவத் தலைவர்களுக்கு இருந்த அச்சத்தின் விளைவாக, ஆரம்பிக்கப்படவிருந்த இரு ஆர்ப்பாட்டங்கள் கூட இரத்துச் செய்யப்பட்டன. மீனவ இழுவைப் படகுகளை விரட்டியடிக்க முயற்சித்த யாழ்ப்பாண மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தமையானது, இதனை மேலும் தெளிவுபடுத்துகிறது.

இரண்டாவது, தமிழ்நாடு மற்றும் இழுவைப் படகுகள் மீதான மீனவர்களின் நிலைப்பாடு இரு வெவ்வேறு நிலைப்பட்ட தெளிவற்றதாகவே காணப்படுகின்றது. தமிழ்நாட்டு இழுவைப்படகுகள் இவர்களின் வாழ்வாதாரத்தில் உக்கிரமான முறையில் தாக்கம் செலுத்துகின்ற போதும் இலங்கையில் நடைபெற்ற சிவில் யுத்த காலத்தில் அகதிகளாகச் சென்றவர்களை, இந்திய மீனவர்கள் ஆர்வத்துடன் வரவேற்றியமுறை மற்றும் விருந்தோம்பல்கள் பாங்கு என்பன இவர்களுக்கு ஆழமான கடப்பாடு உணர்வை உருவாக்கியிருக்கின்றன. (Vivekanandan 2011:12). "இந்திய மீனவர்கள் எங்களது சகோதரர்கள்; மற்றும் நாங்கள் ஒரே கடலின் மூலம் இணைக்கப் பட்டவர்கள்" என்ற பதிலை 67% வீதமான பதிலிருப்பவர்கள் ஏற்றுக்கொண்ட அதேவேளை 55% வீதமானவர்கள் 'அவர்கள் தற்போது எங்களது எதிரிகளாக மாறியுள்ளனர் ' என தெரிவித்துள்ள கருத்தானது, அவர்களுடைய உறவில் ஏற்பட்டுள்ள வெவ்வேறு இருபடிநிலைகளை எடுத்துக் காட்டுகின்றது. யாழ்ப்பாண மீனவ சம்மேளனத்தினூடாக, அண்மையில் நடந்த தேர்தல் வெற்றிக்குப் பின்னர் முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு எழுதப்பட்ட கடிதம் பின் வருமாறு குறிப்பிடுகின்றது. "மதிப்புக்குரிய முதலமைச்சர் அவர்களே!... தொப்புள்கொடி மற்றும் இரத்த உறவினைக் கொண்ட எமது சொந்தங்களான தமிழ் நாட்டவர்கள், எங்களது கடற்பரப்பை அவர்களது இழுவைப் படகுகளால் ஆக்கிரமித்து, நாம் கடன்பட்டுப் பெற்றுக்கொண்ட மீன்பிடி உபகரணங்களை அழிப்பதுடன், கடல் வளங்களையும் வழித்துத் துடைத்துக் காவிச் செல்கின்றனர்." (யாழ்ப்பாண மீனவ கூட்டுறவு சங்க சம்மேளனம் 2011) மறுவார்த்தையில் கூறுவதனால், தற்போதைய கசப்பான அனுபவங்கள் மனோ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தியிருக்கின்ற போதிலும், தமிழ் நாடானது இலங்கைத் தமிழர்களுக்கு சிவில் யுத்த காலத்திலும் அதற்குப் பின்னரும் நெருங்கிய நண்பனாகவே கருதப்படுகின்றது. இலங்கை தமிழ் அரசியல் பிரதிநிதிகள் இந்தப் பிரச்சினையைப் பற்றி பேசாமல் இருப்பதற்கு இதுவுமொரு காரணமாகும்.

மூன்றாவது, கடந்த வருடத்தில் மீனவர்கள் பிராந்திய ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பிரிக்கப்படுவது அதிகரித்துக் காணப்படுகின்றது. அண்மையில் மீனவ மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் உருவாக்கப்பட்ட 'கிராமிய மீனவ அமைப்பு' யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து புதிய மீனவத் தலைவர்களை நியமித்ததோடு, இச்செயன்முறையானது மேலும் குழப்பநிலையை உருவாக்கியிருப்பதுடன் மீனவ தலைமைத்துவங்களின் வினைத்திறனையும் தடுக்கின்றது.

மேற்கூறப்பட்ட காரணங்களின் மொத்த விளைவின் பயனாக, மீனவ சமூகங்களானவை மிக ஆர்வமாக கூட்டாக இணைந்து செயற்படத் தூண்டினாலும், அதிகாரமற்றதன்மை, இயலாமையினால் கிடுக்கிப்பிடியில் வகையாக மாட்டிக்கொண்டுள்ளனர். சட்டத்திலுள்ள சீர்கேடுகளின் விளைவினாலும் மீனவப் பிரதிநிதிகளின் செயற்பாடுகளினாலும் சாதாரண மீனவர்கள் மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் மீதான நம்பிக்கையை இழக்கத் தொடங்கியுள்ளனர்.

### 8) இழுவைப் படகுகளின் அத்துமீறல்களுக்கான அரசாங்கம் மற்றும் சிவில் சமூகத்தின் பதில்

கட்டமைப்பு ரீதியாக உருவாக்கம் பெற்றுள்ள முயற்சிகள் இம்மோதலுக்கு தமது போராட்டம் தொடர்பாக குரல் எழுப்ப முடியாமையானது மீனவ பிரதிநிதிகளின் இயலாமையை எடுத்துக் காட்டுகின்றது. இங்கு இருவகையான கட்டமைப்பு முயற்சிகள் விபரிக்கப்படுகின்றது. இரு சாரார் மட்டத்தில் இரு அரசாங்கங்களினதும் இம்முரண்பாட்டுடன் தொடர்புபட்ட அமைச்சுக்களின் பிரதிநிதிகளுக்கிடையில் இருபக்க கலந்துரையாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. இரு தரப்பு மீனவர்களுக்கிடையிலும் கலந்துரையாடல்களை ஆரம்பித்து வைத்தும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தும் இம்மோதலுக்கான தீர்வினைப் பெற்றுக்கொடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

தமிழ்நாட்டு மீனவர்கள் மற்றும் அரசியல் தலைவர்களின் கிளர்ச்சிக்கு பதிலளிக்கும் முகமாக மீனவ பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையிலான முதலாவது இருபக்க கலந்துரையாடலானது, 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்றது. (Amarasinghe 2011) இங்கு, மீன்பிடி தொடர்பான இருபக்க இணைந்த செயற்பாட்டுக் குழு ஒன்றினை உருவாக்கும் ஏற்பாடுகளைக் கொண்ட இரு நாட்டு அமைச்சர்களுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமானது வரையப்பட்டது. இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையானது, 'இரு பக்கங்களில் இருந்தும் தத்தமது கடல் எல்லைகளுக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் படகுகளின் பிரச்சினையைத் தணிப்பதற்கான அவதானிப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்படவும்' அதேபோல் 'மற்றவர்களுடைய நீர் எல்லைக்குள் கவனக்குறைவால் வழிதவறிச் செல்லக்கூடிய' மீனவர்களுக்கு உரிய மாதிரி வழிமுறைகளும் வழங்கப்படவும் நாடியது.

புரிந்துணர்வு ஒப்பந்தமானது உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லையாலும் 2008, 2011 மார்ச் மற்றும் அண்மையில் 2012 ஜனவரி மாதங்களில் 3 இணைந்த செயற்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. "இந்திய மீன்பிடிப் படகுகள் அடையாளப்படுத்தப்பட்ட, இக்கட்டான சூழ்நிலைகள் நிலவுகின்ற பகுதிக்குள் நுழையாது" என 2008ஆம் ஆண்டில் யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில், இந்த மீனவர்களின் கூட்டறிக்கையானது பரிந்துரைத்திருந்தது. (Joint Statement in Suryanarayan 2009,16) இது மறைமுகமாக இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பின் ஏனைய பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றது. இந்திய அரசாங்கமானது உண்மையான மீனவர்களுக்கெதிரான வன்முறையானது நியாயப்படுத்த முடியாது என்று அறிவுறுத்தியதோடு சர்வதேச எல்லைக்கோடு என்பது மதிக்கப்பட வேண்டும் என்பதையும் இலங்கை அதிகாரசபைகள் அழுத்திக் கூறியதால்,

2011 மற்றும் 2012 இணைந்த செயற்பாட்டுக் குழுவின் கூட்டங்கள் கடுமையான கேள்விகள் தவிர்க்கப்பட்டன.

சூர்யநாராயணன் மற்றும் சுவாமிநாதன் ஆகியவர்களின் (2009, 12) "A silver lining in an otherwise bleak horizon" எனும் கூற்றின்படி, 2004 மே மாதம் தமிழ் நாட்டிலிருந்து ஒரு மீனவ குழுவை இலங்கையின் வட பகுதிக்கும், 2010 ஆகஸ்ட் மாதம் வட இலங்கையிலிருந்து தமிழ் நாட்டிற்கும் அழைத்துச் சென்று மோதல் குழுக்களுக்கிடையில் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதற்கு இரண்டு சந்தர்ப்பங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களால் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. விவேகானந்தன் (2004), 2004 ஆம் ஆண்டு கலந்துரையாடலின் விளைவுகளைச் சுருக்கமாக இந்திய மீனவர்களின் நோக்கிலிருந்து குறிப்பிடும் போது "நன்மை (உதவி)யை நாடிப்போய் படிப்பினையை பெறுதல் (பிடித்தல்)" (Fishing for a Favour, Netting a Lesson) எனக் குறிப்பிட்டுள்ளார். இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களிடமிருந்து இலங்கை கடற்பரப்பில் குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் மீன்பிடிப்பதற்கான அனுமதியை நாடியபோது, இலங்கை மீனவர்கள் இந்திய மீனவர்களின் இழுவை (டோலர்) வலையை விரித்து மீன்பிடிக்கும் நுட்பத்தினை உறுதியாக மறுத்ததால், இந்த மாற்றத்திற்கு சிலகாலம் தேவைப்படுமென்றும் அரசாங்கத்தின் உதவியும் அவசியம் என்றனர். 2010ஆம் ஆண்டு இவர்களது "பதில் வருகை" யின்போது 23 இலங்கை மீனவர்கள் இந்தியாவின் இராமேஸ்வரத்திலிருந்து நாகப்பட்டினம் வலையிலான இந்திய கரையோர சுற்றுப் பயணத்திற்கு பலமான வரவேற்பளிக்கப்பட்டது. இந்த இரண்டு நாள் பயணத்தின்போது சென்னையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் விரிவான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதோடு இந்த உடன்படிக்கையின் படி, இந்திய இழுவைப் படகுகள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு கடுமையான நடைமுறையில் சாத்தியமான மற்றும் இடரீதியான கட்டுப்பாட்டினடிப்படையில் மட்டும் அனுமதியளிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டது. (உதாரணம் வருடத்திற்கு குறிப்பிட்ட 70 நாட்கள்) இந்த கட்டுப்பாடானது ஒரு வருடத்திற்குள் காலாவதியாக்கி இதன் பிறகு எல்லாவிதமான டோலர் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டது. (Vivekanandan 2010b) இந்த ஒப்பந்தமானது இரு நாட்டு அரசாங்கங்களின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்ட போதும், பின்வரும் கூற்றினடிப்படையில் அது நிராகரிக்கப்பட்டது. "சென்னை கலந்துரையாடலின்போது யாழ்ப்பாண மற்றும் தமிழ் நாட்டு மீனவ சமூகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட, இந்த முன்மொழிவானது இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது இந்திய அரசாங்கத்தினாலோ மதிப்பிடப்பட்டதல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

இருப்பினும் இந்த பரிமாற்றமானது உண்மையாகவே மோதலுடன் தொடர்புபட்ட மீனவர்களுக்கிடையில் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தினாலும் இரு தரப்பு அரசாங்கங்களும் நிர்வாகங்களும் இதற்கு ஆதரவு அளிப்பதாக உத்தியோகபூர்வமான அறிக்கைகள் விட்ட போதிலும், இருசாரார் கூட்டு செயற்குழுக் கூட்டங்களில் இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மீனவர்களது கண்ணோட்டம் கருத்தில் எடுக்காதிருந்தது போல், மீனவர்களுக்கிடையிலான உடன்படிக்கைகள் வெளிவிவகார மற்றும் பாதுகாப்புக் கரிசனைகள் உள்ளடக்காமல் எடுக்கப்பட்டன. உண்மையாகவே இது சில பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்கினாலும் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார கண்ணோட்டத்தில் பார்க்கின்றபோது சர்வதேச கடல் எல்லைக் கோட்டு நிபந்தனைகளை மீனவர்கள் தீர்மானிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகவும் காணப்படுகின்றது. இதனூடாக பார்க்கும் போது கூட்டுச் செயற்குழுவிற்கும் மீனவத் தலைவர்களுக்குமிடையே ஒருபோதும் ஒன்றிணைந்த கலந்துரையாடல்கள் இடம் பெறவில்லை என்பதை முக்கியமாக குறித்துக்

காட்ட வேண்டும். ஒவ்வொருவரும் தனித்தனியாக நின்று தீர்வை தேடுவதை விட மீனவர்களுக்கு அரசாங்கமும் ஒன்றிணைந்து செயற்படுவதே அவசியமாயுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு இது சிறந்த படிப்பினையாகக் காணப்படுகின்றது.

## 9) முடிவுரை

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல் மீனவர்களின் மோதலானது மீன்பிடித்தல் உரிமைகளை நிர்ணயிப்பது என்பதைச் பற்றியே காணப்படுகின்றது. அதாவது யார், எப்போது, எங்கே மற்றும் எவ்வாறு மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதைப் பற்றியே காணப்படுகின்றது. உள்ளக மற்றும் வெளியக மோதல்கள் முக்கியமான வேறுபாடாகக் கொண்டு பொருத்தமான நிறுவனங்கள்தான் மோதல்களைத் தீர்ப்பதற்கான மைய காரணியாகக் காணப்படுகின்றது என்ற கருத்தை முன்வைத்தோம். பாக்குக்குடா மோதலின் தன்மை மற்றும் தீர்க்கப் படமுடியாத இயல்பும் இந்த சட்டகத்தின் ஊடாக சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

போட்டியாளர்களின் வாழ்வாதார நலன்கள் நிறைய காணப்படுகின்றது என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்பது இங்கு தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஒவ்வாத மீன்பிடி முறைமைகளைப் பயன்படுத்தி தங்களுடைய மீன் வளங்களை இந்திய மீனவர்கள் கைப்பற்ற முயல்வதால் மீண்டும் தமது தொழிலை ஆரம்பித்துள்ள பாரியளவான இலங்கை மீனவர்கள் பல இன்னல்களை எதிர்கொள்கின்றனர். மீன்பிடி உரிமைக்கான ஒதுக்கீடு, இடம் சார்ந்த மற்றும் தொழில்நுட்பரீதியான பரிமாணத்தின் தெளிவான வித்தியாசங்கள் ஆகியன இந்த நலன்களை அடைந்து கொள்வதற்கான போட்டிக்கு காரணங்களாக காணப்படுகின்றன. இலங்கை சிவில் யுத்தமானது பாக்குக்குடாவினுள் பாதுகாப்பு மயப்படுத்தியமை, இருதரப்பு மீன்பிடித்துறைகளிலுள்ள சமத்துவமற்ற தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் தமிழ் மற்றும் சிங்கள பிரிவினைவாதமானது அரசியல் மயப்படுத்தப்பட்டமை போன்ற காரணிகள் பதற்ற நிலையை மேலும் அதிகரித்தது. இம் மோதலானது கீழ்மட்ட மீனவர் களினதும் உயர்மட்ட அரசாங்க தரப்பினரதும் பல்துருவ ஆட்சியலில் முயற்சிகளை ஏற்படுத்தி துண்டு துண்டாகப் பிரிந்ததால் தங்கள் இலக்குகளைத் தவற விட்டுள்ளன. இம் மோதலுக்கான தீர்வினை அல்லது கட்டுப்பாட்டு பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஒரு பாரிய நிறுவனம் இல்லாதிருத்தால், வெளியக மோதல் களுக்கான சிறந்த உதாரணமாக பாக்குக் குடா மோதல் இருந்து வருகின்றது. மேலும் மீனவ தொழில்நுட்பம் மற்றும் புவிசார் அரசியல் ஆகிய பக்கங்களில் அதிகாரச் சமநிலையானது இந்தியாவின் பக்கம் சாய்ந்ததாகவே காணப் படுகின்றது. இது இம்மோதலானது மிகவும் சமச்சீரற்ற வடிவத்தைக் கொண்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதன்படி ரெபோபோட் (1974) டினுடைய கருத்துப்படி இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுக்கு வருவதற்கு மேலாதிக்க சக்தி கொண்ட தரப்பினரின் அதிகாரம் இன்னுமொரு தடையாகக் காணப்படுகின்றது.

இவ்விதமான சமச்சீரற்ற மற்றும் வெளியக மோதல்களைக் காத்திரமான முறையில் அணுகுவது சிரமமாகும் என்பதை நாம் எடுத்துக்கூறியுள்ளோம். இதன் இறுதி முடிவு யாதெனில் இந்திய மற்றும் வட இலங்கை மீனவ சமூகங்களின் வறிய வாழ்க்கை நிலைமையும், இலங்கை மற்றும் இந்திய இராஜதந்திர ரீதியிலான நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியாக சிறிய மற்றும் மோதலுக்கு அப்பாற்பட்ட விடயங்களில் கவனம் செலுத்துவதேயாகும்.

தற்போது காணப்படக்கூடிய பல்வேறு வகையான முன்மொழிவுகள் தீர்வு வழங்குவதற்கு உகந்தவையல்ல என்பதையும், குறைந்தது மோதலில் மையக் குணாதிசயங்களுக்கு பதிலளிக்கவில்லை என்பதையும், எங்களது பகுப்பாய்வானது எடுத்துரைக்கின்றது. இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கு வெவ்வேறு நாள்களில் மீன் பிடித்தலுக்கு அனுமதியளித்தல் இதுதான் தற்போதைய உண்மை நிலைமை. இந்திய இழுவைப் படகுகளுக்கு GPS அல்லது

முன்னறிவிப்பு முறைமையொன்றினை வழங்குதல் (இந்திய மீனவர்கள் எல்லைப் பரப்பை சிறப்பாக அறிவார்கள்) பாக்குக் குடாவை அனைவருக்குமான பொது மீன்பிடித் தளமாக மாற்றுதல் (சமத்துவமற்ற தொழில்நுட்ப இயலுமை பற்றி இங்கு கவனத்தில் கொள்ளப்படவில்லை.) களஞ்சிய அபிவிருத்தியை ஊக்குவித்தல். (ஒதுக்கீடு பற்றிய விடயம் தவறவிடப்பட்டுள்ளது) மற்றும் இறுதியாக கச்சைதீவை இந்தியாவுக்கு குத்தகைக்கு விடுதல் அல்லது பெற்றுக் கொள்ளுதல் (இழுவைப் படகுகளின் செயற்பாடுகள் கச்சைதீவிலிருந்து மிகவும் தொலைவில் உள்ள கடற் பிரதேசத்திலேயே மேற்கொள்ளப் படுகின்றது என்பது தவறவிடப்பட்டுள்ளது.) எங்களது பகுப்பாய்வினால் மோதலுக்கு ஒரு தீர்வினை வகுத்துரைக்க முடியாதபோதிலும் தீர்வினை நோக்கிய பல அவசியமான உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது.

முதலாவதாக இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான தற்போதைய நிலைமையில் இம்மோதலானது முக்கியமாக ஆயுதப்படைகளுக்கும் அத்துமீறும் மீனவர்களுக்குமிடையில் நடைபெறும் மோதல் என்பதற்குப் பதிலாக தொழில் நுட்ப ரீதியாக சமமற்ற இரு மீனவ குழுக்களுக்கிடையிலான மோதல் என்பதாக அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

இரண்டாவது : மீனவ முகாமைத்துவ பிரச்சினையாக காணப்படுகின்ற தமிழ் நாட்டு இழுவைப் படகுகளின் அளவுக்கதிகமான முதலீடு இம்மோதலைத் தொடர்ந்து கொண்டும் செல்லும் உந்துசக்தியாகக் காணப்படுகின்றது என்பதை அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். இந்த தமிழ்நாட்டு இழுவைப் படகுகளின் போக்கு அடிப்படையாக மீள்கட்டமைக்கப்பட வேண்டுமென்பது இந்திய அதிகார நிறுவனங்களினாலும் தொடர்ந்து மேலும் மேலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது. ஒழுங்கான புரிதலும், இழுவைப் படகுகளின் சில பகுதிகள் வாபஸ்பெறப்பட்டும் சில பகுதிகள் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளுக்கு வழங்கப்படும் விதமாக ஆழ்கடல் வளங்கள் திட்டவட்டமாக வரையப்பட வேண்டும்.

மூன்றாவது : கூட்டு செயற்குழுக்கள் மற்றும் துறைசார்ந்த வல்லுநர்களால் பல கூட்டங்கள் நடத்தப்பட்டு முக்கியமான விடயங்களைத் தொட்டுச் சென்றாலும், மீனவர்களின் உண்மையான பங்குபற்றுதல்கள் இல்லாமல் இம்மோதல் தீர்க்கப்படாது என்பதை அரசாங்கங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மோதல் பற்றிய தோற்றம், உண்மையான சாத்தியப்பாடு மற்றும் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வு ஆகியவற்றை களத்திலிருக்கும் மீனவர்களே நன்கு அறிந்தவர்களாகக் காணப் படுகின்றனர். ஆகவே, அவர்களது ஆதரவு இல்லாத உடன்படிக்கைகளை அமுல்ப்படுத்துவது விரும்பத்தக்கதோ சாத்தியமானதோ அல்ல. அத்துடன், அவற்றை அமுல்ப்படுத்துவதற்காக உட்கட்டமைப்பு பாரிய செலவையும் ஏற்படுத்தும்.

நான்காவது : நீண்டகால தீர்வினைக் காண்பதென்பது செயல்முறைகளை சரியாகச் செய்வது மாத்திரமல்ல. நிறுவன ரீதியாக கட்டியெழுப்பும் நடைமுறையையும் தொடர்வதுமாகும். ரெபோபோட்(1974) டினுடைய கருத்துப்படி சகல தரப்பினரையும் உள்வாங்கக் கூடிய நிறுவன ரீதியான பொறிமுறையொன்று காணப்படாததால் வெளிவாரியான மோதல்களுக்கு பாக்குக்குடா மோதலானது முக்கிய உதாரணமாக காணப் படுகின்றது. ஆகவே, இங்குள்ள பாரிய சவால் என்னவெனில், இந்த வெளியக முரண்பாட்டை உள்ளக ஒன்றாக மாற்ற சம்பந்தப்பட்ட பங்குதாரர்களை ஒன்றினைக்கும் ஒரு தளத்தினையும் தொலைநோக்கையும் உருவாக்குவதாகும்.

**நன்றியுரை**

நாம் முதலில் மீனவர்கள் மற்றும் கூட்டுறவு சங்க தலைவர்களுக்கும், முக்கியமாக வினாக்கொத்தினை ஒழுங்குபடுத்தித்தந்த திரு. இராஜசந்திரன் மற்றும் திரு. தவரத்தினம் அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் கள மொழிபெயர்ப்பாளராக செயற்பட்ட நிலாம் ஹமீட் அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இறுதியாக இவ்வாய்விற்காக நிதியுதவி வழங்கிய டச்சு நிறுவனமான COCOON programme (NWO/WOTRO project number W076830200) நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**உசாத்துணை**

i. இலங்கை கடற்படை அல்லது கரையோரப் பாதுகாப்புப் படைகளினால் 500 க்கும் மேற்பட்ட இந்தியத் தமிழ் மீனவர்கள் கொள்ளப்பட்டதாக http://www.savetnfisherman.org எனும் இணையத்தளம் குறிப்பிடுகின்றது.

ii. 2001 ஆம் ஆண்டு தரவுகளின் அடிப்படையில் இந்திய உற்பத்தியில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டது. இந்திய பாக்குக்குடா உற்பத்தி பிரதேசங்களாக புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் இராமனாத் மாவட்டதின் 70 வீதமான பகுதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது. (எஞ்சிய 30 வீதமும் மன்னார் குடாவாகும்). இலங்கையின் மீன் உற்பத்தி பிரதேசங்களாக யாழ்ப்பாணம் , மன்னார் மாவட்டங்கள் காணப்படுகின்றன.

iii. 28631 குடும்பங்களின் 17501 குடும்பங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இந்த தொகையானது களப்புக்களிலும் மன்னார் குடாவிலும் மற்றும் மன்னார் தீவுகளிலும் மீன்பிடிக்கும் மீனவர்களை உள்ளடக்கப்படவில்லை.

iv. அமரசிங்கவின் (2001) கருத்துப்படி இலங்கையானது வருடத்திற்கு 33 மில்லியன் தொடக்கம் 77 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான தொகையை இழக்கின்றது.

v. இந்த சட்டமானது, 1970 களில் இறுதிப் பகுதியில் சிறியரக படகுகள் மற்றும் டோலர்களுக்கென தனியாக ஒதுக்கப்பட்ட 3-4 நாட்கள் சட்டம் அமுல்படுத்தப்பட்டன. இச்சட்டமானது நாகப்பட்டினம் , யாழ்ப்பாண மாவட்டத்தின் வட கிழக்கு பிரதேசத்தில் எல்லா நாட்களிலும் செயற்படும் படகுகளுக்கு அமுல்ப்படுத்தப்படவில்லை.

vi. வியாழக்கிழமை இரவு நாட்களில் மீனவர்கள் மதக் கிரியைகளுக்கு செல்வதால் வெள்ளிக்கிழமை இதனுள் உள்வாங்கப்படவில்லை.

vii. வர்த்தமானி இலக்கம் 1665/ 16 இன் உறுப்புரை நான்கின் படி இலங்கை கடற்பரப்பினுள் டோலர்கள் செல்வதும் ஏனைய நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது எனவும் குறிப்பிடுகின்றது.

viii. தென்னிந்திய மீன்பிடி சமூக கூட்டமைப்பு (SIFFS), அப்பாவி மீனவர்களை விடுவிப்பதற்கான முன்னணி (ARIF) FishMarc ஆகியன இந்தியபுறத்திலும் இலங்கை புறத்திலிருந்து கரிடாஸ் (cartias) மற்றும் மீனவ ஒருமைப்பாட்டிற்கான தேசிய முன்னணி (NAFSO).

ix. NAFSOவுக்கு 2010 செப்டெம்பர் முப்பதாம் திகதி இலங்கை மீன்பிடி அமைச்சு அனுப்பிய கடிதத்திலிருந்து பெறப்பட்டது.

x. உதாரணமாக , http: www. thehindu.com / news/cities/chennai/article2747704.ece

# நூல் மதிப்புரை




## முனைவர் பக்தவத்சல பாரதியின் இலக்கிய மானிடவியல் :

### தமிழ்ச் சமூகத்தின் செல்நெறிகளின் மீதான பண்பாட்டியல் பார்வை

*புத்தானந்தம், தமிழ் நாடு அடையாளம்,*
**2014. xix+396 பக்.,**
*விலை : ரூ 300*

---

*சிரேஸ்ட பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன்*

தமிழில் இலக்கிய மானிடவியலை விளக்கும் முதன் நூலாக முனைவர் பக்தவச்சல பாரதியின் இலக்கிய மானிடவியல் : தமிழ்ச் சமூகத்தின் செல்நெறிகளின் மீதான பண்பாட்டியல் பார்வை எனும் புதிய நூல் வரவாகியுள்ளது. தமிழில் மானிடவியல் சொல்லாடல்களின் எல்லைகளை விரிவாக்கிய பாரதியின் ஏனைய நூல்களைப் போலவே தமிழர் பண்பாட்டு வரலாற்றினை கட்டமைக்கும் புலமைத் துணையாகும் இந்நூலும் எம் கவனத்திற்குரியதாகின்றது.

இலக்கியத்திற்கும் மானிடவியலுக்கும் இடையிலான இடையறதா ஊடாட்டத்தின் விளைவாக வடிவம் பெற்றது இலக்கிய மானிடவியல். மானிடவியலின் மரபார்ந்த அணுகுமுறைகளில் ஏற்பட்ட இலக்கியத்திருப்பமாக 1970களின் பிற்கூறில் கிளிபட் கீட்ஸ் (Clifford Geertz), மாக்கூஸ் (Marcus) போன்ற புலமையாளர்களினால் இப்புலம் வசமானது. இந்தவகையில் கிளிபட்

கீட்ஸின் The interpretation of Culture (1973), Local Knowledge (1983) ஆகிய நூல்களும் கிளிபட் கீட்ஸும் மாக்கூசும் இணைந்து எழுதிய Writing Culture : Poetics and Politics of Ethnography (1986) ஆகிய நூல்களும் முக்கியமானவை. இவர்களைத் தொடர்ந்து இலக்கிய மானிடவியலின் காப்பாளராக பேசப்படும் வுல்ப்காங் ஐசர் (Wolfgang Iser, 1993) இன் எழுத்துக்களும் வழிப்படுத்தல்களும் எம் கவனத்திற்குரியன.

மக்கள் பண்பாட்டினை முழுதளாவிய பனுவலாகக் காணும் இலக்கிய மானிடவியல் அணுகுமுறையா-னது இலக்கிய பனுவல்களில் நிறைந்துள்ள பண்பாட்டினைத் தேடும் ஆய்வு முறையியலாக விரிவு பெற்றது.

'மனிதன் சம்பந்தமான எதுவுமே இலக்கியத்திற்கு புறம்பானதன்று' என்பார் மாக்சிம் கோக்கி. இலக்கிமில்லாத சமூகம் இல்லை எனலாம். இந்த வகையிலேயே மனித சமூக சூழமைவின் முழுதளாவிய கற்கை நெறியான மானிடவியல், மனித உணர்வு நிலையின் சொல்லாடல்கள், சமூக வாழ்வின் ஆக்கங்கள் என்பவற்றினை தன் ஆய்வு மூலகங்களாகக் கொண்டது. மானிடவியல் எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், அணுகுமுறைகள் யாவும் இலக்கியத்தை அணுகத்துணையாகின. மானிடவியலின் முறையியலுக்குட்பட்ட இனவரைவியல், இலக்கியவியலுக்கு மிகவும் நெருக்கமானதாய் அமைந்து இந்த ஊடாட்டத்திற்கு உரம் சேர்த்தது.

இனவரையியல் என்பது சமகாலத்து நாம் ஒரு சமூகப் புலத்தில் களப்பணியின் வழி எழுதும் அப்பண்பாட்டின் வாழ்வியல் என்பது போலவே, முன்னைய இலக்கியங்களும் அவை எழுதப்பட்ட 'சம-காலத்தின்' பனுவல்களாக கருதப்படத்தக்கன. பனுவல்களில் இடம்பெறும் கூற்றுக்கள் அவற்றிடையே கேட்கும் படைப்பாளிகளின் குரல் என்பன யாவும் தரவுளாகி பண்பாட்டினைக் கட்டமைக்கும் ஆய்வுப் பயணத்தில் பெரும் துணையாகின. இங்கு 'பனுவல்கள் தகவலாளிகளாகும்' ஆய்வு அனுபவம் எமக்கானது.

## 2

தமிழில் இலக்கிய ஆய்வுகள் ரசனை வழிப்பட்ட இலக்கிய மதிப்பீடுகளாகவே பெரிதும் அமைந்திருந்த ஒரு காலகட்டத்தில், தமிழ் இலக்கிய ஆய்வுகளை சமூகவியல் ஆய்வுகளாக பரிமாணம் பெறவைத்த புல-மையாளர்களாக பேராசிரியர்களான வானமாமலை, கா. சுப்பிரமணியம், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, எஸ். தோதாத்திரி போன்றவர்களின் ஆய்வுகள் தமிழுக்கு புதிய தரிசனங்களைத் தந்தமை குறிப்பிடத்-தக்கது. தமிழர் பண்பாட்டு வரலாற்றினைக் கட்டமைக்கும் இன்றைய சமூகவியல், மானிடவியல் ஆய்வுத் தேடல்களில் இவ் அறிஞாக்ளின் எழுத்துக்கள் முன்னோடியானவை. இவர்களைத் தொடர்ந்து இன்றைய தமிழ் நாவல்களில் இனவரைவியல் பண்புகளையும், தன்மைகளையும் தனி நூலாக வெளிப்படுத்திய ஆ.சிவசுப்பிரமணியம் அவர்களின் இனவரைவியலும் தமிழ் நாவலும் (2009), பெ. மாதையனின் தமிழ்ச் செவ்வியால் படைப்புக்கள்: கவிதையியல், சமுதாயவியல் நோக்கு (2009) ஆகிய நூல்கள் குறிப்பிடத்-தக்கன.

இத்தகையதொரு பின்னணியிலே வெளிவந்துள்ள பக்தவச்சல பாரதியின் இலக்கிய மானிடவியல் நூலானது தமிழில் இலக்கிய மானிடவியலை அறிமுகம் செய்தல் எனும் பொது நோக்குடன் தமிழர் சமூக பண்பாட்டு வரலாற்றினைக் கட்டமைத்தலினை சிறப்பான இலக்காவும் கொண்டுள்ளது.

> இன்றைய சூழலில் 'சங்க இலக்கிய மீள்விளக்கம்' செய்யும் நிலையில் தான் நாம் உள்ளோம். இவ்விலக்கியத்தின் சமூகப் பின்புலத்தையும், பண்பாட்டுப் பின்புலத்தையும் ஊடறுத்து அதனை ஒரு கருத்துக் கட்டமைப்பாக நாம் புரிந்து கொள்ள வேண்டியதை இலக்கிய மானிடவியல் வலியுறுத்துகின்றது. தமிழ்ச் சூழலில் குறிப்பாக சங்க இலக்கியம் பற்றிய ஆய்வில் இலக்கிய மானிடவியலின் முதன்மையான இலக்கானது, அதன் தொன்மையையும் தொடர்ச்சியையும் விளக்குவதாகும். என தம் நூலின் இலக்கினை தெளிவாக அடிக்கோடிடுவார் பாரதி.

தமிழ் பண்பாட்டு வாழ்வானது சங்ககால முதல் இன்றுவரை ஓர் இடையறாத் தொடர்ச்சியினையும், மாற்றங்களையும் கொண்டதாக நிலை பெற்றுள்ளது. பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுவ-தைப் போல தமிழ்ப் பண்பாட்டின் ஆழமான வேர்கள் சங்க இலக்கியங்களினுள் புதைந்துள்ளன. பண்பாட்டின் மொழியாக அமையப்பெற்ற சங்க இலக்கியமானது தனியே தமிழர் சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றினை மட்டுமன்றி மனித சமூகம் இதுவரை கடந்து வந்துள்ள அனைத்து படிநிலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நிலையில் சங்ககாலம் பற்றிய இலக்கிய மானிடவியல் பார்வை என்பது தமிழ்ச் சமூகத்தின் செல் நெறிகளின் மீதான பார்வையாகவும், மனித சமூக வரலாற்றின் பார்வையாகவும் விரிந்த எல்லைகளை எமதாக்கும்.

மேற்கண்ட தெளிந்ததொரு தரிசனத்துடன் இலக்கியம், சமூகம், சமயம், வாழ்வியல் எனும் நான்கு பெரும் பிரிவுகளில் 20 இயல்களில் இந்நூலினைக் கட்டமைத்துள்ளார் பாரதி. முதல் பகுதியானது இலக்கிய மானிடவியல் என்ற புதிய புலத்தின் இலக்கு, வரலாறு, பயன்பாடு என்பவற்றினை தமிழ் இலக்கியச் சூழமைவில் விளக்குகின்றது. இரண்டாவது பகுதியான சமூகமானது சங்ககாலத் தாய்வழிச் சமூகம், இனக்குழுமச் சமூகம், காடெரிப்பு வேளாண் சமூகம், ஆயர் சமூகம், நெய்தல் சமூகம், பாணர் சமூகம் என்றவாறு அமைகின்றது. சமயம் எனும் மூன்றாவது பகுதியானது நுண்நிலையில் சாலினி வழக்குரைத்தல், குன்றக்குரவை, மணிமேகலையில் தேவகணம், பௌத்த மரபில் பத்தினித் தெய்யோ, இரணிய வேளை, சைவ-வைஷ்ணவக் குறியீடுகள் பற்றிய ஆய்வு எழுத்துக்களைக் கொண்டுள்ளது. நான்காவது பகுதியான வாழ்வியல் சங்ககாலத் தழையாடை, குடும்பம் பற்றிய ஆய்வுப் பதிவுகளாகும்.

பக்தவச்சல பாரதியின் மேற்கண்ட எழுத்துக்கள் யாவும் தமிழில் இலக்கிய மானிடவியல் சார்ந்த எதிர்கால ஆய்வுகளுக்கான எண்ணற்ற சாத்தியங்களை இனங்காட்டி நிற்கின்றன.

> சங்ககாலத்திய இனக்குழுச் சமூகத்திற்குரிய கூறுகள், முடியாட்சி அமைப்பிலும் அசைவியக்கம் பெற்று இன்றுவரை தொடர்ந்து வந்துள்ளன. தொல் தமிழ் பண்பாடு அறுபடாத தொடர்ச்சியைக் கொண்டிருப்பதால் ஒரு கட்டத்தின் முதன்மைக்கூறு அடுத்த கட்டங்களில் எச்சக் கூறுகளாக தொடர்வதனைக் காணலாம். எனும் பாரதியின் இத் தரிசனமாகனது இக்கட்டுரைகள் யாவிலும் ஆதார சுருதியாக வெளிப்படக் காணலாம்.

அறிவியல் சார்ந்த முடிவுகளை மானிடவியலும் அதற்கு நெருக்கமான சமூகவியல், தொல்லியல், மொழியியல், பண்பாட்டியல் போன்ற அறிவியல்களும் எய்துவதில் இக்கருத்தாக்கம் பெரிதும் வழி காட்டி நிற்கக் காணலாம். எடுத்துக்காட்டாக பண்டைத் தமிழர் சமயம் பற்றிய தம் ஆய்விடை பாரதி குறிப்பிடுவதைப் போல சங்க இலக்கியத் தரவுகள் தொல் எச்சங்களைக் காட்டுவதால், பண்டைத் தமிழர் சமயவரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதற்கு அவை பெரிதும் துணையாகின்றன. 'பொருள் வடிவம் சார்ந்த' கல்வெட்டுகள், பானையோடுகள், தாழிகள் மற்றும் பொருட்களில் காணப்படும் குறியீடுகள் யாவும் பொருள் வடிவங்கள் (social artifacts) ஆகும். இப் பொருள் வடிவங்களின் வழி அறியவொணா உண்மைகளை இலக்கிய மன வடிவத்தின் (mentifacts) துணைகொண்டு அறிந்துகொள்ள முடிகின்றது. இந்த வகையில் புதிய கற்கால கால்நடைப் பண்பாட்டினை தொல்லியல் நிலை நின்றும், முல்லை நிலப் பாடல்களின் வழிநின்றும் நோக்கிய ரேமன்ட் அல்ச்சின் ( Ramond Allchin), பிறிட்ச் அல்ச்சின் (Bridget Allchin) ஆகியோரின் ( Neolithic Cattle Keepers of South India) (1963) என்ற ஆய்வு மற்றும் இன்றைய கா. ராஜன் போன்றோரின் ஆய்வுகளும் குறிப்பிடத்தக்கன. திணைமரபின் சமூக பொருளாதார முக்கியத்-துவம் பற்றிய தம் ஆய்வின் சாரமாக ஒலித்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின்

> சங்ககாலம் என்பது இலக்கிய ஆவணங்களைக் கொண்டதாக அல்லாது, இலக்கிய வழி வருகின்ற தரவுகளை நிறுவுவனவாகவும் விவரிப்பனவாகவும் எதிர் காலத்தில் அமைய வேண்டும் (2006) என்ற குரலுக்கு வலுவூட்டுவதாக பக்தவத்சல பாரதி அவர்களின் இலக்கிய மானிடவியல் வசப்பட்டுள்ளது.

இந்த இடத்தில் பக்தவத்சல பாரதி அவர்களே குறித்தவாறு இலக்கியவியல் ஆய்வுகளை பக்குவமாக மேற்கொள்ள வேண்டியதன் இன்றியமையும் உணரப்படவேண்டும். தமது எழுத்துக்களிடையே பாரதி இனங்காட்டிய இடைவெளிகள், மட்டுப்பாடுகள் எம் கவனத்திற்குரியன. எடுத்துக்காட்டாக சங்ககால எட்டுத்தொகை இலக்கியங்களில் யதார்த்தமாகப் பேசப்படும் விடயங்கள் பத்துப்பாட்டில் சற்று புனைவியல் தன்மை கொண்டு அமைதல் பற்றிய அவரது அவதானத்தைக் குறிப்பிடலாம். அவ்வாறே ஆயர் நாடோடியம் பற்றி ஆழ ஆய்ந்துள்ள பாரதி, சமகால இனவரைவியல் தரவுகளுக்கும் சங்க இலக்கியத் தரவுகளுக்கும் இடையில் இனங்காட்டும் இடைவெளிகளும் ஈண்டு நம் கவனத்திற்குரியன.

அறிவியல் தளத்திருந்து பண்பாட்டு மானிடவியல் அணுகு முறைகளின் வழி தரவுகளின் நம்பகம் (reliability), தகுதி (validity) என்பவற்றினை கருத்திற் கொண்டே இலக்கிய மானிடவியலின் உண்மைகள் எய்தப்பட வேண்டும்.

- பண்டைய காலநிகழ்வுகளுக்கு சமகால கண்ணோட்டத்துடன் விளக்கம் கொடுத்தல்
- சமகால நிகழ்ச்சிகளை பழைய கால கருத்தோட்டங்களின் அடிப்படையில் நோக்குதல்
- கடந்த காலமே பொற்காலம் எனக்கருதி நிகழ்காலத்தை நிராகரித்து இறந்த காலத்தை இலட்சியப்படுத்தல்.

எனும் இம்மூன்று அணுகு முறைகளையும் பண்பாட்டு மானிடவியலின் அறிவியல் தன்மையான அணுகு முறையின் வழி மதிப்பிடாவிடின் பண்பாட்டினை மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சி வழிதவறிய-தாகிவிடும். (பாரதி, 2014)

இந்த வகையில் முறையியல் வழிப்பட்ட இலக்கிய மானிடவியல் என்ற கருத்தியல் தெளிவுடனான இந்நூலானது, அண்மைக்காலத்து 'பின்னை - நவீனத்துவ திருப்பம்' என்ற முனைப்பில் இலக்கிய மானிடவியலை அதன் அறிவியல் தளத்திலிருந்து பிரித்திடும் செயற்பாடுகளிலிருந்து தமிழ்ச் சூழலைக் காத்திடும் காலத்தினாலான புலமைப் பங்களிப்பாக அமையப்பெற்றுள்ளது என்றால் மிகையில்லை.

**சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி என் சண்முகலிங்கம்**
*சமூகவியல் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

**CINTANAI**

The Journal of the Faculty of Arts,
University of Jaffna.

Contents

1. Teaching - Learning Tamil in Sri Lanka ; Current Practices and Challenges.
   - A. Nithlavarnan
2. The concept of world Lilerature and the Tamil Literary Milieu - A Critical study on the Tamil Literary Researches that demand changes.
   - E. Cumaran
3. Effectiveness of Jaffna Medicinal plants used in Diabetes - Mellitus
   - Anpuchelvi Sritharan
4. Teacher Researchers : The vital contributors to the change in the Educational World - New Trend in Thoughts and Activities
   - J. Rasanayagam
5. Genocide and the Accountability & the united nations: Acritical Analysis
   - T. Krishnamohan
6. Tattvavilakkam of Sambhanda Saranalayar excellence of Commentary of Sri Kasivasi Senthinathaiyar
   - P. Chandrasegaram
7. The Advent of new theory in International Politics : An Overview
   - K.T. Ganeshalingam
8. Native Elites in colonial Jaffna : A Socio- Historical Perspective on the Tradition and Transformation
   - R. Rajeshkannan
9. Fishing in dire Straits : Trans - Boundary in eursions in the palk Bay
   - A.Soosai, J. Scholtens, M. Bavinck
10. Book Review - Illakkiya Maanidavial (Anthropology of Literature) by Dr. Bhakthavatsala Bharathi
    - N. Shanmugalingam

ISSN 2478-1061

9772478106003

Harikanan, Jaffna.